

# மாயக் கனவுகள்



கோட்டையம் புஷ்பநாத் தமிழில் சிவன்



**கோட்டயம் புஷ்பநாத் :** இவர் தன்னுடைய 12வது வயதிலேயே முதல் சிறுகதையை எழுதினார். தனது 19வது வயதில் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். 1991 முதல் முழு நேர எழுத்தாளராக மாறினார். கதை எழுதுவதைத் தவிர விவசாயம் செய்வதும் இவருக்கு பிடித்த பொழுதுபோக்கு. இவர் பள்ளி மாணவராக இருந்த போது இவருடைய ஆசிரியர் கோவூர் என்பவர், விறுவிறுப்பான துப்பறியும் கதைகளை மாணவர்களுக்குச் சொல்வாராம். இந்தத் தாக்கம்தான் பின்னாளில் இவரை எழுத வைத்தது. இவர் தனது 26வது வயதில் முதல் நாவலான 'சிகப்பு மனிதன்' என்னும் தொடரை 'மனோ ராஜ்யம்' என்ற பத்திரிகையில் எழுத ஆரம்பித்து பெரும் வெற்றி கண்டார். இவர் துப்பறியும் கதைகள், மாந்த்ரீக நாவல்கள் என 350க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் பல தமிழ், குஜராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவரது இரண்டு நாவல்கள் திரைப்படமாகவும் வெளி வந்துள்ளன. புகழ்பெற்ற மலையாளப் பத்திரிகைகளிலும் இவரது கதைகள் வெளிவந்து, தற்போது லட்சக் கணக்கான வாசகர் உள்ளங்களில் கோவில் கொண்டிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். (முகவரி : கோட்டயம் – 686 041, கேரளா (தொலைபேசி : 0481–567899, 561999).

**சிவன் :** P.B. சிவசுப்ரமண்யம் என்ற சிவன் 22-6-55ல் பிறந்தார். இவர் மதுரை, செங்கை, சென்னை ஆகிய இடங்களில் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தவர். 1980-ஆம் ஆண்டு 'பேசும் படம்' பத்திரிகையில் தன்னுடைய வாழ்க்கையைத் துவக்கி, பிறகு ஜெமினி சினிமா, தினசரி, வெற்றி மாலை எனப் பல பத்திரிகைகளில் பணி புரிந்து, தற்போது பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூல நூல்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளை தமிழில் மொழி பெயர்த்து, 70 நூல்கள் வரை வெளி வந்துள்ளன.



12 NOV 2005
9 AUG 2006
31.7.11
10.8.11
11.8.11
26-1-12
26-2-12
12-3-12
22-3-12
37849

# மாயக் கனவுகள்

கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்:
சிவன்

கலா நிலையம்
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமைப் பதிப்பு :
முதல் பதிப்பு : டிசம்பர், 2003

© ஆசிரியருக்கு

விலை : ரூ.60.00

Original Title : Tripple X
By : Kottayam Pushpanadh
Translated by : Sivan

37849
5479329
சென்னை

Laser Typeset & Printed by
Jai Ganesh Printing Works,
Mylapore, Chennai - 600 004.

# முன்னுரை

மலையாளப் பத்திரிகைகளில் ஏறத்தாழ நாற்பது வருடங்களில் இருநூறு தொடர்கதைகளுக்கு மேல் எழுதியிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். ஒரே சமயத்தில் எட்டுத் தொடர்கள் எட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதையும் நானறிவேன். அப்படி வெளியான ஒரு தொடர் இது. அதே போன்றதொரு நிர்ப்பந்தம் அவரது நாவல்களை மொழிபெயர்த்ததால் எனக்கும் ஏற்பட்டது. அப்படி மொழிபெயர்த்த ஒரு நாவல் இது.

ஜனரஞ்சகமான இந்த மாதிரி மொழிபெயர்ப்புகளை முன் வைத்து இலக்கிய விவாதம் மற்றும் விமரிசனங்களை நிகழ்த்துபவர்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டியது இல்லை. எப்படி இருப்பினும் வாசகர்களிடம் வாசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்த இப்படிப்பட்ட நாவல்கள் உதவும் என்பதை மறுப்பதற்கு இல்லை.

ஒரு வாசகரின் வாசக அனுபவம் படிப்படியாக உயர வேண்டுமானால் இப்படிப்பட்ட ஜனரஞ்சகமான நூல்களிலிருந்து தான் அது நிகழ முடியும். ஒருவர் எந்த அளவுக்கு உயர்கல்வி கற்றிருந்தாலும் முதல் வகுப்பிலிருந்து கல்வியைத் தொடங்குவது மாதிரி.

வயதுக்கும், படிப்பு அனுபவத்துக்கும் ஏற்ற மாதிரி வாசகரசனை மேம்பட்டுச் செல்லவேண்டும். அதற்கு வயதிலும் அனுபவத்திலும் சற்று மேம்பட்டவர்கள் உதவ வேண்டும். சுருங்கச் சொன்னால் நாம் முதலில் வாசக ரசனையில் தேறியிருந்தால் மட்டுமே, நமது அடுத்த தலைமுறைக்கு அதைப் பழக்க முடியும்.

ஜனரஞ்சகப் புத்தகங்களை அருவருப்புடன் பார்க்கும் இலக்கிய விமர்சகர்கள்கூட, தங்கள் வாசிப்பு அனுபவத்தை இந்த

இடத்திலிருந்துதான் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை ஒரு கணம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

சங்ககாலக் கவிதைகள் முதல், ராமாயணம் – மகாபாரதம் உட்பட நமது பாரம்பரியம் மிக்க நூல்களை இளைய தலைமுறை வாசிக்க வேண்டும் என்பது கருதியே அவை எளிமைப்படுத்தப்பட்டு – ஜனரஞ்சகமாக்கி உரைநடையில் வழங்கப்படுகின்றன. இவ்வாறு எளிமைப் படுத்தப்படுவதாலேயே அவற்றின் மேன்மை அழிந்துவிடுவதில்லை. செழுமையான இலக்கிய – இலக்கணக் கட்டமைப்பின் உள்ளூடாகப் பயணம் செய்வது என்பது ஆரம்பகால வாசகனுக்குச் சாத்தியமில்லை.

நாம் வளர்ந்துவிட்டோம் என்பதாலேயே, எல்லோரிடமும் அந்த வளர்ச்சியை வலியத் திணிப்பது இலக்கிய ஆர்வத்துக்கு பதில் அலுப்பையே ஏற்படுத்தும். இந்த மாற்றம் கண்ணுக்குத் தெரியாமல் வாசக மட்டத்தில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. நமது தேர்ந்த விமர்சகர்களின் விமர்சனம் அதைக் கெடுத்துவிடக் கூடாது என்பதே என் வேண்டுகோள்.

சென்னை – 600 078.
தொலைபேசி : 2483 7681

தோழமையுடன்
சிவன்

37849
54793297

# மாயக் கனவுகள்

## 1

அன்றைய வசூலை மோசமென்று சொல்ல முடியாது.

எட்டாவது நாளன்றும், பட்டணத்துக்கு வெளியே சற்றுத் தொலைவிலிருந்த தியேட்டர் ஒன்றில் 'ஹவுஸ் ஃபுல்' - ஆக இந்திப்படம் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறதென்றால், அது நிச்சயம் அருணின் அதிர்ஷ்டமாகத்தான் இருக்கவேண்டும்!

இருபத்தேழு வயதான அருண் பி.காம். பட்டதாரி. அதுவும் முதல் வகுப்பில் தேறியிருந்தான். ஆனால், கைவசம் பணம் குறைவாக இருந்ததால் எங்கும் வேலை கிடைக்கவில்லை. எத்தனையோ இடங்களில் இண்டர்வியூவுக்குப் போய்விட்டு வந்தான். பின்புற வழியாக வந்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்தது. வேலைக்குக் கொடுத்த பணத்தை அவர்கள் வரதட்சணையாகப் பெற்று நஷ்டத்தை ஈடுசெய்து கொண்டார்கள் பணத்தை பணத்தாலேயே அடிக்க முடியாத அருணுக்குக் கடைசியாகக் கிடைத்தது ஒரு 'ஃபிலிம் ரெப்ரசென்டேட்டிவ்' வேலை. குறைந்த ஊதியத்துடன் ஊரூராக அலைந்து கொண்டிருந்தபோது, அதிர்ஷ்டதேவதை ஒரு நாள் அவன் பக்கமாகக் கண்ணைத் திருப்பினாள்.

தமிழக அரசின் லாட்டரி டிக்கெட் ஒன்று அவனை ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் சொந்தக்காரனாக்கியது. வரியெல்லாம் போகக் கையில் கிடைத்த பணத்தில் ஒரு பழைய இந்திப் படத்தின் பிரிண்ட்டை விலைக்கு வாங்கினான். அது ஓர் அருமையான சண்டைக் காட்சிப் படம். ஒருவிதமாக தியேட்டர்களைக் கண்டுபிடித்துப் படத்தைத் திரையிட்டு நாட்களைக் கடத்தினான்.

திருசூர் நகரை ஒட்டிய ஆம்பல்லூரில் அந்தப்படம் இரண்டாவது வாரமாக ஓடிக்கொண்டிருந்தது.

அன்று சனிக்கிழமையாக இருந்ததால் மூன்று காட்சிகள் நடைபெற்றன.

தற்போது அருணின் கையில் ஏறத்தாழ ஐயாயிரம் ரூபாய் இருந்தது. இரவு நேரம். மணி ஒன்று இருக்கலாம். தனது மோட்டார் பைக்கில் திருசூர் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். தென்புறமாக திருவனந்தபுரத்துக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் பேருந்துகள் மட்டும் அவனைக் கடந்து சென்றன. சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்த பிறகு அவனுக்கு முன்னால் கார் ஒன்று வந்து நின்றது.

அருண் பிரேக்கை அழுத்தினான். பைக் நின்றது. முதல் கியருக்கு மாறி, இடதுபுறமாக ஒதுங்கி நகர முற்பட்டபோது கார் அந்தப் பக்கமாகவும் வழி மறித்தது. போக்குக் காட்டிவிட்டு வலதுபுறமாகப் பாய்ந்து செல்ல முயன்றான். கார் அதையும் உணர்ந்ததுபோல் அங்கும் வழி மறித்தது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவனாக பைக் இன்ஜினை அணைத்தான்.

கல்லூரியில் படித்தபோது கராத்தே, குத்துச் சண்டை போன்ற விஷயங்களில் ஓரளவு பயிற்சி பெற்றிருந்ததால் (அப்போது அதைக் கற்றுக் கொண்டதும் பொழுது போக்காகத்தான்) அவனிடம் பயமோ பரபரப்போ தென்படவில்லை.

பைக்கை ரோட்டின் ஓரமாக நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுவிட்டு அதிலிருந்த பிரீஃப் கேஸை இடது கையில் எடுத்தான்.

காரிலிருந்து நான்கு பேர் இறங்கி வந்தனர். உயரமும், அதற்கேற்ற கட்டுமஸ்தான உடம்பும் கொண்டவர்களாகத் தெரிந்தனர்.



"ஏம்பா வீணா உடம்பைக் கெடுத்துக்கிறே? அந்த சூட்கேஸை எங்ககிட்டக் குடுத்துட்டு சுதந்திரமா பைக்குல போகலாமில்லையா?" - நால்வரில் ஒருவன் பேசினான்.

"சொன்னது சரியான வார்த்தை. பணம் போனா, சம்பாதிக்கலாம். வீணா எதுக்கு உடம்பைக் கெடுத்துக்கணும்?" மற்றொருவன், முன்னால் பேசியவனுக்கு ஆதரவு தெரிவித்தான்.

"அதான் ரெண்டு பேர் சொல்லிட்டாங்க இல்லை. அப்புறம் என்ன யோசனை? சூட்கேஸைக் கொடுத்துட்டுப் போ தம்பி!" காரின் பின்புறம் சாய்ந்தபடி சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்த மூன்றாவது நபர் கரகரப்பான குரலில் பேசினான்.

அருண் சற்றுப் பின்வாங்கி, தெருவிளக்கு வெளிச்சத்தில் அவர்களை அடையாளம் காண முயன்றான்.

அறிமுகமானவர்கள் இல்லை.

இப்படிப்பட்ட வழிப்பறித் திருடர்களைப் பற்றிய செய்திகளை, செய்தித்தாள்களில் நிறையவே படித்திருக்கிறான். இரவு நேரங்களில் காரில் பயணம் செய்து, தனியாக பைக்கிலோ, காரிலோ வருபவர்களை மிரட்டிப் பணம் பிடுங்குவார்கள். தேவையேற்பட்டால் எதிராளியைக் காயப்படுத்தவும் செய்வார்கள். பெரும்பாலும் இப்படிப்பட்ட செயல்களைச் செய்யும் இளைஞர்கள் பணக்கார வீட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும், இப்படிக் கிடைக்கும் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழிப்பார்கள் என்பதும் அருணுக்குத் தெரியும். சிலர் அதை ஒரு பொழுதுபோக்காகவே நடத்துகின்றனர். சில சமயம் காரில் கணவன்-மனைவி பயணம் செய்தால் கணவனைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு, மனைவியைக் கொண்டுபோய் கற்பழித்துவிட்டு எங்காவது உயிருடனோ பிணமாவோ வீசிவிட்டுப் போவார்கள் என்பதை ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகளில் எத்தனையோ தடவை கட்டுரைகளாக எழுதியிருந்தனர்.

இப்படிப்பட்டவர்கள் போலீஸில் அகப்பட்டுக் கொண்டால்கூட, சிலசமயம் புத்திசாலித்தனமாகத் தப்பிப்பதும் நடந்துள்ளது. காரின் நம்பர் போலியாக மாற்றப்பட்டிருக்கும். குறிப்பிட்ட சம்பவம் நடந்த சமயத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அரசாங்க மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக அட்மிட் ஆகியிருந்ததாக 'அலிபிகள்' தயார் செய்திருப்பார்கள்.

"தம்பி சொன்னாக் கேக்க மாட்டான் போலிருக்கே! சந்திரா நீ போய்ப் பிடுங்கிட்டுத்தான் வரணும்னு நினைக்கிறேன்." சுருட்டு புகைத்துக் கொண்டிருந்த மனிதன் கட்டளையிடும் குரலில் பேசினான்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ஒரு மனிதன், தனது சட்டையின் இருபுறக் கைகளையும் சுருட்டி மேலேற்றியவாறு அருணை நோக்கி முன்னேறினான்.

"குடுடா இப்படி!" சூட்கேஸைப் பிடுங்குவதற்காக கையை நீட்டினான்.

"இந்த விளையாட்டெல்லாம் வேணாம்பா!" என்றவாறு அருண், ஒரு கொசுவை அடிப்பது மாதிரி சூட்கேஸால் அவன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான். அடி வாங்கியவன் மறுகணம் கரணம் போட்டு, காரின் முன்புறம் வந்து விழுந்தான்.

உடனே இரண்டாவதாக ஒரு மனிதன் அருணை நோக்கிப் பாய்ந்தான். அவனும் சூட்கேஸால் ஓர் அடியும், காலால் வலுவான உதையும் ஏககாலத்தில் வாங்கி காரின் பானெட்மீது வந்து விழுந்தான்.

"நீதான் போகணும் வேற வழியில்லை." - சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தவன் வாயிலிருந்து அதை எடுக்காமலே மூன்றாவது நபரிடம் கூறினான்.

"தட்டிடட்டுமா?" பின் திரும்பிக் கேட்டான்.



"உனக்கு அது மட்டும்தானே தெரியும். உன் இஷ்டம் போலவே செய்ப்பா!"

அனுமதி கிடைத்தவுடன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தி ஒன்றை எடுத்துச் சட்டென்று அதன் பட்டனை அழுத்தினான். அந்த அரைகுறை வெளிச்சத்திலும் கத்தியின் கூர்முனை பளபளப்பதை அருண் கவனித்தான். கத்தியையே கவனித்துக் கொண்டிருந்தான். அந்தக் கத்தி எந்தப் பக்கம் வந்தாலும், அதைத் தனது வலதுகால் ஷூவால் தடுக்க வேண்டும் என்று உஷாராகவே இருந்தான்.

ஏற்கெனவே விழுந்து கிடந்த இருவரும் எழுந்து அருணை நோக்கி நகரத் தொடங்கியிருந்தனர்.

அருண் சட்டென்று முன்புறம் பாய்ந்து கண்மூடித் திறப்பதற்குள் பிரீஃப்கேஸால் இரண்டு பேர் மீதும் மின்னல் வேகத்தில் மாறி மாறி வீசினான். எதிர்பாராத தாக்குதலால் இருவரும் பின்னோக்கி விழுந்து உருண்டனர். இப்போது கத்தி வைத்திருந்தவனின் கோபமும் வேகமும் அதிகரித்திருந்தது. அவன் மேற்கொண்டு நகர்வதற்குள் அருணின் வலது கால் ஷூ அந்தக் கத்தியைத் தட்டிவிட்டது. பானட்டின்மீது மோதிய கத்தி சரிந்து தார் ரோட்டில் விழுந்தது. கத்தியை இழந்தவன் விடாமல் முன்னேறினான்.

"போதும்... பின்வாங்கி விலகு!" அப்போதும் சுருட்டை வாயிலிருந்து எடுக்காமல் பேசினான் காரின் மீது சாய்ந்திருந்தவன்.

சுருட்டைக் கையால் தொடாமல் வாயிலிருந்தே, தரையில் துப்பிவிட்டு அம்புபோல் அருணின் பக்கம் மேற்புறமாக பாய்ந்தான். ஆனால், அதே நேரம் அருணும் மேல் நோக்கிப் பாய்ந்தான். இருவரும் ஒரே நேரத்தில் காலை மடக்கி உதைத்துக் கொண்டனர். ஏக காலத்தில் இருவரும் தரைக்கு வந்தனர்.

தன்னைப் போலவே எதிராளியும் வித்தை கற்றிருக்கிறான் என்பது அருணுக்குப் புரிந்தது. சட்டென்று காரின் பின்புறமாக நகர்ந்த சுருட்டு மனிதன் டிக்கியைத் திறந்தான். அதிலிருந்து ஜாக்கி லிவரை எடுத்து வந்தான். அந்த ஆயுதத்துடன் மோதுவதற்குத் தன்னிடம் இருப்பது சூட்கேஸ் மட்டும்தான். இருப்பினும் அருண் பதற்றப்படவில்லை. லிவரின் முதல் தாக்குதலை அருண் பிரீஃப் கேஸால் லாகவமாகத் தடுத்தான். இரண்டாவது முறை அது இயங்குவதற்குள் மேற்புறம் உயர்ந்து சுருட்டுக்காரனின் கழுத்தில் பூட்ஸ் அணிந்த காலைப் பதித்தான். எதிராளி நிலைதடுமாறி விழுந்தான். அருண் சந்தர்ப்பத்தைப் பாழாக்காமல் மீண்டும் அவன் முகத்தில் ஓங்கி மிதித்தான். ஓர் அலறல் மட்டும் அவனிடமிருந்து உயர்ந்தது.

அருண் பின்புறமாக நகர்ந்தவாறு பைக்கை நெருங்கினான்.

காரில் வந்த நால்வரும் மேற்கொண்டு அருணுடன் மோத விரும்பவில்லையென்று தெரிந்தது. பிரீஃப்கேஸை கேரியரில் போட்டுவிட்டு பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

அதற்குள் நான்கு பேரும் காரில் ஏறி காரை ஸ்டார்ட் செய்திருந்தனர். எதிராளிகளின் திட்டம் அருணுக்குப் புரியவே செய்தது.

தான் காரை சமாளிப்பது சுலபமல்ல என்று புரிந்ததால், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சட்டென்று முன்னேறி காரைக் கடந்து விரைந்தான்.

சற்றுத் தூரம் பயணம் செய்து ஒரு வளைவு திரும்பியபோது பின்புறத்திலிருந்து காரின்வெளிச்சம் தென்பட்டது.

ஒருவேளை தன்னைத் தாக்க முற்பட்டவர்களாக இருக்கலாமோ என்று சந்தேகப்பட்டான் அருண்.

வழிப்பறிக்காரர்கள், தாங்கள் மடக்கியவர்களை விஷயம் வெளியே தெரியாமல் இருப்பதற்காகக் கொலையேகூடச் செய்வதுண்டு. போலீஸாரிடம் தகவல் போகக்கூடாது



என்பதற்காக மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை இது!

அருண் பைக்கின் வேகத்தை அதிகப்படுத்தினான். காரின் வேகமும் அதற்கேற்றாற்போல் அதிகரித்தது.

அடுத்த வளைவை நெருங்கும்போது எதிர்ப்புறத்தில், ரோட்டோரம் ஒரு லாரியை நிறுத்திவைத்து டயர்மாற்றிக் கொண்டிருந்தனர். அதை ஓவர்டேக் செய்ய முற்பட்டபோது எதிரே எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. அருண் முன்னேற முடியாமல் லாரியின் பின்புறம் சற்று ஒதுங்கினான். பஸ் தன்னைக் கடப்பதற்குள் பின்னால் வந்த கார் நெருங்கிவிட்டது.

தன்னிடமிருந்த பணத்தைப் பிடுங்குவதுடன் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள் என்பது அருணுக்குப் புரிந்தது.

இரவுநேரத்தில் பணத்துடன் பயணம் செய்ய வேண்டியிருந்ததால் அருண் சில தற்காப்பு ஆயுதங்களைத் தயாராக வைத்திருந்தான்.

சாதாரணமாக அவற்றை உபயோகிப்பது தவறுதான். எனினும் தற்காப்புக்காக இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அருண் அவற்றைப் பயன்படுத்துவான்.

அரை அங்குலக் கனமுள்ள கேன்வாஸ் பெல்ட்டின் மீது இரண்டரையங்குல ஆணிகள் பதித்த ஒரு சுருள் அது. சுருளை அவிழ்த்தால் ஆணிகளின் கூர்ப்பகுதி மேற்புறம் வரும். ஏறத்தாழ ஆறடி நீளமுள்ள அந்த கேன்வாஸ் சுருளை இடது புறக் காரியரில் போட்டு வைத்திருந்தான்.

ஒரு வருடத்துக்கு முன்னால் தங்க நகை வியாபாரி ஒருவர் இதை அருணுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். புகழ்பெற்ற தங்க நகைவியாபாரியான அவருக்காக தங்க பிஸ்கெட்டுகளை மும்பையிலிருந்து பெங்களூருக்குக் கடத்திவரும் வேலையைச் செய்தபோது கொடுத்திருந்தார். அதனால் ராயல் என்ஃபீல்டு

புல்லட் பைக்கிலேயே அவனது தொழில் வெற்றிகரமாக நடக்கவும் செய்தது.

பைக்கைச் செலுத்துவதில் அருண் நிபுணன் என்றே சொல்லலாம்.

நூற்றுமுப்பது, நூற்றுமுப்பத்தைந்து கிலோ மீட்டர் வேகத்தில் அவன் பைக்கைச் செலுத்திவரும்போது, கடத்தல் தங்கத்துடன் அவனைப் பிடிக்க சுங்க இலாகாவினர் எவ்வளவோ முயற்சிகள் செய்வர். ஆனால், அருண் ஒருபோதும் சிக்கியதே இல்லை.

ஓரிரண்டு தடவை போலீஸ் அவனைப் பிடிக்க முயன்ற போது அந்த கேன்வாஸ் பெல்ட்டைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்புறம் வரும் ஜீப்பிலிருந்து துப்பாக்கி குண்டுகள் ஓய்ந்து மிகவும் நெருங்கி வரும்போது, சிரித்தபடியே அருணின் வலதுகை பின்புறமாக நகர்ந்து பெல்ட்டை லாகவமாக எடுப்பது வழக்கம்.

உயிரைப் பணயம் வைத்து நடத்தும் இத்தகைய விளையாட்டிலிருந்து தப்பிப்பது அருணுக்கு த்ரில்லிங்கான ஓர் அனுபவமாக இருந்தது.

ஒவ்வொரு தடவையும் நான்கு முதல் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை கடத்தி வந்தாலும் ஒரு தடவை கூட, ஒரு பொட்டுத் தங்கத்தையும் அவன் இழந்ததில்லை. தான் செய்யும் தொழில் சட்டவிரோதமானதுதான் என்றாலும், அதன் உடைமையாளரிடம் நேர்மையைக் கடைப் பிடித்திருக்கிறான்.

எக்ஸ்பிரஸ் தாண்டிச் சென்ற அதே விநாடியில் அருணின் பைக் முன்புறம் நகர்ந்து லாரியைக் கடந்தது.

ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் தூரம் வரை பதற்றமில்லாமல் பைக்கைச் செலுத்தினான்.

தொடர்ந்து வரும் கார் திரும்பவும் தட்டுப்பட்டது.



"என்னடா இது ஒரு தொந்தரவு!"- என்று புலம்பினான் அருண். தன் கைவசமுள்ள ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான், வேறுவழியில்லை என்று தோன்றியது.

முதலில் தன்னைத் தொடர்ந்து வருவது வழிப்பறிக் கும்பல்தானா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ரோட்டின் இடது ஓரமாக பைக்கை நிறுத்தினான். காரும் அதேபோல் இடதுபுறம் ஒதுங்கியது.

'அப்படியானால் காரில் வருவது அவர்களேதான், சந்தேகமே இல்லை.'

சற்று அகலம் குறைந்த பகுதியை எதிர்பார்த்து அருண் பைக்கை முன்னால் செலுத்தினான். சற்றுத் தொலைவிலேயே அப்படியொரு வாய்ப்புக் கிடைத்தது. தனது நடவடிக்கைக்கு உகந்த இடம்!

கேரியரிலிருந்து எடுத்த கேன்வாஸ் பெல்ட்டை, எதிர்பாராமல் ரோட்டின் குறுக்காக வீசினான்.

இரண்டுதடவை குண்டு வெடித்த சத்தம் கேட்டது. பிறகு கார் ஒரு புறமாக இழுத்துக் கொள்வதுபோல் ஒதுங்கி நின்றது.

அருண், ரோட்டிலிருந்த தனது ஆயுதத்தை உருவிக் கொண்டு, காரை ஓவர்டேக் செய்து பயணத்தைத் தொடர்ந்தான்.

மிகவும் கெட்டிக்காரத்தனமாகத் தப்பித்ததில் அருணுக்குத் திருப்தி தோன்றியது. கடத்தல் தொழிலைக் கைவிட்ட பிறகு இப்படியொரு த்ரில்லிங்கான அனுபவம் ஏற்படுவது இதுதான் முதல் தடவை. அதுவும் சுவாரசியமானது தான். எனவே இன்றிரவு அவர்கள் தன்னை நெருங்க மாட்டார்கள். ஆனால், எந்த நேரமும் தன்னைப் பழிவாங்க அவர்கள் முற்படலாம்.

திருசூர் நகருக்குள் நுழைந்து தான் தங்கியிருக்கும் டிலைட் ஓட்டலின் கேட்டை நெருங்கியபோது ஹாரன் அடித்தான்.

கேட் திறந்து கொண்டது.

திருதூரிலிருந்து சுமார் முப்பத்தைந்து மைல் சுற்றளவில் எங்காவது படம் ஓடினால் டிலைட் ஓட்டலில் தங்குவதுதான் அவன் வழக்கம். எனவே, அந்த ஓட்டலும் ஊழியர்களும் அவனுக்கு நன்கு பழக்கமாகியிருந்தனர்.

பைக்கை உரிய இடத்தில் பார்க் செய்துவிட்டு பிரீஃப் கேஸுடன் தன்னுடைய அறைக்கு வந்தான்.

இரண்டு கிளாஸ் குளிர்ந்த தண்ணீரைக் குடித்ததும் தாகம் அடங்கி திருப்தி ஏற்பட்டது.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண்டரை.

உடைமாற்ற முற்படும்போது கதவை யாரோ இடைவிடாமல் தட்டும் சத்தம் கேட்டது.

'இந்த நேரத்தில்... அதுவும் இந்த இடத்தில் யாராக இருக்கும்?' என்று யோசித்தவனாகக் குழம்பினான். மறுபடியும் ஏதாவது தொல்லையாக இருக்குமோ?

"சீக்கிரமாக கதவைத் திறங்கள்" தட்டுவதுடன் ஒரு பெண்ணின் குரலும் கேட்டது இம்முறை.

வேறு வழியில்லாமல் அருண் கதவைத் திறந்தான். ஒரு கணம் திடுக்கிட்டவனாக அறைக்குள் பின் வாங்கி "ஆ..." என்று அதிர்ச்சிக் குரல் எழுப்பினான்.

இளம்பெண் ஒருத்தி பாதி உடைந்த பாட்டிலைக் கையில் பிடித்திருந்தாள். அதன் கூரான விளிம்புகளிலிருந்து ரத்தத் துளிகள் வடிந்து கொண்டிருந்தன!

## 2

எப்படிப்பட்டவரையும் பயமுறுத்தும் அந்தக் காட்சியைக் கண்டவுடன் அருண் ஒருகணம் திடுக்கிடவே செய்தான். சற்று



நேரத்துக்குள் சுயநினைவுக்கு மீண்டு, அவளிடம் உள்ளே வருமாறு சொல்லவும் செய்தான்.

அறைக்குள் நுழைந்தவுடனேயே அதுவரை இழந்திருந்த ஏதோ ஒரு சக்தியைத் திரும்பப் பெற்றதுபோல், நேராக பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள் அந்தப் பெண்.

அவள் தன் முன்னாலிருந்து மறைந்த மறுவிநாடியே அருண் கதவை மெதுவாக மூடித் தாழிட்டான்.

குளியலறைக்குள் ஷவரிலிருந்து பீய்ச்சும் நீரின் சத்தம் கேட்டது. 'அவள் யார், இந்த நேரத்தில் இங்கு எப்படி வந்து சேர்ந்தாள்?' எதுவும் தெரியவில்லை. ஒரு கொலையைச் செய்துவிட்டுத்தான் அவள் இங்கு வந்திருக்க வேண்டும் என்பதற்கு வேறு எந்த ஆதாரமும் தேவையில்லை. அடிப்பாகம் உடைந்த பாட்டிலே அதற்குச் சாட்சி. தொடர்ந்து ஏற்படவிருக்கும் விளைவுகள் என்னவென்று அவனுக்குத் தெரியவே செய்தது. இருப்பினும் தன் மனத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையாக இருந்தான்.

'கதவு எப்போது வேண்டுமானாலும் மறுபடி தட்டப்படலாம். வெளியே பூட்ஸ் கால்களும் காக்கி உடுப்புகளும் தென்படலாம்!' என்கிற உணர்வு அவனை ஒருவிதப் பரபரப்புக்குள்ளாக்கியிருந்தது.

அவளைக் கைது செய்தால், அவளின் கூட்டாளி என்றோ, அபயம் கொடுத்துள்ளவன் என்ற முறையிலோ தன்னையும் கைது செய்யலாம்.

அருண் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான். அதன்பிறகு அலமாரியிலிருந்து தோளில் பையுடன் குழல்கள் தொங்கவிட்டபடி இசையெழுப்பும் கலைஞனின் படம் போட்ட விஸ்கி பாட்டிலைக் கையில் எடுத்தான்.

ஃபிலிம் ரெப்ரசென்டேட்டிவ் ஆன பிறகுதான் அருண் மதுவருந்தப் பழகினான். அதுவும் எப்போதாவது ஒரு தடவை.

பெரும்பாலும் தியேட்டரிலேயே இரவலாகக் கிடைத்துவிடும். அளவுக்கு மீறிக் குடிக்கும் பழக்கம் அவனுக்குக் கிடையாது. மனம் ஒரு மாதிரி வெறுமையை உணரும்போது தங்கநிறத் திரவத்தில் கொஞ்சத்தை ஊற்றித் தொண்டையை நனைத்துக் கொள்வான். அதுகூட அடுத்தடுத்து இருக்கவே இருக்காது.

அருணைப் பொறுத்தவரை இன்று ஒரு மோசமான நாளாகத் தெரிந்தது. நடந்ததெல்லாம் எதிர்பாராத சம்பவங்கள். வழியில் நான்கு பேரின் தாக்குதல். அங்கிருந்து தப்பித்ததே அதிர்ஷ்டவசம். அறைக்கு வந்த பிறகோ எதிர்பாராத ஒரு விருந்தாளி - கையில் ரத்தம் வடியும் உடைந்த பாட்டிலுடன்.

அவளைப் பார்த்தவுடனேயே கதவை அறைந்து மூடியிருக்கலாம்... அல்லது திறக்காமலே இருந்திருக்க வேண்டும் அதெல்லாம் நடந்துமுடிந்த கதை. அப்போதைய சூழ்நிலையில் அப்படி நடந்து கொள்ளத் தோன்றவில்லை.

அதைப் பற்றி யோசிப்பதில் எந்தவிதமான பயனும் கிடையாது. பாட்டிலிலிருந்து தங்கத் துளிகளை கிளாஸில் ஊற்றினான். கூஜாவிலிருந்து நீரைச் சரித்தான். பாதியளவு தொண்டைக்குள் வழிந்த பிறகு மனத்துக்குள் ஒருவிதத் தைரியம் பிறந்தது.

எதிர்பார்த்ததைப் போலவே கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

திறக்காவிட்டால் அது பிரச்சினைகளை வளர்க்கலாம். கதவைத் திறப்பதுதான் நல்லது. எப்படியிருந்தாலும் போலீஸார் தன்னைக் கொண்டுபோகத்தான் செய்வார்கள். எதற்கும் இருக்கட்டும் என்று கிளாஸிலிருந்த மீதியையும் தொண்டைக்குள் ஒரே மடக்கில் ஊற்றினான்.

கதவு மறுபடியும் தட்டப்பட்டது.

இரண்டு கைகளையும் நீட்டி ஒரு தடவை சோம்பல் முறித்துவிட்டு எழுந்து கதவைத் திறந்தான்.



எதிர்பார்த்ததற்கு மாறாக ரௌடிகள் போல் தோற்றமளித்த இரண்டு பேர் வெளியே நின்று கொண்டிருந்தனர்.

"ஒரு பொண்ணு இங்கே வந்தாளாடா?" ஒரு தடியன் கேட்டான்.

அவன் கேட்ட முறை அருணுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"இல்லையேடா தம்பி?"- அருணும் அதே குரலில் திருப்பிச் சொன்னான்.

"அப்புறம் யாருடா இந்தப் பக்கமாக வந்தது?"

"யாரும் வந்ததாத் தெரியலையே?"

"நீ உள்ளே போய்ப் பாருடா. என்ன பந்தத்தைப் பார்த்த பெருச்சாளி போல முழிக்கிறே?" நண்பனிடம் சொன்னான் தடியன்.

"அப்படியே நில்!"- அருணின் குரல் கட்டளைபோல் ஒலித்தது.

"பாவம்... அப்பாவி... நீ அவனை தூக்கி அந்தப் பக்கமாப் போட்டுட்டுப் போடா உள்ளே!"- தடியனின் குரலில் எரிச்சல் தெரிந்தது.

உடன் வந்தவன் அறைக்குள் நுழையக் காலெடுத்து வைத்தான். அதே நேரத்தில் அருணின் கை இடிபோல் அவன் முகத்தில் இறங்கியது. வெளிப்புறமாக மல்லாந்தவன், தடியனின் நெஞ்சில் மோதிச் சரிந்தான்.

"அடடே... தம்பி இப்பத்தான் குத்துச் சண்டை கத்துக்கிறான். நீயும் வாப்பா உள்ள?" இடிவாங்கியவன் சாதாரணமான குரலில் நண்பனை அழைத்தான்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

அதன் பிறகு அங்கு நடந்தது ஒரு சரியான சண்டைக் காட்சிதான். அருணின் கால்களும் கைகளும் ஒரே சமயத்தில்

இயங்கின. அவனது உதையால் ஒருத்தனின் மூக்கில் ரத்தம் வடியத் தொடங்கியது.

பதினைந்து நிமிடச் சுறுசுறுப்புக்குப் பிறகு அருண், அந்த இருவரையும் அறைக்கு வெளியே தூக்கிப் போட்டான்.

தளர்ந்து போய் விழுந்தவர்கள் அதன் பிறகு அங்கு நிற்கவில்லை. வராந்தா வழியே கண்மண் தெரியாமல் ஓடினார்கள்.

அருண் மறுபடி கதவைத் தாழிட்டான்.

ஷவரிலிருந்து நீர் சொரியும் சத்தம் இப்போது சுத்தமாக நின்றுவிட்டிருந்தது.

அருண் நாற்காலியில் அமர்ந்தான். உள்ளே போன விஸ்கியின் போதை முழுவதுமாகக் காணாமல் போயிருந்தது.

மறுபடியும் கொஞ்சத்தை எடுத்து ஊற்றிக்கொள்ளலாமா என்று நினைத்தான். ஆனால், குளியலறையில் ஒளிந்திருக்கும் பெண் ஞாபகத்துக்கு வந்ததும் 'வேண்டாம்!' என்று தீர்மானித்தான்.

கிளாஸையும் பாட்டிலையும் அலமாரிக்குள் வைத்த போது, குளியலறைக் கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே வந்தாள்.

அவள் தோற்றம் இப்போது வெகுவாக மாறிவிட்டிருந்தது. குளித்ததனால் ஈரமான தலைமுடியை அவிழ்த்துப் போட்டிருந்தாள். புடவை பாதி பிழிந்தும் ஈரம் முற்றிலும் விலகாமல் அவள் தோள் மீது கிடந்தது.

"மன்னிக்கணும்!"- அவள் சொன்னாள்.

"மன்னிக்கிறதுக்கு முன்னால ஒரு விஷயம். உடைஞ்ச பாட்டிலை எங்கே போட்டீங்க?"- அருண் கேட்டான்.



"அதைப் பத்திரமா வெச்சிருக்கிறேன்!"

"உங்களுக்காக இங்கே நான் ரெண்டு பேரோட சண்டை போட்டேன்கிறது தெரியுமா?"

"சண்டையா?" அவள் குரலில் கிண்டலின் தொனியிருந்தது.

"நீங்க ஒருத்தன் கதையை முடிச்சுட்டுத்தானே வந்திருக்கீங்க?"

"கதையை முடிச்சதா யார் சொன்னது?"

"உங்க கையில இருந்த ரத்தம் தோய்ந்த பாட்டிலுக்கு என்ன அர்த்தம்?"

"அதனால செத்திருப்பாங்களா?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது. செத்துப் போனதா நினைச்சுட்டே பேசுவோம்!"

"நான் உடைஞ்ச பாட்டிலை ஃப்ளஷ் டாங்குக்குள் போட்டு வைத்திருக்கிறேன். அதற்குள் போய் யாரும் தேடமாட்டார்கள் என்று நினைக்கிறேன்."

"நீங்க பேசுறதைக் கேட்டா இதெல்லாம் ரொம்பவும் சர்வ சாதாரணமான விஷயமாக இருக்கும் போலிருக்கே."

"ஏறத்தாழ இப்போது எல்லோருமே இப்படித்தான். கொலை என்பதே ஆண்களின் குத்தகையா என்ன? பெண்கள் நினைத்தாலும் கொலை செய்ய முடியும்!"

"அதுக்காகச் சட்டுன்னு ஓர் ஆயுதத்தைப் பிரயோகம் பண்ணிட்டீங்க, அப்படித்தானே?"

"பிரயோகிக்க நேர்ந்தது!"

அவள் பேச்சைப் பார்த்தால் யாரையோ அவள் கொலை செய்திருப்பது உறுதியாகிறது. ஆனால், அதில் ஏதோ மர்மம் இருக்கிறது. காரணம், கொலை செய்யப் பயன்படுத்திய

ஆயுதத்துடன் தன்னுடைய அறைக்குள் அபயம் தேடியவளைத் தொடர்ந்து வந்தவர்கள் போலீஸ்காரர்கள் அல்ல; ரௌடிகள்.

"ஒன்று, இந்த அறையிலிருந்து நீங்கள் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் உண்மையில் நடந்தது என்னவென்று சொல்ல வேண்டும்."

"நான் இப்போ இங்கிருந்து போகலேன்னா?"

"இப்படியெல்லாம் பிடிவாதம் பிடிச்சீங்கன்னா எனக்குப் பிடிக்காது. தயவுதாட்சண்யம் பார்க்காமத் தூக்கி வெளியில போட்டுடுவேன். இப்பவே ரெண்டு பேர் உங்களைத் தேடிட்டு வந்தாங்க. அவங்க என்ன ஆனாங்கன்னு உங்களுக்குத் தெரியாது இல்லையா? அவனுங்ககிட்ட பாட்டிலெல்லாம் எதுவும் இல்லை. முதல் தரமான கத்தி இருந்திச்சு. ஆனா, அதையெல்லாம் அவனுங்க வெளியே எடுக்கவே சந்தர்ப்பம் வாய்க்கலை. அதுக்குள்ள அவனுங்களை அறைக்கு வெளியில வீசியெறிஞ்சுட்டேன். அதனால என்கிட்ட உங்க வித்தையெல்லாம் வேணாம். முடிஞ்சா, என்ன நடந்ததுன்னு சொல்லுங்க."

"கதவை மூடித்தானே வெச்சிருக்கீங்க?"

"அதனால எந்தப் பிரயோஜனமும் கிடையாது. போலீஸ் எப்பவும் வரலாம்."

"பயப்படாதீங்க, போலீஸ் வராது!" அவள் உறுதியான குரலில் பேசினாள்.

"ஏன்?"

"வராதுன்னா வராதுதான்!"

"அப்ப நடந்ததைச் சொல்லுங்க; நான் கதையாவது கேட்டுக்கிறேன்."

"அது சொல்லிக்கிற மாதிரி விஷயமில்லை. அவ்வளவு மோசமான விஷயம்!"



"இருக்கட்டுமே."

"அதை எப்படி நான் சொல்றது?"

"சரி நானே சொல்றேன். மூணு பேர் சேர்ந்து நிறையப் பணம் தர்றதாச் சொல்லி உங்களை ஓட்டலுக்குக் கொண்டு வந்திருக்கணும். ஆனா, அறையில நீங்க எதிர்பார்த்ததை விட அதிகமான ஆளுங்க இருந்திருக்கணும். இல்லாவிட்டால் அவங்க ஒட்டுமொத்தமாச் சேர்ந்து கற்பழிக்க முயற்சி செஞ்சிருக்கலாம். அப்போது உங்க மானத்தையும் உயிரையும் காப்பாத்திக்கிறதுக்காக அவங்கள்ல யாரையோ ஒருத்தனைக் குத்தியிருக்கணும். அங்கேயிருந்து தப்பிச்சுவரும்போது இங்க நுழைஞ்சுட்டீங்க."

"எனக்கு ஒரு விஷயம் உறுதியாத் தெரிஞ்சு போச்சு. உங்களுக்கு கண்டிப்பா போலீஸ்ல வேலையே கிடைக்காது."

"ஏன்?"

"நீங்க சொன்னதெல்லாம் அபாண்டமான கற்பனை. அதனாலதான்."

"இன்னும் நடந்ததைச் சொல்லலையே நீங்க!"

அவள் ஈரமான தலைமுடியை விரலால் கோதிவிட்டவாறே அறைக்குள் இருந்த சோபாவில் அமர்ந்தாள். இரவு மணி இரண்டைத் தாண்டிய பிறகும் அவள் சோர்வடைந்ததாகத் தெரியவில்லை.

"அந்த அலமாரிக்குள்ள பௌடரும் சீப்பும் இருக்கு. மிச்ச அலங்காரங்களையும் வரிசையா முடிச்சுடுங்க!"

"அதை நானே எப்படி உங்கக்கிட்டக் கேக்கறதுன்னு யோசிச்சுக்கிட்டிருந்தேன்."

"ஓகோ... அந்த அளவுக்கு உரிமை எடுத்துக்கிட்டீங்களா? நீங்க இங்கே வந்து பத்து நிமிஷம்கூட ஆகியிருக்காது. அதுக்குள்ள ரொம்பவும்தான் முன்னேறிட்டீங்க. இதெல்லாம் நல்லமாதிரியாத் தெரியலையே?"

"போதும்... போதும்... வீணா கண்டதையும் பேசக் கூடாது. எனக்கு உங்களோட எந்தப் பொருளும் ஓசியா வேணாம். நீங்க வேணும்னா என்னை போலீஸ்காரங்ககிட்ட ஒப்படைச்சுடுங்க. நான் அவங்ககிட்ட உண்மையைச் சொல்லிட்டுப் போறேன்!"

"அம்மா தாயே... எனக்கு எதுவும் வேணாம். நிமைமையே சரியில்லை. ஒருத்தனைக் குத்திட்டு வந்தது பத்தாம, இரக்கப்பட்டு அபயம் குடுத்தவனையே குத்தம் சொல்றீங்க. நான் எதையும் தெரிஞ்சுக்க விரும்பலை. முதல்ல இந்த இடத்தைக் காலிபண்ணுங்க. அது போதும். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமா இருக்கும்?"

"மன்னிச்சிடுங்க..." மனசு வேதனையில பேசிட்டேன்."

அவள் முகபாவம் சட்டென்று மாறியது. கண்கள் நீரால் நிறைந்தன. குரல் இடறத் தொடங்கியது.

"நீங்கள் உண்மையைத் தெரிந்து கொள்வதில் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதால் சொல்கிறேன்."

"எனக்காக நீங்க இரக்கப்பட வேணாம். சொல்லணும்னா... விரும்பினா சொன்னாப் போதும்!"

அவள் அலமாரியை நெருங்கித் திறந்தாள். கொஞ்சம் பௌடரைக் கையில் கொட்டி முகத்தில் தேய்த்தாள். முகம் இப்போது துலக்கி வைத்த வெண்கலப் பாத்திரம் போலிருந்தது. உண்மையிலேயே அழகாக இருந்தாள். ஒரு தடவை தலைமுடியை உதறிவிட்டு அருணுக்கு முன்பாக வந்து உட்கார்ந்தாள்.

"நீங்க நிறையக் குடிப்பீங்கன்னு நெனைக்கிறேன்."

"அப்படியெல்லாம் கிடையாது. அது அவசியம்கிறதும் கிடையாது. இன்னிக்கு விஸ்கிகிட்டப் போகக் கூடாதுன்னு நினைச்சபோதுதான் நீங்க வந்தீங்க. நீங்க வந்த கோலத்தைப் பார்த்தா எப்படிப்பட்ட சன்னியாசியும் குடிக்கத்தான் வேணும். அதெல்லாம் கிடக்கட்டும், இன்னும் விஷயத்துக்கு வரலையே நீங்க."



"என் பேரு ராகினி. நாடக நடிகை. கம்பெனி நாடகங்கள்ல நான் அதிகமா நடிக்கிறதில்லை. அதெல்லாம் சிக்கலான விஷயம்!"

"லோக்கல் நாடகங்கள்ல மட்டும்தான்னு சொல்லுங்க!"

"அப்படியும் சொல்ல முடியாது. பிரபலமான முழு நேர நாடகக் கம்பெனிகள் சிலதெல்லாம் என்னை நடிக்க வரச் சொல்லி கூப்பிட்டாங்க. ஆனால், நான் முடியாதுன்னு மறுத்துட்டேன். என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படித் தோணுது?"

அருண் ஒரு தடவை அவளை ஏற இறங்கப் பார்த்தான். வயது இருபத்தொன்று அல்லது உயர்ந்தபட்சம் இருபத்திரண்டு இருக்கலாம். முகம், கண்கள் எல்லாம் பார்க்க அழகாக இருந்தன. உதடுகள் உணர்ச்சிகரமாக இருந்தன. கைகால்கள் கடைந்தெடுத்ததுபோல் கச்சிதமாக இருந்தன. இருட்டு மாதிரி அடர்ந்த தலைமுடி, அவள் இடுப்புக்குக் கீழேயும் நீண்டு கிடந்தது. கருவிழி... அதுமட்டும் ஏதோ வித்தியாசமாக இருந்தது.

பிரா கம்பெனி விளம்பரத்துக்கு மாடலாக இருக்கலாம் போன்ற மார்புகள். சரியான உடற்கட்டு. தாராளமாக ஒரு நடிகையென்று அவளைச் சொல்லலாம்.

"பார்வைக்கு அழகாத்தான் இருக்குறீங்க."

"ஒப்புக்கிறீங்க இல்லையா, இனிமேல் நான் நடந்ததைச் சொல்கிறேன்."

இப்போது யாரோ கதவைத் தட்டினார்கள்.

ஒரு தடவை அவளைப் பார்த்துவிட்டு அருண் கதவைத் திறக்க எழுந்தான்.

திறந்தான். வெளியே -

இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

## 3

"நாங்க உள்ளே வரலாமில்லையா?"- ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

"ரெய்டு மாதிரி ஏதாவதா?"- அருண் மிகவும் இயல்பான குரலில் கேட்டான்.

அந்தக் கேள்வியை அவர்கள் எதிர்பார்க்கவில்லையென்று தோன்றியது. அறைகளில் தங்கியிருப்பவர்கள் பொதுவாக இப்படியெல்லாம் கேட்க மாட்டார்கள்.

"ஆமாம்!" மற்றவர் சற்றுக் கனமான குரலில் கூறினார்.

அருணைப்போல் அவர்கள் திடகாத்திர உடம்புள்ளவர்களாகத் தெரியவில்லை.

"ரெய்டுக்காக என்றால் ரெண்டுபேர் போதாதே என்று கேட்டேன்."- அருண் பேசினான்.

"எங்க டி.எஸ்.பி. கீழே இருக்கிறார்."

"அப்படின்னா அவரும் இங்கே வரணும். நீங்க போட்டிருக்கிற தொப்பியை எவன் தைச்சுக் கொடுத்தானோ ஃபினிஷிங் சரியில்லையே. உங்க டி.எஸ்.பி.யோட தொப்பியும் இப்படித்தான் இருக்குமா?"

அருணின் இடக்கான பேச்சு ராகினிக்கு மிகவும் பிடித்துப்போனது. ஆனால், அவனது வார்த்தைகள்



போலீஸ்காரர்களிடம் எந்தவிதமான பிரதிபலிப்பையும் ஏற்படுத்தவில்லையென்பது அவளை வியப்பு அடையச் செய்தது.

"நீங்க தவறான விலாசத்துக்கு வந்துட்டதாத் தோணுது. வயசு வந்த ஒரு பெண்ணும் ஆணும் சில நேரம் சில விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டி இருக்கலாம். நேரம் காலம் கூடப் பார்க்க முடியாத சந்தர்ப்பங்கள் வரலாம். நீங்கள் கண்டிப்பா எங்களைக் கூட்டிட்டுப் போய்த்தான் தீரணும்னா, முதல்ல உங்க டி.எஸ்.பி.யை கொண்டுவாங்க; அதுக்குப் பிறகு பார்க்கலாம்."

"சரி, நாங்கள் பிறகு வருகிறோம்" அவர்கள் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

"வரணும்கிறது கட்டாயமில்லை. மேற்கொண்டு கதவைத் திறக்கவும் போறதில்லை. மீறித் கதவைத் தட்டினீங்கன்னா என் குணம் மாறிடும்."

அவர்கள் வெளியேறியதும் அருண் மறுபடி கதவை மூடி தாழிட்டான்.

"நீங்க தைரியசாலிதான்!"

"இப்போதான் அது உங்களுக்குப் புரிஞ்சதா? நீங்க தான் உள்ளே வந்ததும் பாத்ரூமுக்குள்ள போய்ப் புகுந்துக்கிட்டீங்களே. அதுக்குப் பிறகு நடந்ததெல்லாம் சினிமா மாதிரிதான். ரௌடிங்க மாதிரி ரெண்டு பேர், உங்களைத் தேடி வந்தாங்க. நல்ல பாடம் கத்துக்குடுத்து அனுப்பினேன் வந்துட்டுப் போன போலீஸ்காரங்களும் அவங்க ஆளுங்களாதான் இருக்கணும்னு நெனைக்கிறேன். போலீஸ் டிரஸ்ஸெல்லாம் வெச்சி இருக்காங்கன்னா பார்ட்டி, பெரிய ஆளுங்கதான்!"

"போகட்டும் விடுங்க. அதுதான் எதுவும் பேசாமப் போயிட்டாங்களே" அவள் எழுந்து கூஜாவிலிருந்து தண்ணீரை தம்ளரில் ஊற்றிக் குடித்தான்.

"நேரம்தான் போகுது. நாம ஆரம்பிச்ச விஷயம் அப்படியே அந்தரத்தில் நிக்குது."

"என் கதைதானே?"

"அதுவேதான், வேற என்ன?"

"சொல்றேன்."

"இனிமேல் இன்னிக்குத் தூங்கமுடியும்னு எனக்குத் தோணலை. சரி, கதை கேட்டாவது பொழுது போக்கலாமேன்னுதான்" அவன் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தான். சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான்.

"நான் ஒரு நாடக நடிகைன்னு சொன்னேன் இல்லையா? நாடகத்தில் நடிக்கிறவங்களுக்குப் பெரும்பாலும் சினிமாவில நடிக்கிறதும் ஒரு கனவா, லட்சியமா இருக்கும். நடிப்பையே தொழிலா வெச்சுட்டிருக்கிறவங்களுக்கு அது ஒரு முன்னேற்றமும்கூட. பொதுவா சினிமாவில நடிக்கணும்கிறது எப்படிப்பட்டவங்களும் விரும்புற ஒண்ணுதான். அப்படியொரு சந்தர்ப்பம் கிடைச்சா விட்டுடக்கூடாதுன்னு தீர்மானிச்சிருந்தேன். பத்திரிகையில ஒரு நாள் ஒரு விளம்பரம் பார்த்தேன். 'நடிக்கப் பெண்கள் தேவை'ன்னு. அதுக்காக இங்கே வந்து சேர்ந்தேன். அதுவும் இதே ஓட்டல்ல."

ராகினி அருணின் முன்னால் கிடந்த நாற்காலியில் வந்து அமர்ந்தாள். அவள் அழகே ஒருபடி கூடிவிட்டதாகத் தோன்றியது.

"இதெல்லாம் சாதாரணச் சம்பவங்கள்தான். இதில அதிசயப்பட எதுவுமே இல்லை". அருண் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியபடி பேசினான்.

"இதுவரைக்கும் சொன்னதில அப்பிடி எதுவும் இல்லைதான். மீதியையும் கேளுங்க..."

"நீங்க சொன்னாத்தான். சினிமா மாதிரி சஸ்பென்ஸெல்லாம் தேவையில்லையே?"



"சஸ்பென்ஸ் இல்லாத வாழ்க்கையே சுவாரஸ்யம் இல்லாமத்தான் இருக்கும். இவங்க இண்டர்வியூக்கு கூப்பிட்ட இடத்துல நான் ஒருத்தி மட்டும்தான் வந்திருந்தேன்."

"தனியாவா வந்தீங்க?"

"ஆமாம்."

"ஏன், யாரையும் கூட்டிட்டு வரலை?"

"நான் நாடகத்தில நடிக்கப் போகும்போதுகூடத் தனியாத்தான் போவேன். மத்தவங்களுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாதுன்னுதான். பகல் நேரம் வேற. பயப்பட என்ன இருக்குன்னு வந்துட்டேன்."

"நீங்களும் தைரியசாலிதான்!"

"வாழ்க்கையில தைரியம் இல்லாம இருந்தா எப்படி? தேவையான அளவுக்கு அதெல்லாம் இருக்குது."

"எப்படி இடத்தைக் கண்டுபிடிச்சீங்க?"

"லெட்டர்ல எல்லாத்தையும் தெளிவா எழுதியிருந்தாங்க. பஸ் ஸ்டாண்டில இருந்து ஒரு ஆட்டோவில வந்தேன்."

"அந்த லெட்டரைப் பார்த்துமா அவங்க படம் எடுக்கிறவங்கன்னு நம்புனீங்க?"

"ஆகா... அந்த லெட்டரைப் நீங்க பார்க்கணும். கம்பெனியோட பேரையே ஒரு கலர்ல அச்சடிச்சிருந்தாங்க. அதில எழுதியிருக்கிறதைப் பார்த்தா எப்படிப்பட்டவங்களும் சிக்காம இருக்கமாட்டாங்க."

"கம்பெனியில யாரெல்லாம் இருந்தாங்க?"

"மூன்று ஆண்கள், ஒரு பெண்."

"பெண்ணா?"

"ஆமாம்!"

"யாராவது நடிகையா இருந்திருக்கும்."

"அதெல்லாம் கிடையாது. அந்தம்மா முகத்தைப் பார்த்ததும் அவங்க என்ன தொழில் செய்யிறாங்கன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு!"

"அடடே... அப்புறம்?"

"காமிரா டெஸ்ட் எடுக்கணும்னு சொன்னாங்க. எனக்கு அது என்னன்னு தெரியலை, புடவையை மட்டும் கழற்றச் சொன்னாங்க. 'அப்படித் திரும்பு... இப்பிடித் திரும்பு'ன்னாங்க. நோஞ்சானா இருந்த ஒருத்தன் ஒரு காமிராவை எடுத்து வந்தான். ஃபிலிமுக்குப் பதிலா பழைய துணியைத்தான் திணிச்சு வச்சிருந்தாங்க போலிருக்கு. படம் எடுக்கிறேன்ன பேர்வழி கன்னாபின்னான்னு தொட்டான். அப்புறம் காட்சி மாறுது. வெறும் உள்ளுடையோட நிற்கணும்னாங்க. சினிமாவில அதையெல்லாம் பார்த்திருக்கிறதால ஒப்புக்கிட்டு அதையும் செஞ்சேன். நோஞ்சான் வெளியே போன பிறகு வேறொருத்தன் வீடியோ காமிராவோட வந்தான். ஒரு தடவை என்னைச் சுத்திச்சுத்தி வந்து படம் எடுத்தான். பிரகாசமான வெளிச்சம். கண்ணே கூசிப்போச்சு. அந்த லைட்டை அணைச்சிட்ட பிறகு ரூமுக்குள்ள அந்தப் பொண்ணு இல்லை. உடம்பில மிச்சமிருக்கிறதையும் கழற்றணும்னு சொன்னாங்க. நான் தயங்கினேன். சினிமாவில நடிக்கணும்னா உடல்கட்டு எப்படின்னு தெரிஞ்சாகணுமேன்னு சொன்னாங்க. அதுக்கும் சம்மதிச்சேன். எப்படியும் ஒரு சினிமா நடிகையாகணுமே!"

"நிஜமாவா? உடம்பில துணியே இல்லாம அவங்க முன்னால நின்னீங்களா?"

"ஆமாம்!"

அருண் ஒருகணம் அசைவற்று உட்கார்ந்தான். அதுபோன்ற சம்பவங்களை அவனும் கேள்விப்பட்டிருந்தான். அதெல்லாம் உண்மைதான் என்பது இப்போது புரிந்தது.



"பிறகு...?"

"சினிமாவில நடிக்கப்போறேன்னு சொல்லிட்டுதான் வீட்டைவிட்டுக் கிளம்பினேன். வெறுங்கையோட எப்படிப் போய் அவங்க முன்னால தோல்வியை ஒப்புத்துக்கிறது? எங்க வீட்டாளுங்களுக்கு நான் நாடக நடிகையானதிலயே வருத்தம். அது அவங்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கலை. எப்படியும் அதைக் குத்திக்காட்டிப் பேசுவாங்க. கொஞ்சம் பணமும் நகையும் இருக்கிறதால சொந்தக்காரங்கிட்டயும் பொறாமைதான். இந்தச் சூழ்நிலையிலதான் லெட்டர் வந்தது. நான் நடிகையாயிடுவேன்னே லெட்டரைப் பார்த்தவங்கல்லாம் உறுதியாச் சொன்னாங்க. மனசுக்குள்ள ஒரு வைராக்கியம். நடிகையாகணும்னு வந்துட்டு நடிகையாகாமத் திரும்பிப் போறது எப்படி? நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?"... அவள் தன் கழுத்தில் கிடந்த செயின் லாக்கட்டில் இருந்த சாமி படத்தைத் தொட்டபடி தொடர்ந்தாள்.

"சாமி சத்தியமா... நான் இதுவரைக்கும் சுத்தமானவ. எந்தத் தப்புத்தண்டாவும் பண்ணினதில்லை. இடம் சரியில்லேன்னு தெரிஞ்சா உடனே அங்கேயிருந்து கிளம்பிடுவேன். அதனாலதான் அதிகமான கம்பெனிகளை உதறவேண்டியதாப் போயிடுச்சு."

"அதெல்லாம் கிடக்கட்டும். ஓட்டல் கதை என்னாச்சு?" அருண், தீர்ந்துபோன சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் குத்தியணைத்தபடி கேட்டான்.

ஒருகணம் தயங்கியவள் தொடர்ந்தாள்:

"சரியாச் சொன்னா நாலு ஆம்பிளைங்களுக்கு முன்னால உடம்பில நூல்கூட இல்லாம நின்னேன். ஒரு நிமிடத்துக்குப் பிறகு விளக்கு அணைந்தது. யாரோ ஒருவன் என்னைப் பாய்ந்து கட்டியணைத்தான். உடனே வீடியோ உயிர்பெற்று இயங்கத் தொடங்கியது. எங்கிருந்துதான் வந்ததென்று தெரியவில்லை, எனக்குள் ஒரு வெறி. கடவுளோட அருள்னுதான் சொல்லணும். மேஜை மீது இருந்த பிராண்டி பாட்டிலைக் கையில் எடுத்தேன்.

மேஜையிலேயே தட்டி அதை ஆயுதமாக்கிட்டேன். திரும்பினபோது ஏற்கெனவே என்னைத் தொட்டவன் முழிச்சபடி நின்னுட்டிருந்தான். அவன் அடிவயித்தைப் பாத்து ஓங்கி ஒரு செருகு செருகினேன். வயித்தை இரண்டு கையாலயும் பிடிச்சுட்டு 'ஐயோ... அம்மா'ன்னு அலறினான். பின்பக்கமாகத் தள்ளாடிச் சரிய ஆரம்பிச்சான்.

ரத்தம் வடியிற பாட்டிலைக் கையில வெச்சுக்கிட்டே மிச்சம் இருக்கிறவனுங்களையெல்லாம் ஒரு தடவை பார்த்தேன். பூனையைப் பக்கத்தில பார்த்த எலி மாதிரி நடுங்கினாங்க. அவனுங்க திகைப்பிலேருந்து விடுபடறதுக்குள்ள என்னோட துணிகளை எடுத்துட்டு பாத்ரூம் போனேன். பாட்டில் அப்பவும் என் கையில. அவசர அவசரமா துணியைச் சுத்திட்டுக் கிளம்பினேன்.

பாட்டிலை அங்கேயே போடவும் முடியலை. திரும்பவும் அவங்க யாராவது என்னைப் பின்தொடர்ந்து வரலாம். எதுக்கும் இருக்கட்டும்னு கையிலேயே எடுத்துக்கிட்டேன். வெளியே வந்தபோது ரெண்டுபேர் பின்னால ஓடிவந்தானுங்க. சட்டுன்னு நின்னேன். கையில பாட்டில் வேற. எங்கேயும் ஓடவோ சத்தம் போடவோ முடியாது. அதனால என் முன்னால இருந்த கதவை தட்டினேன். திறந்தீங்க. அப்புறம் நடந்தது நீங்க சொன்ன சம்பவம்."

அருண் அதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் சொன்னதெல்லாம் நியாயம்தான். ஆனால், தொடரப்போகும் நிகழ்ச்சிகள் அவனை ஒருகணம் யோசிக்க வைத்தன. அதுமட்டுமல்ல, அவள் சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால் விளைவுகள் விபரீதமாயிருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

"நிலைமை ரொம்பவும் சிக்கலானதுதான்!" சுழன்று கொண்டிருக்கும் ஸீலிங்ஃபேனின் மையத்தைத் பார்த்தபடி பேசினான்.



ஃபேனின் சுழற்சியில் உலரத் தொடங்கியிருந்த அவள் தலைமுடி காற்றில் மெதுவாகப் படபடக்கத் தொடங்கியது.

இவ்வளவையும் சொன்ன அவள் அதற்காக வெட்கப் பட்டதாகவோ, வேதனைப்பட்டதாகவோ தெரியவில்லை.

"மேற்கொண்டு உங்க திட்டம்?" அருண் கேட்டான்.

கேள்விக்குப் பதில் சொல்லாமல் நிதானமாக எழுந்து ஜன்னலை நெருங்கி, வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்தாள்.

ஒளிப்பொட்டுகளாகத் தெரிந்த தெருவிளக்குகள் பனியில் குளித்து, குளிரில் விறைத்தபடி நிற்பதாகத் தோன்றியது.

நகரம் இரவின் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. திருடர்கள்கூட தூங்கத் தொடங்கும் நேரத்தில் அந்த அறையில் முன்பின் தெரியாத இருவர் மட்டும் விழித்திருந்தனர். அதுவும் பயங்கரமான ஒரு சூழ்நிலையில்.

உறக்கம் அவர்களை விட்டு வெகுதூரத்துக்கு விலகிப் போய்விட்டதாகத் தோன்றியது.

அருண் எழுந்து பால்கனிப் பக்கம் நடந்தான். கீழ்ப்புறத்தில் ஓட்டலின் பின்புறம் பலவீனமான வெளிச்சப் பகுதியில் ஏதேதோ உருவங்கள் தென்பட்டன.

"ராகினி ஒரு நிமிஷம் இப்படி வாங்களேன்!" அருண் அழைத்தான்.

அவள் தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் ஏதோ ஒரு நம்பிக்கையின் ஒளி தெரிந்தது. நகர்ந்து வந்து கீழ்ப்புறம் பார்த்தாள்.

டாக்ஸி ஒன்று புழக்கடை வாசலில் வந்து நின்றது. இரண்டுபேர் ஓட்டலின் உள்ளேயிருந்து சாக்கு மூட்டை ஒன்றை எடுத்து வந்தனர்.

காரின் டிக்கியைத் திறந்தனர்.

இருவரும் கீழ்ப்புறத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

காரில் சாக்குமூட்டை ஏற்றப்பட்டதும், ஏற்றியவர்கள் காருக்குள் ஏறி அமர்ந்தனர். கார் சீறிப்பாய்ந்து புறப்பட்டது.

"விஷயம் சுலபமாகத் தீர்ந்துவிட்டதாகத் தெரிந்தாலும் இப்போதுதான் விபரீதம் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியிருக்கிறது."

"எதைச் சொல்றீங்க?"

"என் யூகம் சரியானதா இருந்தா, அது நீங்க பாட்டிலால குத்தினவனோட பிணமாத்தான் இருக்கும்!"

# 4

சாக்கு மூட்டையைச் சுமந்த அம்பாஸிடர் கார், ஓட்டல் டிலைட்டிலிருந்து வெளியேறி ரோட்டை அடைந்து வடக்குப் புறமாக விரைந்தது. நகரின் எல்லையைக் கடந்து இடதுபுறமாகத் திரும்பி சொர்னூர் செல்லும் சாலையில் புகுந்து பறந்தது.

டிரைவரைத் தவிர காருக்குள் மேலும் இரண்டு பேர் இருந்தனர்.

"மூட்டையை எங்கேப்பா போடுறது?" ஒருவன் மற்றொருவனிடம் கேட்டான்.

"அதைப் பத்தி உனக்குக் கவலையே வேணாம் குமார். நான்தான் உன் கூடவே இருக்கிறேனே!"

"சொல்றது சுலபம். சாக்குமூட்டைக்குள்ள இருக்கிறது எப்பவும் என்னோட இருந்தவன். அவனை இப்போ இந்த மாதிரி பார்த்துட்டா, முதல்ல என்னைத்தான் பிடிப்பாங்க."



"அதுக்கு இப்ப என்ன செய்யணும்கிற?"

"புதைக்கிறதைத் தவிர வேற வழியில்லை." குமார் சொன்னான்.

"இந்த நேரத்துல பள்ளம் தோண்டிப் புதைக்கிறதெல்லாம் நடக்கிற விஷயமாத் தோணலை. எங்கேயாவது ஆத்துல குளத்துல கல்லைக் கட்டிப் போட்டுட வேண்டியதுதான்."

"முட்டாள்தனமா பேசாதே!"

"வேற என்னதான் பண்றது?"

"ம்... எனக்கு ஒரு யோசனை..."- குமார் எங்கோ தொலைவில் பார்த்தபடி பேசினான்.

ரோட்டின் முன்புறம் சற்றுத் தொலைவில் ஓரமாக ஜீப் ஒன்று நின்றிருந்தது.

"கோபாலா, கேன்ல பெட்ரோல் இருக்கா?" டிரைவரைப் பார்த்துக் கேட்டான் குமார்.

"எப்பவும் போல அஞ்சு லிட்டர் இருக்குது" கோபாலனின் குரல் என்னவோபோல் ஒலித்தது.

"அப்படீன்னா காரை, அந்த ஜீப்புக்கு பின்னால கொண்டுபோய் நிறுத்து."

"ஜீப்புல யாராவது இருக்கப் போறாங்க."

"அது நின்னுட்டிருக்கிறதைப் பார்த்தா ஆள் யாரும் பக்கத்துல இருக்குற மாதிரித் தெரியலை."

கார், ஜீப்புக்குப் பின்னால் வந்து நின்றது.

ஒருபுற டயர் வெடித்து ஒரு மாதிரி கோணலான கோணத்தில் ஜீப் நின்றிருந்தது.

ஜீப்பிலிருந்து ஏறத்தாழ ஐம்பது மீட்டர் இடைவெளியில் கார் நின்றிருந்தது.

காரிலிருந்து இறங்கிய வேணு ஜீப்பை நெருங்கி ஒரு தடவை சுற்றி வந்து பார்த்தான்.

"நான் நினைச்ச மாதிரிதான் நடந்திருக்குது. போலீஸ் ஜீப். நான் சொல்றபடி செய்ய முடியுமா?" குமார் கேட்டான்.

"இதுக்கு மேல எதையும் சொல்ல வேண்டாம். அந்த அளவுக்கு நான் கூமுட்டை கிடையாது."

"அப்பமன்னா டிக்கியைத் திறந்து சாக்குமூட்டையை வெளியே எடு."

சுற்றுமுற்றும் ஒருதடவை பார்த்துவிட்டு காரின் டிக்கியிலிருந்து வாய் கட்டப்பட்டிருந்த கோணிமூட்டையை வெளியே எடுத்தார்கள். ஜீப்பின் பின்புற ஸீட்டில் மூட்டையைக் குந்த வைத்தார்கள். காருக்கு வந்து பெட்ரோல் கேனைக் கையில் எடுத்து முக்கால் பாகத்தை கோணிமூட்டையின் எல்லா இடத்திலும் ஊற்றி ஊற வைத்தார்கள். மிச்சத்தை ஜீப்புக்கு உள்ளேயும் முன்புற இருக்கை, மேல்பக்கம் என்று தெளித்தார்கள். பத்தடித் தொலைவு அகன்று நின்று இரண்டு குச்சிகளைத் தீப்பெட்டியின் மருந்துப் பகுதியில் வைத்து அழுத்தி, துப்பாக்கி சுடுவது மாதிரி வீசினான் குமார்.

போட்ட விநாடியிலேயே ஜீப் மொத்தமும் பற்றி எரியத் தொடங்கியது.

"வேலை முடிஞ்சாச்சு. கிளம்பலாமில்லையா?" குமார், வேணுவைப் பார்த்துக் கேட்டான்.

கார் புறப்பட்டது.

போலீஸ் ஜீப் எந்தவிதமான தடங்கலுமின்றி காற்றின் துணையுடன் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

"இப்போ தப்பிச்சுட்டோம். நாளைக்கு நிலைமை என்ன ஆகுமோ?" வேணு சந்தேகம் கிளப்பினான்.



"நிலைமையில என்ன பெரிய மாற்றம் வரப்போகுது? 'ஒரு மனிதனுடன் போலீஸ்ஜீப் எரிந்தது!'ன்னு பேப்பர்ல நியூஸ் வரும். அவ்வளவுதான். ஜீப் எந்த ஸ்டேஷனைச் சேர்ந்ததோ அதோட இன்ஸ்பெக்டரும், டிரைவரும் சிக்கல்ல மாட்டிக்கப் போறாங்க." எந்தவிதமான பதற்றமும் இல்லாமல் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தபடி பேசினான் குமார்.

இருட்டு விலகுவதற்குள்ளாகவே கார் திரும்பவும் ஓட்டல் டிலைட்டுக்குத் திரும்பியது. இருவரும் தங்களது அறைக்குத் திரும்பி அறையைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டார்கள்.

மறுநாள் மாலைப் பத்திரிகைகளில் செய்தி முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரமானது. உண்மையில் அது ஒரு பரபரப்பான செய்தியாகவே ஊருக்குள் பேசப்பட்டது. திருசூர் நகரமே ஸ்தம்பித்தது. அசட்டையாக இருந்த இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸாரை உடனடியாக டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் கண்டனக்குரல் எழுப்பின. 'விபத்தில் இறந்துபோன மனிதர் யார்? என்பது விடை தெரியாத ஒரு கேள்வியாகத் தொடர்ந்தது.

பேசியே களைத்துப் போனவரைப் போல் ரிசீவரை கிராடிலில் பொருத்திவிட்டுப் பெருமூச்செறிந்தார் சிவப்பிரசாத்.

கர்னல் சிவப்பிரசாத் நகரின் பிரபலமான ஃபைனான்ஸ் கம்பெனியின் முதலாளி. லட்சக்கணக்கான பணத்தைப் பல்வேறு வியாபார நிறுவனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் கடனாகக் கொடுத்துக் கெட்டிக்காரத்தனமாக வசூல் செய்யும் சிவப்பிரசாத் லாபம் தரும் எல்லாத் துறைகளிலும் மூக்கை நுழைத்தவர். பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்தவர்.

ஐம்பதைக் கடந்த அவர் பத்தாண்டுகளுக்கு முன்பு வரை வட இந்தியாவில் பணிபுரிந்தவர். கொஞ்ச நாள் ராணுவத்தில் பணிபுரிந்ததால் 'கர்னல்' அவர் பெயருடன் ஒட்டிக் கொண்டது. வலுக்கட்டாயமாக ராணுவத்திலிருந்து விலகி வந்தவர். தொடர்ந்து பணிபுரிய உடல்நிலை இடம் தரவில்லை என்பதுதான் அவர்

அரசாங்கத்துக்கு தெரிவித்த காரணம். தன்னுடைய குதிகாலில் துளைபோட்டுவிட்டுத் தீராத ஆணி நோய் முற்றியிருப்பதாக ராணுவ மருத்துவர்களிடமிருந்து வாங்கிய போலிச் சான்றிதழையும் விண்ணப்பத்துடன் இணைந்திருந்தார்.

அவர் திருநூர் நகருக்கு வரும்போது, வட இந்தியாவின் ஏதோ ஒரு மருத்துவமனையில் நர்ஸாகப் பணிபுரிந்த பெண்மணியும் அவருடன் இருந்தாள்.

நகர எல்லை தாண்டி கிழக்குத் திசையில் ஓர் இடத்தை விலைக்கு வாங்கிப் பெரிய கட்டடம் ஒன்றை எழுப்பினார். சுமார் இரண்டு வருடகாலம் வெளிப்பார்வைக்கு எந்தவிதமான தொழிலிலும் ஈடுபடாமலிருந்தார். பிறகு மெதுவாக சமூக வாழ்க்கைக்குள் மூக்கை நுழைக்கத் தொடங்கினார். ஒரு லட்ச ரூபாய் 'பகடி' கொடுத்து நகரின் மையப் பகுதியில் ஓர் இடத்தைப் பிடித்தார். அப்படி ஆரம்பமானதுதான் 'சிவப்பிரசாத் பைனான்சியர்ஸ்' நிறுவனம்.

தங்க நகைகளின் பேரில் கடன் கொடுப்பது என்கிற முறையில்தான் அந்த நிறுவனம் ஆரம்பத்தில் செயல்படத் தொடங்கியது. அதன் பிறகு தினசரி சீட்டு ஒன்றை ஆரம்பித்தார். அதையும் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் செய்தார். எனவே, விரைவிலேயே வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பெருகியது. பணத்தை முன்கூட்டியே வாடிக்கையாளரிடம் கொடுத்துவிட்டு, தினசரி வசூல் செய்யும் முறை, வியாபாரப் பிரமுகர்களுக்குப் பெரிய அளவில் உதவியது. பிறகு டெபாசிட்டுகள் குவியத் தொடங்கின. வெறும் நான்கு வருடத்திலேயே சிவப்பிரசாத் கோடீஸ்வரரானார்!

கம்பீரமான மிலிட்டரி தோற்றம் உடையவர் சிவப்பிரசாத். ஆறடிக்கு மேற்பட்ட உயரம். அதற்கேற்ற உடம்பு, நெடுக்குவாட்டிலும் குறுக்கு வாட்டிலும் கச்சிதமாக இருந்தது. அவரது தாடை எலும்புகளே சராசரி மனிதர்களைப் பயமுறுத்தும் தன்மை வாய்ந்தவை. தடித்த ஃபிரேமிட்ட கண்ணாடியின்



பின்னால் ஆளை ஊடுருவும் விழிகள். இடைவெளி இல்லாதது போல் இணைந்திருந்த அடர்ந்த புருவங்கள். இடதுகண்ணின் நேர்கீழே மறைக்கமுடியாத ஒரு வெட்டுக் காயம், சற்று நீளமாக இருந்தது. முதல் பார்வையிலேயே 'கொடூரமானவர்' என்பதை எவருமே எடை போட்டுவிடலாம். பேச்சிலோ, நடவடிக்கைகளிலோ தயவு தாட்சண்யத்தை மருந்துக்கும் பார்க்க முடியாது. அவர் யாரிடமாவது அனுசரித்துப் போனால், அது முப்பதே வயதான வசந்தியுடன் மட்டும்தான். வாசந்தி, சிவப்பிரசாத்தின் இரண்டாவது மனைவி என்று சொல்லப்படுபவள்.

மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை உடைமாற்றி அழகுபடுத்திக் கொள்ளும் வாசந்தியைத் தெரியாத ஜவுளிக் கடைக்காரர்களோ, நகைக்கடைக்காரர்களோ அந்த நகரில் இல்லையென்று சொல்லலாம்.

டிரைவர் யாருமில்லாமல் அவளே கார் ஓட்டும் அழகை எப்படிப்பட்டவரும் ஒரு கணம் நின்று பார்க்கவே செய்வார்கள். மேக்கப் சாதனங்களைத் தாராளமாகப் பயன்படுத்தும் வாசந்தி, அழகை ரசிப்பவர்களுக்கு ஒரு காட்சிப் பொருள் என்பதில் சந்தேகமே இல்லை.

சிவப்பிரசாத்துக்கு ஏற்கெனவே ஒரு மனைவியும் குழந்தைகளும் இருப்பது ரொம்பப் பேருக்குத் தெரியாது. ஆனால், சிவப்பிரசாத்தின் வலதுகரமாக விளங்கும் விக்டருக்கு மட்டும் அவர் சம்பந்தப்பட்ட எல்லா ரகசியங்களும் அத்துப்படி.

விக்டர் ஒரு கால் இல்லாத மனிதர். முழங்காலுக்கு கீழுள்ள பகுதியை இழந்த அவரின் வயது அறுபது இருக்கலாம். வெளியே தெரியும் உடம்புப் பகுதிகளிலும் பளபளப்பான வழுக்கைத் தலையிலும் நீல நரம்புகள் புடைத்துக் கொண்டிருந்தன. சகிக்க முடியாத ஒரு துர்நாற்றம் உங்களைக் கடந்து போனால், அது விக்டர்தான் என்று நீங்கள் சத்தியமே செய்யலாம். புகையிலையும் விஸ்கி வாசனையும் எப்போதும் அவரிடம் ஒட்டிக் கொண்டிருக்கும். கருஞ்சிவப்புக் கறை படிந்த பற்கள், அருவருப்பு ஊட்டவில்லையானால் நீங்கள் கண்டிப்பாகப் பொறுமைசாலிதான்.

செயற்கைக் கால் பொருத்தி, அழகான கைத்தடி ஒன்றை ஊன்றியவாறு நடக்கும் விக்டர், கர்னல் சிவப்பிரசாத்தின் எந்த அலுவலகத்திலும், வீட்டிலும் எப்போது வேண்டுமானாலும் நுழையும் அதிகாரம் பெற்றிருந்தார்.

கறுப்புக் கலந்த செம்பட்டைநிற மீசை, வெட்டிச் சீராக்கப்படாமல் மேலுதட்டிலிருந்து கன்னாபின்னாவென்று வளர்ந்திருந்தது. முனைப்பகுதி வளைந்த கூர்மையான மூக்கும், எப்போதும் கொழுப்பான நீர் வடிந்து கொண்டிருக்கும் கண்களும் விக்டரை ஒரு விகார உருவமாக்கச் சுலபமாகவே உதவின.

அவர் அணிந்திருக்கும் நீண்ட கோட்டின் உட்புறப் பாக்கெட்டில் சப்பையான ரம் பாட்டில் ஒன்று எப்போதும் தயாராக இருக்கும். அடிக்கடி மூடியைத் திறந்து ரம்மை வாய்க்குள் ஊற்றிக் கொள்வதும், அணைந்து போனது போலவே இருக்கும் சுருட்டை ஆழ்ந்து இழுப்பதும் அவரது வழக்கம்!

சிவப்பிரசாத்தை, எப்போதும் கர்னல் என்றுதான் விக்டர் அழைப்பார். அவரோ, இவரை அங்கிள் என்று குறிப்பிடுவார். வாசந்தியும் விக்டரை அங்கிள் என்றுதான் அழைப்பாள். அவளது ஒவ்வொரு நடவடிக்கையும், விக்டருக்கு அவள் நன்றிக்கடன் பட்டிருப்பதை வெளிக்காட்டுவது போலவே இருக்கும்.

பொதுவாக கர்னல் மாலையில் அவ்வளவு நேரம் அலுவலகத்திருப்பது வழக்கமில்லை. அன்றைய பொழுது அப்படியே நீண்டுவிட்டது.

கீழ்ப்புறத்தில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதும் விக்டர்தான் வந்திருக்கிறார் என்று கர்னலுக்குப் புரிந்தது. செயற்கையான இடதுகால் கிளட்சிலும், வலது காலை மட்டும் மாற்றி மாற்றி பிரேக் மற்றும் ஆக்ஸிலேட்டரிலும் பயன்படுத்துவார் விக்டர். எப்படிப்பட்ட பயங்கரப் பாதையிலும் படுஸ்பீடாக காரோட்ட விக்டரால் முடியும்.



சத்தத்துடன் அழுந்திப் பதியும் செயற்கைக் காலின் டக்டக் சத்தம் கேட்டது கர்னல் சட்டென்று ஆஃப்டோரின் கீழ்ப்புறம் பார்த்தார்.

‘இந்த நேரம் எதற்காக வருகிறார் இவர்? என்கிற சிந்தனை சிவப்பிரசாத்திடம் எழவே செய்தது.

விக்டர், சிவப்பிரசாத்தைச் சந்திக்கிற பொழுதெல்லாம் குறைந்த பட்சம் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வாங்கி விடுவார். சுருக்கமாகச் சொன்னால் ஃபைனான்ஸ் கம்பெனியில் வட்டியாக வரும் லாபத்தின் பெரும்பான்மையான பங்கு, விக்டரிடம்தான் போய்க் கொண்டிருந்தது.

விக்டரின் வாழ்க்கை முறையும் இயல்பும் தெரிந்ததால் சிவப்பிரசாத் இன்று வரை ‘ஏன், எதற்கு, எப்படி?’ என்றெல்லாம் கேட்டதுமில்லை.

அறுபது வயதானாலும் விக்டர் இப்போதும் காதல் சக்ரவர்த்திதான். பெண்கள் பதினாறு வயதிலிருந்து பத்தொன்பது வயதுக்குள் இருந்தால் அவருக்கு மிகவும் பிடிக்கும். அந்த மாதிரிப் பெண்களைத் தேடிப்பிடித்து வருவதற்கென்றே அவருக்கு நகரின் பல பகுதிகளிலும் ஏஜெண்டுகள் இருந்தார்கள்.

ஒன்றோ இரண்டோ இளம்பெண்களை உடனழைத்துக்கொண்டு கோவளம் அல்லது திருவனந்தபுரத்தையடுத்த ஓட்டலில் ‘கேம்ப்’ போடும் விக்டரை இதுவரையில் போலீஸ் ஏன் என்று கேட்டதோ அதட்டியதோ கிடையாது. தாத்தா-பேத்தி என்று நினைத்துக் கொள்வார்களோ என்னவோ? மற்ற அறைகளில் ரெய்டு நடந்தாலும் தாத்தா மட்டும் அதிலிருந்து தப்பித்து விடுவார்.

அவருடைய ஒரு வாரத்துச் செலவைக் கணக்கிட்டால் குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயாவது வரும். இந்த விஷயத்தில் மட்டும் சிவப்பிரசாத் இதுவரை எந்த எதிர்ப்பும் காட்டியதில்லை.

அதன் காரணம் என்ன என்பதும் யாருக்கும் தெரியாது.

"ஹலோ கர்னல்... இன்னிக்கு நான் வருவேன்னு தெரியும்தானே?"- அறையின் அரைக் கதவைத் திறந்துகொண்டு நுழைந்தபடி விக்டர் கேட்டார்.

'நாசமாப் போன கிழட்டுக் குதிரை!'- சிவப்பிரசாத்தின் மனம் முணுமுணுத்தது.

"நீ என்ன யோசிச்சேன்னு தெரியும்."

"என்ன யோசிச்சேன்?"

"கிழட்டுக் குதிரை வந்திருச்சான்னு!"

"சேச்சே... அதெல்லாம் கிடையாது."

"பேப்பரைப் பார்த்தியா?"

"பார்த்தேன்."

"நான் கேட்டது மாலை பேப்பரை... கொண்டு வந்திருக்கிறேன் பார்." விக்டர் நாலைந்து பேப்பர்களை டேபிள் மீது போட்டார்.

சிவப்பிரசாத் ஒன்றை எடுத்து விரித்தார்.

'ஜீப்புடன் எரிந்தது ஒரு வாலிபரின் உடம்பு!'

'ஏதோ ஒரு குற்றவாளியைத் தேடியலைந்த போலீஸ் ஏறத்தாழ அதே மாதிரித் தென்பட்ட ஒரு அப்பாவியைப் பிடித்துவந்து அடித்துத் துவைத்து, உயிர் போனவுடன் ஜீப்போடு சேர்த்துக் கொளுத்தியிருக்கலாம்!'

யாரோ ஓர் அரசியல்வாதி பேசிய பேச்சை அப்படியே வெளியிட்டிருந்தார்கள்.

கர்னல் ஒவ்வொரு பத்திரிகையையும் எடுத்து கவனமாகப் பார்த்தார்.

"மடையனுங்க!" கர்னலின் வாயிலிருந்து கடைசியாக வார்த்தை வெளிப்பட்டது.



"யாரு, போலீஸ்காரங்களா?" விக்டர் கேட்டார்.

"இல்லை, பத்திரிகைக்காரங்க!"

"அவங்களை ஏம்ப்பா திட்டுறே?"

"போலீஸ்காரங்க அடிச்சுக் கொன்னுட்டு அதை அவங்க ஜீப்பிலேயே வெச்சு எரிப்பாங்களா என்ன?"

"அப்படிப் பேசியிருக்கிறார் ஒரு அரசியல்வாதி."

"அப்போ வேற யாரோ எரிச்சிருக்கணும் இல்லையா?" கர்னல் தனது சிகார் பைப்பில் புகையிலையை நிரப்பியபடி கேட்டார்.

"வேற யாராவது எரிச்சிருப்பாங்களா, எப்படி? நான் இந்த ரெண்டு கண்ணாலயும் நேரா எரியும்போது பார்த்தேன். இந்த விக்டரை ஒரு பயலும் ஏமாத்த முடியாது போகட்டும், பத்து ரூபா குடு. சீக்கிரம் போகணும்!"

விக்டரின் வார்த்தைகளைக் கேட்டு கர்னல் ஒரு கணம் அசந்தே போனார்.

## 5

விக்டரிடமிருந்து அப்படியொரு செய்தி வரும் என்று கர்னல் எதிர்பார்க்கவே இல்லை.

வேணுவும் குமாரும் சேர்ந்து ஜானியின் உடம்பை எரித்த பிறகு உடனேயே கர்னலிடம் தெரியப்படுத்தவும் செய்தனர்.

இது கொஞ்சம் அதிகப்பிரசங்கித்தனமான வேலைதான் என்று தெரிந்தாலும் கர்னல் அதற்காக அவர்களைக் கோபிக்கவில்லை. அந்த இருவருமே கர்னலின் அந்தரங்கத் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள். கர்னலுக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள்.

சாகடிக்கவும், சாகவும் தயாராக இருக்கும் நபர்கள் குறைந்த பட்சம் ஐம்பது பேராவது கர்னலின் கீழிருந்து செயல்படுகின்றனர். அதற்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவரது கட்டளை மட்டும் போதும். எந்த நேரமும் எதையும் செய்யத் தயாராக இருந்தனர். சிவப்பிரசாத்தின் கடத்தல் தொழிலுக்கு அவர்கள்தான் பொறுப்பாளிகள்.

நகரத்தின் சந்தடி மிகுந்த பரப்பிலிருந்து விலகி கிழக்குத் திசையில் நகர எல்லையை ஒட்டியே சிவப்பிரசாத்தின் டயர் ரீட்ரேடிங் கம்பெனி ஒன்று உள்ளது. இரண்டு சினிமா தியேட்டர் அளவுக்குப் பெரியதான அந்த 'கோடெளனுக்குள்' பத்தாயிரத்துக்கும் அதிகமான டயர்கள் பத்திரப்படுத்தப் பட்டிருந்தன. ஒன்றுக்கும் உதவாத டயர்கள் அவை. கம்பெனி என்ற பெயருக்காக அவை அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

யாராவது டயர் கொடுக்க வந்தால் ஒரு மாதமாகும் இரண்டு மாதமாகும் என்று சொல்லித் திருப்பி அனுப்புவதுதான் கம்பெனி வழக்கம். அவருடைய சொந்த வண்டிகளின் வேலை மட்டும் அங்கே தடையில்லாமல் நடந்தது என்று சொல்லலாம்.

அந்த கோடெளனுக்குள்தான் கடத்தல் பொருள்கள் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

கோடிக்கணக்கில் மதிப்பு வாய்ந்த கஞ்சா மற்றும் ஹெராயின் அதற்குள் இருந்தன.

பெரும்பாலும் டயர்களுக்குள் நிறைக்கப்பட்டுதான் அவை வெளியேறிக் கொண்டிருந்தன. சட்டவிரோதமான ஆயுதங்களுடன் வீரர்கள் அந்த கோடெளனைப் பாதுகாத்து வருகின்றனர். அப்படிப்பட்டவர்களின் தேவை எதுவானாலும் உடனே நிறைவேற்றப்பட்டது.

"உங்களுக்கு எப்படி விவரம் தெரிஞ்சது?"

"கர்னல், அன்னிக்கு டாக்ஸியை ஓட்டின டிரைவரே நான்தான்! அப்போ மட்டும் என் பேரை கோபாலன்னு வெச்சுக்கிட்டேன்."



"அப்போ... கோபாலன்?"

"அதைச் சொல்ல மறந்துட்டேன். சுவாரசியமான சம்பவம்தான்." என்ற விக்டர் அணைந்ததுபோல் தோற்றமளித்த சுருட்டுக்கு உயிர் கொடுப்பதுபோல் உறிஞ்சினார். நெருப்பு கனிந்ததும், பாக்கெட்டிலிருந்து பாட்டிலை எடுத்து ஒரு தடவை வாயில் கவிழ்த்துக் கொண்டார்.

"உன்னோட சினிமா கம்பெனியைப் பத்தித்தான் எனக்குத் தெரியுமே. எங்கிருந்தோ ஒரு பெண் கிடைச்சதாகவும் சொன்னது ஞாபகம் இருக்கா? சரி, ஆளு புதுசா இருக்கே... ஒருநாள் பொழுதைக் கழிக்கலாமேன்னு ஆட்டோ பிடிச்சு ஒட்டலுக்குப் போனேன். கோபாலன் காரை நிறுத்திட்டு உள்ளே படுத்திருந்தான். மெதுவா அவன் காதைக் கடிச்சேன். அவன் மொத்தத்தையும் கொட்டிட்டான். 'ஷூட்டிங் முடியப் போவுது கொஞ்ச நேரத்துல பொண்ணு வந்துடும்'னான். உன்கிட்டக் கொண்டு வர்றதுக்காகக் காத்திருக்கிறதாகவும் சொன்னான். சரி, நாமளும் ஒரு விளையாட்டு விளையாடலாம்னு கோபாலனை ஒதுக்கிட்டு, நானே டிரைவரா உட்கார்ந்துட்டேன். அவனுங்க என்னடான்னா பொண்ணுக்குப் பதிலாக, கோணிமூட்டையை எடுத்துவந்து டிக்கியில ஏத்துறானுங்க. ஒருவேளை பொண்ணைத்தான் அப்படி எடுத்துட்டு வர்றானுங்களோன்னுகூட நினைச்சேன். அப்புறம்தான் அது பொண்ணு இல்ல பொணம்னு தெரிஞ்சது. நேரா டயர் ரீட்ரேடிங் கம்பெனிக்கே போகலாம்னு பார்த்தேன். அங்கே இருக்கிறவனுங்க ஜானியை நாம கொன்னுட்டதா தப்பாப் புரிஞ்சுட்டா, விஷயம் தலைகீழா மாறிடுமேன்னு அவங்களாவே வேற ரூட் சொன்னாங்க. போனேன். கெட்டிக்காரத்தனமா செஞ்சிட்டாங்க சின்னப்பசங்க. எவனும் சீக்கிரத்துல கண்டுபிடிக்கவே முடியாது கர்னல்!"

விக்டரின் விளக்கம் கர்னலுக்கு மிகவும் பிடித்துப் போனது. அதுவும் ஒரு வகையில் நல்லதுதான் என்று தோன்றியது.

"அங்கிள் இப்பவே பத்தாயிரமும் தேவையா?" கர்னல் கேட்டார்.

"பத்தாயிரம் ரூபாய்ங்கிறது பெரிய பணம்னா நினைக்கிறே? கோவளத்துல நல்ல ஓட்டல்ல ஒருநாள் தங்கணும்னா ஆயிரம் ரூபா தேவைப்படுது. எதுக்கு வீணா பேசிக்கிட்டு. சீக்கிரம் பணத்தை எடு!"

அதன் பிறகு சிவப்பிரசாத் வேறு எதுவும் பேசாமல் மேஜை டிராயரைத் திறந்து நூறு ரூபாய் கட்டு ஒன்றை எடுத்து விக்டரின் முன்னால் போட்டார். எந்தவிதமான தயக்கமோ கூச்சமோ இல்லாமல் விக்டர் அதை எடுத்து கோட்டு பாக்கெட்டில் திணித்துக் கொண்டார்.

"மறந்தே போயிட்டேன்... ஆமா புது கேஸட் ஏதாவது இருக்கா?"

"நல்லவேளை ஞாபகப்படுத்தினீங்க. அஞ்சு புது கேஸட்டுங்க இருக்குது. ஒரு கேஸட்டுக்கு குறைஞ்சது ஐம்பதாயிரம் கிடைக்கணும். நீக்ரோ ஆம்பிளையும் வெள்ளைக்காரப் பொண்ணும். வழக்கம் போல அரைமணி நேரம் ஓடும்!"

"வித்துட்டாப் போகுது!"

கர்னல் ஒரு முக்கியமான விஷயத்தை விக்டரிடம் ஒப்படைத்திருந்தார். அதை அவரும் கச்சிதமாக நிறைவேற்றி வந்தார்.

புதிய புளூ"ஃபிலிம் வீடியோ கேஸட்டுகளை பிரதி எடுத்துக் கொடுக்கும் ஏஜெண்டாக இருந்தார் விக்டர். யாரிடமும் சிக்காமல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் கேஸட்டை ஒப்படைப்பது விக்டரின் பொறுப்பு. இதுவரை அதை கெட்டிக்காரத்தனமாகச் செய்து வருகிறார்.

அழுக்கடைந்ததாகவும் நைந்து போகத் தொடங்கி இருப்பதுமான அவரது கோட்டின் கம்பளி லைனிங்குக்கு உட்புறம் குறைந்தபட்சம் பத்து கேஸட்டுகளாவது எப்போதும் இருக்கும். புகையிலை மற்றும் விஸ்கியின் மணம் அவரைச் சூழ்ந்திருப்பதால் சுலபத்தில் யாரும் அவர்மீது சந்தேகப்படுவதில்லை.



கர்னல் சிவப்பிரசாத்தின் அலுவலகத்தின் உட்புறம் ரகசியமான ஓர் அறை இருந்தது. அந்த அறையைப் பற்றித் தெரிந்தவர்கள் இரண்டே இரண்டு பேர். ஒருவர் கர்னல், மற்றவர் விக்டர்.

ஒரு தடவை பேச்சோடு பேச்சாக விக்டரைத் தவிர மூன்றாவது நபர் ஒருவருக்கும் இந்த ரகசியம் தெரியும் என்று அவர் சொல்லியதைத் தொடர்ந்து கர்னல், விக்டருக்கு அதிகமாகப் பயப்படத் தொடங்கினார்.

சிவப்பிரசாத்தின் நிதி நிறுவனம் தற்போது இயங்கும் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் அவருக்கு ஓர் ஓய்வு அறை இருந்தது. அதையொட்டி அந்த அறை வழியாகவே செல்லக்கூடிய இரண்டு அறைகள் இருந்தன. ஒன்று அட்டாச்டு பாத்ரூம். மற்றதுதான் ரகசிய அறை.

கம்பெனிக்காகக் கட்டடம் கட்ட இடத்தை வாங்கியபோது இந்த காம்பௌண்டுக்குள் ஒரு சிறிய கட்டடமும், ஆழமான கிணறு ஒன்றும் இருந்தன. கட்டடத்தை இடித்துவிட்டாலும் அந்தக் கிணற்றை அவர் மூடவில்லை. புதிய கட்டடம் பிரமாண்டமாக உயர்ந்ததுடன், அந்தக் கிணறு அவரது பாத்ரூமை ஒட்டிய மற்றொரு ரகசிய அறையாக கிணற்றை முழுவதுமாக மூடி அமைந்தது. சட்டென்று கண்டுபிடிக்க முடியாதபடி அது அமைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ மூன்றடிக்கு மூன்றடிச் சதுரத்தில் அதில் ஒரு திறப்பு வலுவாகப் பொருத்தப்பட்டிருந்தது.

சிவப்பிரசாத்தின் ரகசிய நடவடிக்கைகளை யாராவது தெரிந்துகொண்டாலோ, சந்தேகப்பட்டாலோ, கண்காணிக்கத் தொடங்கினாலோ அதன் பிறகு அவர் காணாமல் போய்விடுவார். அப்படிப்பட்டவர்கள் நிரந்தரமாக ஓய்வெடுப்பது ஆழம் நிறைந்த அந்தக் கிணற்றின் அடிப்பரப்பில்தான்.

கவர்ச்சிகரமான பெரிய கட்டடத்தின் உள்ளே, அடிப்புறத்தில் இப்படியொரு சவக்கிடங்கு இருக்கிறது என்பதே

யாருக்கும் தெரியாது. இப்போது அது மூன்று பேருக்கு மட்டுமே தெரியும்.

புத்திசாலியான விக்டர் அதை மூன்றாவது மனிதரிடம் தெரிவித்ததுகூட, தன்னுடைய சுயப்பாதுகாப்புக்காகத்தான்.

கர்னல் சிவப்பிரசாத் மூலம் விக்டருக்கு ஏதேனும் ஆபத்து நேர்வதாக இருந்தால், யாரென்று தெரியாத இந்த மூன்றாவது மனிதர், உடனே ரகசிய அறையைப் பற்றி போலீஸில் சொல்லிவிடுவார்.

கர்னலின் அலுவலகத்தில் வேலை பார்த்த சிலர் காணாமல் போயிருக்கிறார்கள். அலுவலகத்துக்கு வந்த அவர்கள் அங்கிருந்து வெளியேறவே இல்லை. என்ன ஆனார்கள் என்பது மர்மமாகவே இருந்தது.

"கர்னல், அந்தப் பெண்ணை நீ நேர்ல பார்த்தியா?" விக்டர் தன் செம்பட்டை கலந்த மீசையைத் தடவியபடி கேட்டார்.

"இல்லை... பார்த்ததே இல்லை. அவள் போட்டோவை குமாரும் வேணுவும் வச்சிருப்பாங்களே."

அப்போது இண்டர்காம் ஒலியெழுப்பியது.

"அவனுங்களுக்கு ஆயுசு நூறு. பேசிக்கிட்டே இருந்தோம். வந்துட்டானுங்க"- ரிசீவரை வைத்தபடியே சொன்னார் சிவப்பிரசாத்.

சற்று நேரத்துக்குள் இருவரும் அறைக்குள் வந்தனர்.

"நேற்று நீங்கள் போலீஸ் ஜீப்பை எரித்ததை அங்கிள் கண்ணால் பாத்திருக்கிறாரே, உண்மையா?"

"அந்தப் பகுதியிலேயே யாரும் கிடையாது. நாங்க ஜாக்கிரதையாத்தான் செஞ்சோம். அங்கிள் கவனிக்கச் சந்தர்ப்பமே கிடையாது!"



"குழந்தைங்களா, நீங்க பயணம் செஞ்ச டாக்ஸியை ஓட்டிட்டு வந்த டிரைவரே நான்தான்!"

"இல்லை... கோபாலன்தான் வந்தான்."

"நான்தான் அந்த நேரத்துக்கு கோபாலனா இருந்தேன்."

"அப்பமன்னா நீங்க கில்லாடிதான்!"- குமார் ஒப்புக் கொண்டான்.

"அதனாலதான் கில்லாடிக்குக் கில்லாடியான உங்க முதலாளியை என் சுண்டுவிரல்லயே நிறுத்தி வைக்க முடிஞ்சிருக்கு தெரியுமா"

"சரி, அந்தப் பொண்ணு எங்கே?" கர்னல் கேட்டார்.

"அவள் என்ன ஆனாள்னு தெரியலை சார்!" வேணு பதிலளித்தான்.

"முட்டாளுங்களே... என்ன வார்த்தை பேசுறீங்க? ஒரு பொண்ணு, உங்க நாலு பேரை ஏமாத்திட்டு தப்பிச்சுப் போயிட்டாளா? என்னை நம்பச் சொல்றீங்களா?"

"ஜானியை உடைஞ்ச பாட்டிலால குத்திட்டு அங்கிருந்து ஓடி மறைஞ்சுட்டா!"

"இதைச் சொல்றதுக்கு உங்களுக்கு வெட்கமாயில்லை? நீங்கல்லாம் வயசு வந்த ஆம்பிளைங்கதானே? அங்கிளைப் பாருங்க... இந்த வயசிலயும் எவ்வளவு சுறுசுறுப்பா, விழிப்பா, தைரியத்தோட இருக்கிறார். கத்துக்கங்கடா! சரி படம் ஏதாவது எடுத்தீங்களா?"

"போட்டோ மட்டும்தான் எடுத்தோம். வீடியோவில ஷ"ட்டிங் ஆரம்பிச்ச போதுதான் அந்த விபரீதம் நடந்தது. பாட்டிலை எடுத்து உடைச்சு ஜானி வயித்துல செருகிட்டு... அவள் குத்தினதும் ஜானி விழுறதும், நாங்க அவனைத் தாங்கிப் பிடிக்கிறதும்கூட வீடியோவில பதிவாயிருக்கு."

"கெட்டிக்காரப் பசங்க. அதை நீங்களே உட்கார்ந்து வீடியோவில போட்டுப் பார்த்திங்க."

"எல்லாம் தத்ரூபமா இருக்குங்க கர்னல்!"

"சரி, அந்த கேஸட் எங்கே?"

"கேஸட்... வந்து..."- குமார் தடுமாறினான்.

"மென்னு முழுங்காமச் சொல்லு, கேஸட் எங்கே?" கர்னல் சிவப்பிரசாத்தின் குரல் உயர்ந்தது.

"காணாமப் போயிடுச்சு!"

"என்ன தைரியம் இருந்தா இப்பிடிச் சொல்லுவே?" கர்னல் சிவப்பிரசாத், முன்னாலிருந்த ஆஷ்ட்ரேயை எடுத்து அவன்மீது வீசியபடி எழுந்தார்.

"கர்னல்... வீணாக் கோபப்படாதே. எப்படித் தொலைஞ்சது, யார் எடுத்துட்டுப் போனாங்கன்னு முதல்ல அவன் சொல்லி முடிக்கட்டும். அதற்குப் பிறகுதானே மத்த விஷயமெல்லாம். குமார்... கர்னல் கிடக்குறார். நீ நடந்ததை நடந்தபடி சொல்லு..." விக்டர் கூறினார்.

"வீடியோவிலிருந்து கேஸட்டைக் கழற்றி வாங்கிட்டேன். அதை பனியனுக்குள் போட்டுக்கொண்டுதான் அவளைத் தேடி நான் புறப்பட்டேன்."

"சரி, அவளையாவது கண்டுபிடிச்சியா?" கர்னல் இடையில் புகுந்தார்.

"கர்னல்... கொஞ்ச நேரம் சும்மா இரு. தம்பி, நடந்தது என்னன்னு நீ சொல்லுப்பா."

"அவள் ஒருத்தனோட அறைக்குள்ளே இருந்தாள். அவன்கிட்ட நாங்க சண்டைகூடப் போட்டோம். அந்த அறைக்குள்தான் கேஸட் தொலைந்திருக்க வேண்டும்!"



"கர்னல்...! இவன் சொன்னதைக் கவனிச்சியா? இவனும் அந்தப் பொண்ணும், எரிஞ்சு செத்துப்போனானே அவனும் இருக்கிற கேஸட் காணாமல் போயிடுச்சாம். அவனுங்க எல்லோரும் உன்னோட ஆளுங்கதான்னு மோசமான அந்த போலீஸ்காரங்களுக்கும் தெரியும். அது உனக்கு அசிங்கமில்லையா கர்னல்? போலீஸ்காரங்க ஒருவேளை இவனுங்களை பிடிச்சுட்டும் போகலாம். இவனுங்களையெல்லாம் நாம காப்பாத்த வேணடாமா?"- விக்டர் சுருட்டின் மீது படிந்த சாம்பலை, மேஜை மீதிருந்த கனமான கண்ணாடியின் மீது தட்டிவிட்டவாறு பேசினார்.

"அங்கிள் சொன்னது எவ்வளவு சரியான வார்த்தை? இவங்களை போலீஸ் பிடிக்கக்கூடாது இல்லையா?" அடுத்த விநாடி ஏர்கண்டிஷன் செய்த அந்த அறைக்குள் இரண்டு குண்டுகள் வெடித்தன. கர்னல் பிரசாத், கைத்துப்பாக்கியின் முனையில் எழுந்த புகையை ஊதியபடி அதை மேஜை டிராயருக்குள் போட்டு மூடினார்.

"அங்கிள் இவனுங்களை பக்கத்து அறைக்குள் கொண்டு போறதுக்கு உதவி செய்யுங்களேன்" கர்னல் எழுந்தவாறே கேட்டார்.

துப்பாக்கி குண்டு ஊடுருவித் துடித்து விழுந்து இறந்த குமார் மற்றும் வேணுவின் உடம்புகளை சிவப்பிரசாத்தும், விக்டரும் சேர்ந்து பக்கத்து அறைக்கு இழுத்துச் சென்றனர். ஸ்லாபை உயர்த்தி இருவரையும் பக்குவமாக உள்ளே தள்ளினர்.

"நல்லவேளை... ரெண்டு சாட்சிங்க இல்லாமப் போயிட்டாங்க."

விக்டரின் பொய்க்கால் சத்தம் அந்த ஏர்கண்டிஷன் அறையிலிருந்து வெளியேறி மறைந்தது.

கர்னல் ஜன்னலை மூட முயன்றபோது விக்டரின் அம்பாஸிடர் கார் கேட்டைக் கடந்து வெளியேறுவதை கர்னல் கவனித்தார்.

ஆனால், அதே நேரம் மற்றொரு டாக்ஸி அந்த காம்பௌண்டுக்குள் நுழைந்து உட்புறமாக வந்து நின்றதை வாட்ச்மேன் கவனிக்கவே செய்தான்.

கர்னல் சிவப்பிரசாத்தின் அறையிலிருந்த இண்டர்காம் ஒலியெழுப்பியது.

"ஒரு பெண் உங்களைப் பார்க்கணும்னு சொல்றாங்க சார்" வாட்ச்மேனின் குரல் கேட்டது.

"யார் அவள்?"

"... ... ... ..."

"உண்மையாகவா? அப்படி இருக்கக்கூடாதே! சரி, வரச்சொல்!"

கர்னல் அலமாரியைத் திறந்து விஸ்கி பாட்டிலை எடுத்து மூடியைத் திறந்து அப்படியே வாய்க்குள் கவிழ்த்தார். ஒரு மிடறு விழுங்கினார்.

## 6

கர்னல் சிவப்பிரசாத் தன்னுடைய சுழல் நாற்காலியில் வந்து அமர்ந்தார்.

ஆஃப் டோரின் கீழே கால்கள் தெரிந்தபோது தன் முகம், கழுத்துப் பகுதிகளில் முகிழ்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"கமின்!" பைப்பை உதட்டில் பொருத்திக் கொண்டு, நெருப்பைப் பற்றவைத்தவாறு கூறினார்.

இருபத்திரண்டு அல்லது வயது மதிப்பிடலாம். இளம்பெண் ஒருத்தி உள்ளே வந்தாள். அவள் முகத்தில் தைரியம் துலக்கமாகத் தெரிந்தது.



அவள் கையிலிருந்த ஹேண்ட்பேக் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது.

சந்தன நிறத்திலிருந்த அவள் உடல் கடைந்தெடுத்ததுபோல் கச்சிதமாக இருந்தது. கருமையான, சுருண்ட தலைமுடி பனங்குலைபோல் பின்புறம் அடர்த்தியாகத் தெரிந்தது. கவிஞர்கள் வர்ணிக்கும் அழகு, அவள் முகத்தில் நிறையவே இருந்தது. கழுத்தில் கிடந்த தங்கச் செயினுக்கும், அவள் உடம்புக்கும் சட்டென்று வித்தியாசம் தெரியவில்லை. வலது கையில் ஆறு தங்க வளையல்களும், இடது கையில் வாட்ச்சுடன் கூடிய காப்பு ஒன்றும் இருந்தது. இடது கை மோதிர விரலில் வெள்ளைக்கல் பதித்த மோதிரம் ஒன்று கிடந்தது.

மெரூன் நிறப் புடவையும், அதே நிற ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள்.

கர்னல் சிவப்பிரசாத்தின் எதிரில் வந்ததும் கையிலிருந்த பேக்கை அலட்சியமாக மேஜை மீது வைத்தாள்.

அது சிவப்பிரசாத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையென்று தோன்றியது.

"டெலிபோன்ல என்னம்மா சென்ன நீ?" பல்லால் பைப்பைக் கடித்தபடி கேட்டார்.

"மறுபடியும் நானே அதை என் வாயால சொல்லணுமா? இதுவரைக்கும் எங்க அம்மா என்னை வளர்த்ததே போதாதா?"

"உன் பேர் என்னம்மா?"

"மேனகா!"

"நீ என் பொண்ணுங்கிறதுக்கு என்ன ஆதாரம் வச்சிருக்கிறே?"

"நிறைய இருக்கு! அம்மா பேரு தேவிகா. மச்சரா இருந்தாங்க. அவங்க மச்சரா ஆகறதுக்கு முன்னாடியே நான் பிறந்துட்டேன். நான் இந்த பூமிக்கு வர்றதுக்கு ஆறு மாதத்துக்கு

37849
5479329

முந்தியே என் அப்பா சிவப்பிரசாத் ஊரைவிட்டுப் போயிட்டார். போகறதுக்கு முன்னாலேயே என் அம்மாவைக் கொல்றதுக்கு முயற்சி செஞ்சார். துரதிருஷ்டவசமா அம்மா அதில உயிர் பிழைச்சுட்டாங்க. ரெண்டு பேர் மட்டும் தனியாப் போன படகில இருந்து நடு ஆத்தில அம்மாவைப் பிடிச்சுத் தள்ளீட்டிங்க. வலைவீசி மீன் பிடிக்குற வேலாயுதன்கிறவர் எதிர்பாராமக் காப்பாத்திட்டார். அவருடைய உபசரணையில் இரண்டு நாள் தங்கியிருந்து பிறகு அவரோட மகள் வீட்டுக்குப் போயிட்டாங்க. அவங்ககூடவே தங்கியிருந்தாங்க. என்னை வளர்த்துப் படிக்க வச்சாங்க. அதுக்கு நடுவிலேயே டிரெய்னிங் முடிச்சு அம்மா டீச்சராவும் வேலையில சேர்ந்தாங்க. போன வாரம் நடந்த பஸ் விபத்துல சிக்கிக்கிட்டாங்க. ஆஸ்பத்திரியில இருக்கும்போது தான் உயிர் வாழப்போறது இல்லேங்குறது உறுதியான பிறகுதான் அம்மா இதையெல்லாம் என்கிட்டச் சொன்னாங்க..."

"எல்லாம் வடிகட்டின பொய்!" சிவப்பிரசாத் முரட்டுத்தனமான குரலில் கூறினார்.

"நீங்க இப்பிடி மறுப்பீங்கன்னும் நான் எதிர்பார்த்தேன்" மேனகா நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் அமர்ந்தாள்.

"ரொம்ப அழகா ஒரு கட்டுக்கதையை உருவாக்கிட்டு வந்திருக்கிறேன்னு தெரியுது. இப்படியெல்லாம் உன்கிட்டச் சொல்லி ஏவிவிட்டது யார்? அதை முதல்ல சொல்லு. சும்மா சொல்லக்கூடாது. ரொம்ப சுவாரஸ்யமா கதை சொல்றே!"

"இப்படியொரு கட்டுக்கதையை நான் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. இப்போ நான் அந்த மாதிரி நிலைமையில இல்லை. நான் பி.எஸ்.சி. ஃபர்ஸ்ட் கிளாஸ்ல பாஸாகியிருக்கிறேன். வேலையில இருக்கும்போதே அம்மா இறந்ததால, எனக்கு அந்த வேலையும் தயாரா இருக்கு. எல்லாத்துக்கும் மேல அம்மா ஒரு லட்ச ரூபாயை எனக்காக பாங்க்ல போட்டு வெச்சிருக்காங்க. என்ன இருந்தாலும் அப்பாவோட சொத்துக்கு நான்



கொஞ்சமாவது அருகதையானவன்னு நிரூபிக்க வேண்டாமா? எனக்கு அப்படியொரு ஆசை இருக்காதா?"

"ரொம்ப நல்லா நடிக்கிறம்மா. உன்னோட பேச்சும், நடிப்பும் பிரமாதம். நீ நாடகம் எதிலயாவது நடிச்சிருக்கிறியாம்மா?"

"நீங்க என்னைப்பத்தி என்ன சொன்னாலும் எனக்கு அதில கொஞ்சம்கூட வருத்தமோ கோபமோ கிடையாது. நான் சொன்னதில உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா, இதோ, இதைப் பாருங்க!"- அவள் பேகைத் திறந்து அதிலிருந்து ஒரு செயினை வெளியே எடுத்தாள். அதன் நடுவில் ஒரு லாக்கெட் இருந்தது. -அதை சிவப்பிரசாத்தின் முன்னால் போட்டாள்.

தங்கநிறப் பாம்பு ஒன்று தன் முன்னால் விழுந்தது போல் கர்னல் சிவப்பிரசாத் ஒருகணம் திடுக்கிடவே செய்தார்.

அந்த லாக்கெட்டின் உள்ளே சிவப்பிரசாத்தின் இளமைக்காலப் புகைப்படம் இருந்தது.

"தயங்காதீங்க... அதுக்குள்ள என் அம்மாவோட போட்டோவும் இருக்குது. அதைத் திறந்து பார்க்க உங்க கை நடுங்குறதாயிருந்தா நானே திறந்து தர்றேன்!"

அவள் அந்த லாக்கெட்டைத் திறந்து கர்னலின் முன்னால் வைத்தாள்.

அந்தப் போட்டோ உண்மையிலேயே அவரைத் தளர்ச்சியடையச் செய்தது.

கர்ப்பிணியாக இருந்தபோது தன்னால் நடு ஆற்றில் தள்ளிவிடப்பட்ட தேவிகாவின் படம் அவரை வெறித்துப் பார்த்தது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட அந்த போட்டோவை அவரால் அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்தது. உண்மையிலேயே அது தேவிகாவின் படம்தான். சந்தேகமே இல்லை!

"இப்ப என்ன சொல்றீங்க?" மேனகா கேட்டாள்.

"உனக்கு ஆதரவு காட்ட யாரும் இல்லேன்னா சொல்ற?"

"நான் அதை வேற உங்களுக்குச் சொல்லணுமா என்ன?"

இந்த பதில் சிவப்பிரசாத்தின் நெஞ்சில் சுருக்கென்று தைத்தது.

சிவப்பிரசாத் தன் வாயிலிருந்த பைப்பைத் தொடர்ச்சியாக உறிஞ்சிப் புகையை வெளியிட்டார். ஒரு தீர்மானத்துக்கு வர முடியாதவராகத் தவித்தார்.

'மேற்கொண்டும் அவள் மீது சந்தேகம் கொள்வதில் அர்த்தமில்லை. அவள் தன் மகள்தான்! இதைவிட வேறென்ன அடையாளத்தை அவள் காண்பிக்க முடியும்? வயிற்றில் உருவாகி ஒரு மாதக் குழந்தையாக உருவானபோதுதான் தேவிகாவை விட்டுப் பிரிந்து சென்றோம். இப்போது அது முழு வடிவத்துடன் ஒரு பெரிய பெண்ணாக வளர்ந்து முன்னால் வந்து நிற்கிறது.

அவளை ஒப்புக்கொள்வதும் ஒதுக்குவதும் இப்போது தன்னைப் பொறுத்த விஷயம். தனக்கு முன்பாக அமர்ந்திருப்பவள் லேசுப்பட்டவளாகத் தெரியவில்லை. நிராகரிப்பதாகத் தெரிந்தால், தன் பிறப்பு ரகசியத்தை ஊரெல்லாம் சொல்லி அசிங்கப்படுத்தவும் முற்படலாம். பத்திரிகைக்காரர்கள் இந்த மாதிரி ரகசியங்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பிரசுரிக்கவும் செய்யலாம். 'ஒரு பெரிய மனிதனின் மறுபக்கம்' என்று குறிப்பிட்டால் பரபரப்பான செய்தியாகி விடும். தேவைப்பட்டால் அதை ஒரு தொடராகவே வெளியிட்டு, தன்னுடைய பிற விஷயங்களையும் கண்டுபிடிக்க முற்படலாம். அப்படி ஏதாவது ஒன்று நிகழ்ந்துவிட்டால்... அதை அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

இதுவரை சமூகத்துக்குத் தான் காட்டிக்கொண்டிருக்கும் கௌரவ வேடம் கலைந்துவிடும்.

லயன்ஸ் கிளப் உட்பட சமூகத்தின் மற்ற பகுதிகளில் தனக்கு இருக்கும் ஒட்டுமொத்த மதிப்பும் அங்கீகாரமும் பாதிப்படையலாம்.



"யோசித்து முடிவு எடுக்க எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் வேண்டும்."- அந்தக் குரலில் யாசிக்கும் தன்மை தெரிந்தது.

"என்னத்தை யோசிக்கப் போறீங்க? ஊர் உலகத்துக்கு நன்றாகத் தெரிந்த ஒரு பெரிய மனிதனுக்குத் தன் மகளைப் பற்றித் தீர்மானிக்கத் தனியாக அவகாசம் தேவையா?"

கர்னல் அவள் முகத்தை நேரிடாமல் மேற்புறமாகப் பார்வையை ஓட்டினார்.

"அந்தச் செயினை நீங்கள் எனக்குத் திருப்பித் தரவேண்டியது இல்லை. அதை உங்களிடமே ஒப்படைக்கும்படிதான் அம்மா சொன்னார். ஒன்றே ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நான் உங்கள் மகள்தான் என்பதை வேறு மாதிரியும் நிரூபிக்க முடியும். வயசுக்கு வந்த பெண் ஒருத்தி, சட்டென்று ஒரு மனிதனை அப்பா என்று சொல்லமாட்டாளே!"

பதிலளிக்கவோ, வேறு ஏதேனும் வழிமுறைகளைச் சொல்லித் தவிர்க்கவோ முடியாதபடி அவள் வார்த்தைகளைப் பிரயோகிக்கிறாள். அதிகபட்சம் இப்போதுகூட அவளை மரணக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டால் எல்லாம் சுலபமாக முடிந்துவிடும். ஆனால், தன்னை அப்பா என்று அவள் சொல்லிவிட்டதால் ஏனோ அதற்கும் மனம்வரவில்லை!

"உன்னை ஒரு ஹாஸ்டலில் சேர்த்து, பராமரிக்கும் முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வதாக இருந்தால்..." கர்னல் ஒரு துருப்புச் சீட்டைப் போட்டுப் பார்த்தார்.

"நீங்க என்ன சொல்றீங்க அப்பா? உங்களுக்கு ரகசியமாப் பிறந்த பொண்ணு இவள்னு ஊர்ல பேசிக்கிட்டா அது உங்களுக்கு அவமானமில்லையா? பெரிய வீடுகள்ல இதெல்லாம் சர்வசாதாரணம்தான். புகழ்பெற்ற சினிமா நடிகருக்கு, அவர் மனைவியில்லாம வேறொரு பெண் மூலமா குழந்தை பிறந்திருக்கிறதா பத்திரிகையில சமீபத்துல செய்தி படிக்கலையா?

அப்புறம் என்ன ஆச்சு? சொந்த மகளை 'மகள்'னு சொல்லிக்கிறது எப்பவும் கௌரவமான விஷயம்தான்."

கர்னல் சிவப்பிரசாத் மீண்டும் சிந்தனையிலாழ்ந்தார். தன் மகள்தான் முன்னால் உட்கார்ந்திருப்பவள். மகள் ஒருத்தி, தந்தையை அறிந்து நாடும்போது யாரால் அதைத் தடுக்க முடியும்? இவளை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு? இவள் சொன்னதெல்லாம் உண்மைதான். அதில் எந்தவிதத் தவறுமில்லை. எதற்காகத் தயங்க வேண்டும்?

கொன்றுவிடும் நோக்கத்துடன் தேவிகாவை தான் ஆற்றில் தள்ளிவிட்டது உண்மை. அவள் கர்ப்பமடைந்ததைச் சொன்ன அன்று தான், ஏராளமாகக் குடித்துவிட்டு வந்து ஆற்றில் தள்ளினோம். மூழ்கி இறந்து விடுவாள் என்று நினைத்தோம்; அது நடக்காமல் போய்விட்டது.

நடக்க வேண்டியது நடந்துவிட்டது.

இந்த நிலையில் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தே தீரவேண்டும். மேனகா, மிரட்டல்களுக்குப் பயப்படுபவளாகத் தெரியவில்லை. பிடிவாதக்காரி என்பதை நிரூபித்து விட்டாள்.

"என்னுடைய ஆபீஸில் உயர்ந்த ஒரு உத்தியோகம் தருகிறேன். ஜெனரல் மானேஜராக உட்காரலாம். ஆனால், நீ தங்குவது என்னுடைய வீட்டில் அல்ல."

"உங்க வீட்டில, உங்க மனைவின்னு சொல்ற ஒரு நர்ஸ் இருக்கிறாங்களாமே. உங்களோட இன்றைய வளர்ச்சிக்கு அவங்க ரொம்ப உதவியிருக்கிறதும் எனக்குத் தெரியும். அதனால் பரஸ்பரம் உங்களுக்குள்ள நன்றியைத் தவிர அன்பு இருக்காது. நான் உங்களோட வீட்டில் இருந்தா உங்களை அன்பா கவனிச்சுக்கலாம். நான் பார்த்துக்குற அளவுக்கு அவங்க உங்களைக் கவனிச்சுக்க மாட்டாங்கன்னு உறுதியா சொல்றேன். அதனால எனக்கு எந்த வேலையும் வேணாம். ஜி.எம்.மா இல்லை... ஒரு டைப்பிஸ்ட்டாக்கூட இருக்க நான் விரும்பலை. நான், என்



அப்பாவோட, அவர் வீட்டில இருக்கணும். சாகும்போது அம்மா விரும்பிக் கேட்டுக்கிட்ட கோரிக்கை அது. அதை நான் நிறைவேத்தியே ஆகணும்!"

கர்னல் சிவப்பிரசாத் சட்டென்று வாசந்தியை நினைவு கூர்ந்தார். மேனகாவுடன் நான் வீட்டுக்குள் நுழைந்தால் அவள் எப்படி நடந்து கொள்வாளோ?

தன்னுடைய புறநடவடிக்கைகளைப் பற்றி அவளுக்கு ஓரளவு தெரியும். மகளாகவே இருந்தாலும் மற்றொரு பெண் அந்த வீட்டில் தங்குவதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ?

கடந்த பதினைந்து வருடமாக தன்னுடன் குடும்பம் நடத்தும் ஒருத்தியிடம் திடுதிப்பென்று 'இவள் என் மகள்!' என்று சொன்னால் அதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியுமா?

"நீங்க அதிகமா யோசிக்கிறதுக்கு இதுல எதுவுமே இல்லை. நீங்க எதுக்காக சித்திக்குப் பயப்படணும்? நல்லா ஞாபகம் வெச்சுக்கங்க. அவங்க ஆயிரம்தான் உங்களைக் கவனிச்சுக்கிட்டாலும், சொந்த மகள் பார்த்துக்கிற மாதிரி வராது. நீங்க ஆயிரம் சொன்னாலும் நான் இன்னிக்கே உங்ககூட வீட்டுக்கு வரத்தான் போறேன்" அவள் பிடிவாதத்துடன் பேசினாள்.

"சரி உன் இஷ்டப்படியே நடக்கட்டும். அதனோட விளைவுகளையும் நீ தெரிஞ்சுக்கத்தான் வேணும்." அவள் ஓர் அடையாளத்துக்காகத் தன்னிடம் தந்த செயினை மேஜை மீதிருந்து எடுத்து கோட்டு பாக்கெட்டில் போட்டுக்கொண்டார்.

கர்னலும் மேனகாவும் கீழ்ப்புறம் வந்தபோது டிரைவர், காரின் கதவைத் திறந்துவிட்டார்.

இருவரும் பின்ஸீட்டில் அமர்ந்தனர்.

"பயணிகள் விடுதிக்குத் தானே சார்?" டிரைவர் கேட்டார்.

"இல்லை. நேரா வீட்டுக்கு!"

டிரைவர் சற்றும் எதிர்பாராத ஒரு பதில் அது. அவர் நெற்றியில் சுருக்கங்கள் உயர்ந்தன.

கர்னல் இதுவரை எந்தப் பெண்ணையும் தன் வீட்டுக்கு அழைத்துப் போனதில்லை. அதற்கென்றே அவருக்கு எத்தனையோ 'இளைப்பாறும் இடங்கள்' இருந்தன. டிரைவருடைய சர்வீஸில் கர்னல் ஒரு பெண்ணுடன் சொந்த வீட்டுக்கு வருவது இதுதான் முதல்தடவை!

வீட்டுக்குப் போன பிறகு வாசந்தியிடம் என்ன விதமாகச் சமாதானம் சொல்வது என்பது பற்றியே யோசித்துக்கொண்டிருந்தார் கர்னல்.

மேனகா எந்தவிதமான கவலையும் இன்றி வெளிப்புறக் காட்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

கார், பங்களா கேட்டை நெருங்கியதும் வாட்ச்மேன் கேட்டைத் திறந்துவிட்டார்.

கார், போர்ச்சில் நின்றது.

வாசந்தி கதவைத் திறந்தாள்.

காரின் கதவைத் திறந்துகொண்டு முதலில் மேனகா இறங்கினாள். எந்தவிதமான தயக்கமோ, கூச்சமோ இல்லாமல் வாசற்படியைத் தாண்டினாள். 'உனக்கு இனிமேல் இங்கு என்ன அதிகாரம்?' என்பதுபோல் வாசந்தியைப் பார்த்தாள்.

வாசந்தியின் முகம் சிவந்தது.

"இதை எங்கேருந்து பிடிச்சுட்டு வர்றீங்க?" வாசந்தி கேலிக்குரலில் கேட்டாள்.

"என்னம்மா கேட்ட? 'இதை' யா? இதுக்கு இந்த 'இதுவே' பதில் சொல்லும். கேப்டன் அஜித் சிங்குக்கு கொஞ்சகாலம் கீப்பா இருந்த நர்ஸ் வாசந்தி நீங்கதானே? இவரு என் அப்பா மிஸஸ் வாசந்தி!"- மேனகாவின் குரல் உறுதியுடன் வெளிவந்தது.



ஆயிரம் வோல்ட்டேஜ் மின்சாரம் சட்டென்று உடலில் பாய்ந்த மாதிரித் திடுக்கிட்டுப் போனாள் வாசந்தி!

## 7

அந்த வார்த்தைகள் வாசந்தியை மட்டுமல்ல, கர்னல் சிவப்பிரசாத்தையும் தூக்கிவாரிப் போடவே செய்தது!

'தன்னுடைய வாழ்க்கை ரகசியங்கள் முழுவதையுமே இந்தப் பெண் தெரிந்து வைத்திருக்கிறாளே!' என்ற பயமும் வியப்பும் அவர் கண்களில் தட்டுப்படவே செய்தது.

"நிஜமாவே இவள் உங்க மகள்தானா?"- சற்று நேரத்துக்குள் சுதாரித்துக்கொண்டு, பொய்யாகக் கோபத்தை வரவழைத்த வளாகக் கொண்டு கேட்டாள்.

"சிறுத்தை மாதிரிப் பாயக்கூடாது மிஸஸ் வாசந்தி. ஒழுங்கு மரியாதையோட காலந்தள்ளினா இங்கே இருந்துட்டுப் போகலாம். இனிமேல் இந்த வீட்டில் அப்பாவோ, நானோ சொல்றதுதான் நடக்கும்!" அவள் சிவப்பிரசாத்தைப் பார்த்தபடி பேசினாள்.

பிசாசுக்கும் கடலுக்கும் நடுவே அகப்பட்டுக் கொண்டதுபோல் அவர் தடுமாறினார்.

"சரி. நானே ஒரு சமாதான உடன்படிக்கைக்கு இறங்கி வர்றேன். போனாப் போகட்டும்னு இனிமேல் இவங்களை சித்தின்னு கூப்பிட ஆரம்பிக்கிறேன். அப்பாவின் ரெண்டாவது மனைவியாயிற்றே. எனக்கும் அம்மா கிடையாது. இவங்களுக்கும் குழந்தைங்க இல்லை. என்ன சொல்றீங்க?"

மேனகாவின் கடைசி யோசனை சிவப்பிரசாத்துக்குச் சற்று நிம்மதியை ஏற்படுத்தியது. ஆழம் தெரியாமல் காலைவிட்டு அவஸ்தைப்படும் நேரத்தில் தானாகவே அதிலிருந்து விடுபட மோசமானதாக இருந்தாலும் ஒரு வழி கிடைத்திருக்கிறதே.

"சரி... நீங்களே பேசி ஒரு முடிவுக்கு வாங்க! நான் போய் ரெஸ்ட் எடுக்கிறேன்" மேனகா ஹேண்ட் பேகுடன் படிகளில் ஏறி மேல் தளத்துக்கு விரைந்தாள்.

"இந்தப் பிசாசு எப்பங்க வந்து சேர்ந்தது?" மேனகா அங்கிருந்து மறைந்த பிறகு வாசந்தி கேட்டாள்.

"எல்லாத்தையும் விவரமா அப்புறம் சொல்றேன். முதல்ல நான் குளிக்கணும். மொத்தத்துல என் உடம்பே கொதிக்குது!"

சிவப்பிரசாத் தன்னுடைய படுக்கை அறையை நோக்கி நடந்தார்.

படுக்கையறைக்குள் நுழைந்தவர், முதலில் கதவை மூடித் தாழிட்டார். கோட்டு பாக்கெட்டிலிருந்த செயினை எடுத்து அந்த லாக்கெட்டைப் பிரித்தார். தேவிகாவின் போட்டோவைப் பார்த்தார்.

'அவளை ஆற்றில் தள்ளிவிட்டு, தான் ஊரைவிட்டுக் கிளம்பினோம். ஆனால், தேவிகா இப்போது மற்றொரு வடிவில் பூதாகாரமாக வடிவெடுத்து நிற்கிறாள். இந்த வினாடி விரைவில் இப்படியோர் அனுபவம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவே இல்லை! கனவுகூடக் கண்டதில்லை. இருபத்து மூன்று வருடத்துக்கு முந்தைய தன் பாவச்செயல் முற்றிலும் புதிய வடிவத்தில் இப்போது தன் முன்னே விஸ்வரூபம் எடுத்து வந்து சேர்ந்திருக்கிறது.

அவர் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.

ஊரிலிருந்து புறப்பட்ட சிவப்பிரசாத் பம்பாயில் முதன் முதலாகத் தொடர்பு கொண்டது ஒரு கள்ளக்கடத்தல் கும்பலுடன்தான். முறையற்ற வழியில் கிடைத்த அபரிமிதமான பணத்தை அநியாயமான முறைகளில் ஆடம்பரமாகச் செலவழித்துக் கொண்டிருந்த வேளையில்தான் அவர், அழகான நர்ஸ் வாசந்தியைச் சந்திக்க நேர்ந்ததும் நடந்தது. அவள் ராணுவ மருத்துவமனையில் தாதியாக இருந்தாள். சிவப்பிரசாத்தின் கட்டுமஸ்தான உடம்பும், கட்டுக்கட்டான பணமும் அவளை



மிகவும் கவர்ந்துவிட்டது. அவள் வீசிய வலையில் இப்படியாக சிவப்பிரசாத் அகப்பட்டுக் கொண்டார். அதே சமயம் அவள் கேப்டன் அஜித்சிங்கின் தாலிகட்டாத மனைவியாகவும் மறுபுறம் வாழ்க்கை நடத்தி வந்தாள்.

எனவே வாசந்தி, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அஜித்சிங் மூலமாக சிவப்பிரசாத்துக்கு ராணுவத்தில் வேலை வாங்கிக் கொடுத்தாள். அதன் பிறகும் மேற்படி உறவுகள் தொடர்ந்ததால் சிவப்பிரசாத் விரைவிலேயே பதவி உயர்வு பெற்று முன்னேறினார். இவ்வளவெல்லாம் இருந்தும் சிவப்பிரசாத் தனது கடத்தல் தொடர்புகளையோ, தொழிலையோ விட்டுவிடாமல் கவனமாக வளர்த்தார். அது தவிர்க்க முடியாததாகவும் அவருக்குத் தோன்றியது.

ஒரு கட்டத்தில் தனது துறை, தன்மீது சந்தேகம் கொள்கிறது என்பதை உணர்ந்தவுடன் மருத்துவ ரீதியாக, தான் தொடர்ந்து பணிபுரியத் தகுதி இல்லாதவர் என்ற போலிச் சான்றிதழுடன் ராணுவத்திலிருந்து விலகி, விரைவிலேயே சொந்த ஊருக்குத் திரும்பினார்.

அதற்குள் தேவிகாவும்... அவள் தொடர்பான நினைவுகளும்கூட மனத்தின் அடித்தட்டில் புதைந்து மண்மேடாகி விட்டிருந்தன. இதோ இருபத்துமூன்று வருடங்களுக்குப் பிறகு மேனகா என்ற பெயரில் புறப்பட்டிருக்கிற பூகம்பம் அவற்றையெல்லாம் திடுமென்று வெளியே வீசியெறிந்திருக்கிறது!

இவ்வளவுக்குப் பிறகு மேனகாவை வெளியேற்றுவதோ, கைகழுவுவதோ சுலபமல்ல. தன்னைப் பற்றி அவள் அளவுக்கு அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கிறாள். ஒருவேளை தனக்கு எதிரான ஒரு சக்தி, அவளுக்குப் பின்னாலிருந்துகூடச் செயல்படலாம். இல்லாவிட்டால் ஒரு சின்னப் பெண், கையில் இப்படிப்பட்ட அஸ்திரங்களை எடுத்துக்கொண்டு தன்னிடம் நேருக்கு நேர் மோத வந்திருக்க மாட்டாள்! எனவே, கத்தி மீது நடப்பது மாதிரி மிகவும் எச்சரிக்கையுடன் அவளைக் கையாள வேண்டும் என்று தீர்மானித்தார்.

சிவப்பிரசாத் லாக்கெட்டோடு செயினை பத்திரமாக இரும்பு அலமாரியின் ரகசிய அறைக்குள் போட்டுப் பூட்டினார்.

அதையொட்டியிருந்த அட்டாச்டு பாத்ரூமில் நுழைந்து ஷவரைத் திருப்பி உடலை நனைத்தபோது மனத்துக்குச் சற்று இதமாக இருந்தது.

குளியலை முடித்துக்கொண்டு டைனிங் டேபிளுக்கு வந்தபோது, மேனகா வாஷ்பேசினில் கைகழுவிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். நைட்கவுன் அணிந்திருந்தாள்.

வாசந்தி உணவுக்கான பொருள்களை மேஜைமீது பரப்பி வைத்திருந்தாள்.

"அதுக்குள்ள குளிச்சுட்டு வந்திட்டீங்களா அப்பா?" மேனகா தலையைத் திருப்பிக் கேட்டாள்.

சிவப்பிரசாத் பதிலுக்குச் சிரிக்க முயன்றாலும் சிரிப்பு அவ்வளவு சுலபத்தில் உதடுகளை நெருங்கவில்லை.

"சித்தியையும் நம்மகூட உக்காரச் சொல்லுங்கப்பா!" மேனகா கூறினாள்.

"இந்த வீட்டில இதுவரையில் அப்படியொரு பழக்கம் இல்லை!" வாசந்தி பதிலளித்தாள்.

"இன்னிலேர்ந்து அதெல்லாம் மாறுது!" மேனகா சிரித்தபடி பேசினாள்.

'இதையெல்லாம் மாத்துறதுக்கு நீ யாருடி?' என்ற கேள்வி உதடுவரை வந்துவிட்டாலும் மேனகாவின் முகத்தைப் பார்த்த பிறகு அதை உதட்டுக்கு வெளியே அனுமதிக்க வாசந்தியால் முடியவில்லை. டைனிங் டேபிளில் மூவருக்குமாக உணவு பரிமாறினாள்.

"உட்காருங்க சித்தி" மேனகா வற்புறுத்தினாள்.

மூவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.



"வேலைக்காரங்க யாருமில்லையா?"- மேனகா மறுபடி பேச்சைத் தொடங்கினாள்.

"அப்படி யாரும் கிடையாது!" வாசந்தி பதிலளித்தாள்.

"வேலைக்காரங்களை வெச்சாகணுமே! நான் நல்லா சாப்பிடுற ஜாதி. எல்லா வகையான சாப்பாடும் சமைக்கத் தெரிஞ்ச ஒருத்தரைச் சமையலுக்கு ஏற்பாடு பண்ணணும்! நாளைக்கே பேப்பர்ல விளம்பரம் செய்ய வேண்டியதுதான்!"

அவளது யோசனைக்கு மாற்றாகவோ, மறுப்பாகவோ எதையும் சொல்ல சிவப்பிரசாத்தோ, வாசந்தியோ முற்படவில்லை. எனவே மௌனமாகச் சாப்பிடத் தொடங்கினர்.

அன்றைய இரவுச் சாப்பாடு மேனகாவின் விருப்பப்படிதான் தயாராகியிருந்தது. சாப்பாத்தி-டால். மேனகாவுக்கு விருப்பமான உணவையே அன்று மற்ற இருவரும் சாப்பிட நேர்ந்தது.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு மேனகா மாடியிலுள்ள தனது அறைக்குத் திரும்பினாள்.

அன்றிரவு பன்னிரண்டு மணி தாண்டிய பிறகும் சிவப்பிரசாத்தும் வாசந்தியும் தூங்கவே இல்லை.

"நிஜமாவே மேனகா உங்க மகள்தானா?"

"அப்படித்தான் தோணுது!"

"அடையாளம் ஏதாவது இருக்கா?"

"நீ சரியான முட்டாள்... அவ, வயித்துல ஒரு மாசக் குழந்தையா இருக்கும்போது நான் ஊரைவிட்டுக் கிளம்பிட்டேன். என்ன அடையாளம் இருக்க முடியும்?"

"அவங்க அம்மாவை நீங்க கல்யாணம் பண்ணியிருந்தீங்களா?"

"சும்மா தேவையில்லாததையெல்லாம் பேசக்கூடாது. ஆத்தில விழுந்தவ செத்துப் போயிட்டான்னு நெனைச்சு அந்த விரக்தியில நான் ஊரைவிட்டே வெளியேறினேன்."

"அந்த நேரத்துல இவ வயித்துக் குழந்தை?"

"அதைத்தான் ஏற்கெனவே சொன்னேன்?"

"நீங்க சொல்றதைப் பாத்தா அப்போ இவங்க அம்மா சாகலை, அப்படித்தானே?"

"அப்படித்தான் நடந்திருக்கணும். இல்லேன்னா இவ்வளவு பெரிய பொண்ணு ஒருத்தி வானத்திலேர்ந்தா குதிக்க முடியும்?"

"இவ சொன்ன இந்தக் கதையெல்லாம் உண்மையா இருக்குமா?"

"உண்மையா, பொய்யான்னு நீயே கண்டுபிடியேன் பார்க்கலாம்!"

"இது எனக்காக நீங்க போடுற சோதனையா?"

"உன்னைப் பத்தி அவ சொன்னதெல்லாம் உண்மையா, பொய்யா?"

"ஆமாங்க... இந்தப் பழைய குப்பைங்களை அவ எப்படி கிளறிக் கண்டுபிடிச்சா?"

"எனக்கும் அதுதான் விளங்கலை. ஆனா ஒரு விஷயம் ஞாபகமிருக்கட்டும். இதெல்லாம் கொஞ்சம்கூட உண்மையே இல்லேன்னா, என்னைப்பத்தி இவ்வளவு தெரிஞ்ச பிறகும் என்கிட்ட வந்திருக்க மாட்டாள் இவ. அதனால உண்மைன்னே நம்புவோம்!"

"நான் ஒரு விஷயத்தைச் சொன்னா நீங்க நம்புவீங்களோ, மாட்டீங்களோ?"

"இத்தனை நாளும் நீ சொன்னதில எதையாவது ஒதுக்கித் தள்ளியிருக்கிறேனா? நம்பலைன்னு சொல்லியிருக்கேனா?"

"இவ்வளவு நாளும் இவ எங்கே இருந்தாளாம்?"

"அவளோட அம்மா இறந்த பிறகு இங்கே வந்ததாச் சொல்றா. அப்படியானால் அம்மா கூடவே இது வரைக்கும்



இருந்திருக்கிறதா அர்த்தம். கடைசிக் காலத்துல அம்மா சொன்னதாலதான் இங்கே வந்திருக்கிறதாவும் சொல்றா!"

"உங்க மகள்னு அவ, வாயைத் திறந்து சொன்னவுடனே நீங்க அதை அப்பிடியே நம்பிட்டீங்க, அப்படித்தானே?"

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. ஆமாம், அவளைப்பத்தி நீ என்ன நினைக்கிறே?"

இது ஒரு சிக்கலான கேள்விதான்!

அஜித்சிங்கின் காதலியாக அல்லது வைப்பாட்டியாக இருந்த காலத்தில் இவள் பிறரைப் பொருட்படுத்தியதே இல்லை. எத்தனையோ கேப்டன் மற்றும் கர்னல்களை தன் விரல் நுனியில் நிறுத்தி வைத்திருந்தாள். அஜித் சிங்கே கூட இவளிடம் பயந்தார் என்பதுதான் உண்மை. அப்படிப்பட்டவள் வாழ்க்கையில் முதல் தடவையாக ஒரு சின்னப் பெண்ணிடம் தோல்வியடைந் திருக்கிறாள். யோசித்தபோது அவள் உடம்பே குன்றிப் போனது போலிருந்தது.

உண்மையைச் சொல்வதானால் மேனகாவின் பார்வையும், பேச்சும் வாசந்தியைக் கீழ்ப்படுத்தவே செய்தன.

"நடந்து விட்டதைப் பற்றி நாம் திரும்பத் திரும்பப் பேசுவதில் அர்த்தமில்லை." சிவப்பிரசாத் சற்று நேர மௌனத்துக்குப் பிறகு கூறினார்.

"நான் என்ன சொல்ல வர்றேன்னா, இனிமேல் இதைப்பற்றி நாம யோசிக்காம இருக்கக்கூடாது" வாசந்தி நெற்றியைச் சுளித்தபடி பேசினாள்.

"நிஜமா... நீ என்ன சொல்ல வர்றேன்னு எனக்குப் புரியலை!"

"நேரடியாவே சொல்றேன். எனக்கு விவரம் தெரிஞ்சதிலேர்ந்து நான் யாருக்கும் இதுவரை அடங்கிப் போனதில்லை. அது உங்களுக்கும் நல்லாவே தெரியும்.

இதுவரைக்கும் எதுக்காகவாவது நீங்க என்னை எதிர்த்துப் பேசியிருக்கீங்களா?"

"அதென்னவோ உண்மைதான்!" சிவப்பிரசாத் கசப்பான அந்த உண்மையை ஒப்புக்கொள்வது போல் பேசினார்.

"தயங்காதீங்க. இன்னிக்கு நீங்க இருக்கிற நிலைக்கு உங்களை உயர்த்தினது நான்தான். உங்களால அதை மறுக்க முடியுமா?"

"என்ன நோக்கத்தோட நீ இதையெல்லாம் சொல்றேன்னு எனக்கு விளங்கலை?"

"சொல்றேன். வந்து சேர்ந்திருக்கிறவளை இந்த பங்களாவுல உட்கார வெச்சுட்டு, அவளுக்கு ஒரு வேலைக்காரியா என்னால நடந்துக்க முடியாது. அவ உண்மையாவே உங்க மகளா இருந்தாக்கூட எனக்கு அது சாத்தியமில்லை. ஆழம் தெரியாம என்பக்கம் காலை நீட்டிட்டாள். நான் அவள் காலை உடைக்காம விடமாட்டேன்!"

"அப்போ அதையே செஞ்சிருக்க வேண்டியதுதானே?"- சிவப்பிரசாத் குறுக்கிட்டார்.

"உங்களை நெனைச்சு- அவ உங்களோட மகளாச்சேன்னு நெனைச்சுத்தான் ஒண்ணும் சொல்லலை."

"சரி... இந்த நிமிஷத்தில இருந்து உன் விருப்பப்படி நடந்துக்கலாம்."

"அதைவிட, அவளுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து அனுப்பிச்சுட்டா என்ன? வாங்கிட்டுப் போக மாட்டாளா?"

"நிறையச் சோதனை பண்ணிப் பார்த்துட்டேன். அதுக்கெல்லாம் அவள் அசைஞ்சு கொடுக்கிறதா தெரியலை! கடைசில நம்ம ஆபீஸில ஜெனரல் மேனேஜரா உட்காரணும்னு சொல்லியிருக்கிறாள்!"



"ஆகா... ரொம்ப நல்ல திட்டம். அப்ப உண்மையாவே உங்க வாரிசுதான்னு நினைச்சு, அதை அமல்படுத்த நினைக்கிறாளா? இப்படியே போனா... நமக்குச் சரிப்படாது."

"வாசந்தி, நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? அவளைத் தொந்தரவு செய்ய எனக்கு மனசு வரலை. நான்னு இல்லை... என்னை மாதிரி எந்த அப்பாவுக்கும் அது முடியாது!"

"அப்படின்னா, நான் அவளை எப்படியாவது விரட்டியனுப்பீட்டா உங்களுக்கு அதில எந்த வருத்தமும் கிடையாதே?"

"புரியலை!"

"பாருங்க மிஸ்டர் சிவப்பிரசாத், அவளை இந்த வீட்டில் குடியிருக்க நான் அனுமதிக்கப் போவதில்லை. நாளைலேர்ந்து ஒவ்வொரு நிமிஷமும் அவளை இங்கேருந்து விரட்டுறதுல நான் முழுமூச்சோட ஈடுபடப்போறேன். என்னைப் பொறுத்த வரைக்கும் அவள் ஒரு கொசு. உங்களுக்கே என்னைப் பத்தித் தெரியும்!"

"சரி. நான் அதை உன்கிட்டயே விட்டுர்றேன். இனிமேலாவது தூங்கலாமில்லையா?"

அந்த இருவரையும் பொறுத்தவரை அது ஒரு சிவராத்திரிதான். இருவராலும் நிம்மதியாகப் படுத்து உறங்க முடியவில்லை. அந்த இருவருக்குமே பொதுவான ஒரு புதிய எதிரி உருவாகியிருப்பதாகத் தோன்றியது.

காலை எட்டு மணிக்கு சிவப்பிரசாத் காரை ஸ்டார்ட் செய்து பங்களாவிலிருந்து வெளியேறினார். மேனகா - வாசந்திக்கு நடுவே தொடங்கவிருக்கும் முதல் கட்டப் போராட்டத்தின்போது தான் அங்கு ஒரு சாட்சியாக இருக்கக் கூடாது என்று அவர் கருதியதுதான் அதற்குக் காரணம்.

மேனகா பாத்ரூமுக்குள் நுழைந்து விட்டாள் என்பதை உணர்ந்ததும் வாசந்தி தனது முதல் தாக்குதலுக்குத் தயாராகி விட்டாள்.

ராணுவ மருத்துவமனையில் ஏழாண்டுகள் பணிபுரிந்திருக்கிற வாசந்திக்கு ஒருத்தியைக் கொலை செய்வது என்பது கடினமான விஷயமல்ல! போர் முனையில் பணிபுரிந்த அனுபவமிருப்பதால் இறந்து கொண்டிருப்பவர்களையும், மரணத்துடன் போராடுபவர்களையும் நிறையவே அவள் சந்தித்திருக்கிறாள்.

பாத்ரூமிலிருந்து மேனகா வெளிவருவதற்குள் மேனகாவைத் தொலைத்து விடுவதற்கான முதல்கட்டத் திட்டம் தயாராகிவிட்டது.

## 8

சற்று நேரத்துக்குள் மேனகா டைனிங் டேபிள் அருகேவந்தாள்.

“அப்பா இன்னும் வரலையா?” மேனகாவின் குரல் சற்று உரத்து ஒலித்தது.

“ஆபீஸ் போயிட்டார்!”

“என்னைப் பற்றி ஏதாவது சொல்லிட்டுப் போனாரா?”

“டிபன் சாப்பிட்டு ஆபீஸுக்குவரச் சொல்லுனு சொல்லிட்டுப் போனார்.

டைனிங்டேபிளில் சூடான இட்லியும் காபியும் தயாராக இருந்தன.

“சித்தி... இந்த வீட்லயிருந்து நான் ஏதாவது சாப்பிடுறதா இருந்தா... அதுக்கு சில நிபந்தனைகள் இருக்கு.” நாற்காலியை அருகே இழுத்துப் போட்டு அமர்ந்தபடி பேசினாள்.

“இருக்கட்டும். அதெல்லாம் நல்லதுதான். இப்ப முதல்ல சாப்பிடு. சாப்பிட்டபிறகு அதைப் பத்தி நிதானமாகப் பேசிக்கலாம்.”



“டிபனுக்கு முன்னாடிதான் அதைச் சொல்லியாகணும்!”

“அந்த அளவுக்கு என்ன நடந்திருக்கு?”

“ஒண்ணும் நடக்கலை. விஷயம் ரொம்ப சுலபம். எனக்காக வெச்சிருக்கிற இட்லியில ஒண்ணெடுத்து நீங்க சாப்பிடணும். அவ்வளவுதான்!”

“இதுல விஷம் கலந்திருக்கிறேன்னா பயப்படுற?”

“உண்மை. அதுக்கும் நீங்க தயங்காதவங்கன்னு எனக்குத் தெரியும்.”

“நல்ல சந்தேகம்தாண்டியம்மா!”

“ரெண்டு வருஷத்துக்கு முன்னால பம்பாயிலேர்ந்து உங்களைப் பார்க்குறதுக்காக ஒருத்தர் வந்தாரே ஞாபகமிருக்கா? ஆனால், அவர் இந்த பங்களாவிலிருந்து உயிரோட திரும்பவே இல்லையே?”

“பம்பாயிலிருந்து எத்தனையோ பேர் வியாபார விஷயமா வர்றாங்க, போறாங்க! யாருன்னு நான் கண்டேன்!”

“அப்படிக் கேளுங்க. அவர் பேரு அப்துல்ரகீம். ரத்ன வியாபாரி. வியாபாரத்துக்காகவே திருதூருக்கு வந்திருந்தார்!”

“என்னவெல்லாமோ தெரிஞ்சு வெச்சிருக்கிறடியம்மா நீ!”

“அப்பாவைப் பத்தியும் அவரோட பங்களாவைப் பத்தியும் விசாரிச்சபோது கிடைச்ச தகவல்கள்தான். இன்னும் ஏராளமா இருக்கு. தேவைப்படும்போது ஒவ்வொண்ணையும் சொல்றேன்.”

“அதெல்லாம் எங்க வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைப்பட்டவங்க கட்டிவிட்ட கதைங்க!”

“சரி, போகட்டும். பாலாஜி ராவ்ங்கிற வைர வியாபாரியையாவது உங்களுக்குத் தெரியுமா?”

"பாலாஜிராவா? என்ன மேனகா நீ காலையிலேருந்து சம்பந்தா சம்பந்தமில்லாமப் பேசிட்டிருக்கிறே?" உண்மையில அந்தப் பெயரே வாசந்திக்குள் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தியது.

பாலாஜிராவ் என்கிற வைர வியாபாரி இரண்டு வருடங்களுக்கு முன்னால் இங்கே வந்திருந்தார் என்பது உண்மைதான். அவரிடம் விலையுயர்ந்த வைரக் கற்கள் நிறைய இருந்தன. வந்தவர் இந்த பங்களாவில்தான் தங்கியிருந்தார். மறுநாள் காலையில் சிவப்பிரசாத்துடன் அவரது ஃபைனான்ஸ் கம்பெனிக்குப் போனார். மாலை நேரத்தில் சிவப்பிரசாத் திரும்பி வந்தபோது பாலாஜிராவ் ஊருக்குப் போய்விட்டதாகத் தகவல் தெரிவித்தார். ஆனால், அவரிடமிருந்த ரத்தினம் மற்றும் வைரக் கற்கள் அந்த பங்களாவிலேயே இருந்தன. ஏதோ சந்தேகம் ஏற்பட்டதால் வாசந்தி திரும்பத் திரும்ப சிவப்பிரசாத்திடம் தூண்டித் துருவி விசாரிக்கவே செய்தாள். ஆனால், அவர் திரும்பி வரமாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போனதாகச் சொல்லி சிவப்பிரசாத் அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டார். மேனகா இப்போது கேட்ட பிறகுதான் வாசந்திக்கு அதில் ஏதோ விபரீதம் இருப்பது புரிந்தது.

"அவரைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாதே!"- வாசந்தி கூறினாள்.

"நான் சொல்லட்டுமா? இங்கு வந்து சேர்ந்த பாலாஜிராவ் கொல்லப்பட்டார். அவரது உடம்பு காற்றில் கரைந்ததுபோல் காணாமல் போய்விட்டது."

"மேனகா நீ ரொம்பவும் அதிகமாத்தான் துப்பறிஞ்சிருக்கிற!"

"உண்மைதான். ஊருக்குள்ள நிறைய விசாரிச்சுத் தெரிஞ்சுகட்டுத்தான் உள்ளே வந்திருக்கிறேன். அப்பாவைப் பத்தியும் சித்தியைப் பத்தியும் தெரிஞ்சுக்கணும்கிற ஆர்வத்தாலதான் இதையெல்லாம் சேகரிச்சேன்!"

"ரொம்பவும் அபாரம்தான். நீ சூட்டிகையான பொண்ணுதான்."



"திருசூர் ஓட்டல்ல தங்கியிருந்தபோது சந்திரபானுங்கிற ஆம்பல்லூர்காரரையும் சந்திச்சேன்!"

அந்தப் பெயரும் உண்மையில் வாசந்தியைத் திடுக்கிடவே வைத்தது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பாகப் பேசத் தொடங்கினாள் :

"நீ சொல்ற சந்திரபானுங்கிறவர் ஓட்டல்ல வேலை செய்யுறவராக இருக்கலாம்."

"இல்லை... ஃபிலிம் ரெப்ரசென்டேடிவ்!"

"அவருகிட்ட நீ எப்படி அறிமுகமானே?"

"எதிர்பாராத ஒரு சூழ்நிலையில நாங்க சந்திக்க நேர்ந்தது. என்னைப் பார்த்தவுடன், நெருங்கி வந்து 'அம்மா எப்படி இருக்கிறார்?, என்றார். சொன்னேன். ஒரு வரலாறையே சொல்ல வேண்டியிருந்தது!"

அவள் சொன்னதை வாசந்தியால் நம்ப முடியவில்லை. ஆம்பல்லூரைச் சேர்ந்த சந்திரபானு என்கிற ஒருவனை வாசந்திக்கும் தெரியும். ஒரு காலத்தில் இருவரும் நெருங்கிப் பழகியவர்களும்கூட. அவன்தான் வாசந்தியை பம்பாய்க்கு அழைத்துக்கொண்டு போனவன். நர்ஸிங் பயிற்சி முடித்து வேலையில்லாமல் அவள் வீட்டிலிருந்த காலம் அது. துபாயில் அவளுக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்லித் அழைத்துப் போனவன். ஆனால், பம்பாய் போனவுடன் அவனது திட்டம் மாறிவிட்டது. அதன்பிறகு வாசந்தியின் கெட்டிக்காரத் தனத்தினால்தான் இப்போதைய நிலையை அடைந்தாள். பம்பாய்க்கு வந்த வாசந்திக்கு, சந்திரபானு பலரை அறிமுகம் செய்து வைத்தான். அதையெல்லாம்கூட மேனகா தெரிந்து கொண்டிருக்கக்கூடும் என்று வாசந்தி யூகித்தாள்.

"அப்புறம் சந்திரபானு வேற என்னவெல்லாம் சொன்னாரு?" வாசந்தி கேட்டாள்.

"அவர்தான் என் அப்பாவைப் பத்தியும், உங்களைப்பத்தியும் சொன்னார். அப்பாவுக்கு ஃபிலிம் விநியோகமும் இருக்கிறது என்று அப்போதுதான் எனக்குத் தெரிஞ்சது!"

"அப்படியானா, நீ சொல்ற சந்திரபானு நான் நினைக்குற ஆள் இல்லை!" வாசந்தி அவனைத் தெரியாதவனைப்போல் காட்டிக் கொள்ள முயன்றாள்.

"வழியே இல்லை. உங்களை அவருக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கு. உங்களோட ஜாதகம் பூராவும் சொன்னார்."

"அந்தப் பிச்சைக்காரனுக்கு இன்னும் சொல்லப்போனா வேலை வாங்கிக் கொடுத்ததே நான்தான்."

"முதல்ல அவனா இருக்காதுன்னு சொன்னீங்க போலிருக்கே!"

"குழந்தை, நடந்ததெல்லாம் நடந்து போச்சு. இனிமேல் நாம அதைப்பத்தியெல்லாம் பேசி என்ன பிரயோஜனம்? இந்த வீடு உன்னோடது. நீயா விரும்பினா என்னைச் சித்தின்னு கூப்பிடு. இந்தா வீட்டுச் சாவி. இதில அப்பாவோட அறைச்சாவி தவிர மத்ததெல்லாம் இருக்குது.'' வாசந்தி சுவரில் தொங்கிக்கொண்டிருந்த சாவிக்கொத்தை எடுத்து மேனகாவிடம் நீட்டினாள்.

"இதெல்லாம் உங்ககிட்டயே இருக்கட்டும். என்னைப் பொறுத்தவரைக்கும் என்னோட விஷயங்கள் எல்லாம் தடையில்லாமல் நடக்கணும், அவ்வளவுதான். இந்த வீட்டோட அதிகாரமெல்லாம் என்கிட்ட வெச்சுக்கிறணும்கிறது என் நோக்கமில்லை. நான் சாப்பாட்டு விஷயத்துல சில கொள்கைகள் வெச்சிருக்கிறேன். அதை என் இஷ்டப்படி சமைச்சுக்குடுக்க ஒரு ஆள் வேணும். அதையும் நானே பார்த்துக்கிறேன். அந்த மனுஷனுக்கு டிரைவிங்கும் தெரிஞ்சிருந்தா நல்லது!"

"உனக்கு என்னென்ன வேணுமோ, சொல்லிட்டா நான் செஞ்சு தரமாட்டேனா?"



"என்னால உங்களுக்கு இந்த மாதிரித் தொல்லையெல்லாம் ஏற்படுறது எனக்குப் பிடிக்கலை."

"நீ இவ்வளவெல்லாம் பிடிவாதமா இருக்கிறப்ப நான் என்ன சொல்ல? சரி, இப்ப நீ எதுவும் சாப்பிடப் போறதில்லையா?"

"உண்மையைச் சொன்னா, இங்கே இருக்கிற எதுவும் எனக்குப் பிடிக்காது. காலையில நான் சாப்பிடுறது சப்பாத்தியும் வெங்காயக்கூட்டும்தான். அப்படியே பழகிட்டேன்!"

"போகட்டும், ஒரு வாய் காபியாவது சாப்பிடும்மா." வாசந்தி வற்புறுத்தினாள்.

"வேண்டாம் சித்தி. காலையில நான் முதல்ல ரெண்டு கிளாஸ் பச்சைத் தண்ணிதான் குடிப்பேன்."

"என்னமோ எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு கேட்டுப் பார்த்துட்டேன். இதுக்குமேல என்னத்தைப் பண்றது?"

மேனகா எழுந்து ஃப்ரிஜ்ஜைத் திறந்து ஐஸ்வாட்டர் பாட்டிலை எடுத்து இரண்டு கிளாஸ் ஊற்றிக் குடித்தாள். உடனே மாடியிலுள்ள தனது அறைக்குச் சென்றாள்.

வாசந்தி மேஜைமீது வைத்திருந்த இட்லியை வெளியே எடுத்துப் போனாள். பாத்திரத்தோடு அதைக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிட்டு வந்தாள்.

'என்றைக்காவது ஒருநாள் என் கையில் சிக்காமலா போய் விடுவா?'

மேனகா ரோஸ் நிறப் புடவை உடுத்தி, மேட்ச்சான ரவிக்கையணிந்து, அழகாக ஒப்பனை செய்து கொண்டு, ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தபடி படியிறங்கி வந்தாள். வெளியேறினாள்.

அவளைப் பார்த்தபடி பல்லைக் கடித்துக்கொண்டு எதையோ முணுமுணுத்தாள் வாசந்தி.

கேட்டைத் தாண்டி வெளியே வந்தவள் ரோட்டில் ஆட்டோ ஒன்று தட்டுப்பட்டதும் கைகாட்டி நிறுத்தி ஏறிக்கொண்டாள்.

"சிவப்பிரசாத் ஃபைனான்ஸ் கம்பெனிக்குப் போகணும்!" என்றாள்.

ஆட்டோ ரிக்ஷா திருவிழா மைதானத்தைச் சுற்றிக் கொண்டுகிழக்குத் திசையில் பறந்தது. சற்று நேரத்தில் அவள் குறிப்பிட்ட கம்பெனி வாசலில் நின்றது. சார்ஜைக் கொடுத்துவிட்டு கம்பெனிக்குள் நுழைந்தாள்.

அவள் நேராகப் போனது கர்னலின் அறைக்குத்தான்.

"இன்னிக்குச் சீக்கிரமா கிளம்பி வந்துட்டிங்க போலிருக்கே?" சற்று மிரட்டலான தொனியில் அவள் கேட்டாள்.

"ஆமாம்!"

"என்னால தினமும் ஆட்டோரிக்ஷாவில் வரமுடியாது. அது உங்க மரியாதையையும் பாதிக்குற விஷயம். அதனால உடனடியாக எனக்கு ஒரு கார் தேவை. அப்புறம் என்னோட தேவைகளுக்காக நான் உங்ககிட்ட அடிக்கடி பணம் கேட்டுத் தொல்லை தர வேண்டாம்னு பார்க்குறேன். தற்சமயத்துக்கு என்பேர்ல ஐம்பதாயிரம் ரூபாயை டிரான்ஸ்ஃபர் பண்ணிடுங்க. ஒரு செக் புக்கை என் கையில குடுத்துட்டா அந்தப் பிரச்சினையும் தீர்ந்துடும். ரெண்டாவது விஷயம், காருக்காக ஒரு பிளாங்க் செக்கில கையெழுத்துப் போட்டுக் குடுங்க, இன்னிக்கே இது ரெண்டும் முடிஞ்சிடட்டும்!"

அதிகாரம் கலந்த அவளது வேண்டுகோளை சிவப்பிரசாத்தால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

செக் புக்கைத் திறந்து அவள் கேட்டபடியே எல்லாவற்றையும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

"பாஸ்புக் உன் வீட்டுக்கே வந்து சேர்ந்துடும்!" சிவப்பிரசாத் கூறினார்.



சிவப்பிரசாத்தின் கேபினிலிருந்து வெளியே வந்த மேனகா, நேராக ஜெனரல் மானேஜர் என்று போர்டு வைத்திருந்த கேபினை நோக்கி நடந்தாள்.

"ஹலோ, உங்களை கர்னல் சிவப்பிரசாத் கூப்பிடுகிறார். அதாவது என் அப்பா!"

அங்கிருந்த இருக்கையில் இருந்தவர் காலியானார். அவர் அங்கிருந்து எழுந்து விரைந்தார்.

மேனகா அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். இன்டர்காமை எடுத்து சிவப்பிரசாத்துடன் தொடர்பு கொண்டாள்.

"உங்க பழைய ஜி.எம்.முக்கு வேறு ஏதாவது ஒரு கேபின் குடுங்க. அப்படியே அவருக்கு வேற ஒரு போஸ்ட்டும் போட்டுடுங்க."

"உட்காருங்கள் மிஸ்டர் மாதவன்!" இன்டர்காம் ரிசீவரை வைத்தபடி கூறினார் சிவப்பிரசாத்.

எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார் மாதவன்.

"சார் அந்த பொண்ணை நீங்க புதுசா அப்பாயின்ட்மெண்ட் பண்ணியிருக்கீங்களா?"- மாதவன் கேட்டார்.

"எந்தப் பொண்ணை?"

"இப்போ என்னோட கேபினுக்குள்ள வந்த பொண்ணைத்தான் சார் கேட்டேன்."

"மிஸ்டர் மாதவன்... நான் இப்ப ஒரு சிக்கல்ல மாட்டியிருக்கிறேன்."

"உங்களுக்கு அப்படியென்ன சார் சிக்கல்?"

"நீங்கள் குறிப்பிட்ட பெண் என் மகள்!"

"உண்மையாவா சொல்றீங்க?"

"உண்மைதான்!"

"இப்படியொரு மகள் இருக்கிறதா இதுவரைக்கும் நீங்க சொல்லவே இல்லையே?"

"இதுவரையிலும் இதை உங்ககிட்ட சொல்லுற அவசியம் வரலை. உண்மையைச் சொன்னா, அவள் வருகையே எனக்கு ஆச்சரியம் தந்ததுதான்!"

கர்னல் சிவப்பிரசாத்தின் வாழ்க்கையே மர்மங்கள் நிறைந்தது என்பது மாதவனுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இருப்பினும் ரகசியமாகவோ, பகிரங்கமாகவோ இதுவரை அவரை எதிர்க்க யாராலும் முடிந்ததில்லை. அதுமட்டுமல்ல, அவருடன் மிகவும் நெருக்கமாக இருப்பவர்களுக்கு எதிர்பார்ப்பதைவிட அதிகமாக சலுகை மற்றும் உதவி கிடைக்கும். எனவே, தங்களது முதலாளியைப் பற்றி மேற்கொண்டு தெரிந்து கொள்ளவோ, ஆராயவோ யாரும் முற்பட்டதில்லை.

"அவள் வந்து சேர்ந்த நிமிஷத்திலிருந்து என்னுடைய சொத்துக்களை என்னோடு சேர்ந்து அவளும் நிர்வகிப்பேன் என்று அடம்பிடிக்கிறாள். தற்சமயம் நான் அதை ஒரு வேடிக்கையாகக் கருதுவதால், தட்டிக்கழிக்க விரும்பவில்லை. எதற்கும் கொஞ்ச நாள் போகட்டும்!" கர்னல் கூறினார்.

உண்மையைச் சொன்னால் மகளாக வந்திருப்பவள் தன்னுடைய பழைய வரலாறையும், தற்போதைய மனைவியான வாசந்தியின் வரலாறையும் விரல் நுனியில் வைத்திருக்கிறாள். அவள் அம்மாவைக் கொலை செய்ய முயன்றதுகூட அவளுக்குத் தெரிந்திருக்கிறது. எனவே, தற்சமயம் அவளுக்கு அடங்கிப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

"இப்போ நான் என்ன செய்யணும்னு விரும்புறீங்க சார்?"

"இன்றிலிருந்து நீங்கள் என்னுடைய லீகல் அட்வைசராக இருங்கள். மற்றதை பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம்" கர்னல் கூறினார்.



அந்தச் செய்தி உண்மையிலேயே மாதவனுக்கு மிகவும் பிடித்தமானதுதான். ஜெனரல் மானேஜர் என்பதைவிட, சிவப்பிரசாத்தின் மொத்த நிறுவனங்களுக்கும் சட்ட ஆலோசகராக இருப்பது என்பது ஒன்றும் மட்டமான வேலையல்ல!

சுமார் பதினோரு மணியானபோது மேனகா தொலைபேசியில் யாருடனோ பேசினாள். சற்று நேரத்துக்குள் இளைஞன் ஒருவன் அவளது கேபினுக்குள் நுழைந்தான்.

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க அந்த இளைஞன் யாரிடமும், எதுவும் கேட்காமல் நேராக அவளது அறைக் கதவைத் திறந்துகொண்டு நுழைந்ததை அங்கிருந்தவர்கள் கவனிக்கவே செய்தனர்.

## 9

"உட்காருங்க அருண்!" அவள் கூறினாள்.

அந்த அறைக்குள் வந்து நுழைந்ததிலிருந்து அருண் வியப்பிலிருந்து விடுபடவே இல்லை.

ஓட்டல் அறையிலிருந்து டெலிபோனில் பேசியபோது அவன் முதலில் நம்பத்தான் இல்லை.

அடிப்பரப்பு உடைந்த பாட்டிலால் ஒருவனைக் குத்திக் கொன்ற பிறகு, போலீஸின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காக இப்படிப்பட்ட ஓர் இடத்துக்கு வந்து சேருவான் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

ஓட்டலிலிருந்து கோணிப்பையை காரில் ஏற்றிக் கொண்டு இருவர் போகும்போது அருணுடன் ராகினியும் இருந்தாள்.

அன்று அவர்கள் ஒரே அறையில்தான் தங்கினர். ஆனால், பொழுது விடிந்த பிறகு அருண் கண்விழித்துப் பார்த்தால் ராகினி

இல்லை, அவள் எங்கே போனாள், எப்போது போனாள் என்பது தெரியவில்லை.

மேற்கொண்டு அவளைப் பற்றி விசாரித்து அறிவதற்கான வாய்ப்புகள் அருணுக்கு இல்லை. எனவே, தன்னுடைய பாதுகாப்பைக் கருதியும் விசாரிக்காமல் அப்படியே கமுக்கமாக இருந்துவிட்டான். ஒருவிதத்தில் அவள் சொல்லாமல் கொள்ளாமல் போனதுகூட அருணுக்கு நல்லதாகவே தோன்றியது. அதன்பிறகு ஏறத்தாழ அவளை மறந்துவிட்ட சந்தர்ப்பத்தில்தான் சிவப்பிரசாத் ஃபைனான்ஸ் கம்பெனியில் வேலை கிடைத்து அதில் சேர்ந்துவிட்டதாக அவள் போனில் கூறினாள்.

முதலில் அருண் அதை நம்பவில்லை. பிறகு, என்னதான் நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு வந்து சேர்ந்தான்.

"என்னால் எதையும் நம்ப முடியவில்லை!" அருண் மலங்க மலங்க விழித்தபடி பேசினான்.

"என்கிட்ட நீங்க மேற்கொண்டு எதையும் கேட்கக்கூடாது. என் பெயர் இப்போது மேனகா. என் அப்பா கர்னல் சிவப்பிரசாத். உங்களை நான் வரவழைத்தது, எனக்கு ஒரு உதவி செய்வதற்காகத்தான்."

"சொல்லுங்கள், என்னால் முடிந்தால் கண்டிப்பாகச் செய்கிறேன்."

"எனக்கு ஒரு கார் தேவை. உடனடியாக அதற்குரிய விலையைக் கொடுத்துவிடலாம். கார் ஓட்டுவதற்கு நம்பிக்கையான டிரைவர் ஒருவரும் தேவை!"

"தற்காலிகமாப் போதும்னா நான் ஒருவரை ஏற்பாடு செய்கிறேன்." அருண் கூறினான்.

"நம்பிக்கைக்கு உரியவர்தானே?"



"நான் குறிப்பிட்டது என்னையேதான்!"

"விளையாட்டுக்காகச் சொல்றீங்களா?"

"நிஜமாத்தான் சொல்றேன். ராகினியை முதல் தடவை பார்த்தபோதே என்னன்னு சொல்ல முடியாத ஒரு ஈடுபாடு என்னுள் ஏற்பட்டுவிட்டது. அதைக் காதல் என்றெல்லாம் சொல்ல முடியாது. வேண்டுமானால் நல்ல நட்பு என்று சொல்லலாம். சொந்தக்காரங்களா இல்லாத வெளியார் ஒருத்தருக்கு உதவுவதானால் எனக்கு மிகவும் பிடிக்கும்."

"உறவில்லாதவங்களுக்கா? கர்னல் சிவப்பிரசாத் என் அப்பான்னு சொன்னேனே!"

"நல்ல வேடிக்கை போங்க ராகினி!"

"வேடிக்கையில்லை உண்மை. என் பெயர் மேனகா!"

"எதிர்காலத்துல ஊர்வசின்னுகூட மாறலாம்!"

"வேடிக்கைக்கு இது நேரமில்லை!"

"நான் எப்பவும் இப்பிடிப் பேசறது என் வழக்கம்."

"மற்ற விஷயங்களை நாம் பிற்பாடு நிதானமா உட்கார்ந்து பேசலாம். என்னுடைய உடனடித் தேவை ஒரு கார். பண விஷயத்தில் அது எவ்வளவாக இருந்தாலும் கவலையே வேண்டாம். இந்தாங்க பிளாங்க் செக். காருக்குத் தேவையான தொகையை இதில் நீங்க எழுதிக் கொள்ளலாம்."

அருண், வெறுமனே கையெழுத்து மட்டும் போடப் பட்டிருந்த செக்-ஐ கையில் எடுத்துப் பார்த்தான்.

"எந்த விலை வரைக்கும் போகலாம்?"

"அதெல்லாம் உங்க விருப்பத்தைப் பொறுத்தது."

"எந்த மாதிரி கார் வேணும்?"

"ஃபியட் எனக்குப் பிடிச்ச கார்!"

"முயற்சி பண்றேன்!"

"கார் கிடைச்சதும் தகவல் சொல்லுங்க!"

"சரி, நான் புறப்படட்டா? வேற எதாவது சொல்ல வேண்டி இருக்கா?"

"கார் வந்து சேர்ந்ததுக்கு அப்புறம் மத்ததெல்லாம்."

ஐந்தரை மணியானவுடன் மேனகா தனது இருக்கையிலிருந்து எழ முயன்றபோது டெலிபோன் ஒலித்தது.

ரிசீவரை எடுத்தாள். அருண் பேசினான்.

கார் கிடைத்துவிட்டதாகவும் உடனே எடுத்து வருவதாகவும் சொன்னான்.

காத்திருந்தாள்.

ஐந்து முப்பத்தைந்துக்கு கார் வந்தது.

"உட்காருங்கள். நானே டிரைவ் செய்கிறேன்." அருண் கூறினான்.

மேனகா, பின்ஸீட்டில் ஏறிச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கார் கேட்டைக் கடப்பதை சிவப்பிரசாத் கவனித்தாலும் அதைப் பற்றி விசாரிக்க அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. அதற்குள்ளாக கார் புறப்பட்டுவிட்டது.

"எங்கே போகணும்?" அருண் கேட்டான்.

"உங்களோட அறைக்கே போங்க!"

"திரும்பவும் அங்கேயே போவது நல்லதா?"

"ஏன் என்ன தப்பு? ஒரு நாள் நான் அங்கு ஒரு இரவைக் கழிக்கவில்லையா? நான் உயிர் பிழைத்ததே அந்த அறையினால்தானே?"



ஓட்டல் டிலைட்டுக்கு முன்னால் கார் வந்து நின்றது.

அருண் கதவைத் திறக்க மேனகா காரிலிருந்து இறங்கினாள்.

இப்போது அவள் முற்றிலுமாக மாறியிருந்தாள்.

அருணும் மேனகாவும் வரவேற்பு ஹாலின் வழியாக படிக்கட்டுகளில் ஏறியதை வரவேற்பு ஹாலிலிருந்தவர்கள் ஒருவிதப் பொறாமையுடன் பார்த்தார்கள். அந்த அளவுக்கு இருவரும் பொருத்தமான ஜோடியாகத் தெரிந்தார்கள்.

அங்கிருந்தவர்களில் வீடியோ காமிராக்காரரான ஜோஸ்மட்டும் அவளைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

உடனே வரவேற்பாளரை நெருங்கினான்.

"ஸெலீனா, அதோ போற அந்தப் பொண்ணு யார்னு தெரியுமா?" ஜோஸ் கேட்டான்.

"அவங்களைத் தெரியாது. ஆனா கூடப் போறவர் ரூம் நம்பர் இருநூற்றியேழில தங்கியிருக்கிறவர்."

"அந்த ஜோடிகிட்ட ஏதோ தப்பு இருக்கிற மாதிரித் தெரியுதே" ஜோஸ் கடந்து செல்லும் அவர்களைப் பார்த்தபடியே பேசினான்.

"இதையெல்லாம் யாரு கவனிக்கிறாங்க ஜோஸ் எத்தனையோ பேர் இங்க வர்றாங்க, போறாங்க. இதையெல்லாம் கவனிக்க ஏதுங்க நேரம்? ஆமாம், உங்களுக்கு அவங்க மேல என்ன அப்படியொரு தனிக் கவனம்?"

போட்டோகிராபர் ஜோஸ்மார்ட்டினை திருநூரில் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

ஆரம்ப காலத்தில் ஒரு ரோலிஃபிளக்ஸ் கேமராவுடன் அலைந்து அலைந்து படம் எடுத்து ஸ்டுடியோ ஸ்டுடியோவாக ஏறியிறங்கி அதை பிரிண்ட் போட்டு வாடிக்கையாளர்களிடம்

ஒப்படைப்பது அவன் பழக்கம். அப்படியே சினிமா நடிகர்-நடிகைகளின் படங்களை எடுத்து பத்திரிகைகளின் அட்டைப் படங்களுக்குக் கொடுத்து விரைவிலேயே ஒரு நல்ல போட்டோ கிராபர் என்ற பெயர் பெற்றான். இந்த சந்தர்ப்பத்தில் வீடியோ கேமரா அறிமுகமானதால் மார்ட்டின் அந்தப் பக்கமும் காலை நீட்டினான். ஆனால், வீடியோ ஜோஸை ஏமாற்றிவிட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் ஜோஸ், கர்னல் சிவப்பிரசாத்துடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது.

நிறையப் புதுமுகங்களை அறிமுகப்படுத்தி, குறைந்த செலவில் சிவப்பிரசாத் தயாரித்த மட்டமான படம் ஒன்று இரண்டாம்தர தியேட்டர் மற்றும் ஏரியாக்களில் வசூலை வாரிக் குவித்தது. அந்த பிரம்மாண்டமான வசூலுக்கும் ஒரு காரணமிருந்தது. இரண்டாவது காட்சிக்கு கூட்டம் அதிகமாக நிரம்பி வழிந்தது. பின்னர்தான் அந்த ரகசியம் வெளியானது.

அந்தப் படம் திரையிடப்பட்ட தியேட்டர்களில் இடைவேளைக்குப் பின்பு 'பலான படத்துண்டை'ச் சேர்க்கிறார்கள் என்பது தெரிந்தது. ஒரு கட்டத்தில் கையுங்களவுமாக அதைப் பிடிக்கவும் செய்தார்கள். அந்த சம்பவத்துக்குப் பிறகு அந்தப் படத்தை தியேட்டர்களில் திரையிடக்கூடாது என்று சென்சார் போர்டு தடைவிதித்தது. சிவப்பிரசாத் அத்துடன் திரைப்படத் தயாரிப்பை நிறுத்திவிட்டார். இருப்பினும் ப்ளூஃபிலிம் தயாரிப்பு மட்டும் தொடரவே செய்தது. அந்தப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்தவன் ஜோஸ் மார்ட்டின். நடுத்தரம் மற்றும் உயர்தர ஓட்டல்களிலும் பிரபலமான ஒரு போட்டோகிராபர் என்ற நிலையில் வளைய வருவான் ஜோஸ்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் ஷூட்டிங் நடக்கும் இடங்களுக்கும் செல்வான். அவனுடைய முக்கிய நோக்கம், தேவையான இரையைத் தேடிக் கண்டுபிடிப்பது மட்டுமே!

சினிமா ஆசையுடன் நகருக்கு வரும் பெண்களை அவன் சட்டென்று அடையாளம் கண்டுபிடித்து விடுவான். அவர்களுக்குச் சந்தர்ப்பம் வாங்கித்தருவதாகச் சொல்லி, இரண்டு மூன்று



ஸ்டுடியோக்களுக்கும் அழைத்துப் போவான். திரையுலகில் புகழ் பெற்றவர்களாக விளங்கும் நடிகைகள் பலரை அவன் அறிமுகப்படுத்தியதாக மார்தட்டுவான். அவனது பேச்சைக் கேட்டால் உண்மைதான் என்று எப்படிப்பட்டவரும் மயங்கவே செய்வார்கள். போதாக்குறைக்கு சினிமா ஆசையில் வருபவர்களுக்கு அதெல்லாம் தெய்வவாக்கு மாதிரி.

நடிகர், நடிகைகளின் புகைப்படங்களைப் பத்திரிகைக்கு அட்டைப் படத்துக்காக எடுத்துக் கொடுப்பவன் ஆதலால், அவர்களும் இவனுடன் தாராளமாகப் பேசுவார்கள். இதெல்லாமே ஜோஸின் நோக்கத்துக்கு உதவுகிற விஷயங்கள்.

இப்படிப்பட்ட பெண்களின் வருகை குறைந்து நகரம் வறட்சியடையும்போது, புதுமுகங்களை வைத்துப் படம் தயாரிக்கப் போவதாகப் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியாகும். நடிகர்-நடிகையர் தேவை என்று வரும் விளம்பரத்தைப் பார்த்து வருபவர்களைத் தனது நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்வான். கொஞ்ச நாள் வண்டி அப்படியே ஓடும்.

அப்படிப்பட்ட ஒரு விளம்பரத்தின் மூலம்தான் ராகினி அவனிடம் சிக்கினாள். அன்று ஓட்டல் அறைக்குள் ஜானியை பாட்டிலின் உடைந்த விளிம்புகளால் குத்திக் கொன்ற பெண்ணின் உருவம், சற்று நேரத்துக்கு முன் படியேறிப் போன பெண்ணுடன் பொருந்திப் போனதாக ஜோஸுக்குத் தோன்றியது.

"இருநூற்றியேழாம் நம்பர் அறையில் இருப்பவனைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா ஸெலீனா?"

"அவர் இந்த ஓட்டலோட நிரந்தர வாடிக்கையாளர்."

"இந்த மாதிரி அவர் அடிக்கடி பொண்ணுங்களைக் கூட்டிட்டு வர்றது உண்டா?"

"அப்படி இதுக்கு முன்னே பார்த்திருக்கிறதாத்தான் என்னோட ஞாபகம் சொல்லுது!"

"என்ன வேலை செய்யறார் அந்த ஆள்?"

"...பிலிம் ரெப்ரசென்டேடிவ். தவிர ஒண்ணோ ரெண்டோ இந்திப் படத்தோட ரைட்ஸ் வேற கையில இருக்குது போலிருக்கு. ஆள் ஒரு மாதிரி ஜாலிக்கார ஆசாமிதான்!"

"அந்தப் பொண்ணைப் பார்த்தா எனக்கு என்னமோ சந்தேகமா இருக்கு. ஆமா, அந்த ஆளை உங்களுக்குப் பழக்கம் இருக்கா?"

"இதுக்கு நான் என்ன பதில் சொல்றது? இங்கே வந்து ஏதாவது கேட்டா நான் பதில் சொல்வேன், அவ்வளவுதான்."

"நம்மளை மாதிரி பேசிக்கிற அளவுக்குப் பழக்கம் இல்லையா?"

"சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் கிடையாது!" நமட்டுச் சிரிப்புடன் கூறினாள்.

"ஓர் உதவி செய்யணும். இருநூற்றியேழாம் நம்பர் ரூமில இருக்கிறவரோட நான் பேச, இன்டர்காம் கனெக்ஷன் தரமுடியுமா?"

"அதுக்கென்ன கொடுத்திட்டாபோகுது. சுதா, இவருக்கு ஒரு லைன் போட்டுக் கொடேன்" டெலிபோன் ஆப்பரேட்டரிடம் திரும்பிக் கூறினாள் ஸெலீனா.

உடனே ஸெலீனா, ரிசீவரை எடுத்து ஜோஸிடம் கொடுக்கவும் செய்தாள்.

"ஹலோ, ரூம் நம்பர் இருநூற்றியேழுதானே?" ஜோஸ் கேட்டான்.

அவன் குரலையே விரும்பாதவள் மாதிரி டெ.ஆ.சுதா வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்.

"மிஸ்டர் அருண் இருக்கிறாரா?"- ரெஜிஸ்டரைப் பார்த்தபடியே மறுமுறை பேசினான்.

"... ... ..."



"குட் ஈவ்னிங் சார். நான் ஜோஸ், போட்டோகிராபர் பேசுறேன். உங்களைப் பார்த்து அறிமுகப்படுத்திக்கணும்னு விரும்புறேன். இப்பவே வரலாம்னு சொன்னாக்கூட ரொம்ப சந்தோஷப்படுவேன். தாங்க்யூ!"

ரிசீவரை வைத்துவிட்டு, என்னமோ புதையல் ஒன்றைக் கண்டுபிடித்தவனைப் போல் மகிழ்ச்சியடைந்தவனாக மாடிப்படிகளின் மீது தாவினான்.

அவன் படிகளைத் தாண்டி, வராந்தாப் பகுதிக்கு வரும்போது சுமார் ஆறடிக்கு மேலான உயரத்துடன் அதற்கேற்ற உடல்கட்டுடன் உருவர் ஜோஸை நோக்கி நடந்துவந்து, அவனருகில் நின்றார். அவரது கிராப்பு போலீஸ்காரர்களுடையது மாதிரி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. டைட்டான பேன்ட்டும், வெள்ளைநிற பனியனும் போட்டிருந்தார். கழுத்தில் ஒரு ஸ்மால் செயினும், அதன் முனையில் பெருக்கல் குறி போன்ற இரண்டு கையெலும்புகளுக்கு மத்தியில் மண்டையோடு ஒன்றும் டாலராகத் தொங்கியது.

"மிஸ்டர் ஜோஸ்மார்ட்டின்!" வந்தவர் அழைத்தார்.

ஜோஸ் ஒருகணம் திடுக்கிட்டான்.

"பயப்படாதே... நண்பன்னு நினை!"

"என்ன விஷயம்?"- அவனது லாக்கெட்டைப் பார்த்தவாறே கேட்டான்.

"இருநூற்றியேழாம் நம்பர் அறையில இருக்கிறவனைக் கண்காணிக்குறதுதான் என் வேலை!"

இந்த வார்த்தைகள் ஜோஸை மேலும் திடுக்கிட வைத்தன.

பார்த்தாலே பயமேற்படுத்தும் இந்தப் பேர்வழி, ஒருவேளை அருணின் மெய்க்காப்பாளன் மாதிரி இருந்து தொலைப்பானோ என்று பயந்தான்.

"மிஸ்டர் ஜோஸ்மார்ட்டின், எந்தவிதமான பயமோ சந்தேகமோ வேண்டாம். நான் அவனோட நண்பனெல்லாம் கிடையாது. உண்மையைச் சொன்னா அவனைத் தேடித்தான் நானும் வந்திருக்கிறேன். ஆனால், சந்தர்ப்பம் சரியில்லாததால பேசாம இருக்குறேன்!"

"என்ன சந்தர்ப்பம்?"

"இருநூற்றியேழாம் நம்பர் அறையில ஒரு டி.எஸ்.பி. இருக்கிறார். அதனால தற்சமயம் பிரச்சினை எதுவும் வேண்டாமென்னு சும்மா இருக்கிறேன்."

"நல்லவேளை... எச்சரிக்கை பண்ணி என்னைக் காப்பாத்தினீங்க" ஜோஸ்மார்ட்டின் ஒருவித நன்றியுடன் அவனைப் பார்த்தான்.

அவன் பேண்ட் பாக்கெட்டைத் தடவியபடி முன்புறமாக நடந்தான்.

## 10

அவன் இருநூற்றியேழாம் நம்பர் அறையின் முன்னால் சென்று நின்றான்.

அருணும், மேனகாவும் இருக்கும் அறையின் முன்னால் ஜோஸ்மார்ட்டின் நிற்பதைப் பார்த்த மண்டையோட்டு லாக்கெட்காரனுக்கு ஏதோ ஒரு சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும்.

டி.எஸ்.பி. பக்கத்து அறையான இருநூற்றியெட்டில் இருக்கிறார் என்பது தெரிந்தவுடன் ஜோஸ்மார்ட்டினின் தைரியம் அதிகரித்தது. அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

ஜோஸ்மார்ட்டினின் பாக்கட்டில் அந்த நேரத்திலும் ப்ளூ ஃபிலிம் ஷூட் செய்வதற்கு முன்பாக ராகினியை எடுத்த மூன்று புகைப்படங்கள் இருந்தன.



மூன்றும் மூன்று விதமானவை. முதல் படத்தில் டூபீஸில் இருந்தாள். இரண்டாவது படம் முழு நிர்வாணமானது. மூன்றாவது படம் ராகினி பிராந்திப் பாட்டிலுடன் உடைந்த விளிம்புகளால் ஜானியைக் குத்துகிற படம். குத்தி சட்டென்று பாட்டிலை உருவியபோது, முனைகளில் ரத்தத் துளிகளுடன் பாட்டில் ராகினியின் கையிலிருக்கும் படம்.

எங்காவது மறுபடி ராகினியைச் சந்திக்க நேருமென்றும் அப்படிச் சந்தித்தால் இந்தப் படங்களை வைத்தே அவளை மிரட்டிப் பணிய வைக்கலாம் என்றும் தீர்மானித்ததால் அவற்றை எப்போதும் கைவசம் வைத்திருந்தான்.

குறைந்தபட்சம் அந்த போட்டோக்களுக்காகப் பயந்து கொண்டாவது அவள் புளூ ஃபிலிம் ஷூட்டிங்குக்கு உடன் படலாம். அதுகூடப் போதும். வந்தவரையிலும் லாபம்!

வழக்கமான லாட்ஜ்கள், ஏராளமானவர்கள் கூடிப் பிரியும் ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட் போன்ற இடங்களை வட்டமிட்டதில் இன்று ராகினி தன்னிடம் வகையாக மாட்டிக் கொண்டதாகவே கருதி மகிழ்ந்தான்.

இந்த போட்டோவால் கிடைக்கும் லாபம் முற்றிலுமாகத் தன்னையே சேரவேண்டுமென்று அவன் விரும்பியதால், இந்தப் படங்களைப் பற்றி அவன் வேறு யாரிடமும் மூச்சு விடவில்லை. அத்துடன் முழுமையடையாத புளூ ஃபிலிம் கேஸட்டும் இப்போது அவனிடம் இருந்தது.

"இப்பிடி வாங்க!"- மண்டையோடு லாக்கெட்காரன் ரகசியமான குரலில் அழைத்தான்.

"என்ன வேணும் சொல்லுங்க!"- அந்த மனிதன் தன்னுடைய நோக்கத்துக்கு ஒரு இடையூறு என்று நினைத்தாலும் ஜோஸ், அவனை அனுசரிக்கவே செய்தான்.

"நீங்க எதுக்காக அவரைப் பாக்கணும்னு விரும்புறீங்க? நான் தெரிஞ்சுக்கலாமா? உங்களுக்கு ஏற்கெனவே அவரைத் தெரியுமா?" லாக்கெட்காரன் கேட்டான்.

"அந்த ஆளை எனக்குத் தெரியாது. ஆனா, அந்தப் பெண்ணை எனக்கு நல்லாத் தெரியும்."

"அப்போ அந்த ஆள் உங்களுக்கு வேண்டியதில்லை?"

"ஆமாம்!"

"உண்மையைச் சொல்லுங்க. உங்களுக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன தொடர்பு?" லாக்கெட்காரன் லாக்கெட்டைத் தடவியவாறே கேட்டான்.

ஜோஸுக்கு அவனைப் பார்த்தபோதே பயம் தோன்றியிருந்தது.

உடம்பை வைத்துப் பார்த்தால் ஜோஸ் லாக்கெட்காரனின் ஒரு கையளவுதான் இருந்தான். வெளிறி, மெலிந்த உடலுடன் மனத்தால் பயந்தவனாக இருந்தாலும் தைரியத்தை வெளிக்காட்டியபடி அவனையே பார்த்தான் ஜோஸ்.

"நான் ஒரு போட்டோகிராபர். சினிமா உலகத்தோடவும் எனக்குத் தொடர்பு உண்டு. உண்மையைச் சொன்னா அவளை இந்த ஊருக்கு வரவழைச்ச நான்தான். எங்களுக்குள் ஒரு சிறிய தொடர்பு உண்டு. அவளுக்காக ஒரு தயாரிப்பாளர்கிட்டப் பேசி ஒரு காரெக்டரை ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். அடுத்த மாசம் வரச்சொல்லி அனுப்பி வச்சிருந்தேன். இன்னிக்கு எதிர்பாராம இங்கே நான் வந்தேன். அவள் இன்னொருத்தனோட மாடியேறிப் போனாள். அதனால அவளைப் பார்க்கிறதுக்காகப் போறேன்!"

"எச்சரிக்கையா இருங்க. அவன் ஆளு கொஞ்சம் ஒரு மாதிரி. நான் ஒரு கை பார்த்துடலாம்னு நெனைச்சேன். ஆனால், டி.எஸ்.பி. பக்கத்துல இருக்கிறதால திட்டத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறேன்."



ஜோஸுக்கு சட்டென்று ஒரு யுக்தி தோன்றியது. இயல்பாகவே வஞ்சக விஷயத்தில் ஜோஸ் தேர்ந்தவனும்கூட.

தான் தனியாகப் போனால் அருணுடன் மோதி, ராகினியைக் கொண்டு வருவது சற்று சிரமமான காரியம். அருண் அப்படியொன்றும் நோஞ்சான் அல்ல என்று ஜோஸ் நினைத்தான். அவனுடன் மோதுவதற்கு ஏற்ற ஒரு மனிதன் இப்போது கையில் அகப்பட்டிருக்கிறான். ரெண்டு பேருமாகச் சென்றால் ஒருவேளை விஷயம் சுலபமாக முடிவடையலாம். எதிரில் நிற்பவன் ஒரே நேரத்தில் நாலைந்து பேருடன் மோதுவான் போலத் தெரிந்தது.

அவர்கள் வெளியே பேசிக்கொண்டிருந்த அதே விஷயத்தைப் பற்றித்தான் உள்ளே மேனகாவும் பேசினாள்.

"மிஸ்டர் அருண், நாம் இங்கு வந்தது ஒரு பிரச்னையை ஏற்படுத்தியிருக்கும் என்று தோன்றுகிறது."

"ராகினி... இல்லை மேனகா. இனிமேல் இந்தப் பெயரையே பயன்படுத்துகிறேன். உங்களுக்குப் பழக்கமான யாராவது தென்பட்டார்களா என்ன?"

"இருக்க மாட்டாங்கன்னு நெனைச்சுத்தான் இங்கே வந்தேன். உள்ளே நுழைஞ்சு படியேறும்போதுதான் அதைக் கவனிச்சேன். அதைப் பத்தித்தான் யோசனையா இருக்கு!"

"என்ன ஆச்சு?"

"வரவேற்பு ஹால்ல உட்கார்ந்திருந்த நோஞ்சான் என்னைப் பார்த்தான் சந்தேகம். தீராம உத்துப் பார்த்த மாதிரி வேற தோணுது."

"யாரவன்?"

"போட்டோகிராபர். வீடியோ கேமராமேனும்கூட. அவன்தான் அந்த அறைக்குள்ள என்னை போட்டோ, வீடியோ எடுத்தவன்."

"அதாவது அன்றைய ராகினி சொன்ன கதையில் இடம்பெறும் ஒரு கதாபாத்திரம், அப்படித்தானே?"

"ஒரு திருத்தம். ஒரு கதாபாத்திரமல்ல. அவன்தான் முக்கியமான கதாபாத்திரம். என்னோட யூகம் சரியா இருந்தா அவன் கிட்டத்தான் அந்தப் படங்கள் இருக்கும்."

"இருக்கட்டும். ஆனா ராகினியா இருந்ததைவிட மேனகாகிட்ட இப்ப நிறைய மாற்றங்கள் இருக்கு. தலைமுடி பிரௌன் நிறமா மாறியிருக்கு. பச்சை குத்தி செயற்கையா ஏற்படுத்தியிருக்கிற மருகு. மொத்த முகத்தையே மாத்தியிருக்குது. வேஷமே பழையபடி இல்லையே?"

"இருந்தாலும் எனக்கென்னவோ பயமாத்தான் இருக்கு."

"இந்த இடத்துல உங்களுக்கு எந்தவிதமான பயமும் வேண்டாம். நான்தான் இருக்கிறேனே!"

"உண்மையில நீங்க எனக்கு அறிமுகமானதே என்னுடைய அதிர்ஷ்டந்தான். என்னை அழிக்க நினைச்ச இவனுங்களை அழிச்சு நான் பழிக்குப் பழிவாங்கணும். அன்னிக்கு என்னை மானபங்கப்படுத்த நினைச்சவனோட ரத்தத்தைப் பீய்ச்சியடிக்க வச்ச மாதிரி. இதுக்கெல்லாம் காரணமா இருக்கிற பெரிய தலையையும் நான் பழி வாங்கியாகணும்!"

"பொறுமை... பொறுமை... எல்லாத்துக்கும் நாம பரிகாரம் தேடலாம்."

அந்த நேரம் வெளியிலிருந்து வாசல் கதவைத் தட்டினார்கள்.

"ஐயோ... அவனாத்தான் இருப்பான். அந்த நோஞ்சான் போட்டோகிராபர். தயவுசெஞ்சு கதவைத் திறக்காதீங்க!" நாற்காலியிலிருந்து எழுந்திருக்க முயன்ற அருணின் கையைப் பிடித்தபடி மேனகா கூறினாள்.

"ரொம்பவும் நல்லதாப் போச்சு. அந்த நோஞ்சானைப் பிடிச்சு உலுக்கினா போட்டோ, நெகட்டிவ், வீடியோ ரோல் எல்லாமே நம்ம கைக்கு வந்துடும்."- அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அருண் கதவை நெருங்கினான். தாழ்ப்பாளை மெதுவாக நீக்கினான்.



"என்ன வேணும்?" அருண் சற்று அதட்டலான குரலில் கேட்டான்.

"பக்கத்திலேயே டி.எஸ்.பி. இருக்கிறார். அனாவசியமான கூச்சல் எல்லாம் வேணாம்." ஜோஸ் மார்ட்டின் பேண்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்டுச் சோதித்த பிறகு ஒற்றையாக இருந்த நாற்காலி மீது அமர்ந்தான்.

"நண்பா, அந்தப் பக்கமா உட்காருங்க!" லாக்கெட் காரனிடம் ஜோஸ் கூறினார்.

டைட்டாக இருந்த பேண்ட் பகுதியைச் சற்று மேலேற்றிவிட்டு 'லாக்கெட்' மற்றொரு நாற்காலியில் அமர்ந்தான்.

"நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தே?" ஜோஸ் மார்டின் ஒருவித உரிமையுடன் பேசத் தொடங்கினான்.

"யாருய்யா நீ... மரியாதையில்லாம என்கிட்டப் பேசுறே?" ராகினி என்ற மேனகா கோபத்துடன் கேட்டாள்.

"ராகினி, எதுக்கும்மா வீணா கூச்சல் போடுற? இப்ப இங்க என்ன நடந்துச்சு?"

"ராகினி... யார் அது ராகினி?"

"ஓகோ... இப்ப அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா?"

"ஒருவேளை நீங்கள் ஆள்மாறி வந்திருக்கலாம்."- அருண் சிகரெட் ஒன்றை உதட்டில் பொருத்திக்கொண்டு பற்ற வைத்தவாறு பேசினான்.

"ஆள் மாறிக் கூப்பிடுறேன்னு என்கிட்டயா சொல்றீங்க? இவள் உடம்பில் ஒரு நூல்கூட இல்லாம உரிச்ச கோழியா பார்த்தவனாச்சே நான்!"

"மிஸ்டர் அருண், நீங்க இதெல்லாம் கேட்டுட்டுத் தானே இருக்குறீங்க?" என்றான் மேனகா.

"பொறும்மா... தம்பி இப்பத்தானே பேச ஆரம்பிச்சிருக்கார். பேசட்டும்... பேசிமுடிக்கட்டும்!" அருண், சிகரெட்டிலிருந்து நூலிழைபோல் மேலெழும்பிக் கொண்டிருந்த புகையையே பார்த்தவாறு பொருட்படுத்தாதவனாகப் பேசினான்.

"ஏம்மா குழந்தை, நீ எதுக்காக இப்ப இப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்றே? ரயில்வே ஸ்டேஷன்ல வந்து இறங்கினதும் உன்னை ஓட்டலுக்குக் கூட்டி வந்த ஆட்டோவுக்குப் பின்னால 4254 அம்பாஸிடர்ல தொடர்ந்து வந்தவன் நான். அன்னிக்கு உன் தலையில கனகாம்பரம் இருந்ததே ஞாபகம் இருக்கா?"

"உங்களுக்கு நல்ல கற்பனை வளம் இருக்கு. முயற்சி பண்ணினா சிறுகதை எழுதலாம்!" அருண், ஜோஸை ஓரக்கண்ணால பார்த்தபடி பேசினான்.

"தம்பி அதையெல்லாம் நீயே எழுது. இப்ப கொஞ்ச நேரத்துக்கு அவனை விட்டுவிட்டு வேற ஏதாவது வேலையிருந்தா பார். வாம்மா ராகினி நாம புறப்படலாம். எவ்வளவு வேலையிருக்கு இன்னும். சீக்கிரமா முடிச்சா சில்லறை பார்க்கலாம்."

"என்னை யாருன்னு நினைச்சு நீங்க பேசிக்கிட்டு இருக்குறீங்க?"

"ராகினின்னு நெனைச்சுதான்... நெனைப்பென்ன ராகினியேதான். அதான் பேசுறேன்."

"ஒரு யோசனை சொல்லட்டுமா? ஒரு தடவைகூட நல்லாப் பார்த்துட்டுப் பதில் சொல்லுங்க. தவறு பண்றது மனித இயல்புதான்!" அருண் உட்கார்ந்த நிலையிலிருந்து நகராமல் பேசினான்.

"இப்போ வித்தியாசமாத் தெரியிறது முகத்துல இருக்குற மருகுதான். தலைமுடியோட நிறம் கொஞ்சம் மாறியிருக்குது. ஒரு ஆர்ட்டிஸ்ட்டும் போட்டோகிராபருமான என்கிட்ட இந்த மாற்றமெல்லாம் ரொம்பச் சுலபமா அகப்பட்டுடும். என்கிட்ட



இருக்கிற ஒரு கெட்ட பழக்கம் என்னன்னா, எப்படிப்பட்ட முகத்தையும் நான் ஒரு தடவை பார்த்துட்டா அவ்வளவு சீக்கிரம் மறக்க மாட்டேன். அந்த மூக்கோட அமைப்பு, உதடு, முன்புறமா நீண்டிருக்கிற தாடை... இதையெல்லாம் நான் சுலபத்துல மறந்துட மாட்டேன். இன்னொரு முக்கியமான அடையாளம் இருக்கு. மார்போட மையத்துல ஒரு உண்மையான மருகு இருக்குது பாரு." பேண்ட் பாக்கெட்டைத் தடவியபடி ஜோஸ் கூறினான்.

மேனகா அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. உண்மையிலேயே அவள் ஒருகணம் உள்ளுக்குள் திடுக்கிட்டே போனாள். கேமராவின் முன்னால் நின்றபோது இந்த நாய் பார்த்திருக்கும்!

"இப்போ நான் சொன்ன அடையாளத்தை நீங்க சுலபமா மறுத்துடலாம். ஏன்னா ரொம்பவும் பாதுகாப்பான இடத்துல இருக்கே. யாரும் சட்டுன்னு அவிழ்த்துச் சோதனை போட முடியாதே. பொண்ணா இருந்தா இப்படியொரு சௌகரியம் உண்டு! உங்கள்ல யாருக்காவது சந்தேகமிருந்தா அதை வேற மாதிரி கூட என்னால நிரூபிக்க முடியும்."

போட்டோகிராபர் ஜோஸ் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து நிதானமாக ஒருகவரை வெளியே எடுத்து, அதிலிருந்து ராகினி டூபீஸ் உடையிலிருந்த ஸ்டில்லை எடுத்து வெளியே போட்டான்.

அருண் அலட்சியமாக அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தான்.

அது மேனகாவின் போட்டோதான் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

"இதோ பாருங்கள் இன்னொன்று!" ரம்மி விளையாட்டின் போது சீட்டு இறக்குவது போல் ஒரு வித வெற்றிக் களிப்புடன் மேனகா நிர்வாணமாக இருந்த மற்றொரு வண்ணப்படத்தை எடுத்துப் போட்டான்.

அதையும் அருண் பழையபடி அலட்சிய பாவத்துடனே பார்த்தான்.

"இந்த போட்டோவில நல்லா கவனிச்சா நான் குறிப்பிட்ட மருகு தெரியும்"- ஜோஸ் கேலியான தொனியில் சீண்டுவதுபோல் சொல்லிவிட்டு மேனகாவைப் பார்த்தான்.

அவன் சொன்னதெல்லாம் சரிதான். போஸ்ட் கார்டு அளவுள்ள படத்தில் அவன் குறிப்பிட்ட அடையாளம் தெளிவாகத் தெரியவே செய்தது.

"இப்போது நான் காட்டப் போகும் படத்தை பக்கத்து அறையிலிருக்கிற டி.எஸ்.பி. பார்த்தால் ரொம்பவும் மகிழ்ச்சியடைவார். அவருக்கு உதவியாகவும் இருக்கும்." சிரித்தபடியே ஜோஸ்மார்ட்டின் ரத்தம் சொட்டும் பாட்டிலின் பாதி உடைந்த பகுதியுடன் ஜானியின் உடம்பிலிருந்து ராகினி உருவியபோது எடுத்த படம் அது. சீட்டு விளையாட்டில் வெற்றிபெற்றவன் பெருமிதத்துடன் கார்டை மற்றவர்களின் பார்வைக்கு வைப்பது போல் டீப்பாயின் மீது வைத்தான்.

அருண் அதையும் கையில் எடுத்துப் பார்த்தான். மூன்று போட்டோக்களையும் சீட்டு விளையாடுபவர்கள் பிடித்திருப்பது போல் விரித்துப் பிடித்து சிகரெட் லைட்டரால் அதன் அடியில் நெருப்பு கொளுத்தினான்.

போட்டோக்கள் எரிந்து கொண்டிருந்தன.

"உன்னைப் போன்ற ஒரு முட்டாளை நான் உலகத்தில் வேறு எங்குமே பார்த்ததில்லை." ஜோஸ் வாய்விட்டுச் சிரித்தபடி கூறினான்.

"ஹலோ நோஞ்சான் பிரபுவே, அது தெரிந்துதான் படங்களை எரித்தேன். பிச்சைக்கார நாயே எடுடா அந்த நெகட்டிவ்களை!" விருட்டென்று எழுந்த அருண், ஜோஸின் வயிற்றுப் பகுதியில் கொத்தாகப் பிடித்துத் தூக்கி பாத்ரூம் பக்கம் வீசியெறிந்தான். விசையுடன் வந்த ஜோஸ் மோதியதால்



மூடியிருந்த கதவு திறந்து கொண்டது. உட்புறமாகத் தலைமோதி அவன் மட்டமல்லாக்க விழுந்தான்.

"பரவாயில்லையே ஆளு ரொம்பவும் கெட்டிக்காரன்தான்." வலது கையால் மண்டையோட்டு லாக்கெட்டை வருடியபடி, தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை வெகு இயல்பாகத் தூக்கியபடி அருணை நோக்கி நகர்ந்தான் லா. காரன்.

## 11

அந்தக் காட்சியைப் பார்த்து என்ன செய்வதென்று தெரியாமல் மலைத்து நின்றாள் மேனகா.

கராத்தேவில் தேர்ந்தவனான அருண் ஒரு புலியைப் போல் சீறியெழுந்து மேற்புறமாக உயர்ந்து லாக்கெட்காரனின் நடுத் தொண்டையில் ஓங்கி ஒரு மிதி மிதித்தான்.

அருணின் பூட்ஸ் முனை அந்த லாக்கெட்டின் மீது சரியாகப் பதிந்தது. கையில் நாற்காலியுடன் அவன் வித்தை காட்டுவது மாதிரி நிதானமாகப் பின்புறம் சரிந்தான்.

ஆனால், அவனும் சாதாரணமானவன் அல்ல. முழுவதுமாக விழுவதற்கு முன்பே சுதாரித்து எழுந்தான். தன் முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு அருணுடன் மோதத் தயாரானான்.

அந்த அறைக்குள் இருவரும் பலப்பரீட்சை நடத்திக் கொண்டிருந்தபோது மேனகாவால் வெறுமனே வேடிக்கை பார்க்க மட்டுமே முடிந்தது.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் பேண்ட் பாக்கட்டிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்தவன் பெருவிரலால் பட்டனை அழுத்தினான். கிளிங் என்ற சத்தத்துடன் பளபளப்பான கத்தி வெளிப்பட்டுத் தகதகத்தது.

அருணின் பார்வை அதன் பிறகு கத்தியின் மீதே பதிந்தது. எதிர்பாராத ஒரு தருணத்தில் கால்மடக்கி உயர்ந்து எழும்பியவன் கத்தியைப் பிடித்திருந்த மணிக்கட்டுப் பகுதியில் ஓங்கி ஒரு மிதிமிதித்தான். லாக்கெட்காரனின் கையிலிருந்து நழுவிய கத்தி மேற்புறமாக உயர்ந்து சர்ரென்று இறங்கிய மப்பாயின் மீது குத்திட்டு நின்றது.

அதை எடுப்பதற்காக அவன் குனிந்தான்.

அருணின் அடுத்த உதை, லாக்கெட்காரனின் இடது புறத் தாடையில் ஃபுட்பாலின் மீது விழுவது போல் விசையுடன் விழுந்தது. ஒரு கணம் தாடை பெயர்ந்துவிட்டதோ என்று நினைத்தவன் சடக்கென்று பின்புறம் சரிந்து தரையில் பதிந்தான்.

பாத்ரூமில் விழுந்து கிடந்த ஜோஸை வெளியே கொண்டு வருவதற்காக அருண் அந்தப் பக்கமாக விரைந்தான். ஆனால் லாக்கெட்காரனுக்கும், அருணுக்கும் இடையே நடந்து கொண்டிருந்த ஜீவமரணப் போராட்டத்தின் நடுவே ஜோஸ் அங்கிருந்து இடம் பெயர்ந்திருந்தான்.

"எலி தப்பித்து விட்டதே!" அருண் ஏமாற்றத்துடன் கூறினான்.

"நிஜமாவே நான் அவனைக் கவனிக்கலை. ஒருவேளை வெண்டிலேட்டர் வழியாத் தப்பிச்சிருப்பானோ என்னவோ?" மேனகா கேட்டாள்.

"எப்படிப் போயிருந்தாலும் அவன் கையிலதான் துருப்புச்சீட்டு இருக்கு. இந்த நாயால நமக்கு எந்தத் தொந்தரவும் கிடையாது. எழுந்திருடா ராஸ்கல்!" கீழே விழுந்து கிடப்பவனை நெருங்கி, காலால் உதைத்தபடி எழுப்பினான்.

"உண்மையைச் சொல், நீ எப்படி இங்கு வந்து சேர்ந்தே?"

"அவன்தான் என்னக் கூட்டிட்டு வந்தான்."

"அந்த நாயை உனக்கு முன்னமே பழக்கமிருக்கா?"



"அதெல்லாம் கிடையாது. இங்கேதான் முதல் தடவையா பார்த்துப் பழகினேன்."

"ஓகோ கூலிக்கு அடிக்கிற கும்பலைச் சேர்ந்தவனா?"

"மன்னிக்கணும். இனிமேல் இப்படி நடக்காமப் பாத்துக்குறேன்."

"ம்... புறப்படு!" அருண் மீண்டும் அவனை உதைப்பதற்காகக் காலை ஓங்கினான். அவன் ஒடுங்கி ஒதுங்கியவனாக வாசலை நோக்கி ஊர்ந்து நகர்ந்தான். அவனை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருப்பதாக அருணுக்கு தோன்றியது.

"கொஞ்சம் நில்லுப்பா... ஒரு விஷயம் கேட்கணும்!"

அவன் திரும்பி நின்றான்.

"இதுக்கு முன்னால நீ என்னைப் பார்த்திருக்கிறதானே?"

"ஆமாங்க சார்!"

"எங்கே பார்த்திருக்கிறோம்?"

"ஒரு நாள் நீங்க மோட்டார் பைக்ல தனியா வந்தபோது நாலு பேர் வளைச்சோமே, ஞாபகம் இருக்குங்களா? அதில நானும் ஒருத்தன்!"

"ஓகோ வழிப்பறிக் கூட்டத்தைச் சேர்ந்தவனா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. அன்னிக்கு என்னை கூட வரச் சொன்னாங்க வந்தேன். அவ்வளவுதான்!"

"அவங்களைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"எதுவும் தெரியாது சார்!"

"உன்னைப் பார்த்தா நீ பொய் சொல்ற மாதிரித் தெரியுது. நீ இப்பவும் அந்தக் கூட்டத்துலதான் இருக்கணும். உங்க கிட்டேயிருந்துதான் தப்பிச்சிட்டதால மறுபடியும் எங்கேயாவது திரும்பத் தட்டுப்படுவேன் தனியான்னு சுத்திச் சுத்தி வர்றீங்களா?"

அப்படித்தான் என்னை இப்போ பார்த்திருக்கிறே. உண்மையைச் சொல்லு... அன்னிக்கு உன்கூட இருந்தவங்க யாரு?"

"சார் நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் கிடையாது. ஏதோ ஒரு தியேட்டர் சம்பந்தமான பிரச்சினை"- அவன் சொன்னான்.

"தியேட்டர் பிரச்சினையா, அது என்ன?"

"ஏதோ ஒரு தியேட்டர்ல புளு ஃபிலிம் ஓட்டுறாங்கன்னு நீங்க புகார் கொடுத்தீங்களாம். அதை எடுத்துட்டு உங்க படம் போடணும்னு சொன்னீங்களாம். அப்படித்தான் ஏதோ ஒண்ணு சொன்னாங்க"

"ஓகோ... அதுதான் விஷயமா? அப்படின்னா இதுக்குப் பின்னால இருக்கிறவர் அந்த ஃபைனான்ஸ்காரனா? சரிதான்!"

"ஆமாங்க. அவரோட படம் போட்ட போதுதான் தகராறு வந்ததாம்."

"ஓகோ. இப்பத்தான் விஷயம் புரியது. அதனாலதான் என்னைச் சுத்திச் சுத்தி வர்றீங்களா?"

அதற்கு அவன் எதுவும் பதிலளிக்கவில்லை.

"சரி, இப்ப நீ கிளம்பலாம். ஒரே ஒரு விஷயத்தை தெரிஞ்சுக்கோ. நீங்க விளையாடுறது நெருப்புகிட்டேங்கிறதை ஞாபகம் வச்சுக்கங்க. மேற்கொண்டு இது மாதிரி எது நடந்தாலும் என்னைப் பொறுத்தவரைக்கும் நீதான் பொறுப்பாளி. இனிமேல் உன்னை இந்தப் பக்கத்துல எங்கேயும் பார்க்கக்கூடாது தெரியுதா... ம்... புறப்படு!"

அவன் சட்டென்று கதவைத் திறந்துகொண்டு ஓடி மறைந்தான்.

"இனி இப்போ என்ன செய்யிறது?"



"என்னத்தைச் செய்யிறது!"

"பக்கத்து அறையில் டி.எஸ்.பி. தங்கியிருக்கிறதாச் சொன்னாங்களே. இந்த ரகளையெல்லாம் அவர் காதுக்கு எட்டியிருந்தா?"

"அதுக்கு நாம என்ன பண்றது? நாம எந்த வகையிலயும் அவருக்குத் தொல்லை குடுக்கலை. நம்மளைத் தாக்க வந்தவங்கள நாம தாக்கியிருக்கிறோம். தற்காப்பு நடவடிக்கைதானே?"

"நான் சொல்ல வந்ததை இன்னும் சொல்லவே இல்லையே!"

"உண்மைதான். நாம இங்கே வந்ததே அதுக்காகத்தானே?"

"நான் இப்போ யாரோட மகள்னு உங்களுக்குத் தெரியுமில்லையா?"

"சொன்னீங்களே!"

"ஆமாம். கர்னல் சிவப்பிரசாத்தோட உண்மையான ஒரே மகள் மேனகா."

"அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்துட்டீங்கங்கிறது தெரிஞ்சுது. மகளானது புரியலை!"

"இது மாதிரி நீங்க, என்னைப் பத்தித் தெரிஞ்சுக்க வேண்டியது ஏராளமா இருக்குது. இது ஒரு ஆரம்பம் மட்டும்தான்!"

"தங்குறதும் அவரு வீட்டிலேயேதானா?"

"அவ்வளவு பெரிய முதலாளியோட மகள் ஓட்டல்ல அறையெடுத்துத் தங்கலாமா?"

"ஏதோ அறிவில்லாமக் கேட்டுட்டேன். இனிமேல் இந்த மாதிரி கேள்வியெல்லாம் கேட்கமாட்டேன்."

"நான் அங்கே ரொம்பவும் சௌக்கியமா இருக்கிறேன். எனக்குப் பாதுகாப்புக்கு ஒரு நபர் தேவைப்படுது. சமையல், டிரைவிங், சண்டை இதெல்லாம் தெரிஞ்ச ஒருத்தர் தேவை."

"அப்ப சினிமா ஹீரோதான் சரி. அவர்தான் சகலகலா வல்லவராயிருப்பார். உண்மையில அப்படி ஒருத்தர்தான் உங்களுக்கு இப்போ வேணும்!"

"சித்திக்கு என்னைக் கண்டாலே பிடிக்கிறதில்லை. அப்பாவுக்கோ சதா சந்தேகம். மகள்தானா, ஏதாவது ஏமாற்று வேலையான்னு மண்டையைப் போட்டு உடைச்சுக்கிறார். எனவே, எனக்கு எப்பவும், எங்கிருந்தும் என்ன மாதிரியான ஆபத்தும் வரலாம்."

"உங்க சித்திக்கு எப்பவும் உங்களைப் பிடிக்கப்போறதில்லை. காரணம், நீங்க அந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்சதோட அவங்களோட சுதந்திரம் பறிபோனது மாதிரி. பொதுவா நூற்றுக்குப் பத்து சித்திமாருங்கதான் மூத்ததாரத்துக் குழந்தைங்களையும் தன் குழந்தையா பார்த்துக்குவாங்க. நடுவில குறுக்கிடுறதுக்கு மன்னிக்கணும். நீங்க ஒரு நாடக நடிகைன்னும், சினிமா சந்தர்ப்பத்துக்காக வந்து இப்பிடி மாட்டிக்கிட்டதாகவும் என்கிட்ட ஒருதடவை சொன்னதா ஞாபகம்."

"அது உண்மைதான். என் அம்மா மச்சரா இருந்தாங்க. அம்மா இருக்குறதுக்குக் கொஞ்சம் முன்னாலதான் நாடகங்கள்ல நடிக்கப் போனேன். அந்த வகையில வந்த சிக்கல்தான் அது."

"இப்ப நாம முதல்ல செய்ய வேண்டியது ஜோஸ் மார்ட்டின் என்கிற நோஞ்சான் போட்டோகிராபரைக் கண்டுபிடிக்கணும். அந்த நெகட்டிவ் மற்றும் பிரிண்ட்டுகளைக் கைப்பற்றலேன்னா, சில நேரம் உங்க வாழ்க்கையே திசை மாறலாம்."

"அதுக்கு என்ன பண்ணலாம்?"

"அவனை நான் எப்படியும் கண்டுபிடிச்சிடுறேன்.



அதையெல்லாம் கைப்பத்துறதும் என்னோட பொறுப்பு. தற்காலிகமா அதைப் பத்தி நீங்க மறந்துடலாம்."

"நேரம் ரொம்ப ஆயிடுச்சா?"

"ஆகாம... மணி ஏழரையாயிடுச்சு!"

"அப்ப நான் கிளம்பட்டுமா?"

"நானும்கூட வரணுமா?"

"வந்தா நல்லது?" அவள் சொன்னாள்.

"நீங்க கார் ஓட்டுவீங்க இல்லையா... இந்தாங்க கார் சாவி."

அவன் காரை ஸ்டார்ட் செய்தான்.

அருண் அவளுக்கு இடதுபுறம் அமர்ந்தான்.

"இவ்வளவு நல்லா டிரைவ் பண்றீங்க. உங்களுக்கு எதுக்கு டிரைவர்?"

"கார் ஓட்டத் தெரியாதுன்னு நான் சொல்லலையே. சிவப்பிரசாத் ஃபைனான்ஸ் கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் தானே கார் ஓட்டுவது நல்லதில்லை. அதனால் ஒரு டிரைவர் அவசியம்."

"சரி ஒரு விளம்பரம் கொடுத்துப் பார்க்கலாம். ஆள் கிடைக்காம இருக்காது!"

கர்னல் சிவப்பிரசாத்தின் பங்களா முன்னால் கார் நின்றது.

"அப்போ நான் புறப்படலாமில்லையா?"

"மறுக்கிறது நாகரிகமில்லை!"

அருண் ரோட்டில் இறங்கிக் கொண்டான். பயணிகளுடன் எத்தனையோ ஆட்டோக்கள் அருணைக் கடந்து போனது. பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு ஒரு ஆட்டோ கிடைத்தது.

போர்ட்டிகோவை ஓட்டி காரை நிறுத்திவிட்டு காலிங் பெல்லை அழுத்தினாள் மேனகா.

37849
64793??

வாசந்தி கதவைத் திறந்துவிட்டாள்.

"இந்த கார் யாரோடது?"

"என்னோடதுதான். வாங்கியிருக்கேன்."

"அப்பா மகளுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறாரா?"

"நாம ரெண்டு பேர் பேசினதுக்கும் அர்த்தம் ஒண்ணுதானே?"

பேசவே பிடிக்காத மாதிரி வாசந்தி வெறுப்புடன் திரும்பிப் போனாள். அவள் மனத்தில் வன்மம் அதிகரித்திருந்தது.

நேராகத் தன்னுடைய அறைக்கு வந்தவள் உடையை மாற்றி நைட் கவுன் அணிந்துகொண்டு கீழிறங்கி வந்தாள்.

"ரொம்ப அழகா இருக்கு!" வாசந்தி மேனகாவைப் பார்த்துச் சிரித்தபடி கூறினாள்.

சட்டென்று சித்தியிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் எதற்கோ ஒரு தொடக்கம் என்று புரிந்தது.

"இதோ காபி போட்டு வெச்சிருக்கிறேன்."

மேனகா ஃபிரிஜ்ஜைத் திறந்து இரண்டு வாழைப்பழங்களை எடுத்துச் சாப்பிட்டாள்.

"சித்தி, உங்ககிட்ட நான் ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன். என்கூடப் படிச்ச ஒரு சினேகிதியைப் பார்த்தேன். நாங்க ரெண்டு பேரும் ஓட்டல்ல டிபன் சாப்பிட்டதால எனக்குப் பசியில்லை. போதாக்குறைக்கு ரெண்டு பழம் வேற சாப்பிட்டுட்டேன்."

சொல்லிவிட்டு அவள்பாட்டுக்கு படியேறி மறைந்தாள்.

அன்று மிகவும் தாமதமாகத்தான் சிவப்பிரசாத் வீடு வந்து சேர்ந்தார்.

"வந்திருக்கிறவ உங்க மகள்தான்னு உங்களுக்கு ஏதாவது நினைவிருக்கா?"



"இப்போ இந்த விஷயத்தைக் கையில எடுத்துக்கிட்டியா?" கர்னல் ஒருவித எரிச்சலுடன் கேட்டார்.

"அவசியம் இருக்கிறதாலதான் கேட்டேன்."

"என்ன அவசியம்?"

"இன்னிக்கு ஒரு காரோட வந்து நிக்கிறா. நாளைக்கு அதுக்கு ஒரு டிரைவர் வேணுமாம்!"

"அதெல்லாம் அவள் சம்பந்தப்பட்ட விஷயங்கள். நாம ஏன் அதைப் பத்திக் கவலைப்படணும்?"

"இதுக்கெல்லாம் பணம் வேண்டாமா?"

"வாசந்தி, நல்லவேளை ஞாபகப்படுத்தின. இன்னிலேர்ந்து மேனகா நம்ம ஃபைனான்ஸ் கம்பெனியோட ஜெனரல் மேனேஜர்."

"என்னங்க இந்த மாதிரிப் பைத்தியக்காரத்தனமெல்லாம் பண்றீங்க. நேத்து வந்தவ, இன்னிக்கு கம்பெனியோட ஜெனரல் மானேஜர்!"

சிவப்பிரசாத் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை.

"ஒரு விஷயத்தை நான் உறுதியா சொல்லிடறேன். இந்த வீட்டுச் சமையலறைக்குள்ள வேறொரு உயிர் நுழையக் கூடாது. நான் அதுக்கு ஒப்புக்க மாட்டேன்."

"எல்லா விஷயத்துக்கும் ஒரு பரிகாரமிருக்கு. இந்த பூவுலகத்துல பரிகாரமில்லாத விஷயம் ஏதாவது இருக்கா என்ன?"

மறுநாள் காலையில் மேனகா எழுந்தாள். ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். யதேச்சையாகக் குப்பைத் தொட்டியின் பக்கம் பார்த்தாள். அங்கு இரண்டு காகங்கள் குப்பைமீது உயிரற்றுக் கிடந்தன.

அவள் சந்தேகம் வலுவடைந்தது. முந்தைய நாள் காலையில் அவளுக்குக் கொண்டுவந்த இட்லியில் விஷம் கலந்திருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஓர் இளைஞன் சிவப்பிரசாத்தின் பங்களாவுக்கு வந்து, தான் மேனகாவைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிவித்தான்!

## 12

"யார் நீங்க, எங்கேயிருந்து வர்றீங்க?" கதவைத் திறந்த வாசந்தி கேட்டாள்.

"டிரைவர் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் பார்த்தேன். அதான் வந்திருக்கிறேன்."

'டிரைவர் தேவையென்று யார் விளம்பரம் செய்திருப்பார்கள், என்று ஒரு விநாடி யோசித்தவள், மறுவிநாடியே மேனகா கார் வாங்கியிருப்பதை நினைவு கூர்ந்தாள்.

"இங்கே டிரைவர் யாரும் தேவையில்லை!" அவள் தலையாட்டி மறுப்புத் தெரிவித்தாள்.

"கர்னல் சிவப்பிரசாத் சாரோட வீடு இதுதானே? இந்த விலாசத்தைத்தான் பேப்பர்ல பார்த்தேன்!". வந்தவன் கூறினான்.

வந்திருப்பவனின் பார்வையும் பேச்சும் அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அது, அவளுள் எழுந்த பொறாமை. வந்திருக்கும் இளைஞன் பார்வைக்கு அழகாக இருந்தான். ஒரு சினிமா நடிகன் மேக்கப் செய்தால் எப்படி இருப்பானோ, இவன் மேக்கப் செய்யாமலே அப்படி இருந்தான். உடம்பும் திடகாத்திரமாக இருந்தது.

காக்கி நிற டெரிகாட்டன் சட்டையும் சற்றுக் கசங்கிய வெள்ளை வேஷ்டியும் உடுத்தியிருந்தான். இரண்டும் பழைய



துணிகளாக இருந்தன. இருப்பினும் அந்த உடை அவன் உடலின் வாளிப்பை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இப்படிப்பட்ட அழகான, திடகாத்திரனான ஓர் இளைஞன் மேனகாவின் டிரைவராக இருப்பதை வாசந்தி விரும்பவில்லை.

அந்த நேரம் யதேச்சையாக மேனகா அங்கு வந்தாள்.

"மேனகா, உன்னைத்தான் பார்க்க வந்திருக்கிறார் போலிருக்கு. டிரைவர்னு நெனைக்கிறேன்!" வாசந்தி கூறினாள்.

முதல் பார்வையிலேயே அந்த டிரைவரை மேனகாவுக்கு பிடித்துப் போனது. உடற்பயிற்சியை விடாமல் மேற்கொள்ளும் ஒருவன் என்பது உடம்பைப் பார்த்தவுடனேயே தெரிந்தது.

கட்டான, வலுவேறிய உடம்பு.

"வாங்க!" மேனகா அவனை வீட்டுக்குள் அழைத்தாள்.

ஆனால், வாசந்திக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது. முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொண்டு வீட்டுக்குள் திரும்பிப் போனாள்.

"உங்க லைசென்ஸ், அனுபவ சர்ட்டிபிகேட், சிபாரிசு லெட்டர் ஏதாவது?" அவள் கேட்டாள்.

அவன் எல்லாவற்றுக்குமாக ஒரு வெள்ளைநிற உறையை மேனகாவிடம் நீட்டினான்.

உறையைப் பிரித்து உள்ளேயிருந்த காகிதத்தை விரித்த மேனகா சட்டென்று அந்த இளைஞனின் முகத்தைப் பார்த்தாள்.

அந்தக் கடிதம், அந்தப் பகுதி டி.எஸ்.பி.-யால் எழுதப்பட்டிருந்தது.

'இந்தக் கடிதம் கொண்டுவரும் நபரை டிரைவராக வைத்துக் கொள்ளுங்கள்!' என்று கேட்டுக் கொண்டது கடிதம். மேற்கொண்டு, 'ஓட்டல் போன்ற பொது இடங்களுக்கு அனாவசியமாகப் போக வேண்டாம்!' என்று எச்சரிக்கையும் செய்தது.

கடிதத்தைப் படித்தபோது மேனகா ஒரு கணம் பதறவே செய்தாள்.

சட்டென்று அவள் மனத்தில் சிலநாட்களுக்கு முன் ஓட்டல் அறையில் இரண்டு பேருடன் அருண் மோதிய சம்பவம் நினைவுக்கு வந்தது. அப்போது, டி.எஸ்.பி. பக்கத்து அறையில் இருப்பதாக போட்டோகிராபர் ஜோஸ் குறிப்பிட்டதையும் நினைத்துப் பார்த்தாள்.

"டி.எஸ்.பி. சாரை உங்களுக்கு எப்படித் தெரியும்?" மேனகா கேட்டாள்.

"நான் கொஞ்சநாள் அவருடைய தனி டிரைவரா வேலை செய்திருக்கிறேன்."

அவனுடைய டிரைவிங் லைசென்ஸை வாங்கிப் பார்த்தாள். அதில் ஒட்டப்பட்டிருந்த போட்டோவையும் எதிரில் இருக்கும் இளைஞனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

பெயரைப் பார்த்தாள்.

ரதீஷ்!- இந்தப் பெயரில் ஒரு சினிமா நடிகர் இருப்பது நினைவுக்கு வந்தது.

"நான் என்னோட நிலைமையைச் சொல்லட்டுமா? என்னால அதிகச்சம்பளம் தரமுடியாது. அதே மாதிரி உங்களுக்கு அதிகமான வேலையும் இருக்காது. இரவு நேரங்களில் நான் எங்காவது வெளியே போவதானால் என்கூட துணைக்கு வரணும்."

"சரிங்க!"

"சில நேரம் - அது ரொம்ப அபூர்வம் - வெளியூர் போக வேண்டி இருக்கலாம். ஞாயிற்றுக்கிழமை விடுமுறைதான்!"

"ஒரே ஒரு வேண்டுகோள்!"

"சொல்லுங்க!"



"உங்களோட அன்றாட வேலைங்க முடிஞ்ச பிறகு, தேவைப்பட்டால், இந்த காரை நான் சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்த அனுமதி வேண்டும்."

"அதுக்கு... அப்புறம் சொல்றேன்!"

"உங்க பேரு மேடம்?"

"மேனகா!"

"ஆளுக்கும் பேருக்கும் பொருத்தமா இருக்கு!"

சட்டென்று அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டாலும், அவனது மென்மையான நடவடிக்கையும் பேச்சும் அவனை எதிர்த்துப் பேச அனுமதிக்கவில்லை.

"என்னைப் பத்தி ஒரு சில வார்த்தைகள் சொல்லலாமுங்களா? நான் உங்களை மேனகான்னு கூப்பிடலாம் இல்லையா? நான் எம்.ஏ. எக்னாமிக்ஸ். அதுவும் "ஃபர்ஸ்ட் கிளாஸ். வேற எதுவும் வேலை கிடைக்கலையான்னு நீங்க கேட்கலாம். இந்த காலத்துல வேலைக்குப் போக, வேலையைத் தவிர வேற என்னவெல்லாம் செய்ய வேண்டி இருக்குன்னு உங்களுக்கும் தெரியும். ஒரு காலேஜில வேலை கிடைக்கணும்னா ஐம்பதாயிரம் வேணும்கிறாங்க. அவ்வளவு பணம் கையில இருந்தா அதை ஏதாவது ஒரு கம்பெனியில டெபாஸிட் பண்ணிட்டு நிம்மதியாத் துண்டு விரிச்சுப்படுத்திடலாம். மாதாந்தோறும் ஒரு சம்பளம் மாதிரி கிடைக்கலாம். ஆனால் மொத்தமா இது மாதிரி கொட்டிக் குடுக்க யார்கிட்டப் பணம் இருக்கு? என்னை மாதிரி ஆயிரக் கணக்குல இளைஞருங்க பட்டங்களைக் கையில வெச்சுட்டு அலையறாங்க. கல்லூரிங்க எல்லாம் வெறும் பட்டதாரிகளை உருவாக்குற தொழிற்சாலைகளா மாறிட்டு வருது!"

"அதுக்கு நீங்க என்கிட்ட ஏன் கோபப்படுறீங்க?" மேனகா கேட்டாள்.

"உண்மைதான். மன்னிச்சுடுங்க! என் வயித்தெரிச்சலைப்பத்தி நினைச்சப்போ எமோஷனாயிட்டேன். என்னை மாதிரி ஒருத்தனை நீங்களே நினைச்சுப் பாருங்க. இந்த மாதிரி வேலைக்கா வரணும்?"

"நல்லாவே பேசுறீங்க?"

"படிக்கும்போது நிறைய நாடகங்கள்ல நடிச்சிருக்கிறேன்!"

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் மேனகா சட்டென்று துணுக்குற்றாள். தன்னுடைய உண்மை நிலையை இந்த மனிதன் தெரிந்து கொண்டானோ என்னவோ என்றுகூட நினைத்தாள்.

"நீங்கள் யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. நான் உங்களுக்கு காலேஜில வேலை வாங்கித் தரமுடியாது. நாடக சந்தர்ப்பமும் வாங்கித்தர முடியாது. என் வேலைங்க கெட்டுப் போகாம நீங்க கார் ஓட்டணும்கிறதுதான் என்னோட நிபந்தனை!"

ரதீஷின் பேச்சும் நடவடிக்கையும் மேனகாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. மனசுக்குள் எதையும் மறைத்து வைக்காமல், வெளிப்படையாகப் பேசும் இயல்பு உள்ளவன் என்பது தெரிந்தது.

"அப்படியானா டி.எஸ்.பி. சார்கிட்ட நான் என்ன பதிலைச் சொல்றது?"

"நீங்க அடிக்கடி அவர் பெயரைச் சொல்றதைப் பார்த்தா, என்னைப் பயமுறுத்த முயற்சி பண்றதாத் தோணுது!"

"போய்ட்டு வந்து என்ன நடந்ததுங்கிறதை உடனே எனக்குத் தெரியப்படுத்தணும்னு சொல்லியிருக்கிறார். ஒருவேளை இங்கே வேலை கிடைக்கலேன்னா, வேற இடத்துக்கு என்னை அனுப்புறதுகூட அவர் நோக்கமா இருக்கலாம்." பேசியபடி தன்னுடைய சட்டைப் பையிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் வைத்து, நெருப்பு பற்ற வைத்தான்.

இதைப் பார்த்ததும் மேனகாவால் தனது கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. டி.எஸ்.பி - யின் கடிதம் இருக்கும் தைரியத்தினால்தான் இந்த இளைஞன் இப்படி நடந்து கொள்கிறான் என்பது தெரிந்தது.



"இன்னொரு விஷயம்" ரதீஷ் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியபடி மேனகாவின் பக்கமாகத் திரும்பினான்.

"திரும்பவும் நிபந்தனைகளா?"

"வேலை கிடைச்சாச்சு. அதனால இந்த விஷயத்தையும் சொல்லிடுறேன். இப்போ நான் போட்டிருக்கிறது ஒரு டாக்ஸி டிரைவரோட டிரஸ் மாதிரி இருக்குது. உங்களுக்காக நான் கார் ஓட்டும்போது இதே டிரஸ்ல வந்தா நல்லா இருக்காதுன்னு பார்க்குறேன்."

"வேலை குடுத்திட்டதாவே பேசுறீங்களே, தன்னம்பிக்கை அதிகமோ?"

"வேலைதான் உறுதியாயிடுச்சே. டி.எஸ்.பி-யோட லெட்டர் இருக்கே. உங்களுக்கு என்னைப் பிடிக்கலேன்னா, நான் சிகரெட் பிடிக்கும்போதே தடைசொல்லியிருப்பீங்க!"

"டிரஸ்ஸெல்லாம் உங்க விருப்பப்படியே இருக்கலாம். தப்பில்லை!"

"அப்ப நான் கிளம்பறேன். நாளைக்கு எப்போ வரணும்?"

"காலையில ஒன்பதரைக்கு வாங்க!"

"நாளைக்கு காலையில ஒன்பது இருபத்தொன்பதுக்கு இங்கே இருப்பேன். சம்பளத்தைப் பத்தி இதுவரைக்கும் நீங்க எதுவும் சொல்லலை. பரவாயில்லை... உங்களுக்கு விருப்பமானதைக் குடுங்க. வரட்டுமுங்களா" சிறியதாகிப்போன சிகரெட் துண்டை ஆஷ்டிரேயில் போட்டு அணைத்த ரதீஷ் அங்கிருந்து கிளம்பினான்.

அவள், அவன் போவதையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

'வித்தியாசமான ஓர் இளைஞன்!' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"என்ன, டிரைவரை அப்பாயின்ட் பண்ணியாச்சா?" படிகளில் இறங்கியவாறே வாசந்தி கேட்டாள்.

"வேற வழியில்லை. பெரிய இடத்து சிபாரிசோட வந்திருந்தார்."

"காதில விழுந்தது. டி.எஸ்.பி - யோட ரெக்கமண்டேஷன்னு. ஒருவேளை போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவனோ என்னவோ. இந்தக் காலத்துல யாரைத்தான் நம்ப முடியுது?"

"எதுக்கும் அப்பாகிட்ட நீ ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் மேனகா!"

"இந்த மாதிரிச் சின்ன விஷயத்துக்கெல்லாம் அவரை எதுக்குத் தொந்தரவு பண்ணணும்னு நினைச்சுத்தான் கேக்கலை. இத்தனை வருஷமா அப்பாவா என்னைக் கவனிச்சுக்கிட்டார்? அம்மா இருந்ததால நானே தீர்மானம் எடுக்கும்படியா வளர்த்துட்டாங்க."

"அந்த ஆளுக்கு வீட்டு வேலையெல்லாம் தெரியுமோ என்னவோ?"

"என்னை ஆழம் பார்க்குறீங்களா?"

"இல்லம்மா, அதையும் நீயேதான் உன் வாயாலே சொல்லியிருந்தே. சமையல், டிரைவிங் ரெண்டும் தெரிஞ்ச ஓர் ஆள் வேணும்னு. அதனாலதான் கேட்டேன்."

அன்று மேனகாவே அலுவலகத்துக்கு கார் ஓட்டிக்கொண்டு போனாள். அவள் வந்துவிட்டாள் என்பது தெரிந்ததும் கர்னல் உடனே அவளைத் தனது கேபினுக்கு வருமாறு அழைத்தார்.

"மேனகா உட்காரும்மா!"

உட்கார்ந்தாள்.

"ஒரு முக்கியமான விஷயத்தை நான் சொல்லிடுறேன். என்கிட்ட வந்து தேவிகாவோட பொண்ணு மேனகா நான்தான்னு



சொன்னே. நான் நம்பிட்டேன். அதுக்கு ஆதாரமா நான் தேவிகாவுக்குப் பரிசாகக் கொடுத்த லாக்கெட்டை செயினோட குடுத்தே. அதில எனக்கு எந்தவிதமான மறுப்பும் கிடையாது. நீ என் மகளா இருந்தா சில விஷயங்கள்ல என்னை அனுசரிச்சே ஆகணும்!"

"நான் உங்களை அனுசரிக்கலேன்னு எதை வெச்சு சொல்றீங்க?"

"கார் வாங்க பணம் கேட்டே, கொடுத்தேன் உன்னோட சொந்த உபயோகத்துக்காக ஐம்பதாயிரம் வேணும்னு சொன்ன, அதையும் செஞ்சேன். இவ்வளவெல்லாம் செஞ்ச நான் ஒரு டிரைவரை உனக்காக நியமிக்க முடியாதா?"

"அப்பா, நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சுக்கக்கூடாது. உங்களை இதுக்கெல்லாம் தொல்லைப்படுத்த வேண்டாம்னுதான். பேப்பர்ல விளம்பரம் கொடுத்தேன். டி.எஸ்.பி.கிட்டேயிருந்து சிபாரிசுக் கடிதத்தோட ஒருத்தர் வந்தார். நான் என்ன சொல்லி அந்த ஆளைத் தட்டிக் கழிக்கிறது? அதனாலதான் வேலைக்கு எடுத்துக்கிட்டேன்!"

"என்கிட்டக் கேட்காமச் செஞ்சதாலதானே இவ்வளவும்! வேலைக்கு எடுத்துக்கிட்டதால தப்பு சொல்லல. கொஞ்ச நாளைக்குப் பிறகு ஏதாவது காரணம் சொல்லி அந்த டிரைவரை அனுப்பிச்சுடு. டி.எஸ்.பி - யோட நமக்கு எந்தவிதமான தொடர்பும் கூடாது!"

"இப்பத்தானே சொன்னீங்க. சரியா ஒரு வாரம்... ஒரே வாரத்துக்குள்ள அந்த ஆளை அனுப்பிடுறேன். வீணா உங்களை வருத்தப்பட விடமாட்டேன்."

மறுநாள் காலையில் ஒன்பது இருபத்தைந்துக்கே ரதீஷ் வீட்டுக்கு வந்துவிட்டான். கறுப்புநிற பேண்ட், வெள்ளை ஷர்ட் அணிந்திருந்தான். இடது கையில் ராடோ வாட்ச், வலது கையில் ஏறத்தாழ ஐந்து சவரன் பெறுமானமுள்ள பிரேஸ்லெட். கழுத்திலும்

ஏறத்தாழ அதே எடையுள்ள ஒரு செயின். கண்களில் உயர்தர கூலிங்கிளாஸ்.

இந்த உருவத்தைப் பார்த்து, என்ன சொல்வதென்று தெரியாமல் மேனகா ஒரு கணம் குழம்பினாள்.

## 13

அவள் சற்றுநேரம் அவன் முகத்தையே ஊன்றிப் பார்த்தாள்.

ரதீஷ்ஃம் நின்ற நிலையிலிருந்து மாறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன இப்படிப் பார்க்குறீங்க?" அவள் கேட்டாள்.

"என்கிட்டயா கேட்டீங்க? என்னை எதுக்கு இவங்க இப்பிடிப் பார்க்குறாங்கன்னு யோசிச்சிட்டிருக்கிறேன் நான்."

"இல்லை வந்திருக்கிறவர் டிரைவர்தானா, வேற ஏதாவது ஆபீஸராங்கிற சந்தேகத்துல மூழ்கிப்போயிட்டேன்" சிரித்தபடியே பேசினாள்.

"உங்க சந்தேகம் தீர்ந்துடுச்சா?"

"முழுக்கத் தீர்ந்துடுச்சுன்னு சொல்ல முடியாது. இருந்தாலும் நீங்க உங்க வேலையைத் தொடங்கலாம். இந்தாங்க கார் சாவி!" அவனிடம் கொடுத்தாள்.

ரதீஷ் சாவி வளையத்துக்குள் விரலை நுழைத்துச் சாவியைச் சுழற்றியபடியே காரை நெருங்கினான்.

காரின் கதவுக்குரிய சாவியைக் கண்டுபிடித்து திறந்தான். மேனகா உண்மையில் வியப்பு அடைந்தாள். வளையத்தில் நான்கு சாவிகள் இருந்தன. சுவிட்ச் கீ, டாஷ் போர்டு சாவி, கதவு மற்றும் டிக்கியின் சாவி. ஒரு பார்வையிலேயே சாவியைச் சரியாகக் கண்டுபிடித்த டிரைவரை மனத்துள் பாராட்டவே செய்தாள்.



முன்புறக் கதவைத் திறந்து டிரைவர் ஸீட்டில் அமர்ந்தவன் பின்புறக் கதவின் லாக்கை எடுத்து விட்டான்.

அவனை ஒரு தடவை பார்த்தவாறே காருக்குள் ஏறி உட்கார்ந்தாள் மேனகா.

மிகவும் பழக்கமானவனைப்போல் சுவிட்ச் கீயை எடுத்து காரை ஸ்டார்ட் செய்தான்.

"நான் போக வேண்டிய இடம்...?" அவள் முடிப்பதற்குள் குறுக்கிட்டான்.

"எனக்குத் தெரியும்!"

கார், கேட்டை கடந்து ரோட்டுக்கு வந்தது.

"பரவாயில்லை, நீங்க ரொம்ப விஷயங்களைத் தெரிஞ்சுவச்சிருக்கீங்க!" அவள் பாராட்டினாள்.

"நான் உண்மையிலேயே ஒரு டிரைவர்தான்கிறது புரிஞ்சிடுச்சுங்களா?"

"வண்டியை ஸ்டார்ட் செஞ்ச உடனேயே அது புரிஞ்சிடுச்சு!"

"அப்புறம்... சொல்லுங்க!"

"நான் போக வேண்டிய இடத்தை எப்படி இவ்வளவு சரியா தெரிஞ்சுக்கிட்டீங்க!"

"என்னை மாதிரி ஒருத்தனுக்கு அதெல்லாம் கஷ்டமான விஷயமே இல்லை!"

"ஏன்?"

"என்னை மாதிரி நபர்கள் ஒரு இடத்துல வேலை கிடைச்சா, அந்த இடத்தோட சுற்றுப்புறச் சூழல், நடவடிக்கைகளைப் பத்தி உடனே தெரிஞ்சுக்குவோம். இல்லேன்னா சிலசமயம் மறுநாளேகூட சண்டைபோட்டு வேலையை விட வேண்டியிருக்கும்!"

கார் ஓடிக் கொண்டிருந்தது.

சிவப்பிரசாத் ஃபைனான்சின் முன்பாக கார் வந்து நின்றது.

"மேற்கொண்டு நான் என்ன செய்யணும்?" ரதீஷ் கேட்டான்.

"அதெல்லாம்கூட நான் சொல்லாமலே உங்களுக்கு இந்நேரம் தெரிஞ்சிருக்குமே!" கேலிக்குரலில் கேட்டாள் மேனகா.

"எனக்குத் தெரிஞ்சு வேலை எதுவும் இல்லை. காரை எடுத்துட்டு ஒரு சுத்து சுத்திட்டு வருவேன்!"

"ஓகே நீங்க போகலாம். சரியா ஒரு மணிக்கு வந்தாப் போதும்!"

"டாண்ணு வந்திடுறேன்!"

மேனகா அலுவலகத்தில் நுழைந்து தனது இருக்கைக்கு வந்தாள்.

சற்று நேரத்தில் சிவப்பிரசாத் அவளை அழைத்தார். அவரது கேபினை நோக்கி நடந்தாள் மேனகா.

"உட்காரும்மா!" கையைச் சுட்டிக் காட்டினார்.

அமர்ந்தாள்.

"ஒரு முக்கியமான விஷயத்துக்காக உன்னைக் கூப்பிட்டிருக்கேன்." பேச்சைத் தொடங்கினார்.

அவள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நீ என் மகள்தான். அதில எனக்கு எந்த விதமான சந்தேகமோ குழப்பமோ கிடையாது. அதே மாதிரி இந்த ஆபீஸில வேலை பார்க்கிறதிலயும் எனக்கு எந்தவிதமான கருத்துவேறுபாடும் கிடையாது. நீ சின்னப் பெண். நீ விரும்பினா வீட்டிலேயேகூட உட்கார்ந்து பொழுது போக்கலாம். அது உன் விருப்பம். உனக்கு எப்ப, எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும்



நான் தர்றேன். ஒரே ஒரு யோசனை, என்னை எதுக்காகவும் தொந்தரவு செய்யக்கூடாது. புரிஞ்சுதா?"

"இதுவரைக்கும் நான் உங்களுக்கு எந்தத் தொல்லையும் கொடுத்ததா தோணலியே?"

"அப்படின்னு நீ நெனைக்கிறே? உனக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னு எனக்குத் தெரியலை."

"நான் இந்த ஆபீஸுக்குள்ள இருக்கிறதை நீங்க ஒரு தொல்லையா நினைக்கிறீங்களா அப்பா?"

"நான்தான் சொன்னேனே... உனக்கு எப்படிப் புரியவைக்கிறதுன்னு தெரியலே!"

"இங்கே எத்தனையோ பெண்கள் வேலை செய்யிறாங்க. நானும் அவங்கள்ல ஒருத்தியா இங்கே வேலை செய்யிறதுல என்ன தப்பு?"

"ஒரு வித்தியாசத்தை நீ முதல்ல தெரிஞ்சுக்கணும். அவங்க பணம் சம்பாதிக்கணும்கிறதுக்காக உழைக்கிறாங்க. உன் நிலைமை அப்படியில்லை."

"அப்போ எனக்கும் ஒரு சம்பளத்தை நிர்ணயம் பண்ணுங்க!"

"நான் சொல்றதைக் கேளு. எல்லாத்துக்கும் பிடிவாதம் பிடிக்கக்கூடாது. சில விஷயங்கள்ல என்னை அனுசரிச்சுப் போகலாமில்லையா?"

"சரி அப்பா. கடைசியா நானே ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். ஒரு மாசம் நான் இங்கே வேலை செஞ்சுக்கிறேன். ஒரு டிரெய்னிங்னு நெனைச்சுக்கங்க. பிறகு வரலை!"

கர்னல் சிவப்பிரசாத்தின் நெற்றியில் சுருக்கங்கள் உயர்ந்தன. அவர் விழிகள் பளபளத்தன. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்ததைப்போல் அவர் முகம் பிரகாசமடைந்தது.

"சரி, உன்னோட விருப்பத்துக்குச் சம்மதிக்கிறேன்."

அதன்பிறகு எதுவும் பேசாமல் மேனகா அங்கிருந்து புறப்பட்டாள்.

சிவப்பிரசாத் தனது சிகார் பைப்புக்குத் தீ கொடுத்தார்.

அவர் மனம் ஒருவித நிம்மதியற்ற நிலையில் உழல்வதாகத் தெரிந்தது. இதுவரை ஏற்படாத பயஉணர்வு மெதுவாக அவருள் தலைதூக்கத் தொடங்கியது. ஏதோ ஒரு விபரீதம் ஆரம்பமகியிருக்கிறது. அது எங்கிருந்து, எப்படி வளர்கிறது என்பது தெரியவில்லை. இல்லாவிட்டால் இந்த வயதில்... சின்னப் பெண் ஒருத்தி வந்து தன்னை வெற்றிகொள்ள முயல்வாளா?

தன் பலவீனத்தைத் தெரிந்து அவள், சரியாகத் தட்டுகிறாள்.

தேவிகாவை தான் விரும்பியது உண்மைதான். அவளிடம் வரம்புமீறி நடந்துகொண்டதும் உண்மைதான். வாழ்க்கையில் முதல் தடவையாக ஒரு கொலை முயற்சியை நடத்தியதும் அவளிடம்தான். எல்லாமே உண்மை. எந்தவித பொய்யுமில்லை. ஆனால், பின்னாளில் அந்தப் பாவம் ஒன்றுதிரண்டு இப்படி மனித வடிவம் பூண்டு தன்னை வெற்றி கொள்ளும் நோக்கில், கச்சை கட்டிப் புறப்படும் அளவுக்கு வரும் என்பதை அவர் எதிர்பார்க்கவே இல்லைதான்!

அதற்குப் பிந்தைய வாழ்க்கை என்பது தன் மனம் போனபடிதான். தடையாகத் தனக்கு முன்னால் தென்பட்டவர்களையெல்லாம் தொலைத்துக் கட்டியிருக்கிறோம். வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகச் செய்யக்கூடாத எதையெல்லாமோ செய்திருக்கிறோம்- செய்து கொண்டுமிருக்கிறோம்.

ஆனால், இப்போது எழுந்திருப்பது போன்ற ஒரு சிக்கல் ஒரு போதும் எழுந்ததில்லை.

உண்மையிலேயே வந்திருப்பவள் தேவிகாவின் மகள்தானா? அல்லது, தன்னை வீழ்த்துவதற்காக யாராவது திட்டமிட்டு



ஏவியிருக்கிற ஆயுதமா? சிவப்பிரசாத், சிந்தனைகளின் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டார்.

காலிங்பெல்லை அவர் விரல் தொட்டது. சற்று நேரத்தில் பியூன் வந்து சேர்ந்தான்.

"மாதவனை வரச்சொல்லுப்பா!" சிவப்பிரசாத் கூறினார்.

மாதவன் வந்து சேர்ந்தான்.

"சார் கூப்பிட்டீங்களாமே!"

"உட்காருங்க... முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேச வேண்டியிருக்கு!"

"என்ன விஷயம் சார், யாரையாவது...?" மாதவன் பேண்டின் பாக்கெட்டுக்குள் கைவிட்டவாறே கேட்டான்.

"பயப்படாதீங்க... அவ்வளவு பெரிய பிரச்சினையெல்லாம் கிடையாது."

"நம்மளோட தொழிலைப் பாதிக்குற மாதிரியான செய்தி ஏதாவதா சார்?"

"ஏறத்தாழ அதுதான்... ரொம்பச் சின்னது!"

"நான் ஏதாவது செய்யணுங்களா?"

"எனக்குள்ள ஏராளமான சந்தேகங்கள். புதுசா வந்திருக்கிறாளே ஒரு பொண்ணு, அவளைப் பத்தின விவரங்களை சரி பார்க்கணும்!"

"யார் சார் அந்தப் பொண்ணு?"

"என் மகளேதான்!"

"சார், உண்மையிலேயே உங்க மகள்தானா? நான் தெரியாம ஏதாவது தவறாப் பேசியிருந்தா மன்னிச்சிடுங்க" மாதவன் பரபரப்பானான்.

"மாதவன் இதுவரைக்கும் நீங்க அப்படி எதுவும் செய்யலை. உங்ககிட்ட ஒரு முக்கியமான வேலையை ஒப்படைக்க விரும்புறேன்" சிவப்பிரசாத் பைப்பை எடுத்து உதட்டில் பொருத்திக் கொண்டார்.

அவர் கண்மணிகள் பளபளத்தன.

நெற்றியில் சுளிவுகள் உயர்ந்து தாழ்ந்தன. ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்ததுபோல் அவர் முகம் இறுக்கமடைந்தது.

"என் மகளைக் கவனிக்க வேண்டியது என் கடமையாயிற்றே" சற்று நேர மௌனத்துக்குப் பிறகு அவர் பேசினார்.

"அதை யாரும் மறுக்க முடியாது!" மாதவன் ஒப்புக் கொண்டான்.

"நீங்க அவளை கவனமாகக் கண்காணிக்கணும். அவளைத் தேடி யாரெல்லாம் வர்றாங்க. அவ எங்கேயெல்லாம் போறா, யாரையெல்லாம் சந்திக்கிறா... இதெல்லாம்... அப்பப்போ எனக்குத் தெரிஞ்சாகணும்!"

"கவனிச்சுக்கிறேன் சார்!"

"உங்களால அது முடியும்னு தெரிஞ்சதாலதான் ஒப்படைக்கிறேன்."

"உங்களோட தேவை என்னவா இருந்தாலும் என்னால முடிந்த உயர்ந்தபட்ச அளவுக்கு நான் உதவுறேன் சார்!"

"உங்களால முடிஞ்ச அளவுங்கிறதெல்லாம் தேவைப்படாது. தேவைப்பட்டா ரெண்டு அல்லது மூணு பேரை பலி கொடுக்க வேண்டி இருக்கலாம்"

"புரிஞ்சிடுச்சு!"

"என்ன புரிஞ்சுக்கிட்டீங்க?"

"உங்க நோக்கத்தை... உங்க மகள் சம்பந்தப்பட்ட நபர்களை நான் கவனமாப் பார்க்கணும்!"



"அதேதான். இப்போ புதுசா ஒரு டிரைவர் வந்து சேர்ந்திருக்கிறான். அவனையும் உங்க கணக்குல சேர்த்துக்கங்க! போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆளாயிருக்கலாம்னு தோணுது. என்ன நோக்கத்துல, எதுக்காக உள்ளே நுழைஞ்சிருக்கானோ? எச்சரிக்கை!"

"அவனை நானும் கவனிச்சேன். அவன்கிட்ட ஏதோ ஒரு தப்பு இருக்கிறதாத் தோணுது!"

"அதனாலதான் அந்தப் பொறுப்பை உங்ககிட்ட விட்டிருக்கிறேன்."

"பார்த்துக்கிறேன் சார்!"

மாதவன் அறையிலிருந்து வெளியேறினான்.

சரியாக ஒரு மணிக்கு கீழே கார் வந்து நின்றது.

மேனகா காரை நெருங்கியதும், ரதீஷ் கதவைத் திறந்துவிட்டான்.

"இப்போ நான் எங்கே போகப் போறேன்னு உங்களுக்கு தெரியுமா?" மேனகா கேலியாகவே கேட்டாள்.

"சொல்லவே தேவையில்லை. நீங்க நினைக்கிற இடத்துலயே கொண்டுபோய் விட்டுர்றேன்!"

"இந்தத் தடவை உங்க கணிப்பு சரியா இருந்தா, உங்களுக்கு ஒரு பரிசே தரப்போறேன்" அவள் குரலில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

கார் புறப்பட்டது. அங்கிருந்து கிளம்பிய கார் நகரின் மையப்பகுதியை நோக்கி விரைந்தது.

ஓட்டல் டிலைட்டுக்கு முன்னால் கார் நின்றது.

"இடம் இதுதானே?" ரதீஷ் கேட்டான்.

மேனகா வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"சீக்கிரமா இறங்குங்க!'' ரதீஷ் காரின் கதவைத் திறந்துவிட்டான்.

"நீங்க இன்னும் சாப்பிடலையே?"

மேனகா கேட்டாள்.

"இப்போதைக்கு வேண்டாம். நான் இங்கேயே காத்திருப்பேன்."

"உடனே வந்துடுறேன்." மேனகா ஓட்டலுக்குள் நுழைந்தாள்.

மேனகா ஓட்டலிலிருந்து சாப்பிட்டபிறகு வெளியே வந்தாள்.

காரின் அருகே ரதீஷ் இல்லை.

"சிவப்பிரசாத் ஃபைனான்ஸுக்குத்தானே போகணும்...ம் காரில் ஏறிக்கங்க." சாவி வளையத்தை ஆட்காட்டி விரலில் போட்டுச் சுழற்றியபடியே முன்பின் தெரியாத ஒருவன் பேசினான்.

மேனகா ஒரு தடவை அவனை ஏறிட்டாள்.

## 14

முன்பின் அறிமுகமில்லாத யாரோ ஒருவன் தனது காரின் சாவியைக் கையில் வைத்துக்கொண்டு நிற்பதைக் கவனித்தும் மேனகாவுக்குள் சந்தேகம் தோன்றியது.

"நீங்க யார்?" கேட்டாள்.

"ரதீஷ் சொல்லியனுப்பினார்!"

"அவர் எங்கே?"

"ரொம்ப அவசியமா, அவசரமா ஒரு இடம் வரைக்கும் போறதாச் சொல்லி, சாவியை என்கிட்டக் குடுத்துட்டுப் போயிருக்கார். ரதீஷ் அப்படியொன்றும் விளையாட்டுத்தனமாப் போகலை. நானும் வலிய வந்து இதை ஏத்துக்கவும் இல்லை. யாரோ ஒரு பொண்ணு ஒரு கைக்குழந்தையோட வந்து என்னமோ சொல்லி அவரை அழைச்சுக்கிட்டுப் போயிட்டா."



"அப்ப ரதீஷ் இனிமேல் வரமாட்டாரா?"

"கண்டிப்பா சாயந்திரத்துக்குள்ள வருவார்."

பின்புறக் கதவைக் திறந்துவிட்டான். மேனகா காரில் ஏறி உட்கார்ந்தாள். கார் முன்னோக்கி நகர்ந்தது.

வெயில் அதிகமாக இருந்ததால் காரின் கருமையான கண்ணாடிகள் ஏற்றி விடப்பட்டிருந்தன.

சட்டென்று டாக்கி டவல் ஒன்று மேனகாவின் முகத்தில் வந்து விழுந்தது. அவள் அதை தட்டி ஒதுக்க முற்பட்டபோது யாரோ அவள் முகத்துடன் டவலைச் சேர்த்து அழுத்தியதாகத் தெரிந்தது. தலைசுற்றுவது போல் தோன்றியது. சற்று நேரத்துக்குள் மயங்கிச் சரிந்தாள்.

கார் நகர மையத்திலிருந்து வடக்குத் திசையில் நகர்ந்தது. சிவப்பிரசாத்தின் ஃபைனான்ஸ் நிறுவனத்தை ஒட்டியவாறே இடதுபுறம் திரும்பி, திரும்பவும் வடக்குத் திசையில் பாய்ந்தது.

ஒரு பழைய கட்டடத்தின் கேட்டைக் கடந்து கார் நின்றது. காரின் சத்தம் கேட்டவுடன் மூன்று பேர் அந்தக் கட்டடத்துக்குள் இருந்து வெளியே வந்தனர். வந்தவர்கள் ஒரு பூ மாதிரி மேனகாவை எடுத்துக்கொண்டு கட்டடத்துக்குள் மறைந்தார்கள்.

"அவளை அப்படியே கட்டிலில் போடு. மயக்கம் தெளியட்டும்!"

"யார் இந்தப் பொண்ணு?"- அங்கிருந்த வயதானவர் கேட்டார்.

"அங்கிள் நீங்கள் சொன்ன பெண்ணேதான்." கார் ஓட்டி வந்தவன் பேசினான்.

விக்டர்தான் அந்தப் பெரியவர். அவரது இருப்பிடம்தான் அந்தக் கட்டடம். நகரத்தை ஒட்டியே இருந்தாலும் அது

அவ்வளவு கலபத்தில் மற்றவர்களின் கண்களுக்குத் தட்டுப்படாது. நான்கு புறமும் இடிந்து சிதிலமாகியிருந்த ஒரு காம்பௌண்டுச்சுவர். துருப்பிடித்து ஏறத்தாழ இற்றுப்போனது போன்ற ஒரு கேட். இதற்குள் வெகு பத்திரமாக இருந்தது கட்டடம். முன் எப்போதோ அங்கு அரசாங்க அலுவலகம் ஒன்று இயங்கி வந்ததற்கு அடையாளமாக பெயர் மங்கிய, துருப்பிடித்த பழைய போர்டு ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது. அலுவலகம் அங்கிருந்து மாற்றப்பட்டாலும், போர்டு அந்த இடத்தில் ஒரு நினைவுச்சின்னமாகத் தங்கிவிட்டது.

"யாரு சுமனா இவளைக் கொண்டு வந்தவன்?" விக்டர் கேட்டார்.

"ஆமாங்க அங்கிள்!"

"அவனை என்ன செஞ்சே?"

"ஒரு சின்ன வேலை செஞ்சிருக்கிறேன்."

மேனகாவை ஓட்டலுக்குள் அனுப்பிவிட்டு வரவேற்புக் கௌண்டர் பக்கம் வந்தான் ரதீஷ். அப்போது போட்டோகிராபர் ஜோஸ்மார்ட்டின் படியையொட்டி நடப்பது தெரிந்தது. மேனகாவின் புகைப்படங்கள் மூன்று அவனிடம் இருப்பது ரதீஷுக்கும் தெரியும். எப்படியும் அதைத் கைப்பற்றிவிடுவதென்று தீர்மானித்த ரதீஷ், நேராக ஜோஸின் அறையை நோக்கி நடந்தான்.

அவனது அறைக்கதவைத் தட்டினான்.

கதவு உட்புறமாகத் திறந்தது.

"யார் நீங்க, என்ன வேணும்?" ஜோஸ்மார்ட்டின் கேட்டான்.

"என்னை உங்களுக்குத் தெரியுமே. கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்க. ஏற்கெனவே நாம ரெண்டு தடவை சந்திச்சிருக்கோம். ரெண்டு தடவையும் நீங்க தப்பிச்சிட்டீங்க."

"அப்பஎன்னா இந்தத் தடவை தப்பிக்க மாட்டேன்னா சொல்றீங்க?"



"அதையெல்லாம் அப்புறம் சாவகாசமா பேசிக்கலாம்."- ரதீஷ் அறைக்குள் நுழைந்தான்.

நேராக நாற்காலியின் அருகே வந்து அமர்ந்தான். சட்டைப்பையிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்திப் பற்ற வைத்தான்.

"இங்கேயே இருக்கப் போறது மாதிரித் தெரியுதே!" மார்ட்டின் கேட்டான்.

"வேலை இருக்கு. எனக்குத் தேவையான சில பொருள்கள் உங்ககிட்ட இருக்கு!"

"நான் உங்ககிட்டேயிருந்து அப்படி எதையும் வாங்கிக்கிட்டதா எனக்கு ஞாபகமில்லையே?"

"ஆமா... உங்க பதிலும் ஒரு வகையில சரிதான். ஆனா, எனக்கு வேண்டியவங்களோட சில பொருள்கள் உங்ககிட்டத் தங்கிப் போயிடுச்சு!"

"நீங்க இப்ப என்னவா இருக்கீங்க?"

"டிரைவராத்தான்!"

"இருந்தாலும் இப்போதைக்கு உங்களால என்னை ஒண்ணும் செய்ய முடியாதுங்கிறது தெரிஞ்சிருக்கும்!"

"அப்படின்னு யார் சொன்னது?"

சட்டென்று எழுந்த ரதீஷ், மார்ட்டினின் வயிற்றுப் பகுதியைக் கொத்தாகப் பிடித்து உயர்த்தினான்.

"அந்த நெகட்டிவ், போட்டோ, கேஸட் இதையெல்லாம் தந்துட முடியுமா?"- மார்ட்டினை அந்தரத்தில் தொங்கவிட்டபடி கேட்டான் ரதீஷ்.

"நெகட்டிவ்வா... எந்த நெகட்டிவ்?"

"ராகினிங்கிற நடிகையோட நெகட்டிவ்!"

"ஓகோ... அதுவா? கீழே விடுங்க சொல்றேன்" மார்ட்டின் கால்களை அந்தரத்தில் உதைத்துக் கொண்டான்.

ரதீஷ் அவனைக் கீழே போட்டான்.

"உங்களுக்கு எப்படி இது தெரியும்?"

"விளக்கமெல்லாம் பின்னால வரும். இப்ப அதை முதல்ல என் கையில குடு!"

"அதுக்கென்ன குடுத்திட்டாபோகுது!" மார்ட்டின் ஒப்புக்கொண்டான்.

"நான் இந்த சூட்கேஸைத் திறந்துக்கிறேன்." ஜோஸ் குனிந்து கட்டிலின் அடியிலிருந்த சூட்கேஜை எடுத்துக் கட்டிலின் மீது வைத்துத் திறந்தான்.

"இது அந்த ரோல்தான். இதிலதான் அந்தப்படங்கள் இருக்கு"- ஃபிலிம் சுருள் ஒன்றை எடுத்து ரதீஷிடம் சொடுத்தான்.

அதை வாங்கி விரித்துப் பார்த்தான்.

"கிட்டத்தட்ட நடுவில இருக்கும்... அப்போதான் அந்த விபரீதமே நடந்தது" மார்ட்டின் கூறினான்.

ரதீஷ் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே வந்தான். சட்டென்று சூட்கேஸிலிருந்து 'புரூட் ஸ்பிரே' எடுத்து ரதீஷின் முகத்தை நோக்கிப் பீய்ச்சினான்.

"ஏ... என்ன இது விளையாட்டு?" ரதீஷ் தடுமாறினான்.

"இது ஒரு ஸ்பிரே... ஆளை மயக்கம் போட வைக்கிறது!" ஜோஸ் சிரித்தபடி சொன்னான்.

ரதீஷ், மார்ட்டினைப் பிடிப்பதற்காகக் கையை நீட்டியபடி முன்னேறினான். ஆனால், முடியாமல் அப்படியே தரையில் கவிழ்ந்தான்.



"நெகட்டிவ்வா வேணும்?" என்று கேட்டபடி, ரதீஷின் கையிலிருந்த ஃபிலிம் சுருளை உருவி எடுத்தான் ஜோஸ். பிறகு அவனுடைய பேக்கட்டிலிருந்து காரின் சாவியை எடுத்தான்.

இன்டர்காமை நெருங்கி டயல் செய்தான். வரவேற்பு கௌண்டரில் இருந்தவளிடம், தன் நண்பர் சுமன் தன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தயவு செய்து அவரை ரூம் நம்பர் நூற்றி அறுபத்தேழுக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொண்டான்.

அவள் சொல்வதாக ஒப்புக்கொண்டாள்.

சற்று நேரத்துக்குள் சுமன், ஜோஸ்மார்ட்டினின் அறையை அடைந்தான்.

"என்னப்பா செய்யணும்?"- சுமன், அறையில் இருந்த கோலத்தைப் பார்த்தபடி கேட்டான்.

"சின்ன வேலைதான். கீழே ஒரு கார் நிக்குது. நம்பர் நாற்பத்தஞ்சு அம்பத்திநாலு. கார்கிட்டப் போய் நில்லு. ஒரு பொண்ணு வருவா. அன்னிக்கு நம்ம ஜானியைக் குத்திக் கொன்னாளே ஒருத்தி, அசப்பில அவமாதிரியே இருப்பா. அவளை நம்மளோட வழக்கமான இடத்துக்குக் கொண்டு போகணும். துணைக்கு இவனையும் கூட்டிட்டுபோ. இவன் பின் ஸீட்டுக்கு கீழே படுத்திருப்பான்."

அன்று அருணின் அறையில் சண்டை போட்ட வில்லி, குளியலறையிலிருந்து வெளியே வந்தான்.

ஸ்பிரே செய்யப்பட்ட டவலை ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டு அவனிடம் கொடுத்தான் ஜோஸ். "கார்ல கறுப்புக் கண்ணாடி இருக்கு. கச்சிதமா முடிச்சுட்டா, ஒரு பூச்சிபொட்டுக்குக்கூட விஷயம் தெரியாது!" ஜோஸ், வில்லியிடம் பிளாஸ்டிக் பையை நீட்டினான்.

மேனகாவைப் பத்திரமாகப் பாழடைந்த கட்டடத்துக்குக் கொண்டு வந்தனர்.

"ரதீஷ்ங்கிறவனுக்கு எப்பிடி இந்த விவரமெல்லாம் தெரிஞ்சது?" விக்டர் கேட்டார்.

"அருண்னு ஒரு பய இருக்கானே, அவனோட தோஸ்த்துதான் இவன்!"

"ரதீஷ், உண்மையில யார்?"

"நம்மளை மாதிரியே ஒரு கும்பலைச் சேர்ந்தவன்தான். பம்பாய், டெல்லின்னு அலைஞ்சிருக்கான். வேட்டையாடுறதுதான் அவன் வேலையும்!"

"அப்ப நல்லதாப் போச்சு. நம்மகூட சேர்த்துட்டா நமக்கு பிரயோஜனப்படுவானே!"

"அவனைச் சேர்த்துக்கிட்டா நம்ம குடுமி அவன் கையில் மாட்டிக்கும்"

"அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான்!"

"அங்கிள், இவளை என்ன பண்றது?"

"என்ன பண்றதுங்கிறதைப்பத்தி நீ எனக்கே கத்துக்குடுக்கப் போறியா? அவளை நான் பார்த்துக்கிறேன். முதல்ல அவ விழிக்கட்டும். உங்களுக்கெல்லாம் அவ உயிரைப்பத்திக் கவலை இல்லை. ஆனா அவ உயிரோட இருந்தாத்தான் எனக்கு லாபம். என் வேலை முடிஞ்சுட்டா, வழக்கம் போல உங்ககிட்ட விட்டுர்றேன்."

விக்டர் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தார்.

"வில்லி, நீ மட்டும் வாசல்லயே இரு. இல்லேன்னா எவனாவது சட்டுன்னு வந்துட்டா அப்புறம் நான் துப்பாக்கியை எடுத்து வீணா ரெண்டு மூணு தோட்டாவைச் செலவழிக்க வேண்டிவரும். இந்தக் கால்வேற சரியில்லையா, பழைய மாதிரி ஓடியாடிச் சண்டைபோட முடியாது?"- கைத்தடியை ஊன்றி எழுந்த



விக்டர், விஸ்கி பாட்டிலை எடுத்து, அதன் கழுத்தைத் திருகித் திறந்து வாய்க்குள் கவிழ்த்துக் கொண்டார்.

"என்ன அங்கிள்...?" வில்லி ஆவலுடன் அவரையே பார்த்தான்.

"அவசரப்படாதடா... இந்தா வாங்கிக்க!" மேலும் கொஞ்சத்தை வாயில் ஊற்றிக்கொண்டு பாட்டிலை அவனிடம் கொடுத்தார் தாத்தா விக்டர்!

மேனகா மயக்கத்திலிருந்தாள்.

"சரி, வெளியில போய் நின்னுக்க. நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிறேன். ராத்திரி ஜோஸை வரச்சொல்லு. இன்னிக்கு ஷூட்டிங் இருக்கும்."

விக்டர் சாய்வு நாற்காலியில் சரிந்து கண்ணை மூடினார்.

இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

அம்பாஸிடர் கார் ஒன்று அந்தக் கட்டடத்தின் முன்னால் வந்து நின்றது.

அதிலிருந்து ஜோஸ்மார்ட்டினும் சுமனும் இறங்கினார்கள்.

தொடர்ந்து லைட்டுகளும் காமிராவும் காரிலிருந்து இறக்கப்பட்டன.

## 15

"அங்கிள் நல்ல தூக்கத்துல இருப்பார்!" மார்ட்டின், சுமனிடம் சொன்னான்.

"காவல் காக்குற வில்லியே தூங்கிட்டிருக்கான். அவனை எழுப்பிடலாம்!"- சுமன், தூங்கிக் கொண்டிருந்த வில்லியைத் தட்டி எழுப்பினான்.

ஆனால், அவன் கண் திறப்பதாகத் தெரியவில்லை. அப்போதுதான் சுமன் அவனுக்கு அருகில் பாட்டில் ஒன்று கிடப்பதைப் பார்த்தான்.

"விஷயம் புரிஞ்சிடுச்சு. மொத்தச் சரக்கையும் ஒருத்தனாவே ஊத்திக்கிட்டான். அதான் மட்டைவிட்டிருக்கான் பய!" சோபாவிலிருந்து அவனைத் தரைமீது தள்ளிவிட்டான்.

"கொன்னுடுவேன் என்னைத் தொட்டா!" தூக்கக் கலக்கத்திலும், போதையில் வார்த்தைகள் உளறலுடன் வெளிவந்தன.

"அதெல்லாம் வேற யாராவது வந்தாங்கன்னா பார்த்துக்க. கண்ணை நல்லாத்திறந்து பார். யார் வந்திருக்கோம்னு!" மார்ட்டின் குரல் கொடுத்தான்.

வில்லி கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து அவர்களைப் பார்த்து மலங்கமலங்க விழித்தான்.

"அங்கிள் எங்கே, காணோம்?"- சுமன் கேட்டான்.

"உள்ளதான் இருக்கிறார்!"

"அவருதான் இன்னிக்கு பிரச்சினை பண்ணுவாருன்னு தோணுது?"

"அப்பிடி ஏதாவது செஞ்சாருன்னா, இன்னொரு கோணிப்பையை தேடி எடுத்து வைக்க வேண்டியதுதான். அவள் அந்த மாதிரிப் பொண்ணுதான். ஜானியை ஒரே ஒரு தடவைதான் குத்தி இழுத்தாள். பாவம் அங்கிள் என்ன கதியாகியிருக்காரோ?"

"உங்களுக்கு அங்கிளைப் பத்தித் தெரிஞ்சது அவ்வளவுதான். எப்படிப்பட்ட ஆளா இருந்தாலும் அதையெல்லாம் அவரு சரிப்படுத்திடுவாரு. ஆளு அதுல எல்லாம் மன்னன்!"

வில்லி பலமாகக் கதவைத் தட்டினான்.

விக்டர் தனது செயற்கைக்காலுடன் துள்ளியெழுந்து. கைத்தடியை ஊன்றி நடந்து கதவைத் திறந்தார்.



"அங்கிள், இருட்டா இருக்கே... லைட்டைப் போடுங்களேன்!"- வில்லி கூறினான்.

சுவிட்சைத் தட்டினார்.

ஜோஸ் மார்ட்டினும், சுமனும், வில்லியும் அறைக்குள் நுழைந்தார்கள்.

"குழந்தை எங்கே அங்கிள்?"

"உள்ள நிம்மதியாய் படுத்திருக்கிறா!"

"பிரச்சினை எதுவும் இல்லையே?"

"இதுவரைக்கும் இல்லை."

"அப்போ நாம ஆரம்பிச்சிடலாம் இல்லையா?" சுமன் கேட்டான்.

"நானும் தயாராத்தான் இருக்கேன்" விக்டர் பதிலளித்தார்.

"நீங்களா அவளோட நடிக்கப் போறீங்க?" ஜோஸ் கேட்டான்.

"இந்த விஷயத்துல நான் உங்க குருங்கிறது ஞாபகம் இருக்கட்டும்."

"சரி, கதவைத் திறங்க!"

"யாரா இருந்தாலும் ரொம்ப ஜாக்கிரதையா நடந்துக்கணும். அறைக்குள்ள ஏதாவது பாட்டிலோ, தகடோ கத்தியோ கிடைச்சா அவ அதையெல்லாம் பயன்படுத்துவா. எச்சரிக்கையா நடந்துக்கணும்!"

சுமன் கதவைத் திறந்தான். கட்டிலில் உட்கார்ந்திருந்த மேனகா பதறியடித்து எழுந்தாள்.

அறைக்குள் வெளிச்சமில்லாதிருந்தது. சுமன் லைட்டை எரியவிட்டபோது, மேனகா வாசலை நோக்கி ஓடிவந்தாள். ஆனால், சுதாரித்துக் கொண்ட சுமன் ஒரு குழந்தையை மாதிரி அவளைப் பிடித்துக் கட்டில் மீது தள்ளினான்.

"இந்தாம்மா... இந்தத் தடவை உன் வித்தையெல்லாம் பலிக்காது. அனுசரிச்சு நடந்துக்க! அதுதான் உனக்கும் நல்லது. வீணா உடம்புல காயங்களை வாங்கிக்காதே!"

அதே நேரம் மற்ற மூவரும் அறைக்குள் வந்தனர். வெளிப்பார்வைக்கு இடிந்து சிதிலமாகியிருந்த கட்டடம் போல் தோற்றமளித்த அதற்குள் எல்லாவித நவீன வசதிகளும் பொருத்தப்பட்டிருந்தன. உள்ளே நடக்கும் எதுவும் வெளியே தெரியாதிருப்பதற்காக, கட்டடத்தின் மையத்திலிருந்த அந்த அறை ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்தது.

மேனகாவின் கால் பகுதியிலிருந்து சற்றுத்தள்ளி கலர் டி.வி., வி.சி.ஆர். போன்றவை இருந்தன.

"அங்கின் ஆரம்பிச்சுட வேண்டியதுதானே?" ஜோஸ் கேட்டான்: "நாம முதல்ல இருந்தே இப்பத் தொடங்குவோம்."

"ஏன் அப்படி?"

"இவள் பாட்டிலை உடைக்கிறதுக்கு முன்னால நடந்ததெல்லாத்தையும் திரும்பப் படமாக்கலாம். சொல்லுறமாதிரி நடந்துக்கிட்டா, நீ உயிரோடவாவது இருக்கலாம். நாங்க பலவந்தமா உன்னை நெருங்கிட்டா, உடுத்திட்டிருக்கிற துணிகூட மிஞ்சாது. கன்னாபின்னான்னு கிழியும். உன்னால வெளியே போறதே கஷ்டமாயிடும். அதனால நீயாவே நல்லபடியா அதையெல்லாம் கழற்றி மடக்கி வச்சுக்க!"

மேனகா அங்குமிங்கும் பார்த்தாள்.

சோபா ஒன்று, மெபாய், கட்டில் ஆகியவைதான். அப்புறம் டி.வி. செட். அங்கிருந்த எதையும் அவள் ஆயுதமாகப் பயன்படுத்த முடியாது என்று தோன்றியது.

"கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்றேன்" கூறியபடி சுமன் அவளை நெருங்கினான்.

"தொடாதே!" அவள் அலறினாள்.



"சத்தம் போடாதம்மா குழந்தை. இது ஏ.சி. பண்ணியிருக்கிற அறை. நீ எவ்வளவு வேணும்னாலும் கத்தலாம். ஆனா, வெளியில எதுவும் கேட்காது!" சுமன், அவள் கைகளைப் பிடிக்கும் நோக்கத்துடன் முன்னேறினான்.

ஜோஸ்மார்ட்டின் வீடியோ கேமராவைத் தயார் செய்து வெளிச்சத்தை கூட்டிக் குறைத்துக் கொண்டிருந்தான். போனதடவை பாதியில் தடைப்பட்டது போல் இந்தத் தடவையும் ஆகி விடக்கூடாது என்பதில் வெகு எச்சரிக்கையாக இருந்தான். எல்லாவற்றுக்கும் மேலாக அவளைப் பழிவாங்கித் தன்னுடைய வெற்றியை நிலைநாட்ட வேண்டும் என்கிற வெறியும் இருந்தது. தங்கள் கண்முன்பாகவே ஜானியைக் கொன்றாள். இந்தத் தடவை படம் எடுத்து விட்டால் அதன் பிறகு அவளை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது என்று கூடத் தீர்மானித்திருந்தான்.

"ம்.. ஹூம் செய்ய மாட்டாள். நாமளேதான் கஷ்டப்பட்டு துணியெல்லாம் அவிழ்க்க வேண்டி இருக்கும் போலிருக்கு!" சுமன், மேனகாவின் புடவை மீது வைத்து இழுத்தான். அதற்கு முன்பாகவே வில்லி, பின்புறமாக அவளின் இரண்டு கைகளையும் வலுவுடன் பிடித்துக் கொண்டான்.

உடைகள் ஒவ்வொன்றாக அவளிடமிருந்து விடுபட்டன.

உள்ளுடைகளின் மீது கை பதியப்போகும் சந்தர்ப்பத்தில் வெடிகுண்டு விழுந்த மாதிரி அந்த அறையின் கதவு பெருத்த சத்தத்துடன் பெயர்ந்து உட்புறமாக விழுந்தது. அதைத் தொடர்ந்து ஒரு சூறைக்காற்று மாதிரி அருண் தென்பட்டான்.

"பிடிடா அவனை!" சுமன், வில்லியிடம் கட்டளையிட்டான்.

ஆனால், அதற்குள் அருணிடம் உதைவாங்கி ஒரு மூலையில் போய்விழுந்தான் வில்லி. டி.வி. மீது விழுந்தவன், அதைத் தரையில் தள்ளி அதன் மீது மல்லாந்து விழுந்தான். அதன் கண்ணாடிப் பகுதிகள் கலகலவென்று நொறுங்கும் சத்தம் கேட்டது. இரண்டாவது தாக்குதல் கண்ணிமைக்கும் நேரத்துக்குள்

சுமன் மீது விழுந்தது. அவன் அந்தரத்தில் மிதந்து தரையைத் தொடுவதற்குள்ளாக, ஜோஸைக் கொத்தாகப் பிடித்து, விக்டரின் மீது எறிந்தான்.

இருவரும் ஒன்றாகக் கீழே விழுந்தனர். விக்டரின் செயற்கைக்கால், பெல்ட்டை அவிழ்த்துக் கொண்டு விசையுடன் சுவரில் மோதி நின்றது.

தந்திரசாலியான விக்டர் எழுந்திருக்காமல் அப்படியே படுத்துக் கொண்டார்.

வில்லி, துள்ளியெழுந்து அருணுடன் மோதத் தொடங்கினான்.

இந்தத் தடவை அருண், வில்லியை ஏர்கண்டிஷன் மீது தூக்கிப் போட்டான். சுமன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அருணை நெருங்க முற்பட்டான். ஆனால், அருண் சோபாவை அவன் மீது தள்ளினான்.

விக்டர் நேரத்தை வீணாக்காமல் தன்னுடைய பேண்ட் பேக்கட்டிலிருந்து கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தார்.

அதிர்ஷ்டவசமாக அருண் அதைக் கவனிக்கவும் செய்தான். ஒரு விநாடி யோசித்தவன் எதிர்பாராதவிதமாக நாற்காலியை எடுத்து விக்டரின் கையை நோக்கி வீசினான்.

துப்பாக்கி எங்கோ பறந்தது.

அருண் துள்ளிப் பாய்ந்து அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"யாரும் அசையக்கூடாது. மீறினா தயவு தாட்சண்யம் பார்க்கமாட்டேன்" அருண் எச்சரிக்கும் குரலில் கூறினான்.

யாரும் எதுவும் செய்யமுடியாமல் அசைவற்று நின்றனர்.

"மேனகா... நீங்க சீக்கிரமா உடையுடுத்துக் கொண்டு கிளம்புங்கள்!"



மேனகா உடையைச் சரி செய்துகொண்டு வந்தாள்.

ஒன்றிரண்டு தடவை, இருக்கும் இடத்திலிருந்து அசைய முற்பட்டவர்களைத் துப்பாக்கியைக் காட்டியே மிரட்டிப் பணியச் செய்தான் அருண்.

"போய் உங்கள் காரில் ஏறிக்கொள்ளுங்கள். நான் பின்னாலேயே வருகிறேன்." மேனகாவிடம் கூறினான்.

உயிரும் மானமும் திரும்பக் கிடைத்த பரவசத்தில் மேனகா காரை நோக்கி விரைந்தாள்.

அருண் வெளியே வந்து தனது மோட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்தான். மேனகா காரை கிளப்பி, பைக்கின் பின்னாலேயே தொடர்ந்தாள்.

ஓட்டல் டிலைட்டை அடைந்தனர்.

"சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு புறப்படுங்கள்"- அருண் கூறினான்.

"நீங்கள் என்னைக் காப்பாற்றியிருப்பது இது இரண்டாவது தடவை!" அவள் நன்றியுடன் பேசினாள்.

"குறைந்தபட்சம் யாருக்காவது உதவி செய்யறது எனக்கு ரொம்பவும் பிடிச்ச விஷயம்!"

"நீங்க எப்படி சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தீங்க?" மேனகா கேட்டாள்.

"அதுகூட எதிர்பாராமல் நடந்ததுதான்!"

"என்ன நடந்துச்சு?"

"ஓட்டல் ரூமுக்குள்ள இருந்தபோது ரூம்பாய் வந்து ஒரு தகவல் சொன்னான். 'நூற்றியறுபத்தேழாவது ரூம் கதவை யாரோ ஒருத்தர் உள்ளேயிருந்து தட்டிட்டு இருக்கிறதாகவும், அறை வெளியில பூட்டியிருக்கிறதாகவும் சொன்னான். நான் வழக்கமா அங்கே தங்குற வாடிக்கையாளர்ங்கிறதால அவங்களோட

எனக்கு நல்ல பழக்கம் இருக்கு. போய்ப் பார்த்தேன். சாதாரணமா இந்த மாதிரி ஏதாவது பிரச்சினை இருந்தா, ஓட்டல்காரங்ககிட்டச் சொல்லி, போலீஸை வரவழைக்கிறது வழக்கம். ஆனா, இந்தத் தடவை நானே கதவை மோதித் திறந்து உள்ளே பார்த்தா ரதீஷ் இருந்தார்."

"அப்படித்தான் ரதீஷ் காணாமப் போனாரா?"

மேனகா, தன்னைத்தானே கேட்டுக் கொள்வது போல் பேசினாள்.

"ஜோஸ்மார்ட்டின்ங்கிற நோஞ்சான் போட்டோகிராபர், ஏதோ மயக்க மருந்து கொடுத்து மயங்க வச்சுட்டானாம்!"

"அதனாலதான் எனக்குத் தெரியாத ஒருத்தன் திடும்னு கார் சாவியோட என் முன்னால வந்து நின்னான் போலிருக்கு!"

"பிறகு?"

அவள் நடந்ததை விவரித்தாள்.

"இனிமேல் எப்பவும் எச்சரிக்கையா இருங்க. சந்தேகப்பட்டா, உடனே தயங்காம எனக்குத் தகவல் தெரிவியுங்க. ஆமா, இப்பவே கிளம்புறீங்களா?"

"நான் போகலேன்னா அப்பா வருத்தப்படுவாரே!"

"சிவப்பிரசாத் அப்படிப்பட்ட ஒரு நபரா எனக்குத் தெரியலை!" அருண் கூறினான்.

அதே நேரம் கர்னல் சிவப்பிரசாத்தும் வாசந்தியும் வீட்டில் மேனகாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அவள் எங்கேயாவது யாரோடவாவது ஊர்சுத்திட்டிருப்பாள்னு தோணுது. இல்லேன்னா இவ்வளவு நேரமாகியும் வராம இருப்பாளா, என்ன?" வாசந்தி கேட்டாள்.

"ஒருவேளை அவளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோன்னு தோணுது!" சிவப்பிரசாத் மந்திரிப்பது போல் பேசினார்.



"அவ்வளவு அக்கறையிருந்தா மகளைப் பத்தி விசாரிச்சுப் பாருங்க!"

"அது நல்லதில்லை. அவ, வயசுக்கு வந்த ஒரு பொண்ணு. இந்த நேரத்துல அவளைக் காணோம்னு சொன்னா அது சரிப்படாது! ரெண்டாவது விஷயம், எனக்கு இப்படியொரு மகள் இருக்கிறதா நான் வெளியில யார்கிட்டயும் சொன்னதில்லை. அதைச் சொன்னா, அவள் அம்மாவைப் பத்தியும் நான் பேசவேண்டியிருக்கும்!"

"சொல்ல வேண்டியதுதானே?"

"நான் ஒவ்வொருத்தர்கிட்டயும் பழைய புராணத்தை எடுத்துவிட வேண்டியிருக்கும்!"

"நீங்க ஒரு மர்மமான ஆசாமிங்கிறது உங்களைத் தெரிஞ்சவங்க எல்லோருக்குமே தெரியுமே."

அப்போது வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"உங்க மகள்தான் வந்திருப்பா!" வாசந்தி கூறினாள்.

"வரட்டும்... வரட்டும்..." சிவபிரசாத் எழுந்துபோய் கதவைத் திறந்தார்.

"என்னம்மா... இவ்வளவு நேரம்... எங்கே போயிருந்தே?" கேட்டார் கர்னல்.

"சினிமாவுக்குப் போயிருந்தேன்."

"அந்த டிரைவர் எங்கே, எப்பவும் •"டில் துட்டுல இருப்பானே... அந்தத் தடியன்?"

"ஏதோ சொந்த வேலையாப் போயிருக்கிறார்."

"அவன்கிட்ட முறையான டிரைவிங் லைசென்ஸ் இருக்கா? அவனைப்பத்தி ஏதாவது உனக்குத் தெரியுமா?"

"லைசென்ஸ் இருக்கு. நான் பார்த்தேன்."

"இதுவா பதில்!" வாசந்தி கேட்டாள்.

"உங்க கேள்விக்கு நான் நிறையப் பேசவேண்டியிருக்கும். வேண்டாம்... இந்த நேரத்துல அதெல்லாம் வேண்டாம்" அவள் நேராகத் தனது அறைக்குச் சென்றாள்.

"எனக்கென்னமோ இதெல்லாம் நல்லதுக்குன்னு தோணலை!" வாசந்தி, மேனகா போவதைப் பார்த்தவாறே சொன்னாள்.

"இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துதான் ஆகணும்!" சிவப்பிரசாத் பைப்பை உதட்டில் பொருத்தியபடி பேசினார்.

கடிகாரம் பதினொரு மணியடித்தது.

சிவப்பிரசாத் படுக்கையறையை நோக்கி நடந்தார்.

அவர் அலமாரியைத் திறந்து, விஸ்கி பாட்டிலை எடுத்து கண்ணாடி கிளாஸில் ஊற்றிக்கொண்டார். தொண்டைக்குள் வழியவிட்டார்.

இருந்தும் அவருக்கு உறக்கம் வரவில்லை.

கடிகாரம் திரும்பவும் ஒலித்தது.

பன்னிரண்டு மணி.

தலைமாட்டில் இருந்த டெலிபோன் மணியடித்தது.

"இந்த வேளையில் யார்?" என்று நினைத்தவராக ரிசீவரை எடுத்து காதில் பொருத்தினார்.

"ஹலோ..."

"... ... ... ..."

"என்ன, உண்மையாகவா!" சிவப்பிரசாத் அதிர்ச்சியுடன் கேட்டார்.

# 16

ஏறத்தாழ மூன்று நிமிடங்கள் தொலைபேசியில் பேசியவர் ஏமாற்றத்துடன் ரீசிவரை கிராடிலில் வைத்தார். இருந்தாலும் அவருள் ஏதோ ஓர் எதிர்பார்ப்பு இழையோடவே செய்தது- 'விரைவிலேயே நல்ல செய்தி வரும்!' என்று.

மறுநாள் காலையில் சிவப்பிரசாத் தன்னுடைய அலுவலக அறையில் யாரையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

மணி பத்து முப்பது.

அந்த அலுவலகத்தின் முன்னால் ஒரு மோட்டார் பைக் வந்து நின்றது. அதிலிருந்து அருண் இறங்கினான்.

"உங்க முதலாளி இருக்கிறாரா?" அங்கிருந்த வாட்ச்மேனிடம் கேட்டான்.

"மேல் மாடியில இருக்கிறார். வெளியில ஆளுங்க இருக்காங்க. வழி சொல்லுவாங்க!"

"நான் அவரைப் பார்க்கணுமே!"

"அவங்களே உதவுவாங்க!"

அருண் தனது பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு ஏதோ ஒரு பாடலை மெதுவாக முணுமுணுத்தபடி மாடிப்படியேறினான்.

கர்னல் சிவப்பிரசாத்தின் அறையை அடைந்தான்.

"நீங்கதானே மிஸ்டர் அருண்?" சிவப்பிரசாத் கேட்டார்.

"ஆமாம்!"

"உட்காருங்க!"

"இதுக்கு முன்னால என்னைப் பார்த்திருக்கிறதா உங்களுக்கு ஞாபகம் இருக்கா?" அருண் கேட்டான்.

"இல்லை. இருந்தாலும் உங்களைப் பார்த்ததும் நீங்கதான் அருண் என்று மனத்துக்குத் தோன்றியது."

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு!"

"இதில ஆச்சரியப்படுறதுக்கு எதுவும் இல்லை. இதைப் பாருங்க"- டேபிள் வெயிட்டை நகர்த்தி, ஒரு சிறிய புகைப்படத்தை எடுத்து அவன் பக்கமாக நகர்த்தினார்.

அது அவன் புகைப்படம்தான்.

"இப்பப் புரியுதுங்களா? நான் ஒருத்தரைச் சந்திக்கிறதுக்கு முன்னாலயே ஓரளவுக்கு அவரைப் பத்தின விஷயங்களைத் தெரிஞ்சுக்கிருவேன். இப்போதைய சூழ்நிலையில் எதுக்காக நீங்க என்னைச் சந்திக்க வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியும். இன்னும் உங்க வளர்ச்சி அதனோட சரியான இலக்கை அடையவில்லை. நீங்கள் ஏறிப் போறதுக்கு இன்னும் படிகள் நிறைய இருக்கு!"

"வளர்ந்ததா நான் சொல்லலையே? இப்பத்தான் அதைப் பத்தி யோசிக்கவே ஆரம்பிச்சிருக்கிறேன்."

"அது தெரிஞ்சதாலதான் உங்களை வரவழைச்சேன்."

"சரி, ஒரு விஷயம் சொல்லிடுறேன். நான், சுதந்திரமா முன்னேறணும்னு நெனைக்கிறேன். மற்றவங்களோட உதவியால நான் வளர்ந்தேன்ங்கிறதை என் சுயமரியாதையைப் பாதிக்கிற விஷயமா நெனைக்கிறேன்."

"நல்ல கொள்கைதான். ஒருவர் சுயமா முன்னேறுறதுங்கிறது ஒரு எல்லை வரையில்தான். ஆனால், இப்போ நான் இருக்கிற நிலையை அடையணும்னு ஒருத்தர் நினைச்சா, அது நிச்சயமா ஒரு தனிமனிதனால முடியுற காரியமில்லை!"



"நீங்க சொல்றது எனக்குப் புரியுது. இருந்தாலும் அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் துணைபோய் நான் பெரிய ஆளாகணும்னு நினைச்சதில்லை. கர்னல் சிவப்பிரசாத் இந்த ஊர்ல எப்படிப் பெரிய மனிதர் ஆனார்னு எனக்குத் தெரியும்! இப்போதைய உங்க முன்னேற்றம் எந்த நிலையில் இருக்குன்னும் எனக்குத் தெரியும். அவ்வளவு ஏன், எதுக்காக நீங்க ஊரைவிட்டுப் போனீங்கன்னுகூட எனக்கு நல்லாவே தெரியும்."

"நீங்க வேடிக்கையாப் பேசலையே?"

"மிஸ்டர் சிவப்பிரசாத், இந்த மாதிரி விஷயங்களை யாராவது வேடிக்கைக்காகப் பேசுவாங்களா என்ன?"

"ஓகோ... அப்படியா சங்கதி?" என்று கேட்ட சிவப்பிரசாத்தின் நெற்றியில் சுருக்கங்கள் உயர்ந்தன. அவர் விழிகள் சட்டென்று பளபளப்பு அடைந்தன. தன்னைப்பற்றி அளவுக்கு அதிகமாகத் தெரிந்து கொண்ட மற்றொரு மனிதனும் இந்த உலகத்தில் இருக்கிறான். தன்னால் இதுவரை இப்படி நினைக்கக்கூட முடிந்ததில்லை. சிவப்பிரசாத்தைப் பொறுத்தவரை எல்லாமே இதுவரை மர்மமும் ரகசியமுமான விஷயங்கள்தான். இதுவரை தன்னைப் பற்றித் தெரிந்து கொண்டது மனிதன்தான் என்று நினைத்திருப்பது விக்டர் ஒருவரைத்தான். அதற்கும் காரணமிருந்தது.

விக்டரின் கால் மட்டும் ஊனமாகாமலிருந்தால் கடத்தல் மற்றும் ரகசிய நடவடிக்கைகளில் அவர் ஒரு சக்ரவர்த்தியாகவே விளங்கியிருப்பார். கோவாவில் ஒரு பாங்க்கைக் கொள்ளையடித்தார். தங்கம் மற்றும் ரொக்கப் பணமாக ஏறத்தாழ பத்து லட்ச ரூபாய் பெறுமானப் பொருளுடன் நாலாவது மாடியிலிருந்து இறங்கும்போதுதான் காலில் குண்டுபாய்ந்தது. குண்டு பாய்ந்த விநாடியில் உயிரே போய்விட்டதைப் போல் அசைவற்றுப் போன விக்டரைக் காப்பாற்றுவதற்காகவே, அவரது கூட்டத்தைச் சேர்ந்த மற்றொரு மனிதன் ஜீப்புடன் வந்தபோது நேராக அதில் குதித்தார். தன் நிலை ஓரளவுக்குப்

பாதுகாப்பாகிவிட்டது என்பதை உணர்ந்தவுடன் விக்டர் முதலில் செய்த வேலையே போலீஸ் ஜீப்பின் டயரைச் சுட்டுப் பஞ்சராக்கியதுதான். அந்தக் காரணத்தாலேயே போலீஸ்காரர்களால் விக்டரைப் பிடிக்கவோ, பின்தொடரவோ முடியாமல் போனது. ஏறத்தாழப் பத்து லட்சம் ரூபாயுடன் அவர் கோவாவைத் துறந்தார். அதன் பிறகு பம்பாயில் கொஞ்ச காலம் தங்கியிருந்தார். பம்பாயில் விக்டருக்கு அடைகலம் தந்த நண்பன் ஒருநாள் விக்டரின் மொத்தக் கொள்ளைப் பணத்துடன் தலைமறைவானான். அவனைத் தேடுவதிலேயே ஐந்து வருடங்கள் போனது. அவன் அகப்படவில்லை. ஒரு கால் முடமானதுடன் பத்து லட்சமும் பறிபோனது.

வாழ்க்கை நடத்த வழியில்லாமல் போனபோது விக்டர் கஞ்சா, ஹெராயின் போன்றவற்றைக் கடத்தும் தொழிலில் ஈடுபட்டார். அந்தக் கட்டத்தில்தான் விக்டருக்கு சிவப்பிரசாத் அறிமுகமானார். இருவரும் இணைந்தபிறகு இரண்டு கொலைகளைக்கூட வெற்றிகரமாக நடத்தினர். அத்துடன் இருவரது நட்பும் வலுவடைந்தது.

கொலையுண்ட இரண்டு மார்வாடிகளிடமிருந்து கொள்ளையடித்த ஏராளமான கறுப்புப் பணத்துடன் இருவரும் திருசூருக்கு வந்தனர். அதன்பிறகு தொடங்கப்பட்டதுதான் சிவப்பிரசாத் ஃபைனான்ஸ் நிறுவனம். ஆனால், இதெல்லாம் விக்டரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

இப்போது மூன்றாவது மனிதனும் இந்த ரகசியங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறான். சிவப்பிரசாத்தால் அதைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. இவ்வளவு தூரம் தன் ரகசியங்களைத் தெரிந்து கொண்ட ஒருவன் உயிருடன் இருக்கலாமா? இருக்கக்கூடாது; அது ஆபத்துதான். தனக்கு முன்னால் இருப்பவனைத் தன் பக்கம் இழுத்து அவனைச் செயலற்றவனாக்க வேண்டும். அல்லது அவனையே இல்லாமல் செய்துவிட வேண்டும். இரண்டிலொன்று செய்யாவிட்டால் தான் இவ்வளவு காலமும் கட்டிக்காத்து வரும் மொத்தமும் கண்முன்பாகவே அழிந்துவிடலாம்!



"ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி உங்களுடன் பேசுவதற்காகத்தான் உங்களை வரவழைத்தேன்."

"அதுவும் எனக்குத் தெரியும். நீங்கள் பொழுது போக்குவதற்காக என்னைக் கூப்பிடவில்லை என்பதும் புரிகிறது!"- அருண் கூறினான்.

"என்னுடைய வியாபார வட்டம் மிகவும் பெரியது என்பது உங்களுக்குத் தெரியுமில்லையா?" சிவப்பிரசாத் கேட்டார்.

"தெரியும்!"

"முழுவதுமாகத் தெரிந்தால் நீங்கள் உண்மையில் ஆச்சரியப்படுவீர்கள்!"

"செலவே செய்யாமல், மிக அதிகமாகச் சம்பாதிப்பது உங்கள் இயல்பு!"

"அப்படிச் செயல்பட்டால் மட்டுமே ஒருவனால பணம் சேர்க்கமுடியும்."

"சரி, இதற்கும் என்னை அழைத்ததற்கும் என்ன தொடர்பு?"

"ஒரு ஃபிலிம் ரெப்ரசென்டேட்டிவ் மட்டுமே செய்ய முடிந்த வேலைக்காகத்தான் உங்களை வரவழைத்திருக்கிறேன்."

"விஷயத்தைச் சொல்லுங்கள்!"

"ஃபிலிம் பெட்டியை எனக்குத் தெரிந்து யாரும் அவ்வளவாகப் பரிசோதனை செய்வதில்லை. நீங்கள் ஒத்துழைத்தால் விலையுயர்ந்த சில பொருள்களை எனக்காக அதன் மூலம் இடமாற்றம் செய்ய முடியும். யாருக்கும் தெரியாது. இரண்டாவது, பணம் கொழிக்கும் ஒரு தொழிலும்கூட. ப்ளூஃபிலிமைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும் என்றும் நினைக்கிறேன்."

"எல்லாமே ஆபத்தான தொழிலாயிற்றே! இப்படியெல்லாம் செய்து ஏராளமாகப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. என்றாவது ஒருநாள் நான் அகப்பட்டுக் கொண்டால்

நீங்கள் சுலபமாகத் தப்பித்துக் கொள்வீர்கள்."

"சரி... அவ்வளவெல்லாம் ஆபத்தில்லாத பி. எஃப். கேஸட்டுகளை உரிய இடங்களில் ஒப்படைக்க முடியுமா?"

"எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை. இதற்காக ஏன் நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தீர்கள்?"

"சிம்பிள்... எதிராளியை அழிக்காமல் நேசிப்பது மிகவும் சுலபம்!"

"நான் உங்களுக்கு எதிரியா என்ன? அதெப்படி?"

"ரெண்டு தடவை உங்களால நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன். நேற்று என்னுடைய ஆட்களுடன் மோதி, ஒரு பெண்ணையும் காப்பாற்றிக் கொண்டு போயிருக்கிறீர்கள். அதற்குமுன் என்னுடைய வேலையாள் ஒருவனைக் குத்திக் கொன்ற ஒரு பெண்ணுக்கு அபயம் கொடுத்து, அவள் தப்பிச் செல்ல உதவியிருக்கிறீர்கள்!"

"நீங்கள் குறிப்பிட்டதெல்லாம் எதிர்பாராமல் நடந்த சம்பவங்கள்."

"இருக்கலாம். மேற்கொண்டும் இது மாதிரி எதிர்பாராத சம்பவங்கள் நடக்காமல் தடுக்கலாம். என்னுடைய கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் அளிக்கவில்லை!"

"நீங்கள் சொன்னதில் எனக்கு உடன்பாடில்லை சார்."

"சரி, இனிமேல் எங்கள் மனிதர்களுடன் நீங்கள் மோதக்கூடாது. உங்களை வாயடைக்க வைப்பது என்பது என்னைப் பொறுத்தவரை கஷ்டமான வேலையெல்லாம் கிடையாது!"

"அப்படி நீங்கள் நினைக்கலாம். உங்களது பணமும், அதிகாரமும் படைபலமும் உங்களை அப்படி நினைக்கச் சொல்லுகிறது. உண்மை என்னவென்றால் என்னை உங்களால் எதுவும் செய்ய முடியாது!"



கர்னல் சிவப்பிரசாத் ஒரு தடவை தொண்டையைக் கனைத்துக் கொண்டார். தன்னையும் மீறி ஒரு தடவை அபாயகரமான அடுத்த அறையை பார்த்தார். 'பேசிக் கொண்டிருப்பதற்கு நடுவே கொஞ்சம் விஸ்கியைக் கொடுத்திருந்தால், அந்த அறையின் மேற்புற ஸ்லாப்பை நீக்கியிருக்கலாம். இதற்கு முன் தன் எதிராளிகளைச் செய்தது போலவே மிகவும் சுலபமாக அதைச் செய்திருக்கலாம். பரவாயில்லை, பார்க்கலாம்.'

"நான் கிளம்பட்டுமா சார்?" அருண் எழுந்தான்.

"என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதில்லையென்று விரதம் எடுத்திருக்கிறீர்களா?"

"மன்னிக்கணும். ஆனால், அதுதான் உண்மை!" அருண் அங்கிருந்து வெளியேறினான்.

சிவப்பிரசாத் சிந்தனையில் ஆழ்ந்தார். அவன் திட்டம் போட்டே தனக்கு எதிராக இயங்குகிறான். அவனை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால், நிலைமை மிகவும் சிக்கலாகிவிடும்.

சற்றுநேர யோசனைக்குப் பிறகு, விக்டருக்கு போன் செய்தார். ஏற்கெனவே அவரை எதிர்பார்த்து விக்டர் அங்கு காத்திருந்தார். ஜோஸ் மார்ட்டினின் அறைக்குள்தான் அவர்களின் சந்திப்பு நிகழ்ந்தது. வில்லியும் சுமனும் உடனிருந்தார்கள்.

"உடனடியாக அவனைத் தொலைக்காவிட்டால் நமது வேலைகள் மிகவும் பாதிப்படையும்." சிவப்பிரசாத் பேசினார்.

"உண்மைதான். நிழல் மாதிரி நம் செயல்களையே அவன் பின்தொடர்ந்து தொந்தரவு தருகிறான்." ஜோஸ்மார்ட்டின் ஒப்புக் கொண்டான்.

"நாம அவனைத் தொடுறதைவிட போலீஸே அவனை கவனிக்கிற மாதிரிச் செய்யுறது நல்லதுன்னு எனக்குத் தோணுது!" விக்டர் யோசனை கூறினார்.

"அப்படியா சொல்றீங்க?"

"அதுதான் நல்லது. அவனோட படம் போற பெட்டியில ரெண்டு டப்பா நிறைய கஞ்சாவை வெச்சுடலாம். ரெண்டு டப்பாவில அரைகிலோ ஹெராயின். நாம நல்ல பிள்ளையா போலீஸ"க்குத் தகவல் சொல்லிடலாம். மிச்சத்தை அவங்களே பார்த்துக்குவாங்க!"

"நல்ல யோசனைதான்!"

"ஒருவேளை அவன் அதிலேயிருந்து தப்பிச்சிட்டான்னா, அதுக்கப்புறம் வேறவழியை யோசிப்போம்." விக்டர் கூறினார்.

"சுமன், வில்லி... நீங்க ரெண்டு பேரும் தயாரா இதுக்கு?"

"ஃபிலிம் பெட்டிக்குள்ள நீங்க சொன்னபடி கஞ்சாவை வைக்கிறது எங்களோட பொறுப்பு!"

திட்டத்தை மறுபடி ஒரு தடவை விளக்கிவிட்டு சிவப்பிரசாத் ஓட்டலிலிருந்து விடைபெற்றார்.

மறுநாள் காலையில திருதூர் நகரிலிருந்து குன்னங்குளம் நகருக்கு அருணிடமிருந்த இந்திப்படப் பெட்டி ஒன்று பஸ்ஸில் ஏற்றப்பட்டது. பெட்டியை பஸ்ஸில் ஏற்றியவுடன் போஸ் ஜீப் ஒன்று பஸ்ஸை வழி மறிப்பதுபோல் நின்றது.

"அந்தப் பெட்டியைக் கீழ இறக்குங்க!" இன்ஸ்பெக்டர் கட்டளையிட்டார்.

"சார், இது வழக்கமாப் போற ஃபிலிம்பெட்டிதான்!" போர்ட்டர் பதிலளித்தான்.

"சொன்னதைச் செய் முதல்ல!" அவர் குரல் முன்னைவிட உரத்து ஒலித்தது.

அதற்குள் கூட்டம் சேரத் தொடங்கியது.

பெட்டியைக் கீழே இறக்கி அருகிலிருந்த பேக்கரி வாசலில் வைத்தனர்.



போலீஸ் ஜீப், பெட்டி... இதெல்லாம் வேடிக்கை பார்ப்பவர்களுக்கு சுவாரசியமான விஷயமாகிவிடவே, ஒருவேளை வெடிகுண்டு ஏதாவது இருக்குமோ என்று கண்டபடி தங்களுக்குள் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

"பயப்படாதீங்க. வெடிக்கிறபொருள் எதுவும் இதுல கிடையாது. வேறொரு முக்கியமான சமாசாரம்." போலீஸ்காரர் ஒருவர் ஆறுதல் சொல்வதுபோல் கூறினார்.

இறக்கப்பட்ட பெட்டியிலிருந்து வட்டவடிவமான டப்பாக்கள் வெளியே எடுக்கப்பட்டுச் சோதிக்கப்பட்டன. இரண்டு டப்பாக்களில் கஞ்சா திணிக்கப்பட்டிருந்தது. மற்றொரு டப்பாவில் பிளாஸ்டிக் பேப்பரில் பத்திரமாக பேக் செய்யப்பட்ட ஹெராயின். சுமார் அரைகிலோ இருக்கும்.

பெட்டி அப்படியே போலீஸ் ஜீப்பில் ஏற்றப்பட்டது. போலீஸாரும் ஜீப்புடன் வழக்கைப் பதிவு செய்வதற்காக விரைந்தனர்.

பஸ் நிலையமே பரபரப்பு அடைந்தது.

## 17

அவ்வளவு சுத்தமான போதை மருந்தை அதற்கு முன் உள்ளூர் போலீஸார் கைப்பற்றியதே இல்லை. கைப்பற்றப்பட்ட ஹெராயின் மதிப்பு மட்டும் ஐம்பதாயிரம் ரூபாய். கஞ்சாவின் மதிப்பு ஐயாயிரத்துக்கு மேல்!

ஃபிலிம் பெட்டி ஒன்றிலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதால், அன்று பஸ்ஸில் ஏற்றப்பட்ட ஃபிலிம் பெட்டிகளும் உடனடியாக இறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டன. நகரம் மொத்தமும் இதைப் பற்றியே பேசியது.

வதந்தி 'ஃபிலிம் பெட்டிக்குள் தங்க பிஸ்கெட்டாம்!' என்று தவறாகப், பரவி, ஆட்கள் பஸ் ஸ்டாண்டை நோக்கி வேடிக்கை

"நான்தான்!"

அறைக்குள் விளக்கு எரிந்தது.

அருண்!

அவன் கையில் பளபளப்பான கத்தி ஒன்று இருந்தது.

"என்னை போலீஸ் பிடிச்சுட்டுப் போயிடும்னு நினைச்சே இல்லையா?'' அருண் அனல் கக்கும் விழிகளுடன் சிவப்பிரசாத்தைப் பார்த்தபடி கேட்டான்.

சிவப்பிரசாத்தின் கை பின்புறமாக நீண்டது.

அங்கு இரட்டைக்குழல் துப்பாக்கி இருந்தது.

சட்டென்று அதைக் கைப்பற்றியவர் அருணுக்கு நேராக நீட்டினார்.

ஆனால், அருண் அதைக் கண்டு கொஞ்சம்கூடப் பதற்றப்படாமல் ஒரு பொம்மை மாதிரி நின்றிருந்தான்.

"மரியாதையா இங்கிருந்து கிளம்பிடு. இல்லேன்னா உன் உடம்பு பொத்தலாயிடும்." சிவப்பிரசாத் கோபத்துடன் பேசினார்.

"எனக்கு அப்படித்தோணலை!" மிகவும் இயல்பான குரலில் அருண் பேசினான்.

"இந்த அறைக்குள்-அதுவும் இந்த பங்களாவுக்குள் யாரையும் கொல்வது எனக்குப்பிடிக்காத விஷயம். இதில் கொலை விழுவதென்பதை நான் விரும்பவில்லை. அதனால உனக்குத் தப்பித்துப் போக ஒரு வாய்ப்பு அளிக்கிறேன்." சிவப்பிரசாத் துப்பாக்கியை அருணை நோக்கிக் குறிவைத்தபடி பேசினார்.

"நான் திரும்பிப் போறதுக்காகவோ, சாகறதுக்காகவோ இங்கே வரலை. அப்படி வர்றதானா, உங்களுக்கு முன்னாலேயே நான் இதுக்குள்ளே நுழைஞ்சிருக்க வேணுமா என்ன?"

"அதனால் என்ன லாபம்?"



"ஒரு கொலைகாரனின் முன்னால் முன்னெச்சரிக்கை இல்லாமல் யாராவது வருவார்களா? உங்க கையில துப்பாக்கி இருக்கு. ஆனால், அதுல தோட்டா எதுவும் கிடையாது. துப்பாக்கி உங்க கிட்டதானே இருக்கு பார்த்துக்கங்க." அருண் கத்தியைச் சுழற்றியபடி பேசினான்.

'டிக்' என்ற சத்தம் மட்டுமே அதிலிருந்து கேட்டது.

துப்பாக்கியில் தோட்டா இல்லை என்பது தெரிந்தவுடன் சிவப்பிரசாத்தின் உடல் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. தற்போதைய நிலையில் தன்னுடைய ஒரே பாதுகாப்பாக நினைத்தது அந்த துப்பாக்கியை மட்டும்தான். ஆனால், அதுவும் இப்போது பயனில்லாமல் போயிருக்கிறது.

"மிஸ்டர் சிவப்பிரசாத், என்னை பொய்வழக்கில் சிக்கவைத்துவிட்டாய் இல்லையா, நல்லது! இப்போது நான் உன்னை அங்குலம் அங்குலமாகக் கொல்லப்போகிறேன். ஒவ்வோர் உறுப்பாக இந்தக் கத்தியால் வெட்டியெடுக்கப் போகிறேன். முதலில் காதிலிருந்து தொடங்கப் போகிறேன். எப்படி உன் சௌகரியம்?" அருண், சிவப்பிரசாத்தை நெருங்கியபடி பேசினான்.

"ஐயோ என்னை... நெருங்காதே. நான் இப்ப என்ன செய்யணும்?" உயிர்ப்பிச்சை கேட்டார் சிவப்பிரசாத்.

"இந்த அறையில்தானே பணத்தை வைத்திருக்கிறாய்? தற்சமயம் அதிலிருந்து இருபதாயிரம் ரூபாய் தேவை. தீர்ந்த பிறகு திரும்பவும் வருகிறேன்!"

"இருபதாயிரமா?"

"ஏன் ஆச்சரியப்படுறே? நியாயமான முறையில சம்பாதித்த பணமில்லையே, அதனால் எடுக்கலாம்!"

"இப்பவே வேணுமா?"

"தேவை. நான் தலைமறைவா இருக்க வேண்டியிருக்கு. அதனால செலவுக்குப் பணம் வேணும். நேரம் கடத்தாம,

சீக்கிரமா பணத்தை எடு!" அருண் கத்தியை நீட்டியபடி சிவப்பிரசாத்தை நெருங்கினான்.

"தர்றேன்... தர்றேன்!" சிவப்பிரசாத் கட்டிலிலிருந்து எழுந்து பீரோவை நெருங்கினான்.

சாவிக் கொத்தை எடுத்தவர் வஞ்சகமான ஒரு சிரிப்புடன் அவனைப் பார்த்துவிட்டு பீரோவைத் திறந்தவுடன் சட்டென்று கைத்துப்பாக்கியை எடுத்து அருண் நின்றிருக்கும் இடத்தை நோக்கிச் சுட்டார்.

அவரின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்துக் கொண்டிருந்த அருண் சட்டென்று தரையில் விழுந்து உருண்டவாறு தரையில் விரித்திருந்த கார்பெட்டைப் பிடித்து இழுத்தான்.

சிவப்பிரசாத் நிலைதடுமாறி கீழே விழுந்தார்.

அவர்மீது பாய்ந்த அருண், அவரிடமிருந்த துப்பாக்கியைப் பிடுங்கினான்.

"உங்க உடம்பில உயிர் இருக்கிற வரைக்கும் எனக்குத் தொல்லை தரத்தான் செய்வீங்க இல்லையா?" அருண் சிவப்பிரசாத்தைத் தரையிலிருந்து உயர்த்தினான்.

கர்னல் சிவப்பிரசாத், அருணின் கையிலிருந்து விடுபட முயன்றாலும், அருணின் பிடி வலுவாக இருந்ததால் அவரால் அந்த முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை.

தான் அங்கிருந்து தப்பித்து விட்டாலும் சிவப்பிரசாத் உடனடியாக யாரையாவது தொடர்பு கொண்டு, தன்னைப் பின்தொடரச் செய்யலாம் என்பதால் தொலைபேசி இணைப்பைத் துண்டித்து சுமார் மூன்று மீட்டர் நீளமுள்ள வொயரைச் சுருட்டி வெளியே எறிந்தான். பிறகு ரிசீவரிலிருந்து கிராடிலுக்குப் போகும் வொயரை உருவி இழுத்து அதன் உதவியால் சிவப்பிரசாத்தின் கைகளைப் பின்புறமாகக் கட்டினான்.



பீரோவிலிருந்து இருபதாயிரம் ரூபாயை மட்டும் எடுத்துக்கொண்டான். அந்த அறையிலிருந்து நிதானமாக வெளியேறினான்.

சிவப்பிரசாத்தால் அதையெல்லாம் பிரமைபிடித்தவரைப் போல் வேடிக்கை பார்க்க மட்டுமே முடிந்தது.

அருண் படியிறங்கிச் செல்லும் சத்தத்தைக் கேட்ட பிறகு சிவப்பிரசாத் மெல்ல எழுந்தார். ஒரு வகையாகக் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு, வரவேற்பு அறையிலிருக்கும் டெலிபோனை நெருங்கினார். ஆனால், அதற்குள் அருணின் மோட்டார் பைக் கேட்டைத் தாண்டிப் போகும் சத்தம் கேட்டது.

"சார், நீங்கள் தேடிக்கொண்டிருக்கிற குற்றவாளி அருண் மோட்டார் பைக் ஒன்றில் தப்பித்துச் செல்வதைப் பார்த்தேன். நான் கர்னல் சிவப்பிரசாத்... என் வீட்டுக்குப் பக்கத்தில்தான் பார்த்தேன். மன்னிக்கணும்... பைக்கின் நம்பரைக் கவனிக்க முடியவில்லை. பைக்கில் இருப்பவன் அருண்தானா என்று கவனித்ததால் நம்பரைக் கவனிக்க முடியவில்லை."

ரிசீவரை அதன் இடத்தில் பொருத்தினார்.

அருண், நகரின் மையப்பகுதியிலிருந்த வட்டமான பாதைக்குள் நுழைந்தபோது, சற்றுத் தொலைவில் ஜீப் ஒன்று வருவது தெரிந்தது.

ஒருவேளை போலீஸ் ஜீப் ஆகவும் இருக்கலாம்.

ஜீப் மேலும் சற்று முன்னுக்கு வந்தபோது சந்தேகமில்லாமல் போலீஸ் ஜீப்தான் என்று புரிந்தது.

ஜீப்பிலிருந்து விசில் சத்தம் கிளம்பியது போலிருந்தது. தன்னைத்தான் குறிவைத்து வேட்டையாடுகிறார்கள் என்பது அருணுக்குப் புரிந்தது.

கண்மூடித் திறப்பதற்குள் ஜீப் அவனை நெருங்கி வருவதற்குள், சட்டென்று வண்டியின் விரைவை அதிகப்படுத்திப் பாய்ந்தான்.

ஜீப் விரைவுடன் பைக்கைத் தொடர்ந்தது.

இந்திரஜாலக்காரன் மாதிரி அருண் மோட்டார் பைக்கைச் செலுத்தினான். அது ரோட்டிலிருந்து ஓர் அடி உயரத்தில் அந்தரத்தில் நகர்ந்து மிதப்பது போல் தோன்றியது. திருவிழா மைதானத்தை இரண்டு தடவை சுற்றியவன் சட்டென்று பஸ் ஸ்டாண்ட் பக்கமாகத் திரும்பினான். அந்த ரோட்டில் அப்போது வாகனங்கள் எதுவும் இல்லை.

அங்கிருந்த சந்து பொந்துகளில் புகுந்து ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி வந்து, அரசாங்கப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அருகில் பைக்கை நிறுத்திவிட்டு, ரயில்வே ஸ்டேஷன் பக்கமாக விரைந்தான்.

அதே நேரம் இரண்டு நெடுந்தூர பஸ்கள் அங்கிருந்து புறப்பட்டன. ஒன்று கோழிக்காடு நகரை நோக்கி வடக்காகவும், மற்றொன்று திருவனந்தபுரத்தை நோக்கித் தெற்காகவும் புறப்பட்டன.

பஸ் ஸ்டாண்டுக்கு வந்த ஜீப், இரண்டு பஸ்களும் புறப்பட்டதைத் தெரிந்துகொண்டு எந்த பஸ்ஸைத் தொடர்வது என்று யோசித்தவாறு சற்றுத் தயங்கி நின்றது.

"கோழிக்கோடு செல்லும் பஸ்ஸையே தொடருங்கள்!" இன்ஸ்பெக்டர் ஜீப் டிரைவரிடம் கூறினார்.

ஜீப் அந்தப் பாதையில் விரைந்தது. சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரம் போவதற்குள் ஜீப் அந்த பஸ்ஸை ஓவர்டேக் செய்து சாலையின் குறுக்காக நின்றது. பஸ்ஸும் நின்றது.

போலீஸார் பரபரப்புடன் பஸ்ஸுக்குள் ஏறி பரிசோதித்தனர். ஆனால், அருண் அகப்படவில்லை.

'என்ன செய்வது?'- என்று இன்ஸ்பெக்டர் யோசித்தார். 'திருவனந்தபுரம் பஸ்ஸைத் தொடர்ந்து சோதனை செய்தால் என்ன?' உதவியாளரிடம் தனது யோசனையைத் தெரிவித்தார்.



"அது சாத்தியம்னு தோணலை. வேணும்னா முதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து தகவல் சொல்லலாம் சார்!"

"சரி அப்படியானால் ஸ்டேஷனுக்கு போங்கள், சீக்கிரம்!"

ஸ்டேஷனுக்கு விரைந்த ஜீப்பிலிருந்து இறங்கி, பக்கத்து போலீஸ் ஸ்டேஷனுடன் தொடர்பு கொண்டார் இன்ஸ்பெக்டர்.

போலீஸ் ஜீப் கண்ணிலிருந்து மறைந்த பிறகு அருண், தனது பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

டாக்ஸி ஸ்டாண்டுக்கு முன்பாக பைக்கை நிறுத்திவிட்டு, பின்புறம் வைத்திருந்த பிரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு டாக்ஸி ஒன்றை நோக்கி நடந்தான்.

"எங்கே போகணும் சார்?" டாக்ஸி டிரைவர் கேட்டார்.

"ராம நிலையத்துக்கு!"

பின்ஸீட்டில் அருண் உட்கார்ந்து கொண்டதும் டாக்ஸி முன்புறமாக நகர்ந்தது.

காருக்குள் அமர்ந்தபடியே அருண் தனது வேடத்தைப் பொருத்திக் கொண்டான்.

ராம நிலையத்தின் முன்னால் டாக்ஸி நின்றது.

அருண், கீழே இறங்கிக் கட்டணத்தைக் கொடுத்த போது டிரைவர் ஒன்றும் புரியாமல் விழித்தான். 'தன்னிடம் பேசியது ஓர் இளைஞன். ஆனால், வண்டியில் பயணம் செய்து இறங்குவதோ வயதான பெரியவர்.'

"சார், வண்டி பேசினவர் எங்கே?"

"நான்தானே வண்டி பேசினேன்!"

"ஒருவேளை தூக்கக் கலக்கத்துல அப்பிடித் தோணுச்சோ என்னமோ?"

டிரைவரின் சந்தேகம் விலகியதாகத் தெரியவில்லை.

திரும்பி வரும்போதுகூட டாக்ஸி டிரைவர் ஒருவிதமான கனவு நிலையில் இருப்பதாகவே தோன்றியது.

அருண், தனது அறைக்குள் வந்த பிறகு தன் வேடத்தைக் களைந்தான். மணி இரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

கட்டிலில் படுத்தான்.

'போதை மருந்து கடத்தும் ஒரு வழக்கில் போலீஸிடம் தன் பெயர் பதிவாகியிருக்கிறது. ஆனால், முக்கியப் பிரமுகர்கள் வசிக்கும் உயர்ந்த ஓட்டலில் தங்கியிருக்கிறோம். அதுவும் ஒரு வைர வியாபாரி என்ற பெயரில்.'

அதே நேரம் அறைக்குள் டெலிபோன் மணியடித்தது.

அருண் ஒருகணம் திடுக்கிட்டான்.

'யாராக இருக்கும்? நிச்சயம் மேனகாவாக இருக்க முடியாது!'

அருணின் மனம், வேறு யாராக இருக்கலாம் என்று பரபரப்புடன் யோசிக்கத் தொடங்கியது.

## 19

டெலிபோன் சத்தம் அருணின் இதயத்தில் டிரம்ஸ் அடிப்பது போல் அதிர்ந்து ஒலித்தது.

இண்டர்காம் தொடர்பு உள்ள தொலைபேசி அது. விசாரிக்காமல் இருந்தால் சந்தேகம் ஏற்படலாம்.

முப்பது விநாடிகளுக்குப் பிறகு அருண் ரிசீவரை எடுத்தான். "அஜய்குமார் பேசுறேன்..."- எதிர்முனையிலிருந்து கேள்வி புறப்படுவதற்கு முன் அருண் முந்திக் கொண்டான்.

'மேனகாவுக்கு மட்டுமே தான் தங்கியிருக்கும் இடம் தெரியும். தொடர்பு கொள்ளக்கூடிய மற்றொருவர் ரதீஷ். ஆனால்,



அவருக்குத் தன்னுடைய இருப்பிடம் தெரியுமோ என்னவோ? ஒரு வேளை ரதீஷ் பேசுவதாகச் சொல்லி வேறு யாராவது தொடர்பு கொள்கிறார்களா?

"நான் ரதீஷ் பேசுறேன். மிஸ்டர் அருண்தானே? உங்க குரலை எனக்கு நல்லா அடையாளம் தெரியுது!"

"மன்னிக்கணும்! நீங்க வேற யாரோன்னு நினைச்சு என்கிட்டப் பேசுறீங்க! என் பேரு அஜய்குமார். பம்பாயிலிருந்து வந்திருக்கிற வைர வியாபாரி" என்று ரிசீவரை வைத்துவிட்டான்.

சற்று நேரத்துக்குள் டெலிபோன் மறுபடி மணியடித்தது.

"ஹலோ... நீங்கள் எதிர்பார்க்குற மனுஷன் நான் இல்லை... சார்! சொந்தரவு செய்யாதீங்க!" ரிசீவரை எடுத்தவுடன் பேசினான் அருண்.

"சரிசார்.. நீங்க யாரா இருந்தாலும் தயவு செஞ்சு இந்தச் செய்தியை மட்டும் கேட்டுக்கங்க. மேனகா ஒரு ஆபத்துல மாட்டிக்கிட்டிருக்காங்க. எப்படியும் காப்பாத்தியே ஆகணும்!"

அந்த வார்த்தைகள் ஒருகணம் அருணை நம்பச் செய்தாலும் உடனே, இது கூட வேறு யாரோ தனக்காக விரிக்கும் வலையாக இருக்கலாம் என்றும் தோன்றியது.

"யாருங்க நீங்க சொல்ற மேனகா?" அருண் கேட்டான்.

"நீங்கச் என்னை சந்தேகிக்கிறதா தோணுது. உண்மையாகவே நான் ரதீஷ்தான் பேசுறேன்!"

"இல்லை சார்... உங்களுக்கு ஆள் மாறிச்சு!" அருண் ரிசீவரை அதன் இடத்தில் பொருத்தினான்.

கட்டிலில் படுத்துக்கொண்டு ஒருகணம் யோசித்தான். உண்மையிலேயே ரதீஷ்தான் தன்னை அழைத்திருப்பாரோ? ரதீஷுக்குத் தனது இருப்பிடம் தெரிந்துவிட்டதா என்ன? இல்லை, ரதீஷிடம் மேனகா இந்த விஷயத்தைச் சொல்ல வாய்ப்பே இல்லை!

"ஒரு தயாரிப்பாளர்!"

"அந்த ஓட்டல்ல இதுக்கு முன்னால ப்ளூ·பிலிம் எடுத்திருக்காங்களா?"

"அதே ஆளுங்க ரெண்டு மூணு தடவை எடுத்திருக்காங்க. ஆனா அவங்களோட நிரந்தரமான இடம் வேற எங்கேயோ இருக்கு!"

"நீங்க இன்னும் உங்க பேரையே சொல்லலையே?"

"இஸபெல்லா! உங்களை இப்போ என்னால காப்பாத்த முடியும்!"

"காப்பாத்தறதா? என்னை எதுக்காக நீங்க காப்பாத்தணும்? என்னை யாரும் எதுக்காகவும் காப்பாத்த வேண்டியதில்லை!"

"நீங்க இப்போ ஒரு பெரிய சிக்கல்ல மாட்டியிருக்கீங்க."

"இதையெல்லாம் உங்ககிட்ட யாரு சொன்னது?"

"அப்படியானா, நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு ஒப்புக்கிறீங்க?"

அருண் அவளை ஊன்றிக் கவனித்தான். அவள் ஏதோ ஒரு திட்டத்துடன் வந்திருக்கிறாள் என்பது புரிந்தது. வேண்டுமானால் அவன் தன்னைக் காட்டிக் கொடுக்க முடியும். அவள் சொன்னதெல்லாம் உண்மைதான்.

"கர்னல் சிவப்பிரசாத்தை உங்களுக்குத் தெரியும் இல்லையா?" அவள் கேட்டாள்.

"தெரியும்!"

"அவர்தான் உங்களோட பெரிய எதிரி!"

"அதுவும் தெரியும்!"



"நீங்க ஒரு பொண்ணை பாட்டிலும் கையுமா வந்தபோது காப்பாத்தினீங்களே, அங்கயிருந்துதான் பிரச்சினையே ஆரம்பமாயிருக்கு!"

"இருக்கட்டும். அதுக்காக அநீதிக்கு நான் துணை போக முடியாது!"

"ஒரு விதத்துல சொன்னா, நாம ரெண்டு பேரும் இப்ப ஒரே நிலைமையில இருக்கிறோம். என்னோடு என் இரண்டு சகோதரிகளின் வாழ்க்கையையும் நாசமாக்கியவர் அந்த சிவப்பிரசாத்தான். ஜோஸ்மார்ட்டின்தான் அவரோட கருவியா செயல்பட்டவன். 'மேக்கப் டெஸ்ட்னு' சொல்லி என் ரெண்டு தங்கைகளையும் கூட்டிட்டுப் போனான். அதுக்குப் பிறகு நான் அவங்களைப் பார்க்கவே இல்லை!"

அருண் அவள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். சிவப்பிரசாத்தைப் பற்றி மேலும் ஒரு தகவல்.

"பிறகு?" அருண் கேட்டான்.

"கொஞ்ச நேரத்துக்குப்பிறகு என்னைக் கூப்பிட்டுப் போனாங்க. தங்கச்சிகளைப் பத்திக் கேட்டேன். அவங்க ஷூட்டிங்ல இருக்கிறதா ஜோஸ்மார்ட்டின் என்கிட்ட சொன்னான். நான் அங்கே போனபோது நான் பார்த்த காட்சி அருவருப்பு ஊட்டுறதா இருந்தது. பணம் சம்பாதிக்கிறதுக்காக மனுஷங்க எவ்வளவு கீழ்த்தரமான வேலையையும் செய்யத் தயாரா இருக்குறாங்கன்னு புரிஞ்சது."

சற்றுநேரம் அவள் எதையோ நினைவுக்குக் கொண்டு வர முயல்வதாகத் தோன்றியது. அவள் வார்த்தைகள் அருணின் மனத்தைப் பாதிக்கவே செய்தன.

கர்னல் சிவப்பிரசாத்தைச் சுற்றி மர்மமான பல ரகசியங்கள் சூழ்ந்திருப்பதை அது உணர்த்தியது.

"போதையில தன்னை மறந்த நிலையில, நிர்வாணமான உடம்போட அவங்க சொல்றதையெல்லாம் செஞ்சிட்டிருந்தாங்க

"அதுவும் தேவைதானே?"

"சினிமாவுல வர்ற மாதிரி பாய்ஞ்சு பாய்ஞ்சு சண்டை போடணுமா என்ன?"

"அப்படியெல்லாம் இருக்காது!"

"இருந்தாலும் பரவாயில்லை. கையைக் காலை அவ்வப்போது நீட்டி மடக்கலாம். எப்பவோ கத்துக்கிட்டதை எல்லாம் மறக்காமப் பத்திரப்படுத்தவும் செய்யலாம்!"

"உடம்புக்கு ஒரு உடற்பயிற்சி மாதிரியும் இருக்கும்."

"நான் தவறாம உடற்பயிற்சி செய்யுறவன்தான்!"

"அப்பமன்னா இன்னிக்கேகூட நீங்க வேலையில சேர்ந்துடலாம் இல்லையா?"

"வேற வழி?"

டிபனுக்குப் பிறகு இருவரும் டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு குருவாயூர் போனார்கள். அன்று ஏதோ ஒரு விசேஷமான நாளாக இருந்ததால் கோயிலில் ஏகப்பட்ட கூட்டம். அன்றைய மீதிப் பொழுது அந்தக் கூட்டத்திலேயே கரைந்தது.

இரவு எட்டு மணியானதும் இருவரும் ஓட்டல் ஸீலியாவுக்கு வந்தனர். மானேஜரின் அறைக்கு அருணை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினாள்.

"சார், இவர்தான் நான் சொன்ன நபர்!"

"உங்க பேர்?" மானேஜர் கேட்டார்.

"அஜயன்" அருண் பதிலளித்தான்.

"கொஞ்சம் கஷ்டமான வேலைதான். சில நேரம் நீங்க மோதவேண்டிய ஆள் பலசாலியாவோ, சண்டையெல்லாம் கத்துக்கிட்ட ஆளாவோ இருக்கலாம். இந்த மாதிரி இடங்கள்ல போலீஸ்காரங்களைக் கூப்பிட வேண்டாம்ங்கிறதால, நாங்களே இதையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கு. நீங்க இங்கேயே



சாப்பிட்டுக்கலாம். ஒரு நாளைக்கு நூறு ரூபா தருவோம். அன்னன்னிக்கே பணத்தையும் வாங்கிக்க வேண்டியதுதான். இங்கே தங்குறதுக்கு வசதியில்லை."

தற்போதைய சூழ்நிலையில் அதுவே தனக்கு ஏற்ற வேலையாகத் தெரிந்தது. மறைந்து வாழ ஏற்ற இடம், வேலையும்கூட. தான் இப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோம் என்பதை போலீஸ்கூட எதிர்பார்க்காது.

"ஒப்புக்கொள்கிறேன் சார்!" அருண் கூறினான்.

"அப்படின்னா, இஸபெல்லா கூடவே நீங்க போகலாம். மிச்சத்தை அவங்களே சொல்வாங்க. அதையெல்லாம் கவனிச்சுக்கங்க!" மானேஜர் விடைகொடுத்து அனுப்பினார்.

அந்த ஓட்டலில் நடனமாடும் காபரே அழகிகளுக்காகவே சில அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இரண்டு பேருக்கும் இரண்டு தனியறைகள். அந்த அறைகளும் காபரே நடைபெறும் ஹாலை ஒட்டியே அமைந்திருந்தன.

இஸபெல்லா, அருணைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

"அறை எப்படி இருக்கு?" இஸபெல்லா கேட்டாள்.

"எனக்கு எல்லாமே ஒரு நாடகம் மாதிரித் தெரியுது!"

"என்ன செய்யுறது? நாமளே எதிர்பார்க்காம சில இடங்கள்ல நடிக்கத்தான் வேண்டியிருக்குது. ஒன்பது மணிக்கு நான் ஸ்டேஜுக்குப் போகணும். மணி எட்டரையாயிடுச்சு" என்று கடிகாரத்தைப் பார்த்தவள் இண்டர்காமை எடுத்து யாருடனோ தொடர்பு கொண்டாள்.

இஸபெல்லா, நிலைக்கண்ணாடிக்கு முன் அமர்ந்து, மேக்கப் போடத் தொடங்கினாள். அருண் வெளிப்புறத்தை ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

இஸபெல்லா உள்ளேயே இருந்த டிரஸ்ஸிங் ரூமில் நுழைந்து காபரே உடையின் மீது அங்கி ஒன்றைப் போர்த்தியபடி வெளியே வந்தாள்.

"நல்ல வேஷம்!" அருண் உணர்ச்சியற்ற குரலில் பேசினான்.

"பிழைக்கிறதுக்கு வேலைன்னு ஒண்ணு வேண்டாமா? சில நேரம் போட்டிக்காக நாங்க உடை விஷயத்துல இன்னும் சிக்கனமாவோ, இல்லாதவங்களாவோகூட நடந்துக்க வேண்டியிருக்கும். என்ன செய்யுறது? நாய் வேஷம் போட்டா குரைச்சுத்தானே ஆகணும்?"

சற்று நேரத்துக்குள் ரூம் பாய் ஒருவன் ஒரு செட் உடையை எடுத்து வந்தான்.

"இதுதான் உங்களுக்கான டிரஸ். ரூமுக்குள்ள போய் மாத்திட்டு வாங்களேன். இந்த டிரஸ்ல எப்படி இருக்குறீங்கன்னு தெரிஞ்சுக்கலாம்."

அருண் உடையுடன் நடந்தான்.

யூனிஃபார்முடன் அருண் வெளியே வந்தபோது இஸபெல்லா தன் மேக்கப்பை முடித்து விட்டிருந்தாள். இப்போது அவளைப் பார்த்தால் எப்படிப்பட்ட இளைஞனும் கிறங்கிப்போவது உறுதி. உடலின் திண்மையும், கட்டுக்கோப்பும் உடையின் விளிம்புகளை மீறித் தெரியவே செய்தன.

ஒன்பது அடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தன.

காபரே ஹாலில் மெலிதாக இழைந்து கொண்டிருந்த மேற்கத்திய சங்கீதம் அந்த அறைக்குள்ளும் சன்னமாகக் கேட்டது.

நீண்ட கண்ணாடி கிளாஸ்கள் மற்றும் மதுக்குப்பிகளின் பின்புறம், பெண்களின் உயிருள்ள பச்சை உடம்பை வேடிக்கை பார்க்கப் பார்வையாளர்கள் தயாராகக் காத்திருந்தனர்.

"மதிப்புக்குரிய பார்வையாளர்களே! இன்னும் சற்று நேரத்தில் கவர்ச்சிக்கன்னி இஸபெல்லா உங்கள் முன் நடனமாட



வருகிறார்!" என்கிற அறிவிப்பு, அழகான ஆங்கிலத்தில் நளினமான குரலில் வெளியானது.

தொடர்ந்து விளக்குகள் அணைந்தன.

ஒரே ஓரிடத்தில் மட்டும் சட்டென்று வெளிச்சம். டிஸ்க்குகளின் வண்ண வண்ணமான ஒளிச் சிதறல்களின் முன்னால் இஸபெல்லா ஒரு பாம்பு மாதிரி இழைந்து ஓடினாள்.

மேற்கத்திய சங்கீதத்தின் வேகத்துக்கு ஏற்ப இஸபெல்லாவின் உடல் அங்கங்கள் விரைந்தும் மந்தகதியிலும் அசைந்தன. பார்வையாளர்கள் இமைப்பதை மறந்தவர்களாக இஸபெல்லாவையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

அருண் தூண் ஒன்றில் சாய்ந்தபடி பார்வையாளர்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று அவன் கண்கள் முன்புறத்திலிருந்த இருவர் மீது பதிந்தன. ஜோஸ்மார்ட்டினும், வில்லியும் அருகருகே அமர்ந்திருந்தனர். அவர்களை ஒட்டி முரடர்கள் மாதிரித் தோன்றுகிற மற்றும் இருவர் காட்டுத்தனமாக விஸ்கியடித்துக் கொண்டிருந்தனர். தங்களுக்குள் எதையோ பேசிக்கொண்ட பிறகு ஜோஸ்மார்ட்டின் தனது வீடியோ கேமராவை வெளியே எடுத்தான்.

காபரே ஹாலுக்குள் கேமராவோ, வீடியோ கேமராவோ பயன்படுத்தக்கூடாது என்பது ஓட்டல் நிர்வாகத்தினரின் கண்டிப்பான உத்தரவு. வேறு யாரும் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

அருண், ஜோஸ்மார்ட்டினை நோக்கி நடந்தான்.

## 21

"அந்தக் கேமராவை மரியாதையாக உள்ளே எடுத்து வைப்பது நல்லது!" அருண் மெதுவாக எச்சரிக்கைக் குரலில் ஜோஸ்மார்ட்டினிடம் சொன்னான்.

"நீ யாருடா எங்களை எச்சரிக்கை செய்யுறதுக்கு?" மார்ட்டின் கேமராவை ஆன் செய்துகொண்டு இஸபெல்லாவின் நடனத்தைப் பதிவு செய்தபடி பேசினான்.

"தம்பி, இந்த இடத்துல எந்தவிதமான கேமராவும் பயன்படுத்தக் கூடாதுங்கிறது கண்டிப்பான நிபந்தனை" அருண் இரண்டாவது தடவையாக எச்சரித்தான்.

ஜோஸ்மார்ட்டின் அதைக் காதில் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லை. அருகில் அமர்ந்திருக்கும் நண்பரிகளிடம் ஏதோ ஜாடை காட்டிவிட்டுத் தனது வேலையைத் தொடர்ந்தான்.

"வந்திருக்கிறவர் புது ஹீரோவா? அப்ப நாமளும் நம்ம பலத்தைக் காட்ட வேண்டியதுதான்" வில்லி கிளாஸ"க்குள் விஸ்கியை ஊற்றியபடி பேசினான்.

"எவ்வளவு பெரிய வி.ஐ.பி-க்களா இருந்தாலும் இந்த இடத்துல நாங்க சொல்றதை நீங்க கேட்டே ஆகணும்!"- அருணின் குரலில் இம்முறை அதிகாரமும் மிரட்டலும் தெரிந்தன.

"இதுக்கு முன்னால இதே மாதிரிதான் ஒருத்தன் இதே இடத்துல எதிர்த்தான். பாவம், அதுக்கப்புறம் அவனை பார்க்கவே முடியாமப் போச்சு. தம்பி, உங்க உயிர்மேல உங்களுக்கே ஆசை இல்லேன்னா நாங்க என்ன பண்றது? விலகிப் போறதுதான் நல்லது!" வில்லி ஒருவித உறுமலுடன் பேசினான்.

"நீ என்ன சொன்னாலும் எங்க கேமரா வேலை செய்யத்தான் செய்யும். இன்னும் சொல்லப்போனா டான்ஸ் ஆடுறவளையே தூக்கிட்டுப் போகவும் செய்வோம். உன்னால முடிஞ்சதைச் செய்!" ஜோஸ் கேமராவிலிருந்து கண்ணை அகற்றாமல், அதை ஓடவிட்டபடி பேசினான்.

அருணின் கை கேமராவின் மீது பதிந்து அதைத் திருப்பியது.

"நீ நல்லவிதமாச் சொன்னா கேட்கமாட்ட போலிருக்கே!" வில்லி துள்ளி எழுந்தான்.



அருண், வில்லியை நெட்டித் தள்ளியபடியே ஹாலின் பின்புறத்துக்குக் கொண்டு வந்தான்.

வில்லி கைகளை உயர்த்திச் செயல்படத் தொடங்கியபோது அருண், அவனைக் குண்டுக்கட்டாகத் தூக்கி பாத்ரூமுக்குள் வீசியெறிந்தான். விழுந்த இடத்திலிருந்து வில்லி எழுந்திருக்க முயற்சி செய்தபோது அருண் அவன் அடிவயிற்றில் ஓங்கி உதைத்தான்.

அலறல் குரலெழுப்ப முயன்றவன் அதுகூட முடியாமல் பாத்ருமில் சுருண்டு படுத்தான். அருண் பாத்ரூம் கதவை மூடி வெளிப்புறமாகத் தாழிட்டான்.

"தம்பி, காபரே முடிஞ்சதுக்கு அப்புறம் நீ வெளியில வந்தாப் போதும்!" அருண் பாத்ரூம் கதவை நோக்கிப் பேசிவிட்டுத் திரும்பினான்.

அப்போதும் ஜோஸ்மார்ட்டினின் கேமரா இயங்கிக் கொண்டிருந்தது.

முதலில் கேமராவைப் பிடித்து நிறுத்தி, அவனை வெளிப்புறமாக இழுத்தான் அருண்.

"என்னடா வேடிக்கை பார்த்துட்டிருக்கீங்க? தண்ணியடிச்சு வேடிக்கை பார்க்கவா என்கூட வந்திருக்கீங்க?" ஜோஸ், பக்கத்து டேபிளில் விஸ்கி குடித்துக்கொண்டிருந்த இரண்டு முரடர்களைப் பார்த்துக் கேட்டான்.

"ஸீட்டிலயிருந்து எழுந்திருக்கக்கூடாது! அசைஞ்சா உங்க உடம்பு ஒண்ணுக்கும் ஆகாது!" அருண் எச்சரித்தான். அவனது வார்த்தைகள் அவர்களைப் பயமுறுத்தியிருக்க வேண்டும். அவர்கள் எழுந்திருக்கவில்லை.

முரடனான வில்லியை அவன் குண்டுக்கட்டாகத் தள்ளிக்கொண்டு போனதை அவர்கள் கவனிக்கவே செய்தனர்.

இஸபெல்லாவின் நடனம் முடிந்தது. அவள் மேடையிலிருந்து மறைந்தாள். மேடைப் பக்கம் மறுபடி வெளிச்சம் தெரிந்தது.

இசைக் கருவிகள் உரத்த குரலில் இசை எழுப்பிக் கொண்டிருந்தன. அடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து சிசிலி மேடையில் தோன்றினாள். அவளும் அழகாக இருந்தாள். அவ்வளவாகச் சதைப்பிடிப்பில்லாத உடம்பாக இருந்தாலும், அவள் நடனம் பார்வையாளர்களிடம் போதையேற்றத் தவறவில்லை.

வண்ண வண்ண ஒளிவட்டங்கள் அவள் உடம்பில் கோலங்கள் போட்டன. அவளின் ஆட்டமும் முடிவடைந்தது.

மறுபடியும் இஸபெல்லா மேடையில் தோன்றினாள். இந்தத் தடவை முத்துமணிகளால் நெய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாள். அவள் உடம்பின் வாளிப்பான பகுதிகள் அந்த உடையை மீறி வழிந்துவிடும் போல் தெரிந்தன.

ஜோஸ்மார்ட்டினுடன் வந்த முரடர்கள் இருவரும் எழுந்தனர். இஸபெல்லாவின் நடனத்தை வைத்தகண் வாங்காமல் கவனித்த அவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக அவளை இழுக்கப் பாய்ந்தனர். அருண் அவர்களிடையே பாய்ந்தான். இரண்டு முரடர்களின் கழுத்துப் பகுதிகளையும் தனது இரு கட்கங்களுக்குள் இடுக்கிக் கொண்டு, ஹாலின் பின்புறத்தை நோக்கி நடந்தான். முரடர்கள் கை காலை அடித்துத் திமிறியபடி தரையில் காலைத் தேய்த்து என்னவெல்லாமோ செய்தனர். மொத்தப் பேரையும் ஒரே பாத்ரூமில் போட்டுக் கதவை வெளிப்புறமாகத் தாழிட்டான்.

மணி பத்து.

காபரே முடிந்து, ரசிகர்கள் ஹாலிலிருந்து வெளியேறினர்.

அருண் பாத்ரூமை நெருங்கி, கதவைத் திறந்தான்.



"இப்ப உங்க சௌகரியம் எப்படி? மோதிக்கிறதுக்கு தாராளமா நேரம் இருக்கு. என்ன சொல்றீங்க?" அருண் அவர்களைப் பார்த்தான்.

"முதல் தடவையாக உன்னைப் பார்ப்பதால் போனால் போகிறதென்று விட்டுவிடுகிறோம்!" வில்லி குமுறியபடி பேசினான்.

"ஐயய்யோ... இந்த மாதிரிச் சலுகையெல்லாம் கூடாதுங்க. நான் கொஞ்சம் முரட்டுத்தனமானவன். அதோடு எதையும் மிச்சம் வைக்கக்கூடாதுன்னு பார்க்குறவன். அதனால இப்பவே கணக்கைச் சரி பண்ணிடலாம்!"

"அப்படியெல்லாம் கணக்கைத் தீர்க்க முடியாது. இன்னிலேர்ந்து நீ எங்களோட பார்வைக்கு வந்திட்ட. தேவைப்படும்போது கணக்கைத் தீர்த்துக்கிறோம்."

"இவ்வளவு தூரம் நீங்க மனசு இறங்கி வந்து பேசறது உங்க பெருந்தன்மையைத்தான் காட்டுது. ரொம்ப நன்றி. என்னைப்பத்தி நீங்க புரிஞ்சுக்கணும்கிறதுக்காகவே இப்ப எடுத்திருக்கிற படத்தோட உங்களை வெளியே அனுப்புறேன். இனிமே இந்த கேமரா ஹாலுக்குள்ள தென்பட்டா, அப்புறம் இது உங்களுக்குச் சொந்தமா இருக்காது... ம்... புறப்படுங்க!"

அருணை முறைத்துப் பார்த்தபடி அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இஸபெல்லா உடை மாற்றிக் கொண்டு வந்தாள்.

"வாங்க போகலாம்" அவள் அழைத்தாள்.

"வேலை முடிஞ்சிடுச்சா?"

"முடிஞ்சது. கிளம்ப வேண்டியதுதான்!"

"அப்ப கிளம்பலாம்!"

இங்கேயே சாப்பிட்டுவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்!"

"நீ என்ன சொன்னாலும் கேட்டுக்கிறேன்."

"இந்த வேஷத்தைக் கலைக்காமலேயே என்கூட வாங்க!" அருணைத் தனது அறைக்கு அழைத்துப் போனாள்.

அவளது அறையில் அருணுக்கான புது உடை ஒரு செட் தயாராக இருந்தது.

"இதெல்லாம் எப்படி வந்தது!" பாண்ட், ஷர்ட்டைப் பார்த்தபடி கேட்டான்.

"ஓட்டல்ல வேலை செய்யற ரூம் பாயைவிட்டு வாங்கிட்டு வரச்சொன்னேன். உங்களோட பழைய துணியைப் பார்த்து அளவு சொல்லியனுப்பினேன்."

அருண் அவற்றை அணிந்து கொண்டான்.

"இந்த டிரஸ்ல, லேசா நரைச்சிருக்கிற உங்க விக்கும், தாடி மீசையும் முரட்டுத்தனமான பெரிய மனுஷனா காமிக்குது! ஒரு பெரிய பிசினஸ்மேன்னு சொன்னா, இப்ப யாருமே நம்பிடுவாங்க!"

அருண் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தான். அவள் சொன்னது உண்மைதான்!

"கிளம்பலாமா?"

"நான் ரெடி!"

இருவரும் பார் பகுதியை நோக்கி நடந்தனர். மணி பத்துக்கு மேல் ஆகியிருந்ததால் சாப்பாடு சாப்பிடுபவர்களின் கூட்டம் குறைந்திருந்தது.

அங்கங்கே சின்னஞ்சிறிய வட்டமாக வெளிச்சம் டேபிளின் மீது விழுந்திருந்ததால் அதன் அருகில் உட்கார்ந்திருந்த எவரையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

இஸபெல்லா ஓரமாக இருந்த ஒரு டேபிளை நோக்கி நடந்தாள்.

பேரர் அவர்களை நோக்கி வந்தான்.



"மேடம் என்ன சாப்பிடுறீங்க?" பேரர், இஸபெல்லாவுக்குத் தெரிந்தவன் போலும்.

"என்ன வேணுமோ சொல்லுங்க!"

"நல்ல பசி... சப்பாத்தியும் சிக்கன் மசாலாவும் கொண்டுவாங்க." அருண் கூறினான்.

"டிரிங்க்ஸ் ஏதாவது தேவையா?"

"எனக்கு ஒரு லார்ஜ் விஸ்கி. இஸபெல்லா உங்களுக்கு?"

"ஒரு பெக் போதும்! சோடாவும் கொண்டுவாங்க."

பேரர் அங்கிருந்து நகர்ந்தார்.

ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கும் மூங்கில் துண்டுகளுக்குள் ஒளிந்திருந்த சிறிய பல்புகள் வெளிச்சம் சிந்தின. அவற்றிலிருந்து புறப்பட்ட வட்டவடிவமான மங்கிய வெளிச்சம் நேராக மேஜையின் மையப்பகுதியில் பரவி அதிக தூரம் செல்ல முடியாமல் வலுவிழந்தன. மேஜைகளின் ஓரங்களில் அமர்ந்திருந்த ஆண்களும் பெண்களும் சில்-ஹவுட் படங்கள் போல் நிழல் வடிவங்களாகத் தெரிந்தனர்.

"நீங்களும் இதெல்லாம் சாப்பிடுவதுண்டா?" அருண் கேட்டான்.

"எப்பவாவது கொஞ்சம். தனியா வந்து சாப்பிட்டதே இல்லை. பெரும்பாலும் இன்னொரு டான்ஸர் இருந்தாங்களே, அவங்க இருப்பாங்க. அதுவும் எங்க அறைக்கே வரவழைச்சு சாப்பிடுவோம். அப்படியே ரூம்ல படுத்துக்குவோம். கவலை அதிகமாகும்போது எல்லாத்தையும் மறந்து நல்லாத் தூங்குவோம்" மேஜை மீது விரித்திருக்கும் துணியிலிருந்த படத்தை வருடியபடி பேசினாள்.

"சாப்பிடுறவங்க எல்லாருக்கும் மனநிலை இப்பிடித்தான் இருக்கும்போல இருக்கு!" அருண் பொதுவாகப் பேசினான்.

"புதுசா யாரைப் பார்த்தாலும் உடனே அறிமுகப் படுத்திக்கிறது என் பழக்கம். பார்வைக்கு வயசானவனாத் தெரிஞ்சாலும் மனசால நான் இன்னும் இளைஞன்தான். இளைய தலைமுறையோட இணைஞ்சு போறவன் நான். இளைஞர்களுக்கு உள்ள கெட்டிக்காரத்தனமெல்லாம் என்கிட்டயும் இருக்கு."

பேரர் திரும்பி வந்தார்.

"அங்கிள் விஸ்கி கொண்டு வரட்டுமா?" பேரர் கேட்டார்.

"கொண்டுவா. அதோட அங்கே என்னோட பீர் பாட்டிலும் இருக்கு. அதையும் எடுத்துட்டு வா!"

இஸபெல்லாவும், அருணும் அவரைப் பொருட்படுத்தாதவர்களைப் போல் சப்பாத்தியைச் சுவைத்துக் கொண்டிருந்தனர்.

"என் வேஷத்தைப் பார்த்து சாதாரணமா நினைக்காதீங்க. நான் நினைச்சா இப்போது கூட இந்த ஓட்டலையே விலைக்கு வாங்கிடுவேன். எளிமைதான் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்."

"ஓகோ... அப்படியா? நீங்க என்ன வியாபாரியா?" இஸபெல்லா கேட்டாள்.

"நானும் ஒரு நண்பரும் சேர்ந்துதான் இங்கே ஒரு ஃபைனான்ஸ் கம்பெனி தொடங்கியிருக்கிறோம். அது ஆரம்பம். இப்ப நாங்க பண்ணாத பிஸினஸ் எதுவுமே இல்லை. தம்பி, யாரும்மா? பார்த்தா இந்த ஊர் ஆள் மாதிரி தெரியலையே!"

"நிஜம்தான், பம்பாய்க்காரர்!"

"நினைச்சேன்! பம்பாய்தான் எல்லாத்துக்கும் பொருத்தமான இடம். சுதந்திரமா எந்த வேலையையும் செய்யலாம். இந்த ஊர்ல எதெடுத்தாலும் பிரச்சினைதான்!"

"ஊர் ரொம்பச் சின்னது இல்லையா?" அருண் இடையில் புகுந்தான்.



"அதுவும் உண்மைதான்! செய்யுற வேலைக்கு கிடைக்குற கூலியும் ரொம்பக் கம்மிதான்!"

"நீங்க எந்த மாதிரியான வேலையைச் சொல்றீங்க?"

"நான் பிசினஸ் மைண்டான ஆளு. எப்பவும் சுலபத்துல பணம் பண்றதைப் பத்தி மட்டுமே யோசிப்பேன். பாம்பேயில என்னவா இருக்குறீங்க?" அருணிடம் கேட்டார் விக்டர்.

"நான் வைரவியாபாரம் செய்யிறேன். இங்கே ஒரு நகைக் கடைக்கு வந்திருக்கிறேன்."

"நல்ல வியாபாரம்தான். அதோடவே சுலபமா பணம் சம்பாதிக்கிற இன்னொரு வேலையும் செய்யலாம். தங்க பிஸ்கெட்டையும் சேர்த்துக்கலாமே. ரெண்டுமே தங்க வியாபாரிங்ககிட்டயே நடக்கிற வியாபாரம்தானே!"

"நல்ல யோசனைதான். அதெல்லாம் ரொம்பவும் ரிஸ்க்கான வேலையாச்சே!"

"இஸபெல்லாவுக்கு இன்னிக்கு ஏதாவது புரோகிராம் இருக்கா, நண்பர் கூடத்தானா?" விக்டர் கேட்டார்.

"ஆமாம் சார். உங்களுக்கு இந்த மாதிரி சமாசாரமெல்லாம் பிடிக்குமா?"

"பிடிக்குமான்னா கேட்டீங்க! இந்த உலகத்திலேயே எனக்கு ரொம்பவும் பிடிச்சதே அது ஒண்ணுதான்!"

"பக்கத்திலதான் தங்கியிருக்கீங்களா?" அருண் கேட்டான்.

"இங்கே பக்கத்துலதான். நான் ரொம்ப எளிமையா வாழற மனுஷன். நீங்க விரும்பினா இன்னிக்கு என் வீட்டில தங்கிக்கலாம்."

"செஞ்சுட்டாப் போகுது!"

"யூ ஆர் வெல்கம். ஆமா இஸபெல்லாவும் கூட வருவாங்க இல்லையா?"

"பின்ன இல்லாமலா? விடியுறவரைக்கும் இவங்க என்கூடத்தான் இருப்பாங்க." அருண் இஸபெல்லாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியபடி பேசினான்.

"நானும் வர்றேன். உங்களோட வீட்டைப் பார்க்கலாமே. ரொம்பவும் எளிமையான வீடுன்னு சொன்னீங்களே. அது உண்மையா, பொய்யான்னு பார்த்துடலாமே!"

விக்டர் பூடகமாகச் சிரித்தார்.

"வாருங்கள். உங்களுடைய இன்றைய இரவு சந்தோஷமானதாகச் செலவழியட்டும்." முன்கூட்டியே வாழ்த்தினார்.

"எனக்குப் போதும்... சரி, புறப்படலாமா இஸபெல்லா?" அருண் எழுந்தான்.

"கொஞ்சம் பொறுங்கள், இன்னும் ஒரு லார்ஜ் போட்டுக் கொள்கிறேன்." விக்டர் கைத்தடியை ஊன்றியபடி கௌண்டரை நோக்கி நடந்தார்.

"அருண், தாத்தா தானாவே வலிய வந்து மாட்டிக்கும்போது நாம ஏன் தடுக்கணும்?" இஸபெல்லா தன் கையை டிஷ்யூவில் துடைத்தபடி பேசினாள்.

"ஏதாவது உதவுமா?"

"நிச்சயமா உதவும். தாத்தாவுக்கும் கர்னல் சிவப்பிரசாத்துக்கும் மட்டுமே தெரிந்த ஏதோ ஒரு ரகசிய இடம் இருக்கிறது. இந்த நகரத்தில் நடைபெறும் கள்ளக்கடத்தல் மற்றும் ரகசிய நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் பின்னணி இந்த இருவரும்தான். முடிஞ்சா, அந்த இடம் எங்கேன்னு பார்க்கலாமே! ஒருவேளை நீங்க உங்களோட சிக்கல்லயிருந்து தப்பிக்கவும் ஏதாவது வழி கிடைக்கலாம்."

அருண் யோசனையில் ஆழ்ந்தான்.



'இதுவும் ஒருவகையில் நல்லதுதான். தான் இப்போது போலீஸாரால் தேடப்படும் ஒரு குற்றவாளி. தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறோம். வாழ்க்கை முழுவதையும் இப்படியே தள்ளுவதும் சுலபமல்ல. மறுபுறம் சிவப்பிரசாத்தும் தன்னை வேட்டையாடுகிறார். இருவரையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதும் சாத்தியமல்ல. இந்த நிலையில் சிவப்பிரசாத்தின் ரகசிய நடவடிக்கைகளைக் குறித்து ஏதேனும் தெரிந்துகொள்ள முடிந்தால் தனது திட்டத்துக்கு உதவலாம். எதற்கும் முயற்சி செய்து பார்ப்போம்.

இதுபோன்ற சந்தர்ப்பத்தில் ரதீஷும் தன்னுடன் இருந்தால் அது நல்லதென்று தோன்றுகிறது. ஆனால், ரதீஷை உடனேயே தொடர்பு கொள்வது எப்படி? மேனகாவிடம் விஷயத்தைச் சொன்னால் நிச்சயம் ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.'

"புறப்படலாமா?" திரும்பி வந்த விக்டர் அழைத்தார்.

"புறப்படலாம். உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். நான் முக்கியமான சில சரக்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பம்பாயிலிருந்து வர வேண்டும். வீடியோ கேஸட்டுகள்கூட அதில் இருக்கின்றன. நான் அதிகமாகத் தொடர்பு கொள்வது தங்க நகைக் கடைகளுடன் தான்... மேற்கொண்டு உங்களிடம் விளக்க வேண்டுமா என்ன?"

"அவ்வளவுதானே விஷயம்? வாருங்கள் நான் வழி சொல்லித் தருகிறேன்" விக்டர் வலியுறுத்தினார்.

பில்லுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு அவர்கள் வெளியே வந்தனர்.

விக்டர் டாக்ஸி ஒன்றை நெருங்கினார்.

ஒரு கணம் அருண் வியப்பு அடைந்தான். தனக்கு மிகவும் பழக்கமான குரல்! ரதீஷ்!

"கிழக்குப் பக்கமா போகணும். நானே வழி சொல்லித் தர்றேன். வண்டியை ஸ்டார்ட் பண்ணுங்க" விக்டர் கூறினார்.

இஸபெல்லா, அந்தப் பக்கம் திரும்பவே இல்லை.

விக்டர் மிகவும் ஆர்வத்துடன் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"வழக்கமாக ஒரு கேஸட் இருபது நிமிஷம்தான் ஓடும். ஆனால், எங்களோட ஸ்பெஷாலிட்டி முப்பது நிமிஷம்! அதனால் பம்பாயில ஏக டிமாண்ட். மிஸ்டர் அஜய்குமார், நீங்களும் ஒரு தடவை முயற்சி செய்யலாமே!"

"ஏற்கெனவே செஞ்சிக்கிட்டுதான் இருக்கேன். ஆனா, உங்க அளவுக்கு இல்லை!" அருண் கூறினான்.

"உங்களுக்கு எவ்வளவு கேஸட் வேணும்னு சொல்லுங்க. 'டாண்'னு சப்ளை பண்றோம். சமூகத்துல உன்னதமான நிலையில் இருப்பவர்களின் வீட்டைச் சேர்ந்த பெண்களும், புகழ்பெற்ற நடிகர்-நடிகைகளும் பங்கு கொண்ட கேஸட்டுகள்கூட எங்களிடம் உள்ளன.

"இந்த வியாபாரத்தில் குறிப்பிடும்படி ஏதாவது உண்டா என்ன?" அருண் கேட்டான்.

"அதில்தான் இருக்கிறது வியாபார சூட்சுமம்!" என்று தொடங்கிய விக்டர், அணைந்து போயிருந்த சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

முந்தைய கேஸட் தீர்ந்து போனதால் அந்தப் பெண் மற்றொரு கேஸட்டைப் போட்டாள்.

எதிர்பாராமல் டெலிவிஷன் பக்கம் திரும்பிய இஸபெல்லா ஒரு கணம் திடுக்கிட்டாள். அவளின் கடைசித் தங்கையான மார்கரெட், ராட்சதன் போலிருந்த நீக்ரோ ஒருவனிடம் பலவந்தமாக கற்பை இழந்து கொண்டிருந்தாள். அவள் கண்கள் கலங்கின.

வக்கிரம் நிறைந்த மனோவியாதி பீடித்த மனிதர்களின் கூடாரத்துக்குள் தாங்கள் வந்து சேர்ந்திருக்கிறோம் என்பது



அவளுக்குப் புரிந்தது. இதற்குள் தட்டுப்பட்ட எந்த மனிதனும் யோக்கியமானவனாகத் தெரியவில்லை. கொடூரமான குற்றவாளிகள் இதற்குள் தொழிலாளி என்ற பெயரில் அடைக்கலம் புகுந்திருப்பதாகத் தோன்றியது.

அந்த மொத்தக் கட்டடத்துக்கும் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டால் என்ன என்று கூடத்தோன்றியது இஸபெல்லாவுக்கு. தன் உணர்வுகளை வேறு யாராவது பார்த்துவிட்டால் விபரீதமாகிவிடுமே என்பதால் வலிந்து முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"என்னங்க இஸபெல்லா, இந்தப் படம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா என்ன?" விக்டர் கேட்டார்.

அவள் பதிலளிக்கவில்லை!

"இதுவும் எங்களது சொந்தத் தயாரிப்புதான். இதற்கென்று ஒரு ஸ்டுடியோவும் வைத்திருக்கிறோம்."

"நீங்கள் ஏற்கெனவே பேசியதை முழுசாக முடிக்கவில்லையே!" அருண் கேட்டான்.

"ஓகோ... கவனம் மாறிவிட்டது. மேற்குறிப்பிட்ட பெண்களின் உதவியுடன் இப்படிப்பட்ட படம் எடுப்பதில் எவ்வளவோ நன்மைகள் உள்ளன. நாம் நினைத்ததைச் சாதிக்க முடிகிறது. உயர்ந்த பதவியிலிருக்கும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் மனைவியர் அகப்பட்டால் நமக்குத் தேவையானபடி எதையும் செய்யலாம்!"

"நீங்கள் சொன்னது விளங்கவில்லை!"

"இப்படிப்பட்ட படம் நமது கையில் இருக்கும் வரையில், அதில் ஈடுபட்ட பெண்கள் தங்கள் கணவர்களிடம் நமது கோரிக்கையைச் சொல்லி நிறைவேற்றித் தருவார்கள். ஆயுள் முழுவதும் நமக்குப் பயன்படும்!"

37849
5479329

"யாருமில்லை, உட்காருங்க!" ரதீஷ் பதிலளித்தான்.

விக்டருக்கு ரதீஷை அடையாளம் தெரிந்தது.

பேரர் வந்தவுடன் ரம் மற்றும் உருளைக் கிழங்கு சிப்ஸுக்கு ஆர்டர் செய்தார். எல்லாம் வந்தன.

ரம் பாட்டிலின் மூடியைத் திறந்த விக்டர் அதை கிளாஸில் ஊற்றாமல் நேராக வாயிலேயே 'ராவா'க ஊற்றிக் கொண்டார். பிறகு சுடுதண்ணியை விழுங்கியவரைப்போல் உதடுகளைக் குவித்து இரண்டு மூன்றுமுறை ஊதிக் கொண்டார்.

"வரவர ரம்கூடச் சுத்தமில்லாமல் போச்சு. வெறும் புளிச்ச தண்ணி குடிக்கிற மாதிரிதான் இருக்கு. இதெல்லாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி ஆட்சி செய்தபோது சுத்தமான சரக்காக இருந்தது. அப்போ எனக்குப் பதினஞ்சு வயசு இருக்கும். அப்போ இருந்த 'ரம்'மை நெனைச்சாலே இப்பவும் அந்த ருசி நாக்கைவிட்டுப் போகலை. ஒரு திராம் ஒரேயொரு திராம் சாப்பிட்டாலே போதும். பெண்கள் மொத்தப் பேரும் திரும்பிப் பார்ப்பார்கள். செண்ட் மாதிரி எதையும் போட்டுக்கவே வேண்டாம். அப்படியொரு வாசனையிருக்கும். இந்தக் காலத்து 'ரம்'மை குதிரைகூடக் குடிக்குமோ என்னவோ? பழகிப் போய்ட்டோமில்லையா, குடிக்காம இருக்கவும் முடியலை." நீண்ட உரையொன்றை நிகழ்த்திய பிறகு பேக்கட்டிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார் விக்டர்.

பேரர் சிப்ஸை எடுத்து வந்தார்.

விக்டர் அதை ரதீஷின் பக்கமாகத் தள்ளி வைத்தார். "குடிக்கும் போது எதையாவது கொரிக்கிறது நல்லது" ரதீஷுக்கு அறிவுரை வழங்கவும் தவறவில்லை.

ரதீஷ் இரண்டு சிப்ஸை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.



"பார்ல அறிமுகப்படுத்திக்கிட்டுப் பேசுறது நாகரிகம் இல்லைதான். இருந்தாலும் ஒண்ணு கேக்கட்டுமா?" விக்டர் இந்தத் தடவை 'ரம்'மை கிளாஸில் ஊற்றியவாறே கேட்டார்.

"கேளுங்க!"

"இந்த ஓட்டலைப் பொறுத்தவரையில் நான் ஒரு புதியநபர்" விக்டர், சுருட்டுச் சாம்பலை ரம்கிளாஸுக்குள் தட்டிவிட்டு, நன்றாகக் கலக்கினார்.

அதைப் பார்த்தவுடன் விக்டர் மருவருந்துவதில் தேர்ந்தவர் என்பது ரதீஷுக்கு விளங்கவே செய்தது. மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். சுருட்டுச்சாம்பல் கலந்த 'ரம்'மை ஆப்பிள் ஜூஸ் சாப்பிடுவது போலச் சுவைத்துக் குடித்தார் விக்டர். பிறகு ஒருபுறமாக முகத்தைச் சரித்து உதடுகளால் இரண்டு முறை ஊதிக் கொண்டார்.

"ஒண்ணுமில்லை... இந்த ஓட்டல் யாரோடது?"

"தெரியாதுங்களே!"- ரதீஷ் பதிலளித்தான்.

"நீங்க இங்கேதான் தங்கியிருக்கீங்களா?"

"ரெண்டு நாளாத்தான் தங்கியிருக்கேன்."

"காபரே டான்ஸ் இங்கே எப்படி? நல்லா இருக்குமா?"

"இதுவரைக்கும் நான் பார்க்கலை."

"இளைஞன்னு உங்களை எப்படிங்க சொல்லுறது?"

"பொதுவா எனக்கு இந்த மாதிரி எந்தப் பழக்கமும் கிடையாது!"

"ரொம்ப நல்ல வழக்கம். போகட்டும், இருநூற்றியேழாம் நம்பர் அறையில் ஒரு சினிமா தயாரிப்பாளர் தங்கியிருக்கிறாராமே. அவரைத் தேடித்தான் வந்திருக்கிறேன். இங்கே வந்தா அவர் ஒரு பொண்ணோட கார்ல போயிட்டிருக்கார். நீங்க அவரைப் பார்த்திருக்கீங்களா?"

"இல்லையே... நான் அப்படி யாரையும் பார்த்ததா ஞாபகமில்லை. நான் ஏன் அதையெல்லாம் கவனிக்கணும்?" ரதீஷ் கேட்டான்.

"இப்படிப்பட்ட பெரிய ஓட்டல்களுக்கு இதுமாதிரியான நபர்கள் வந்தால் நான் என்னை அறிமுகப்படுத்திக்கிறது வழக்கம். அப்புறம் இந்த ஓட்டல்ல ஒரு காபரே டான்ஸர் இருக்கா, பேரு இஸபெல்லா. நல்ல வாட்டசாட்டமான ஆளு. நேத்து என்னோட விருந்தாளியா இருந்தா. ராத்திரி நேரத்துல அவளைப் பார்க்குறது கஷ்டமான விஷயமாச்சே. அதுதான் பொழுதோட பார்த்துட்டுப் போகலாம்னு நினைச்சேன்."

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வார்த்தைகளைப் பேசிய விக்டரை, ரதீஷ் ஊன்றிக் கவனித்தான். இந்த மனிதனின் வருகைக்கு வேறு ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டுமென்று தோன்றியது.

ஏறத்தாழ பாதி பாட்டில் 'ரம்'மைக் குடித்த பிறகு மூடியை எடுத்து இறுக்கமாக மூடி, பாட்டிலைத் தலை கீழாக்கிச் சோதித்துப் பார்த்து, திருப்தியடைந்தவராக அதைத் தன் கோட்டுப் பாக்கட்டில் போட்டுக்கொண்டார்.

"சரி நான் புறப்படட்டுமா? நீங்க இருநூற்றியொண்ணுல தானே தங்கியிருக்கீங்க?" விக்டர் திடுமென்று கேட்டார். ஆனால், பதிலுக்குக்கூடக் காத்திராமல் ஊன்றுகோலை ஊன்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினார்.

பாட்டிலில் மீதமிருந்த விஸ்கியை கிளாஸில் ஊற்றி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, பில்லுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு, பாரைவிட்டு வெளியே வந்த ரதீஷ் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.

இருள் பரவத் தொடங்கியது. தெருவிளக்குகள் எரியத்தொடங்கின.



இதற்குள் மேனகா திரும்பி வந்திருக்கலாமோ என்கிற சந்தேகமும் எழுந்தது. தன்னுடைய அறைக்கதவைப் பூட்டவில்லையென்பதும் நினைவுக்கு வந்ததால் ஓரளவு ஆறுதலும் தோன்றியது.

நேராக அறைக்குத் திரும்பிய ரதீஷ் கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் யாரோ பின்புறத்திலிருந்து பலமாக உதைத்தது போலிருந்தது.

அப்படியே குப்புற விழுந்த ரதீஷ், சட்டென்று புரண்டு எழுந்தபோது ஆஜானுபாகுவான மூன்று பேர் முன்னால் நிற்பதைக் கவனித்தான்.

ரதீஷ் மூவரையும் மாறிமாறிப் பார்த்தான்.

ஏற்கெனவே அறிமுகமானவர்கள்தான்.

இருந்த நிலையிலிருந்து சட்டென்று பாய்ந்து இருவரின் கழுத்தின் மீதும் ஒரே சமயம் உதைத்த ரதீஷ், மூன்றாவதாக இருந்தவன் மீது பொத்தென்று விழுந்தான்.

அதன் பிறகு நடந்த சண்டை மிகவும் கடுமையாக இருந்தது. மூன்று பேரையும் ரதீஷ் ஏககாலத்தில் சமாளித்தான்.

மூன்றுபேரும் சண்டை முறைகளைக் கற்றுக் கொண்டவர்களாகத் தெரிந்தனர். தான் ஒற்றை மனிதனாக அவர்களை எதிர்ப்பது இயலாத காரியம் என்பது தெரிந்தும், தன்னுடைய முழு பலத்தையும் பயன்படுத்தி அவர்களுடன் போராடினான் ரதீஷ். சட்டென்று மூன்று பேரில் ஒருவன் கத்தியை எடுத்து விரித்தபடியே பின்புறமாக நகர்வதை ரதீஷ் பார்த்தான்.

அவன் தன் மீது கத்தியை எறியப் போகிறான் என்பது ரதீஷ"க்குத் தீர்மானமாகத் தெரிந்தது.

வேறு வழியில்லை என்பது தெரிந்தவுடன் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்தவன் அவனைக் குறிபார்த்துக் குதிரையை அழுத்தினான்.

"என்ன அங்கிள் இது... முன்னப்பின்னப் தெரியாதவங்களை எதுக்கு நீங்க இங்கே கூட்டிட்டு வர்றீங்க! விவரம் தெரிஞ்ச நீங்களே புதுத் தலைவலியை இழுத்துப் போட்டுக்கலாமா?"

"உன்னோட கேள்வியும் சந்தேகமும் நியாயம்தான். எடுத்ததுக்கெல்லாம் சந்தேகப்பட்டுக்கிட்டே இருந்தா உயிர் பிழைக்கிறதே கஷ்டம். நாம இவ்வளவு நாள் கட்டிக் காப்பாத்திட்டு வர்ற விஷயங்களை நானே அழிக்க முயற்சி செய்வேனா? எனக்கு அப்படி ஏதாவது சந்தேகம் ஏற்பட்டா, அடுத்த நிமிஷமே நான் அவனை தீர்த்துக் கட்டுறதுக்கும் ஏற்பாடு செஞ்சிருந்தேன். அதுக்குள்ள அவன் கூட இருந்த பெண்ணை ஒரு வழி பண்ணியிருக்கிறேன். அவ மூலமா ரெண்டு லட்சம் வருமானம் வந்தா கசக்கவா செய்யும்?"

"யாரந்தப் பெண்?"

"அவன்கூட இருந்த காபரே டான்ஸர்தான். அவளோட கையில பத்தாயிரம் ரூபா கட்டு ஒண்ணு குடுத்திருக்கிறேன். சந்தேகத்துக்கு உரியவனா இருந்தா தீர்த்துடுன்னு சொல்லியிருக்கேன்."

"எதுக்கு சுத்தி வளைச்சு மூக்கைத் தொடுறீங்க? நீங்களே அதை நேரடியாச் செய்யலாமே! பணத்தைப் பத்திக் கவலை இல்லை. நம்ம ரகசியம் வெளியே போகாம இருக்குமில்லையா?"

"நியாயம்தான். நான் அந்த ஒரு வேலையை மட்டும் தலையில சுமந்திட்டு நடந்தா சரி... சுலபம். எவ்வளவு பொறுப்பைக் குடுத்திருக்கிறே? ரெண்டாவதா, நாம தயாரிக்கிற, கைமாறுற பொருள்களையெல்லாம் யார் வெளியில கொண்டு போய் நமக்குப் பணமா மாத்தித் தர்றது? இவ்வளவு அதிகமா தயார் செஞ்சு, அதை ஏன் உள்ளூரோட நிறுத்திக்கணும்? இவ்வளவு சௌகரியம் இருக்கிற எவனும் இந்த மாதிரி பூதம் காத்துட்டிருக்கிற வேலையைச் செய்ய மாட்டான். விலை ஏறக்குறைய இருந்தாலும் சரக்கைக் குடுத்து, பணமா மாத்திக்கிறதுதானே புத்திசாலித்தனம்? அமெரிக்கா,



இங்கிலாந்து, ஜப்பான் நாடுகள்ல செஞ்ச மாதிரியே நம்ம பம்பாய்ல செஞ்சு, அதை இந்தியா முழுவதும் விற்கலையா? இங்கிலாந்தில இருந்து வந்த ஒரு வியாபாரி என்கிட்டச் சொன்னார். 'மேட் இன் இங்கிலாந்து'னு போட்ட பொருள்கள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கே ஏற்றுமதியாகி வருதாம். சந்தேகப்பட்டு விசாரணை, ஆராய்ச்சினு போய் உண்மையைக் கண்டுபிடிச்சுட்டாங்க. பம்பாய்காரங்க அவ்வளவு கெட்டிக்காரங்க. அந்த அளவு ஆராய்ச்சி பண்ணலேன்னா நம்மளோடதை போலின்னு அவன் கண்டுபிடிச்சிருக்கவே முடியாது. நாமளும் நம்ம வியாபாரத்தைப் பரவலாக்க வேணாமா?"

"அதுக்கு இப்ப நாம என்ன செய்யுறது?"

"நீ எதுவும் செய்ய வேணாம். அதுக்குத்தான் ஏற்பாடு செய்திருக்கேன். ஆளும் சின்னப் பையன் மாதிரித்தான் இருக்கான். சுறுசுறுப்பானவன். எல்லாத்துக்கும் மேல வியாபாரம், பணம்னு அலையிறவன். நம்மளோட ஃபாக்டரி, தொழில் முறையெல்லாம் பார்த்தா, நம்ம மேல நம்பிக்கை வரட்டுமேன்னுதான் அப்பிடிச் செஞ்சேன்!"

"அப்போ நீங்க செஞ்சது சரிதான். ஆனால், நீங்க இந்த மாதிரி ஒரு திட்டம் வெச்சிருக்கிறதை இதுவரைக்கும் எங்கிட்டச் சொல்லலையே? அதனாலதான் ஒரு நிமிஷம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன்!"

"இதுல இன்னொரு நோக்கமும் இருக்கு. சந்தர்ப்ப வசத்தாலயோ, அரசியல் மாற்றத்தாலயோ நம்ம வியாபாரம் இந்த இடத்தில் பாதிக்கப்படலாம். அப்படி ஒரு நிலைமை வந்தா, நம்மளோட கிளை பரப்பியிருக்கிற வேற ஏதாவது ஒரு இடத்துல அதைத் தொடர முடியும். அதுக்குள்ள நாம எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குப் பரவலான மார்க்கெட் பிடிக்கணும்!"

விக்டரின் புத்திபூர்வமான பேச்சு உண்மையில் கர்னலை வியப்படைய வைத்தது. திருப்தி நிறைந்த முகத்துடன் விக்டரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இப்ப புரியுதா கர்னல், என்னோட எதிர்காலத் திட்டம்?"

"எப்போதாவது நீங்கள் கெட்டிக்காரர் இல்லையென்று சொல்லியிருக்கிறேனா? இந்த உலகத்தில் நான் முழு நம்பிக்கை வைத்திருப்பதே உங்களிடம்தான்! சரி இன்னும் கொஞ்சம் விஸ்கி ஊற்றட்டுமா?"

"விஸ்கி ஊத்திட்டிருந்தவ எங்கே போயிட்டா?"

"நீங்கதானே அவளை வெளியே போகச் சொன்னீங்க. இருங்க கூப்பிடுறேன்!" சிவப்பிரசாத் காலிங்பெல்லை அழுத்தினார்.

அவள் திரும்பவும் வந்தாள்.

"அங்கிள், நீங்க முன்னால சொன்ன விஷயத்துக்கு வருவோம். நமது ரகசியங்கள் வெளியாகிக் கொண்டிருப்பதாகவா சொன்னீர்கள்?"

"ஆமாம்... அதிலென்ன சந்தேகம்! அது உண்மையாக இல்லாவிட்டாலும் நாம் எப்போதும் எச்சரிக்கையாக இருப்பதில் என்ன தவறு? எங்கேயோ நடந்த ஒரு சிறு தவறு நமது மொத்த அமைப்பையுமே தாறுமாறாக்கி விடலாமே?"

"உண்மைதான்! என்ன செய்யலாம்?"

"முதல்ல ஒரு வேலை செய்யணும்! இந்த காம்பௌண்டுக்குள்ள எந்த நாய் நுழைஞ்சாலும் கண்ணை மூடி சுட்டுட வேண்டியதுதான். பிணத்தைக்கூட வெளியில விடாம உள்ளேயே புதைச்சுடணும். நம்மளோட வியாபாரம் பண்றவங்களா இருந்தாலும் வேற எப்படிப்பட்ட தொடர்பு உள்ளவங்களா இருந்தாலும் சந்தேகம் வந்துட்டா அவங்களை வெளியில விடக்கூடாது. ஒரு தடவை தப்பிச்சுட்டா மறுபடியும் அவங்களை இங்கேயே வரவழைச்சுத் தொலைக்கணும். மத்ததைப் பிறகு பார்க்கலாம்!"

"சரி கிளம்பலாமா அங்கிள்?" சிவப்பிரசாத் கேட்டார்.



விக்டர் ஊன்றுகோலைத் தரையில் ஊன்றி எழுந்தார்.

வெளியே சிவப்பிரசாத்தின் பென்ஸ் கார் காத்திருந்தது.

இருவரும் பின் ஸீட்டில் அமர்ந்தனர்.

"உங்களை வீட்டுல இறக்கி விட்டுட்டு நான் நேரா என் வீட்டுக்குப் போகலாமில்லையா?" சிவப்பிரசாத் கேட்டார்.

"இந்தக் கிழவனுக்கு வேறு என்ன தேவை?"

கார் கேட்டைத் தாண்டி சாலைக்கு வந்து விரையத் தொடங்கியது. நகரத்துக்குள் வந்து திருவிழா மைதானத்தைச் சுற்றி விக்டரின் பாழடைந்த பங்களாவை நோக்கித் திரும்பியது.

பயணத்தின்போது அவர்கள் குறிப்பாக எதையும் பேசிக்கொள்ளவில்லை. இருவருமே ஆழ்ந்த யோசனையில் இருப்பதாகத் தோன்றியது.

விக்டரின் இருப்பிடத்துக்கு வந்ததும் கார் நின்றது. காரிலிருந்து அவர் இறங்கினார். டிரைவர் காரிலிருந்து இறங்கி விக்டர் வீட்டுக்குள் செல்ல உதவினார். சற்று நேரத்துக்குள் கார் சிவப்பிரசாத்தின் வீட்டுக்கு விரைந்தது.

மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்டிருந்தது.

"மிஸ்டர் சிவப்பிரசாத்!" டிரைவிங் ஸீட்டிலிருந்து குரல் கேட்டது.

"யாரது?" சிவப்பிரசாத்தின் குரல் பயம் கலந்த நடுக்கத்துடன் வெளிப்பட்டது.

"நான்தான்டா நாயே! இதுமாதிரி உன்னை வெளியிடத்துல சந்திக்க நான் எவ்வளவு நாளா காத்திருக்கிறேன் தெரியுமா?"

"காரை நிறுத்து! இல்லாவிட்டால் உன்னை சுட்டு விடுவேன்" கர்னல் சிவப்பிரசாத் பாக்கட்டில் கைவிட்டபடி கூறினார்.

"உன் பாக்கெட்டில் துப்பாக்கி இருக்காதே!"

டிரைவர் சொன்னதும் சரிதான். அவரது பாக்கெட்டில் துப்பாக்கி இல்லை.

"அதை நான் பத்திரமா வெச்சிருக்கிறேன். உட்கார்ந்திருக்கிற இடத்துல இருந்து அசைஞ்சா நான் சுட்டுடுவேன். உன்னை இப்போ கொல்றதால எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது."

"நீ யார், என் டிரைவர் எங்கே?"

"அவன் உன் காம்பௌண்டுக்குள்ளேயே கிடக்குறான். மயக்கம் போட்டு உள்ளே உருட்டித் தள்ளியிருக்கிறேன். கொல்லவில்லை. அந்த வேலையை உன் காவல்காரர்களே வேண்டுமானால் செய்து கொள்ளட்டும்."

"நீ யார், முதலில் அதைச் சொல்!"

"இன்னும் தெரியலையா? பேரு அருண். புரிஞ்சிடுச்சா? பொய் வழக்குல சிக்கவச்சு, பகல் நேரத்துல வெளியில உலாத்த முடியாமல் பண்ணிட்டியே!"

அருண் என்ற பெயரைக் கேட்டதும் சிவப்பிரசாத் ஒருகணம் திடுக்கிடவே செய்தார். தன்னுடைய துப்பாக்கியையும் எப்படியோ தட்டிப் பறித்திருக்கிறான். பேச்சைப் பார்த்தால் எந்த நேரமும் எதுவும் செய்வான் என்றும் தோன்றியது.

"சிவப்பிரசாத், இப்போ நான் உன்னை எப்படி வேணும்னாலும் கொல்லலாம். ஆனால், கொல்லப்போறதில்லை. அதனால என்னை ஒரு முட்டாள்னுகூட நீ நினைக்கலாம். நீ உயிருடன் இருந்தால்தான் நான் நிரபராதி என்பதை நிரூபிக்க முடியும். அதுதான் உன்னை என்னிடமிருந்து காப்பாற்றுகிறது!"

காரிலிருந்து குதித்துவிடலாமா என்றுகூட சிவப்பிரசாத் ஒருகணம் நினைத்தார். ஒருவிநாடி நேர யோசனைக்குப் பிறகு தன் இடுப்பிலிருந்து பெல்ட்டை எடுத்து எதிர்பாராமல் அருணின் கழுத்தில் போட்டு இறுக்கத் தொடங்கினார்.

பெல்ட் இறுகிக் கொண்டிருந்தது.



அருண் சட்டென்று பிரேக்கை மிதித்து வண்டியை நிறுத்தி அதே விநாடி சிவப்பிரசாத்தை வலுவுடன் முன்புறம் இழுத்தான். சிவப்பிரசாத் நிலைதடுமாறி, முன்ஸீட்டில் தலைகுப்புற விழுந்தார்.

"இனிமேல் நீங்க முன்னால, என் பக்கத்திலேயே உட்கார்றதுதான் நல்லது. சம்மதிக்கலேன்னா, உங்க முழங்கால் சில்லைத் துப்பாக்கி குண்டால பேத்துடுவேன்!"

தன்னுடைய கடைசி முயற்சியும் தோல்வியடைந்ததில் சிவப்பிரசாத் மனம் உடைந்தவராக மௌனமாகத் தலைதாழ்த்தி உட்கார்ந்தார். இருப்பினும் அவர் மனம் அருணை எப்படி வளைப்பது என்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.

கார் பங்களா கேட்டை அடைந்தது.

காவல்காரர் கேட்டைத் திறந்தார்.

உள்புறமாகச் சீறிப்பாய்ந்த கார் போர்ட்டிகோவில் ஒரு குலுக்கலுடன் நின்றது. அவசரமாக காரிலிருந்து இறங்கிய சிவப்பிரசாத் வாசலின் மேற்புறமிருந்த காலிங்பெல்லை அழுத்தினார்.

ஒருசில விநாடிகளின் தாமதத்துக்குப் பிறகு கதவு திறந்தது. மேனகா உள்ளே நின்று கொண்டிருந்தாள்.

"வாசந்தி எங்கே?" கர்னல் கேட்டார்.

"அவங்களைக் காணோம்!" மேனகா நிதானமான குரலில் பேசினாள்.

## 27

மேனகாவிடமிருந்து வந்த பதிலும் சிவப்பிரசாத்தைத் தடுமாறச் செய்தது.

வாசந்தி அந்த வீட்டுக்குள் இல்லை என்பதை அவரால் யோசித்துப் பார்க்க முடியவில்லை. சிவப்பிரசாத்தின் ஒவ்வோர்

அடி முன்னேற்றத்துக்கும் உந்துசக்தியாகத் திகழ்ந்தவள் அவள்தான். அவரது வாழ்க்கையை வெற்றிப் பாதைக்குத் திருப்பியவளே அவள்தான். சிவப்பிரசாத் என்ற கப்பலின் சுக்கான் அவள்தான்.

ஒரு மிலிட்டரிக்காரனாகவே இருந்து உலகத்திலிருந்து சாதாரணமாக மறைந்து விட்டிருக்க வேண்டிய மனிதனை, இந்த உயரம் வரையில் கொண்டுவந்தவள் அவள்தான்!

கேப்டன் அஜித்சிங்கின் காதலியாகவும், மார்வாடி ஒருவரின் தாலி கட்டாத மனைவியாகவும் ஒரே நேரம் இரட்டை வாழ்க்கை நடத்திய வாசந்தி மூன்றாவதாக கர்னல் சிவப்பிரசாத்துடன் நட்புக் கொண்டபோதுதான் வாசந்தியின் லட்சிய வட்டம் நிறைவடைந்ததாகத் தோன்றியது. மார்வாடியை விஷம் கொடுத்துக் கொலை செய்த பிறகு, அவரது திரண்ட சொத்துக்களைக் கைப்பற்றிய பின்னர்தான் இந்த இருவரின் வாழ்க்கைப் பாதையும் தெளிவடைந்தது. அந்த விநாடியிலிருந்து இந்த நிமிடம் வரையில் சிவப்பிரசாத்தின் பின்புறமாக இயங்கிவருபவள், வந்தவள் வாசந்திதான்.

அவள் மட்டும் இங்கிருந்து வெளியேறிவிட்டால் தன்னைப் பற்றிய எல்லா ரகசியங்களும் வெளியாகிவிடும் என்பது அவரை மிகவும் கலவரப்படுத்தியது.

"எப்போதிலிருந்து அவளைக் காணோம்?" கர்னல் வரவேற்பு அறைக்குள் வந்து அமர்ந்து கேட்டார்.

"தெரியலையே!"

"நீ பார்க்கவே இல்லையா?"

"நான் வரும்போதே இங்கே அவங்க இல்லை!"

"வேலைக்காரியைக் கூப்பிடு!"

மேனகா உட்புறம் திரும்பிக் குரல் கொடுத்தாள். வேலைக்காரி கதவோரம் வந்து நின்றாள்.



"வாசந்தி எங்கே போனாங்க? ஏதாவது சொல்லிட்டுப் போனாங்களா?"

"யாரோ ஒருத்தர் வந்து கூட்டிட்டுப் போனார்!"

"ஒருத்தரா, ஆள் எப்படி இருந்தார்?"

"மேனகா நீ உள்ளே போம்மா. நான் இவள்கிட்ட சில விஷயங்களை விசாரிக்கணும்!" கர்னல் கோபத்தில் முகம் சிவந்தவராகப் பேசினார்.

மேனகா தன் அறையை நோக்கி நடந்தாள்.

"உண்மையைச் சொல்! என்ன நடந்தது? நீ உண்மை பேசலேன்னா நான் பேச வைக்கவேண்டியிருக்கும்." கர்னல் சுவரை நெருங்கி மொகலாயர் காலத்தில் பயன்பட்ட நீளமான தோலினாலான சாட்டை ஒன்றைக் கையில் எடுத்தார். ஏறத்தாழ ஒன்றரைக் கஜம் இருந்தது சாட்டை. சாட்டையைப் பார்த்ததுமே வேலைக்காரி பயத்தால் நடுங்கத் தொடங்கினாள்.

"சார் நிஜமாவே எனக்கு வேற எதுவும் தெரியாது!"

"பொய் சொல்லாதே... அவ எங்கே போனா?"

"சாயந்தர நேரத்துல ஒரு கார் வந்தது. கோட்-சூட், தொப்பி வைச்ச ஒருத்தர் வீட்டுக்குள்ள வந்தார். ஆனால், பார்வைக்கு வேஷம்போட்டு வந்த மாதிரி தெரிஞ்சார். அப்படியொரு பணக்கார மிடுக்கு அவர்கிட்ட இல்லை. அவரோட மீசை ஆளைப் பயமுறுத்துற மாதிரி இருந்தது. அவர் கையில ஒரு கைத்தடி இருந்தது. அதால ஓர் ஆளைக் குத்தினா சலபமா சத்தமில்லாம அது முதுகுப் பக்கம் வந்துடும் போலிருந்தது."

"வர்ணனை கிடக்கட்டும். நடந்ததைச் சொல்லு."

"வந்தவர் நம்ம சின்னம்மாகிட்ட என்னவெல்லாமோ கேள்வி கேட்டார்."

"அதையெல்லாம் நீ கவனிக்கலையா?" சாட்டை மேல்புறமாக உயர்ந்து காற்றை ஊடுருவி விசிலடித்தது.

அறையே குலுங்குவது போலிருந்தது. டிரஸ்ஸிங் டேபிளில் பதித்திருந்த கண்ணாடி தூள் தூளாகச் சிதறியது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நான்கு பேரும் திடுக்கிடவே செய்தனர்.

"எப்படி, ரொம்ப சுவாரசியமா இருக்கா? இன்னும் இருக்கு. இப்படியே பாருங்க!"- தன் கையிலிருந்த கைத்தடியை சுவரை ஒட்டியிருந்த இருவருக்கும் நேராக நீட்டினார்.

ஏதோ ஒரு சத்தம் கேட்டது.

"நீ இப்படி வாப்பா!" இருவரில் ஒருவனை கை நீட்டி அழைத்தார் பெரியவர்.

அவன் முன்புறமாக நகர முயன்றான். ஆனால், அவனது சட்டையின் கைப்பகுதி, சுவரோடு சுவராக ஒட்டியிருந்தது.

"புரிந்ததா! இது மாதிரி இன்னும் பல மாஜிக்குகள் உள்ளன. எல்லாவற்றையும் உங்களுக்குக் காண்பிக்க வேண்டியதில்லையே! உங்க நோக்கம், நான் கடத்திட்டு வந்த கர்னலோட மனைவி வாசந்தியை திரும்ப மீட்டுட்டுப் போறது. நீங்க எதுக்காக வந்திருக்கீங்களோ, அது உங்களால முடியுமான்னு நீங்களே யோசிச்சுப் பாருங்க!" அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் பேசினார் பெரியவர்.

அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"அப்படியானால் நாங்கள் புறப்படட்டுமா?" வில்லி கேட்டான்.

"மிஸ்டர் ஜோஸ்மார்ட்டின், உங்க திட்டம் என்னவென்று சொல்லவில்லையே!"

"நானும் கிளம்ப வேண்டியதுதான்!"

"போறதுதான் போறீங்க. நான் சொல்றதையும் உங்க கர்னல்கிட்டச் சொல்லுங்க. உங்க ஆளுங்களோட மொத்த ஜாதகமும் என்கிட்டே இருக்கு!"



வில்லியும் ஜோஸ் மார்ட்டினும் எழுந்தனர்.

சுவரை ஒட்டி நின்றிருந்தவனின் சட்டை, சுவரில் ஊசி ஒன்றுடன் சேர்த்துப் பதிந்திருந்தது. சட்டையைக் கிழித்துதான் சுவரிலிருந்து பிரித்தெடுக்க முடிந்தது.

"இப்பப் புரிஞ்சதா? கான்கிரீட் சுவரைத் துளைச்சு சட்டையை இழுத்துட்டுப் போயிருக்கு. கண்ணாடியை உடைச்சதும் அதே மாதிரி ஊசிதான். இதுல ஒண்ணு உங்க நெஞ்சில பாய்ஞ்சிருந்தா..."

அவர்கள் நால்வரும் எதுவும் பேசாமல் அந்த அறையிலிருந்து வெளியேறினர்.

"அப்பாடா, தப்பிச்சதே பெரும்பாடாப் போச்சு." அறைக்கு வெளியே வந்த ஜோஸ்மார்ட்டின் பேசினான்.

"நம்ம முதலாளிகிட்ட இல்லாததெல்லாம் இவர் வெச்சிருக்கார்." வில்லி சொன்னான்.

"நம்ம முதலாளி எதையாவது சொல்லி அனுப்பிடுறாரு; தேவையான பணத்தைக் குடுக்கிறாருங்கிறதும் உண்மைதான். ஆனா, நாமதானே வெளியில இந்த மாதிரியெல்லாம் நூலிழையில தப்பிக்க வேண்டியிருக்கு. அசந்திருந்தா, குறைந்தபட்சம் ரெண்டு பேரையாவது ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்கணும்!"

"அந்தக் கிழவன் சாதாரணமான ஆளாத் தெரியலை. பெரிய கடத்தல் புள்ளியாத்தான் இருப்பார். அதனாலதான் இவ்வளவு தைரியமும் நிதானமும்" ஜோஸ் மார்ட்டின் ஓட்டலின் கேட்டை அடைந்தபோது கூறினான்.

விரைவிலேயே சிவப்பிரசாத்தின் பங்களாவை அடைந்தனர்.

கர்னல், அவர்களுக்காகக் காத்திருந்தார்.

"போன விஷயம் என்ன ஆச்சு?" கர்னல் கேட்டார்.

"நிலைமை நம்ம எதிர்பார்த்தது மாதிரி இல்லிங்க" வில்லி சங்கடத்துடன் பேசினான்.

"என்ன... உங்க கைக்கு அகப்படலையா?"

"அடங்கிறதாவது, அகப்படறதாவது! எங்க முன்னாடி ஒரு வித்தை காட்டினாரு பாருங்க... எங்க சப்த நாடியும் அடங்கிப் போயிடுச்சு. ஒண்ணுமே பண்ண முடியலை!"

"ச்சே... பேசாதீங்கப்பா. இப்படிப் பேசறதுக்கு உங்களுக்கே வெட்கமாயில்லையா? சரி போகட்டும், வாசந்தி தட்டுப்பட்டாளா?"

"ஒட்டல்ல இல்லை அவங்க. அங்கே அந்த ஆள் மட்டும்தான் இருந்தார்."

"அவனைக் கையைக் காலைக் கட்டி இழுத்து வந்திருக்க வேணாமா நீங்கள்லாம்!"

"சொல்றது மாதிரி செய்யிறது அவ்வளவு சுலபமில்லை!"

போனவர்கள் தோல்வியுடன் திரும்பியிருக்கிறார்கள் என்பது தெரிந்ததும், விக்டர் சொல்லியிருந்த மற்றொரு வழி கர்னலுக்கு ஞாபகம் வந்தது.

"வில்லி, நீ உடனே போய் விக்டர் அங்கிளைக் கூட்டிட்டுவா!" கர்னல் கூறினார்.

"அவர் அங்கே இருப்பாரோ, என்னமோ?"

"இப்ப நம்ம ஃபாக்டரியில இருப்பார். புதுசா ரெண்டு பொண்ணுங்களைக் கொண்டு வந்திருக்காங்க. அதனால அங்கிள் வேற எங்கேயும் போயிருக்க மாட்டார்!"

சிவப்பிரசாத் பெண்கள் என்று சொன்னதே ஜோஸ்மார்ட்டினுக்கு மகிழ்ச்சியளித்தது. சாதாரணமாகவே இந்த இருவரும் ஃபாக்டரிக்குப் போவது என்றாலே எந்தவிதமான அலுப்பும் சலிப்பும் பார்ப்பதில்லை.

அங்கு எப்போதும் பெண்கள் இருப்பார்கள்.



எல்லாவித உபசாரங்களும் நடக்கும்.

ஆனால், கர்னல் யாரையும் அவ்வளவு சுலபத்தில் ஃபாக்டரிக்கு அனுப்பமாட்டார். இதுமாதிரி எப்போதாவது அந்த அதிர்ஷ்டம் வாய்த்தால்தான் உண்டு.

"வெளியே வேன் நிற்கிறது. விக்டர் அங்கிளுடன்தான் நீங்கள் திரும்பி வர வேண்டும்!" வேனின் சாவியை வில்லியிடம் கொடுத்தபடி பேசினார் கர்னல்.

சற்று நேரத்தில் அந்த பங்களா காம்பௌண்டைத் தாண்டி வேன் வெளியேறியது.

ஃபாக்டரியை நெருங்கியதும் வில்லி வேனை நிறுத்தினான். வேனின் பின்புற கேபினில் அடியாட்கள் இருவரும் படுத்திருந்தனர். அதற்குள் ஃபோல்டிங் கட்டில் ஒன்றும் இருந்தது.

"என்ன உள்ளேயிருந்து எந்தச் சத்தத்தையும் காணோமே!" வில்லி கேட்டான்.

"ஒருவேளை பேச்சு மூச்சில்லாமப் போயிட்டானுங்களா?" மார்ட்டின் கீழே இறங்கியபடி கேட்டான்.

"நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்!" வில்லி வேனின் பின்புறம் வந்து கதவைத் திறந்து பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. கழுத்தை மெதுவாக உள்ளே நீட்டி எட்டிப் பார்த்தான். அவன் உடம்பு உட்புறமாக இழுபடுவது போல் தோன்றியது.

வேனுக்குள் அருண் இருந்தான். ஏற்கெனவே உள்ளே இருந்த அடியாட்கள் மயக்க மருந்தை அதிகமாகச் சுவாசித்ததால் மரக்கட்டை போல் கிடந்தனர். வில்லியின் முகத்தில் ஏதோ துணி விழுந்தது. தலை சுற்றுவது போல் இருந்தது. அருண் ஒரு கயிறெடுத்து அவன் கை கால்களைக் கட்டிப் போட்டான்.

ஜோஸ்மார்ட்டின், வில்லி திரும்பி வராமல் போகவே வேனின் பின்புறம் வந்து உள்ளே எட்டிப் பார்த்தான். ஜோஸ்மார்ட்டினும் மயக்க மருந்தால் தலைசுற்றிக் கட்டுண்டு விழுந்தான்.

வேனின் கதவை வெளிப்புறமாக மூடித் தாழ்ப்பாள் போட்ட பிறகு, அருண் முன்புறம் வந்து டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்தான். வேன் புறப்பட்டது.

கேட்டின் முன்னால் நிறுத்தி ஹாரன் அடித்தான்.

காவல்காரர் ஒருவர் வந்து வேனின் மீது லைட்டைப் பாய்ச்சி, திருப்தியான பிறகு கேட்டைத் திறந்தான். வேன் உள்ளே நுழைந்தது.

"அவசரமாக விக்டர் அங்கிளைப் பார்க்க வேண்டுமே!" அருண் காவல்காரரிடம் கூறினான்.

"நீங்க ஏற்கெனவே இங்கே வந்திருக்கிறவர்தானே! உள்ளே இருக்கிறார் வாங்க!" அருண் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டான்.

அருண் ஏற்கெனவே வந்திருந்த வைர வியாபாரி வேடத்தில் தாடி மீசை வைத்திருந்தான்.

ஒரு பெரிய அறைக்குள் விஸ்கியை சுவைத்தபடி வீடியோவில் மோசமான ஒரு படத்தை ரசித்துக் கொண்டிருந்தார் விக்டர். இரண்டு பெண்கள் அவருக்கு அருகில் ஏறத்தாழ பாதி உடையுடன் நின்று கொண்டிருந்தனர்.

கதவுக்கு வெளியே நின்றபடி காவல்காரன் இரண்டு தடவை கதவைத் தட்டினான்.

விக்டர் வெளியே வந்தார்.

"ஹலோ அஜய்குமார், உள்ளே வாங்க. ஏதாவது சாப்பிடுறீங்களா? இல்லை, இந்த ரெண்டு பேர்ல யாரையாவது கொண்டு போறீங்களா?" விக்டர் அந்த இரண்டு பெண்களையும் சுட்டிக் காட்டிக் கேட்டார்.



"அங்கிள் நான் ஒரு அவசர விஷயமா வந்திருக்கிறேன். கர்னல் சொல்லியனுப்பியிருக்கிறார்." அருண் தாடையைத் தடவியபடி பேசினான்.

"சிவப்பிரசாத் எப்பவும் இப்படித்தான். மனுஷன் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கலாம்னா விடமாட்டான். இல்லேன்னா இந்த நேரத்துல சொல்லியனுப்புவானா?"

"ரொம்ப முக்கியமான விஷயம்!"

"நான் உங்ககூட வரணுமா?"

"அதுக்குத்தான் வந்திருக்கிறேன்."

விக்டர் அந்த இரண்டு பெண்களையும் போய்ப் படுத்துக்க கொள்ளும்படி சொல்லிவிட்டு அருணுடன் கிளம்பினார்.

வேன் கேட்டைத் தாண்டி வெளியே வந்தது.

"என்ன இவ்வளவு வேகம்?" விக்டர் கேட்டார்.

"எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் உங்களைக் கொண்டுவந்து சேர்க்கணும்கிறது கட்டளை!"

"எனக்குக்கூடவா கட்டளை போடுறாங்க? யார் அது கட்டளை போட்டவன்?"

"கர்னல் சிவப்பிரசாத்!"

"ஓகோ... நான் அந்த விஷயத்தையே மறந்து போயிட்டேன். கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டதால ஞாபகம் வராமல் போயிடுச்சு!"

வயல் வரப்புகளுக்கு நடுவிலிருந்த பாதையில் வேன் இறங்கியதுமே சாலையின் ஓரத்தில் போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருப்பதை அருண் கவனித்தான்.

"எல்லாத்தையும் உங்க கிட்டச் சொல்லிடுறேன். அதுக்கு முன்னால் உங்களை ஒரு தடவை பரிசோதிக்க வேண்டியிருக்கே. உங்க கோட்டைக் கொஞ்சம் கழற்றுங்களேன்!"

"யாரு... என்னையா... என்னைப் பரிசோதனை பண்ணணுமா?"

"ஆமாங்க... உங்களைத்தான்!"

ரதீஷ் பலவந்தமாக அவரது கோட்டை அவிழ்த்தான். அந்த விநாடிக்குள் விக்டர் தனது பாக்கட்டிலிருந்து ரிவால்வரைக் கையில் எடுத்தார். ரதீஷ் அதைத் தட்டி விட்டான்.

கோட் பாக்கெட் ஒன்றில் புளூ ஃபிலிம் கேஸெட் ஒன்று இருந்தது. ரதீஷ் அதை வெளியே எடுத்து வைத்தான்.

"அங்கிள் எனக்கு ஒரு விஷயம் தெரியணும். நீங்க உண்மையைச் சொல்வீங்கன்னு நினைக்கிறேன். சொல்லலேன்னா, வீணா நான் உங்க நல்ல காலையும் உடைக்க வேண்டியிருக்கும். கர்னல் சிவப்பிரசாத்துக்குச் சொந்தமான ஃபைனான்ஸ் கம்பெனிக்குள்ள ரகசியமான பாதாள அறை ஒண்ணு இருக்கிறதா செய்தி அடிபடுது. அதுக்குள்ள போன எவனும் உயிரோட திரும்பறதில்லைனும் பேசிக்கிறாங்க!"

"எவன் பேசிக்கிட்டவன்?"

"நம்பிக்கைக்கு உரியவங்கதான். அங்கே போனபிறகு திரும்பாதவங்களோட ஒரு பட்டியலே தேதி, நேரம் இப்படிப்பட்ட புள்ளி விவரத்தோட எங்கிட்ட இருக்கு. உள்ளே குகை மாதிரி ஏதாவது இருக்கா என்ன?"

"அப்படி இருக்கிறதா எனக்குத் தெரியலையே!"

"உண்மைதான். உங்களுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பே இல்லை." அருகிலிருந்த மரக்கதவு ஒன்றைத் திறந்து கையில் ஒரு பெரிய பட்டாக்கத்தியை எடுத்தான். "அங்கிள் உங்க இன்னொரு கால் மட்டும் நீளமா நீட்டிக்கிட்டு ஒரு தொந்தரவா



இல்லை. அதையும் துண்டான கால் அளவுக்குச் சரி பண்ணிடுறேன்." ரதீஷ் கத்தியை அவரின் நல்ல காலின் முழங்கால் பகுதியில் வைத்து அழுத்தினான்.

"என்னைத் தொடக்கூடாது!" விக்டர் அலறினார்.

"எனக்கு மட்டும் அப்படிச் செய்ய ஆசையா என்ன? அதனாலதான் நியாயமா கேட்டேன். நீங்கதான் சொல்ல மாட்டேங்குறீங்க!"

"நான் என்னத்தைச் சொல்ல?" தன் காலையும் கத்தியையும் மாறிமாறிப் பார்த்தபடி பரிதாபமாகக் கேட்டார்.

"உள்ளே போறவங்க மாயமா மறையுற அதிசயம் எப்படி நடக்குது? சுரங்கமா, கிணறா, பாதாளமா... நீங்க வாயைத் திறக்கலேன்னா, நான் கத்தியைப் பயன்படுத்தவேண்டியதுதான்!"

"உள்ளே ஒரு கிணறு இருக்கு!" வேறு வழியில்லாததால் விக்டர் முதன்முதலாக வாயைத் திறந்தார்.

"உள்ளே எந்த இடத்துல இருக்குது கிணறு?"

"கிரௌண்ட் ஃப்ளோர்ல, பாத்ருமுக்குக் கீழே!"

"இதுக்கு பிளான்போட்டுக் குடுத்தவரே நீங்கதான் இல்லையா?"

"அதுவும் உண்மைதான்!"

"இதுவரையில் எத்தனை பேர் அதுக்குள்ள அந்தர்தானமாயிருக்காங்க?"

"அந்தக் கணக்கெல்லாம் எனக்குத் தெரியாது!"

"இஸபெல்லாவோட தங்கைங்க ரெண்டு பேர் எங்கே இருக்காங்க?"

"அவங்க உயிரோட எங்க ஃபாக்டரியில வேலை செய்யுறாங்க!"

"ம்... பற்ற வை!" கர்னல் கட்டளையிட்டார்.

காவல்காரன் தீப்பெட்டியில் குச்சியை உரசிப் பற்ற வைத்தான். ஆனால், குச்சி எரிவதற்குள் காவல்காரனின் மணிக்கட்டுப் பகுதியே வெட்டி எறிந்தது போல் வலித்தது. உடனே தரையில் விழுந்து புரண்டு அலறத் தொடங்கினான்.

அருணும் இஸபெல்லாவும் அந்த இடத்துக்கு வந்தனர். காவல்காரனின் கையில் துப்பாக்கித் குண்டு பாய்ந்திருந்தது.

ஜோஸ்மார்ட்டின் மற்றும் கூட்டாளிகள் அருண் மீது பாய்ந்தனர்.

அருண் பம்பரமாகச் சுழன்று ஒவ்வொருவரையும் சுழற்றி எறிந்தான்.

இஸபெல்லா, மேனகாவை நெருங்கி கட்டுகளை அவிழ்த்து பாத்ரூமுக்குக் கொண்டு போனாள்.

அருண் சண்டை போடத் தொடங்கிய அதே நேரம் கேட்டுக்கு வெளியே ஒரு வேன் வந்து நின்றது. அதிலிருந்து துப்பாக்கியும் கையுமாக போலீஸ்காரர்கள் திமுதிமுவென்று இறங்கினார்கள்.

அதன் பிறகு நடந்தது கண்மூடித்தனமான போராட்டம்!

சமயம் பார்த்து கர்னல் வெளிப்புறமாக நகர்ந்தார். மெதுவாக உட்புறம் பார்த்துக் கொண்டே பின்னோக்கி நகர்ந்த சிவப்பிரசாத் எதன் மீதோ மோதிய பிறகு திரும்பிப் பார்த்தார். தடித்த மீசையுடன் கோட்சூட் தொப்பி அணிந்த மனிதர் ஒருவர் சிவப்பிரசாத்தின் பின்புறத்திலிருந்து வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்தார்.

"சிவப்பிரசாத், உங்களைக் கைது செய்யுறோம்!"

"நீங்க யார், எதுக்காக என்னைக் கைது செய்யுறீங்க?"

"முதல் கேள்விக்கு இப்போ பதில் சொல்றேன். என் பேரு பானர்ஜி. போலீஸ் சீஃப் சூபரின்டெண்டெண்டு. இரண்டாவது



கேள்வியோட பதில் ரொம்ப நீளமானது. அதை கோர்ட்டில் சொல்றேன்!"

சிவப்பிரசாத், பானர்ஜியைத் தள்ளிவிட்டு ஓட முயன்றார். ஆனால், பானர்ஜியின் கைத்தடி சிவப்பிரசாத்தின் இரண்டு முழங்கால்களையும் ஒரே நேரத்தில் தாக்கியது. தடுமாறி விழுந்தார்.

"வெளியில எங்கே போனாலும் உங்களுக்குப் பாதுகாப்பு இடையாது! பேசாம என்கூடவே வாங்க! ம்... எழுந்திருங்க!"

சிவப்பிரசாத் எழுந்திருப்பதற்குப் பதிலாக படுத்த நிலையிலிருந்தபடி இடுப்பிலிருந்த துப்பாக்கியை உருவி எடுத்தார். ஆனால் அவரையே கவனித்துக் கொண்டிருந்த பானர்ஜியின் கால் அந்தத் துப்பாக்கியை எட்டி உதைத்தது. துப்பாக்கி எங்கோ தொலைவில் போய் விழுந்தது.

"மேற்கொண்டும் வித்தை காட்டுறதுதான் உங்க நோக்கம்னா, உங்க உயிருக்கு நான் உத்திரவாதம் தர முடியாது சிவப்பிரசாத்! ஏம்ப்பா, இவருக்கு விலங்கு போட்டுப் பத்திரமா ரெண்டு பேர் காவலிருங்க. ஜாக்கிரதை... சுறுசுறுப்பான பேர்வழி."

இரண்டு போலீஸார் சிவப்பிரசாத்தை நெருங்கினர். ஒருவன் அவர் கையில் விலங்கு மாட்டினான்.

"இந்தச் சுத்துவட்டாரத்துல இளம்பெண்கள் சட்டுன்னு காணாமல் போக ஆரம்பிச்சவுடனேயே அதுக்காக ஒரு தனிப்படை அமைச்சுட்டோம். நாங்க எதிர்பார்த்ததைவிட கொஞ்சம் தாமதமாயிடுச்சு!" பானர்ஜி பேசத் தொடங்கினார்.

"உன்னை மட்டும் பிடிக்கிறதுன்னா ரொம்பச் சுலபமா அது எப்பவோ முடிஞ்சிருக்கும். ஆனா ஆதாரம், அடையாளம் எல்லாம் தேவைப்படுதே. உண்மையைக் கூட சட்டம் உண்மையா எடுத்துக்கிறதில்லை. ஆதாரம் அடிப்படையாச்சே. அதனால அஸ்திவாரத்தைப் பலமா போட்டு அப்புறமா உன்னைத் தொடுறதுன்னு தீர்மானிச்சோம். அந்த விஷயத்துல நீங்களும்

ரொம்ப ஒத்துழைப்புக் கொடுத்திருக்கீங்க. டிடெக்டிவ் புஷ்பராஜைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கீங்களா... பட்டிருக்கணும். இல்லேன்னா நீங்க தொழிலுக்கே லாயக்கில்லாதவங்க. அவர்தான் உங்க மகள் மேனகாவோட டிரைவரா நடிச்சவர். இந்த மேனகா, உண்மையில ராகினிங்கிற பேர்ல வந்த நாடக நடிகை. உங்க ஆளுங்க புளூ ஃபிலிம் எடுக்கப் போட்ட திட்டத்தை பாவம் இவங்க தடுத்திட்டாங்க.

சுமார் இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னால ஆத்துல விழுந்து இறந்துபோன தேவிகாவோட கழுத்துல இருந்த மாலையை, கேஸ் முடியலையேன்னு பத்திரப்படுத்தி வச்சிருந்தோம். யதேச்சையா ஒருநாள் 'முற்றுப் பெறாத வழக்குகள்' பைலை எடுத்துப் பார்த்தபோது சிவப்பிரசாத்ங்கிற பேரும் அடையாளமும் அதில கிடைச்சது. ஏற்கெனவே நாங்க வேற ஒரு திட்டம் வைச்சிருந்தோம். ஆனா, ராகினி வந்து சொன்னவுடனே எங்க திட்டம் மாறிடுச்சு. உன் போட்டோ கிராபர் கண்ணில மட்டும் படாம எச்சரிக்கையா நடந்துக்கச் சொல்லியிருந்தோம். ஆனா, அது சாத்தியமில்லேன்னு எங்களுக்கும் தெரியும். சரி, போறவரைக்கும் போகட்டும்னு அனுமதிச்சோம்."

பேச்சை நிறுத்திய பானர்ஜி சுருட்டு ஒன்றை எடுத்து, அதன் மேற்புற உறையைப் பிரித்து, உதட்டில் பொருத்திப் பற்ற வைத்துக் கொண்டார். சற்று இடைவெளிக்குப் பிறகு மறுபடி தொடர்ந்தார்:

"அப்புறம் இஸபெல்லாவையும் நாங்க பயன்படுத்திக்க வேண்டியதாப் போச்சு. தன் ரெண்டு தங்கச்சிகளும் காணாமப்போனதையும் அந்தச் சூழ்நிலை, ஆளுங்க இப்படி எல்லா விவரத்தையும் குறிப்பிட்டா. அவளோட வேண்டுகோள்படி அருணோட உதவியையும் ஏத்துக்கிட்டோம். இனி எங்களுக்குத் தெரிய வேண்டியது சவக்கிடங்காகப் பயன்பட்ட மரணக் கிணத்தைப் பத்தித்தான். இப்போ நீங்களே எங்ககிட்ட சௌகரியமா சிக்கிக்கிட்டதால அதைப் பத்தின விவரமும் சுலபமாக் கிடைச்சுடும். மிச்சத்தை கோர்ட்டு தீர்மானிக்கட்டும்.



குற்றவாளிக் கூண்டுல இதுக்கெல்லாம் நீங்க பதில் சொன்னால் போதும்!"

அன்றைய இரவும் சிவப்பிரசாத்தைப் பொறுத்தவரை உறக்கம் வராத ஓர் இரவாகத்தான் கழிந்தது.

மறுநாள் காலை நேரத்தில் சிவப்பிரசாத் ஃபைனான்ஸ் கட்டடத்தின் பாத்ரூம் ஸ்லாப் நீக்கப்பட்டு, தேவையான முன்னேற்பாடுகள், விளக்குகள் மற்றும் மருந்துகளைப் பயன்படுத்தி, போலீஸ் துறை, நிபுணர்கள் சிலரைக் கிணற்றுக்குள் இறக்கியது. ஒன்றன்பின் ஒன்றாகச் சுமார் நாற்பது எலும்புக்கூடுகள் ஒருவாறாகப் பொருத்தி வைக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது.

லேப் பரிசோதனை ஃபாரன்ஸிக் என்று காவல்துறை படுசுறுசுறுப்பாக இயங்கியது. பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு சூழ்நிலையை மேலும் பரபரப்பாக்கி, ஊர்மக்களை மேலும் அதிகமாகப் பீதிக்குள்ளாக்கி யூகங்களையும் கற்பனைகளையும் விலாவாரியாக எழுதித் தள்ளின.

கர்னல் சிவப்பிரசாத்துக்குச் சொந்தமான கட்டடங்கள், ஃபாக்டரிகள், பினாமிப் பெயரிலிருந்த பகுதிகள், பங்களாக்கள் எல்லாம் ரெய்டு நடத்தி அதிரடியாக சீல் செய்யப்பட்டன. ஏறத்தாழச் சிறைவாழ்க்கையில் அழுந்தியிருந்த இளம்பெண்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். சுற்றிவளைத்துப் பிடித்ததில் தலைமறைவான குற்றவாளிகள் பலர் அகப்பட்டதால் முற்றுப்பெறாத வழக்குகள் மறுபடி புத்துயிர் பெற்றன.

கர்னல் சிவப்பிரசாத்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்தே அருண் மீது பொய்க்குற்றம் சுமத்தப்பட்டது நிரூபணமானதால் அருண் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டாலும் வழக்கு முடிவது வரையில் அவன் நகருக்குள் இருக்க வேண்டுமென்று போலீஸ் கேட்டுக்கொண்டது.

காபரே டான்ஸர் இஸபெல்லா, காவல் துறை மற்றும் பத்திரிகைகளால் குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டாள்.

வெகுநாட்களுக்குப் பிறகு.... பிரிந்துபோன சகோதரிகள் ஒன்று சேர்ந்தனர்.

வாசந்தி அப்ரூவராக மாறி, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியதால் பொதுமன்னிப்பு காவல் துறையால் சிபாரிசு செய்யப்பட்டாள்.

முதல் குற்றவாளியாக சிவப்பிரசாத்தும், இரண்டாம் குற்றவாளியாக விக்டரும் குற்றம் சாட்டப்பட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டனர்.

தன்னுடைய வாழ்க்கையில் குறுக்கிட்ட இளம்பெண்ணான மேனகா என்கிற ராகினியை அருணால் ஒதுக்கித்தள்ள முடியவில்லை. இஸபெல்லா அருணை விரும்பினாலும் பெருந்தன்மையுடன் ஒதுங்கி, தனது பழைய டான்ஸ் வாழ்க்கைக்குத் திரும்பினாள். 18

திருதூர் நகரில் ரகசியமான இயங்கிக்கொண்டிருந்த அபாயமான கூட்டம் ஒன்று இப்படியாகக் கூண்டோடு அழிந்தது.

(முற்றும்)

சென்னை மாவட்ட கிளை நூலகம்
37849
6479329
கொளத்தூர், சென்னை 99.